
நபித்தோழர்கள் தியாக வரலாறு

எஸ்.எச்.எம். இஸ்மாயில் ஸலபி



தாருஸ் ஸுன்னா பதிப்பகம்

நபித்தோழர்கள்
தியாக வரலாறு

ஆசிரியர்

S.H.M. இஸ்மாயில் ஸலபி
B.A. (Hons)

வெளியீடு
தாருஸ் ஸுன்னா பதிப்பகம்

நூல் விபரம்

நூலின் பெயர்	: நபித்தோழர்கள் தியாக வரலாறு
ஆசிரியர்	: எஸ்.எச்.எம். இஸ்மாயில் ஸலபி
பதிப்புரிமை	: ஆசிரியருக்கு
ISBN	: 978-624-6698-00-3
வெளியீடு	: தாருஸ் ஸுன்னா பதிப்பகம்
வெளியீட்டு நாள்	: 01 மார்ச் 2025
பக்கங்கள்	: 210
பிரதிகள்	: 2000
பக்க வடிவமைப்பு	: எம்.எஸ்.எம். பைரூஸ் ஸலபி
அச்சகம்	: *U2K Printers*
விலை	: 700/-

முன்னுரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கின்றேன்.

எல்லாப் புகழும், எத்துதியும் வல்லோன் அல்லாஹ் ஒருவனுக்கே! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களை அணுவணுவாகப் பின்பற்றிய நல்லறத் தோழர்கள், நபிகளாரின் உற்றார் உறவினர் மற்றும் அவர் காட்டிய வழியில் வாழ்ந்த, வாழும் அனைவர் மீதும் என்றென்றும் நின்று நிலவட்டுமாக!

கடந்த கால வரலாற்றை மறந்த சமுதாயம் நிகழ்காலத்தை நெறிப்படுத்தவோ, எதிர்காலத்தை ஒளிமயமாக்கவோ முடியாது. இந்த வகையில் வரலாறு முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக இஸ்லாத்தின் உயர்வையும், அந்தஸ்தையும் உரிய முறையில் அறிய வேண்டுமென்றால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முதல் இன்றைய தினம் வரை இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக தமது உதிரத்தையும், உயிரையும், உடல் உறுப்புக்களையும், உழைப்பையும் உரமாகப் பாய்ச்சியவர்களின் உயரிய வரலாற்றைத் தெரிந்திருப்பது அவசியமாகும்.

இஸ்லாத்தை வளர்ப்பதிலும், காப்பதிலும், கடைபிடிப்பதிலும் அவர்கள் காட்டிய தியாகம், உறுதி நமது ஈமானுக்கு புத்துணர்ச்சியையும், உணர்வுகளுக்கு ஊக்கத்தையும் அளிக்கவல்லதாகும்.

இந்த அடிப்படையில் தியாகச் சுடர்களான நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நல்லறத் தோழர்கள் சிலரின் வாழ்வையும், பணியையும் சுருக்கமாக உங்கள் முன் வைத்துள்ளேன்.

தொடர்ந்து மற்றும் பல தாபிஈன்கள், இமாம்கள், அறிஞர்கள் என பலரின் வாழ்வையும் வரலாற்றையும் மக்கள் மன்றத்தில் வைக்கும் எண்ணம் உண்டு. அல்லாஹ்தான் அதற்கு அருள்புரிய வேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வாழும்போது இஸ்லாத்தை ஏற்று அவர்களைச் சந்தித்து அவர்களுடன் நேரடி உறவு கொண்டவர்கள்தான் ஸஹாபாக்கள் என்று கூறப்படுகின்றனர். ஸஹாபி என்றால் நபியின் தோழர் என்பது அர்த்தமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தனது போதனையை

ஏற்றவர்களை நண்பர், தோழர் என்றே அழைத்தார்கள். ஏனைய ஆன்மிகவாதிகள் போன்று தன்னை குருவாகவும், ஏற்றுக்கொண்டவர்களை சிஷ்யராகவோ, பக்தராகவோ அவர்கள் பார்க்கவில்லை.

நபித்தோழர்களுக்கென பல சிறப்பம்சங்கள் உள்ளன. அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டதாக அறிவித்துள்ளான். அவர்களுக்கு அல்லாஹ்வின் திருப்தி இருப்பதாகக் கூறியுள்ளான். அவர்களுக்கு சுவனம் உண்டு என உறுதியும், அவர்கள்தாம் உண்மையான முஃமின்கள் என உத்தரவாதமும் அளித்துள்ளான். அல்குர்ஆனில் பல இடங்களில் அவர்களை முஃமின்களே என அழைத்துப் பேசியுள்ளான். இவ்வாறு எண்ணற்ற சிறப்புக்களை அல்லாஹ் அவர்களுக்கு அளித்துள்ளான். இவ்வாறே ஹதீஸ்களில் அவர்களின் சிறப்புக்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

பாதகச் செயல்களிலும், சிலை வணக்கத்திலும், அனாச்சாரங்களிலும் மூழ்கியிருந்தவர்களை இஸ்லாத்தின் போதனை மனித குல மாணிக்கங்களாக, குணத்தின் குன்றுகளாக பண்பாட்டின் சிகரங்களாக மாற்றியது!

இந்த மாற்றமே இஸ்லாம் இறைமார்க்கம் என்பதற்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையான இறைத்தூதர் என்பதற்கும் மறுக்க முடியாத சான்றாகிவிட்டது.

இந்த நூலில் குறிப்பிட்ட சில நபித்தோழர்களின் வாழ்வைப் பதிவு செய்துள்ளேன். ஏற்கனவே முதல் நிலை முஸ்லிம் பெண்கள், பெண் இனத்தின் முன்மாதிரிகள், நற்செய்தி பெற்ற நபித்தோழியர்கள், குர்ஆனியப் பெண்கள் என்ற எனது நான்கு நூற்களில் பெண்கள் வரலாறு பேசப்பட்டுள்ளதால் இந்த நூலில் நபித்தோழர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் சில நபித்தோழர்களின் வாழ்வைப் பற்றி வரையும் போது எனது கட்டுப்பாட்டையும் மீறி கண்கள் கண்ணீரைச் சிந்தின. இந்தத் தாக்கம் வாசகர்களாகிய உங்களுக்கும் நிச்சயமாக ஏற்படும் என உறுதியாக நம்புகிறேன்.

நபித்தோழர்கள் மற்றும் மார்க்க மேதைகளின் உண்மையான வரலாற்றை அறியாத, அறிய விரும்பாத இளம் சந்ததிகளின் தொகை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருவது இஸ்லாமிய சமூகத்திற்கு ஆரோக்கியமானதல்ல. இது ஆபத்தான அறிகுறியாகும். இந்த வகையில் இந்த நூல் காலத்தின் கட்டாயத் தேவையாகும். வரலாறை

அறிய விரும்பும் இளம் சமூகத்திற்கு இந்நூல் பெருந்துணை புரியும் என நம்பலாம் (இன்ஷா அல்லாஹ்).

உண்மை உதயம் மாத இதழ் மூலம் எனது எழுத்துப்பணிக்குக் களம் அமைத்துத் தந்த **JASM** அமைப்பிற்கும், அதன் கௌரவத் தலைவர் மற்றும் செயலாளர் அவர்களுக்கும், இந்த நூலை வடிவமைத்த நண்பர் எம்.எஸ்.எம். பைரூஸ் ஸலபி அவர்களுக்கும், வாசித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நபித்தோழர்களின் வாழ்வைக் கற்று அதன்படி வாழும் பாக்கியத்தை எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் தந்தருள்வானாக!

வஆஹிரு தஃவானா அனில் ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்
வஸ்ஸலாம்

S.H.M. இஸ்மாயில் ஸலபி
88/2, பாடசாலை வீதி,
பறகஹதெனிய.

நூலின் உள்ளே....

அல்குர்ஆனில் ஆழம் கண்ட
அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி)

இப்னு மஸ்ஊத் என அறியப்பட்ட இவர் ஆரம்ப கால முஸ்லிம்களில் ஒருவராவார். ஹபஷா (அபீசீனியா), மதீனா ஆகிய நகரங்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இரண்டு ஹிஜ்ரத் பயணங்களிலும் பங்கு கொண்டவர். பத்ர் போரில் பங்கு கொண்ட தியாகிகளில் ஒருவர். அல்குர்ஆன், அஸ்ஸுன்னா இரண்டிலும் மிகப் பெரும் ஞானம் பெற்றவர். பிக்ஹுக் கலை மற்றும் கிராஅத் கலையின் தோற்றத்திற்குப் பெரிதும் பங்களித்தவர். இவரது வாழ்வும் வழிகாட்டலும் நிச்சயமாக நமக்கு நல்லதொரு முன்மாதிரியாக அமையும்.

அறிமுகம்

இவரது தந்தை அறியாமைக் காலத்திலேயே மரணித்து விட்டார். இவரது தாயின் பெயர் உம்மு அப்த் என்பதாகும். இவர் இப்னு உம்மி அப்த் (உம்மு அப்தின் மகன்) என்றே அறிமுகமானார். நபி (ஸல்) அவர்களும் இந்தப் பெயரை பலமுறை பயன்படுத்தியுள்ளார்கள். இவர் தனது சிறு பராயத்தில் குறைஷித் தலைவர்களில் ஒருவரான உக்பா இப்னு முஅய்யித் அவர்களின் ஆடு மேய்ப்பவராகப் பணியாற்றி வந்தார். அப்போது தான் நபி (ஸல்) அவர்களின் பிரச்சாரம் ஆரம்பமாகியிருந்தது.

இவர்கள் மக்காவை விட்டுத் தொலைவில் வசித்து வந்ததாலும் சிறுபிராயத்திலிருந்ததாலும் நபியவர்களது பிரச்சாரம் குறித்துக் கவனம் செலுத்தவில்லை. காலையில் ஆடுகளை ஓட்டிச் சென்றால் மாலையில் தான் வீடு வந்து சேர்வார். இதனால் பொது விஷயங்கள் குறித்த அறிவோ, ஈடுபாடோ அவரிடம் பெரிதும் காணப்படவில்லை.

இவர் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது ஒருமுறை நபி (ஸல்) அவர்களைச் சந்தித்ததாக அஹ்மதில் இடம்பெற்றுள்ள ஓர் அறிவிப்பு தெரிவிக்கின்றது.

“ஒருநாள் உக்பாவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது நபி (ஸல்) அவர்களும், அபூபக்கர் (ரழி) அவர்களும் என்னை நோக்கி வந்தனர். நபி (ஸல்) அவர்கள், மகனே! பால் கிடைக்குமா என்று கேட்டார்கள். நான் ‘பால் இருக்கிறது’ ஆனால் தரமுடியாது. ஏனெனில் நான் இதன் மேய்ப்பாளன் மட்டும்தான். பொறுப்பாளர்

வேறு ஒருவர் என்று கூறினேன். அதற்கு நபி (ﷺ) அவர்கள் பால் கறக்காத சிறிய ஆடு உள்ளதா? எனக் கேட்டார்கள். ஆம் எனக் கூறி, நான் ஓர் ஆட்டைக் காட்டினேன். நபியவர்கள் அதன் மடியைத் தடவினார்கள். அதிலிருந்து பால் பீறிட்டு வடிந்தது. ஒரு பாத்திரத்தில் அதனை நிறைத்துப் பருகினார்கள். பின்னர் நபி (ﷺ) அவர்கள் கூறியதற்கேற்ப பால்மடி உள்ளே சென்றுவிட்டது." (அறிவிப்பு : அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ؓ))

இந்த நிகழ்ச்சியின் முடிவில் நபி (ﷺ) அவர்கள் இப்னு மஸ்ஊதின் பொறுப்புணர்வு, நேர்மை ஆகியவற்றிற்காக அவரைப் பாராட்டினார்கள். இந்த நிகழ்ச்சிதான் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இப்னு மஸ்ஊதை நபி (ﷺ) அவர்களை நிழலாகத் தொடரும் நபித்தோழராக மாற்றியது.

அல்குர்ஆனைப் பகிரங்கமாக ஓதத் துணிந்தவர்

அது ஆரம்பகாலம் என்பதால் எதிரிகளின் அச்சுறுத்தலும் கடுமையாகவே இருந்தது. ஒரு நாள் மக்காவில் முஸ்லிம்கள் ஒன்றாக அமர்ந்து ஆலோசனை செய்தனர். அதாவது, "குறைஷிகள் அல்குர்ஆனை உரிய முறையில் சரியாகச் செவியேற்கவில்லை. அவர்களது காதுகளில் குர்ஆன் ஓசை விழும் அளவு பகிரங்கமாக யார் அதை ஓதுவது என்பது குறித்து விவாதித்துக் கொண்டிருந்தனர். அப்போது இப்னு மஸ்ஊத் (ؓ) நான் ஓதுகிறேன் என்று கூறினார்.

இது கேட்ட மற்றைய தோழர்கள், 'இல்லை இல்லை நீங்கள் ஓதினால் உங்களுக்கு ஆபத்து நேரலாம். குடும்பச் செல்வாக்குள்ள ஒருவர் ஓதுவதையே நாம் விரும்புகின்றோம்' என்று தெரிவித்தனர்.

இதனை மறுத்த இப்னு மஸ்ஊத் (ؓ) கஃபாவின் மகாமு இப்றாஹீமுக்கு அருகில் இருந்து குறைஷிகள் சூழ இருக்கும் போது சப்தமிட்டு குர்ஆனை ஓதினார். இதனால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இந்த வகையில் இறைமறுப்பாளர்களுக்கு மத்தியில் அல்குர்ஆனை பகிரங்கமாக ஓதிய முதல் முஸ்லிம் என்ற பெருமையை இவர் பெறுகின்றார். இது இப்னு மஸ்ஊத் (ؓ) அவர்களின் உறுதிக்கும், துணிவுக்கும் எடுத்துக்காட்டாகும்.

இந்த தாக்குதல் இப்னு மஸ்ஊதிடம் எந்த அச்சத்தையும் ஏற்படுத்தவில்லை. அடுத்த நாளும் ஓத முற்பட்டாலும் நண்பர்கள் தடுத்துவிட்டனர்.

நபியின் நெருக்கம்

*இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள், நபி ஸல் அவர்களுடன் சிறு வயதிலிருந்தே நெருங்கிப் பழகி நபி (ஸல்) அவர்களாலேயே பயிற்றப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்களுக்குப் பணிவிடை செய்வதில் இவர் பெரிதும் ஆர்வம் காட்டினார். நபியவர்கள் உறங்கும் போது விழிக்கச் செய்வது, சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது என்பது மட்டுமன்றி பயணங்களிலும் இவர் நபியவர்களுடன் கூட இருந்து பணிபுரிந்துள்ளார். நபி (ஸல்) அவர்களின் காலணிகளையும் தலையணைகளையும் தண்ணீர் குவளையையும் சுமந்து பணிவிடை புரிந்து கொண்டிருந்தவர் என்று நபித்தோழர்களால் புகழ்ந்து பேசப்பட்டார். (புகாரி **3761**)*

நபி (ஸல்) அவர்கள் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் மீது கொண்டிருந்த பிரத்தியேக அன்பின் அடையாளமாக அவர் தனது இல்லத்திற்கு வந்து செல்வதற்கென சிறப்பு சலுகைகளையும் வழங்கினார்கள். இதனால் நபி (ஸல்) அவர்களின் இல்லத்திற்குள் இவர் சர்வசாதாரணமாகப் புழங்கி வந்தார்.

இது குறித்து அபூ மூஸா அல்அஷ்அரி அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள் :

*“நானும் எனது சகோதரரும் யமன் நாட்டிலிருந்து வந்து (மதீனாவில்) சில காலம் தங்கினோம். அப்போது அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதும் அவரது தாயாரும் நபி (ஸல்) அவர்களிடம் (அடிக்கடி) செல்வதைக் கண்டு அவர் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினரில் ஒருவர் என்றே நாங்கள் கருதினோம்.” (புகாரி **3763**)*

நபி (ஸல்) அவர்களுடன் இப்னு மஸ்ஊத் (ரழி) கொண்டிருந்த நெருக்கமான பிணைப்பை இச்செய்தி தெளிவுபடுத்துகிறது.

நபி (ஸல்) அவர்களுடன் சிறு வயது முதல் நெருங்கிப் பழகியதால் இவர்களுடைய செயற்பாடுகளில் நபி (ஸல்) அவர்களின் ஆளுமை மிக ஆழமாகத் தாக்கம் செலுத்தியது. இவருடைய செயற்பாடுகள் நபி (ஸல்) அவர்களின் நடைமுறைகளை நினைவூட்டுவதாக அமைந்திருந்தன.

அப்துர் ரஹ்மான் இப்னு யஸீத் (ரழி) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் செய்தி இதை உணர்த்துகிறது.

உருவமைப்பிலும் நடைமுறையிலும் நபி (ﷺ) அவர்களை ஏறக்குறைய ஒத்திருக்கும் ஒருவரை நாங்கள் பின்பற்றி நடப்பதற்காக (எங்களுக்குக் காட்டும்படி) ஹுதைபா (ரழி) அவர்களைக் கேட்டோம். அவர்கள் நபி (ﷺ) அவர்களுக்கு உருவமைப்பிலும் பேச்சிலும் நடையிலும் கிட்டத்தட்ட ஒத்தவராக உம்மு அப்தின் மகனை (இப்னு மஸ்ஊதை) விட வேறெவரையும் நான் அறியமாட்டேன்" என்று பதிலளித்தார்கள். (புகாரி 3762)

அல்குர்ஆனும் இப்னு மஸ்ஊதும்

இப்னு மஸ்ஊத் (ரழி) அல்குர்ஆனில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். திருமறையை மிகத் திருத்தமாக ஓதக்கூடியவராகவும் இருந்தார். நபி (ﷺ) அவர்கள், "அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத், அபூஹுதைபாவின் (முன்னாள்) அடிமை ஸாலிம், உபை இப்னு கஃப், முஆத் இப்னு ஜபல் ஆகிய நால்வரிடமிருந்தும் குர்ஆன் ஓதக் கற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறியுள்ளார்கள். இந்த நபிமொழி மூலம் இப்னு மஸ்ஊத் திருத்தமாகத் திருமறையை ஓதுபவர் என்பதை அறியலாம். மற்றுமொரு அறிவிப்பில், "யாராவது அல்குர்ஆனை அது அருளப்பட்ட விதத்திலேயே ஓத விரும்பினால் இப்னு மஸ்ஊத் (ரழி) ஓதுவது போல் ஓதிக் கொள்ளட்டும்." என்று நபி (ﷺ) அவர்கள் அறிவித்துள்ளார்கள். சில சந்தர்ப்பங்களில் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களை குர்ஆனை ஓதக் கூறிவிட்டு நபி (ﷺ) அவர்கள் அதை செவிமடுத்துக் கேட்டுமுள்ளார்கள். இது குர்ஆன் ஓதுவதில் அவருக்கிருந்த தேர்ச்சியைத் தெளிவுபடுத்துகின்றது.

இவ்வாறே அவர்கள் குர்ஆனியக் கலைகளிலும் பெரிதும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இது குறித்து இப்னு மஸ்ஊத் அவர்களே இப்படிக் கூறியுள்ளார்கள்.

'அல்குர்ஆனின் எந்த ஆயத்தாக இருப்பினும் அது எங்கே, எது சம்பந்தமாக இறக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியும்.'

'நான் நபித்தோழர்கள் பலரின் சபையில் இருந்துள்ளேன். அவர்களுள் எவரும் இப்னு மஸ்ஊதின் கூற்றைக் குறை கூறவோ, மறுக்கவோ இல்லை என ஷகிக் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்.

இச்செய்தி இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களின் கூற்றை ஏனைய நபித்தோழர்கள் அங்கீகரித்ததையே காட்டுகின்றது.

பின்வரும் நிகழ்ச்சி இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களின் அல்குர்ஆனுடனான ஆழமான தொடர்பைத் தெளிவுபடுத்துகின்றது.

ஒரு நாள் இரவு பயணக் கூட்டம் இரண்டு மதீனா நோக்கி வந்தது. இருள் கடுமையாக இருந்ததால் அவர்கள் யார் என்பது தெரியவில்லை. ஒரு கூட்டத்தில் இப்னு மஸ்ஊத் இருந்தார். மற்றுமொரு கூட்டத்தில் உமர் (رضي الله عنه) அவர்கள் இருந்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் உமர் (رضي الله عنه) அவர்கள் கேள்விகளைக் கேட்க மறுபுறத்திலிருந்து இப்னு மஸ்ஊத் (رضي الله عنه) அவர்கள் அதற்கு விடையளித்துக் கொண்டிருந்தார்கள்.

உமர் : *நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?*

இப்னு மஸ்ஊத் : *நாங்கள் பள்ளத்தாக்கிலிருந்து வருகின்றோம் என்ற விடையை '...அவர்கள் நடந்தும் வெகு தொலைவிலிருந்து வரும் மெலிந்த ஒட்டகங்கள் மீதும் வருவார்கள்' என்ற 22:27 ஆம் குர்ஆன் வசனம் மூலம் கூறினார்கள்.*

உமர் : *எங்கே போகிறீர்கள்?*

இப்னு மஸ்ஊத் : *பழைய வீட்டிற்கு என்ற விடையை '...பூர்வீக ஆலயத்தை தவாப் செய்வதற்காக வருவார்கள்' என்ற (22:29) ஆம் குர்ஆன் வசனத்தைப் பயன்படுத்தினார்கள்.*

இது கேட்ட உமர் (رضي الله عنه) அவர்கள் அந்தக் கூட்டத்தில் ஒரு அறிஞர் இருக்கிறார் எனக் கூறி தனது கேள்விகளைத் தொடங்கினார்.

உமர் : *குர்ஆனில் எது மகத்துவமானது?*

இப்னு மஸ்ஊத் : *ஆயதுல் குர்ஷியை ஓதிக் காட்டினார்கள்.*

உமர் : *அல்குர்ஆனில் எந்த வசனம் மிகச் சிறந்த சட்டம் குறித்துப் பேசுகிறது?*

இப்னு மஸ்ஊத் : *நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்குக் கொடுக்குமாறும் ஏவுகிறான். அத்தோடு மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்வதை விட்டும் உங்களைத் தடுக்கிறான். ...' (16:90) என்ற வசனத்தை ஓதினார்.*

உமர் : *அல்குர்ஆனில் எந்த வசனம் சுருக்கமான, அதேவேளை ஒட்டுமொத்த இஸ்லாத்தின் கருத்தையும் தரக்கூடியது?*

இப்னு மஸ்ஊத் : "எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அதன் பலனை அவர் கண்டு கொள்வார். எவர் ஒருவர் ஓர் அணுவளவேனும் தீமை செய்திருந்தால் அதன் பலனை அவர் கண்டு கொள்வார்." (99:7-8) என்ற வசனத்தை ஓதினார்கள்.

உமர் : அல்குர்ஆனில் எந்த வசனம் அச்சமூட்டக்கூடியது?

இப்னு மஸ்ஊத் : "முஃமின்களே! மறுமையில் நீங்கள் விரும்பிய படியோ அல்லது வேதத்தையுடையோர் விரும்பிய படியோ எதுவும் நடந்து விடாது. எவன் தீமை செய்கிறானோ அவன் அதற்குரிய தண்டனையை வழங்கப்பெறுவான்; இன்னும் அவன் அங்கு அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் தனக்குப் பாதுகாவலனாகவோ, உதவி செய்பவனாகவோ கண்டு கொள்ளமாட்டான்" 'எந்தவொரு ஆணும், எந்தவொரு பெண்ணும் ஈமான் கொண்டு நல்லமல்கள் செய்தால் அவர்கள் சுவனம் நுழைவார்கள். அணுவளவும் கூட அநியாயம் செய்யப்படமாட்டார்கள்" (4:123-124) என்ற வசனங்களை ஓதினார்கள்.

உமர் : எந்த வசனம் ரொம்ப ஆறுதலானது?

இப்னு மஸ்ஊத் : என் அடியார்களே! உங்களில் எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தில் அவர் நிராசை கொள்ள வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவற்றையும் மன்னிப்பான், நிச்சயமாக அவன் மன்னிக்கக் கூடியவன்; மிக்கக் கருணையுடையவன் என்று நபியே! நீர் கூறுவீராக!" (39:53) என்ற வசனத்தை ஓதினார்கள்.

உமர் : உங்கள் சபையில் இப்னு மஸ்ஊத் இருக்கின்றாரா?

இப்னு மஸ்ஊத் : ஆம் இப்னு மஸ்ஊத் தான்.

இந்நிகழ்ச்சி இப்னு மஸ்ஊதின் அறிவையும் அந்த அறிவை வைத்தே உமர் (ﷺ) அவர்கள் இவரை இனம்கண்டதையும் உணர்த்துகின்றது.

(குறிப்பு: இச்சம்பவம் இதே அமைப்பில் சில வரலாற்று நூல்களில் இடம்பெற்றுள்ளது. எனினும் அவற்றின் அறிவிப்பாளர்

வரிசையில் சில குறைபாடுகள் உள்ளன. முஸன்னஃப் அப்துர் ரஸ்ஸாக்கில் இந்நிகழ்ச்சி சுருக்கமாக இடம்பெற்றுள்ளது.)

இப்னு மஸ்ஊத் (رضي الله عنه) அவர்கள் உமர் (رضي الله عنه) அவர்களது ஆட்சிக் காலத்தில் கூஃபாவின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அன்று ஏற்பட்ட சகலவிதமான அரசியல் நெருக்கடிகளையும் தவிர்ந்து வாழ்ந்தார். உஸ்மான் (رضي الله عنه) அவர்களுடன் பல்வேறுபட்ட பிக்ஹ் சட்டங்களிலும், அரசியல் விவகாரங்களிலும் இவருக்கு முரண்பாடு ஏற்பட்டாலும் அதை பூதாகரமாக்கி விடாமலிருப்பதில் கவனம் செலுத்தினார். சிலர் இவரை உஸ்மான் (رضي الله عنه) அவர்களுக்கு எதிராகத் தூண்டி விட்டாலும் முஸ்லிம்களுக்குள் பிரச்சினை எழும்; ஆனால் அது என்மூலம் எழுந்துவிடக் கூடாது எனக் கூறி மிகவும் சாதுர்யமாகப் பிரச்சினையைக் கையாண்டார்.

ஆடு மேய்த்துக் கொண்டிருந்த ஒருவர் சீரிய வழிகாட்டலால் மாபெரும் அறிஞராகியுள்ளார். நாமும் உரிய முறையில் கவனம் செலுத்தினால் நமது கல்வியை அபிவிருத்தி செய்து கொள்வதென்பது இயலாத காரியமல்ல என்பதை இதிலிருந்து விளங்கலாம்.

بسم الله الرحمن الرحيم

உலகப்பற்றை உதறித் தள்ளிய உத்தமர்
ஸஅத் இப்னு ஆமிர் (ரலி)

உலக உருண்டை கண்ட உத்தமர்கள் உன்னத மனிதர்களில் ஸஅத் இப்னு ஆமிர் (ரலி) அவர்களும் ஒருவராவார். அரசியல் தலைவராகவும் அதேவேளை ஆன்மிகத்தில் அளப்பரிய ஈடுபாடு கொண்டவராகவும் உலகப்பற்றை உதறிய துறவி போன்றும் வாழ்ந்தவர் இவர். இம்மையை விற்று மறுமையை வாங்கிய மாமனிதர் என வரலாற்றாசிரியர்கள் இவரை வர்ணிக்கின்றனர். இவரது வரலாற்றை எழுதுவதும் பேசுவதும் வேண்டுமானால் எளிதாக இருக்கலாம். எடுத்து நடப்பது என்பது சாத்தியமற்ற சமாச்சாரமோ என்று எண்ணுமளவுக்குப் புனித வாழ்வு வாழ்ந்தவர் இவர்.

இஸ்லாத்தில் இணைதல்

ஹுபைப் (ரலி) அவர்கள் மக்கத்துக் குறைஷிகளிடம் கைதியாக இருந்த நபித்தோழர்களில் ஒருவர். இஸ்லாத்தை ஏற்றதால் இவரைப் பகிரங்கமாகக் கொலை செய்ய காபிர்கள் நாள் குறித்தனர். அந்தப் படுகொலைக் காட்சியைக்காண குறைஷி நண்பர்களுடன் ஸஅத் இப்னு ஆமிர் வருகை தந்திருந்தார்.

குறித்த இடத்திற்கு கைதி ஹுபைப் (ரலி) அழைத்து வரப்பட்டார். தமது எதிரி ஒருவர் அழியப் போகின்றார் என்ற ஆவலில் குறைஷிக்குலப் பெண்களும் சிறுவர்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர். அப்போது மரணத்தைத் தழுவ இருக்கும் ஹுபைப் (ரலி) அவர்கள் குறைஷிகளைப் பார்த்து 'எனக்கு இரண்டு ரக்அத்கள் தொழ அனுமதிப்பீர்களா?' எனக் கேட்டார். இறுதி நேரத்தில் அவர் விடுத்த வேண்டுகோள் ஏற்கப்பட்டது. ஹுபைப் அழகாக இரு ரக்அத்கள் தொழுதார். தொழுது முடித்த பின்னர், 'நான் மரணத்துக்கு அஞ்சுவதாக நீங்கள் எண்ணுவீர்கள் என்ற அச்சம் மட்டும் எனக்கு இல்லையென்றால் இதைவிட அழகாக நீட்டி நிதானமாகத் தொழுதிருப்பேன்' என்று கூறினார். பிறகு மரண தண்டனைக்காக அவர் கழு மரத்தில் ஏற்றப்பட்டார். குறைஷியரின் கூரிய அம்புகள் அவரது உடலைச் சல்லடையிடத் தயாராக இருந்தன.

'ஹுபைபே! நீ உன் குடும்பத்துடன் சகல வளங்களுடன் வாழ, இந்த இடத்தில் உமக்குப் பதிலாக முஹம்மத் இருப்பதை நீ விரும்புகிறாயா?' எனக் கேட்டனர். தனது உயிர் போகும் நிலையிலும் 'நான் தப்பிட நபியின் கால்களில் ஒரு முள் தைப்பதைக் கூட நான் விரும்ப மாட்டேன்' என்றார். அவரது உடல் சல்லடையானது.

இந்தக் காட்சியை ஸஅத் கண்களால் கண்டதால் ஹுபைபின் உயிர்த் தியாகம் ஸஅதுக்கு பல பாடங்களைப் புகட்டியது.

உயிர்த் தியாகத்தின் ஒப்பற்ற உயர்வு, வாழ்க்கைப் போராட்டத்தின் முடிவு, இம்மையை விட மறுமை வாழ்வின் உண்மைத்தன்மை, ஹுபைப் நேசித்த அந்த மனிதர் நிச்சயம் ஒரு நபியாகத்தான் இருக்க வேண்டும் என்பன போன்ற பல பாடங்களைப் புகட்டியது. உயிர்த்தியாகிகள் இறப்பதில்லை. அவர்கள் வித்தாக விழுந்து விருட்சமாக எழுவார்கள். இதன்படி ஹுபைபின் மரணம் ஸஅதை இஸ்லாத்தின்பால் ஈர்த்தது. கைபர் போருக்கு சிறிது முன்னர் இஸ்லாத்தில் இணைந்து மதீனா வந்து சேர்ந்தார். கைபர் போரில் பங்கேற்றார். இஸ்லாமிய வரலாற்றில் ஒரு இடத்தில் இழப்பு ஏற்படும் போது மற்றுமொரு புறத்தில் இலாபம் ஏற்படும் என்பது இயல்பாகும். ஹுபைபின் மரணம் இறைமறுப்பாளர் ஒருவரை முஸ்லிமாக்கியது.

ஸஅத் இஸ்லாத்தை ஏற்றதிலிருந்து தூய்மையானதொரு வாழ்க்கையை மேற்கொண்டார். உலகை விட அவருக்கு மறுமையே உயர்வானதாகவும் உவப்பானதாகவும் அமைந்திருந்தது. நபி (ﷺ) அவர்களின் மரணத்தின் பின்னர் இறந்து விட்ட தனது தோழரின் எண்ணத்திலேயே வாழ்க்கையைக் கழித்தார். உமர் (ؓ) அவர்கள் கலீபாவான போது உமர் (ؓ) அவர்களிடம், “உமரே! மார்க்க விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்! அல்லாஹ்வின் விஷயத்தில் மக்களுக்கு அஞ்சாதீர். உமது சொல்லிலும் செயலிலும் முரண்படாது பார்த்துக்கொள்ளும்.

அல்லாஹ் உம்மை அதிபதியாக்கிய இந்த மக்களில் உமக்கு நெருங்கியவர், தூரமானவர் அனைவரையும் ஒன்றுபோல் கவனித்துக்கொள். உனக்கும் உனது குடும்பத்திற்கும் எதை எதையெல்லாம் நீர் விரும்புகிறீரோ அவற்றையே இந்த மக்களுக்கும் விரும்புவீராக! உமக்கும் உமது குடும்பத்திற்கும் எதை வெறுப்பாயோ அதை இம்மக்களுக்கும் வெறுப்பாயாக!

சத்தியத்தை நிலைநாட்டுவதில் தூற்றுவோரின் தூற்றுதலுக்கு அஞ்சாது துணிவுடன் செயல்படுவீராக! என்றும் கூறினார்.

இன்றைய அரசியல் தலைவரிடம் இப்படி ஒருவர் பேசினால் அவர் முகவரியற்றவராக்கப்படலாம். ஆனால், உமர் (ؓ) அவர்களிடம் இப்படிக் கூறிய ஸஅத், ஹிம்ஸ் மாகாணத்தின் கவர்னராக்கப்பட்டார்.

பதவியை விரும்பாமை

ஸஅத் (ரலி) அவர்கள் ஆன்மிகத்தில் அதிகம் நாட்டம் கொண்டவராக இருந்ததால் பதவியை விரும்பவில்லை. தன்னை உலக விவகாரங்களில் மூழ்க விட வேண்டாம் என்று உமர் (ரலி) அவர்களிடம் கூறினார். எனினும் உமர் (ரலி) அவர்கள் கூறிய பதில் அவரில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

எனது தோளில் ஆட்சிப் பொறுப்பை சுமத்திவிட்டு நீங்களெல்லாம் ஒதுங்கி விடப் பார்க்கின்றீர்களா? நான் உங்களை விடப் போவதில்லை. நீங்களும் இந்தச் சுமையில் பங்கேற்கவே வேண்டும் என்று உமர் (ரலி) அவர்கள் பிடிவாதமாக இருக்கவே பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

முதல் பணி

ஸஅத் (ரலி) அவர்கள் தமது இளம் மனைவியுடன் ஹிம்ஸ் நோக்கிப் பயணித்தார். அப்போதுதான் அவர்களுக்குத் திருமணம் முடிந்திருந்தது. போகும் போது அடிப்படைத் தேவைகளுக்காக உமர் (ரலி) அவர்கள் பைதுல் மாலிலிருந்து சிறிது பணம் கொடுத்தனுப்பினார்.

ஹிம்ஸ் பகுதிக்குச் சென்றதும் உமர் (ரலி) அவர்கள் கொடுத்த பணத்தில் வீட்டிற்குத் தேவையான பொருட்களையும் ஆடைகளையும் வாங்க மனைவி ஆசைப்பட்டார். அப்பொழுது ஸஅத் (ரலி) அவர்கள் :

“அன்புத் துணைவியே! அவசரம் வேண்டாம். இது வர்த்தக பூமி. இங்கு வியாபாரம் செய்வது நல்ல வருமானத்தைத் தரும். இந்தப் பணத்தை எமக்கு இலாபம் தரக்கூடிய ஒருவருக்குக் கொடுத்து விடலாம்” என்று கூறினார். மனைவியும் சம்மதிக்கவே வீட்டுக்குத் தேவையான அடிப்படைப் பொருட்களை மட்டும் வாங்கி விட்டு மீதிப் பணத்தை ஏழைகளுக்குத் தர்மம் செய்துவிட்டார்.

அதன்பின் மனைவி வியாபாரம் பற்றிக் கேட்கும் போதெல்லாம் அது இலாபம் தரும்; இலாபம் தரும் என்றுதான் பதில் சொல்வார். ஈற்றில் உண்மை தெரிந்த பின் மனைவி கவலை கொண்டாலும் கணவனின் வாழ்க்கைப் போக்கை அறிந்து அதற்கு ஒத்துழைக்கும் விதத்தில் நடந்து கொள்ளலானார்.

முதல்தர ஏழை கவர்னர்

ஸஅத் (ரலி) கவர்னர் பொறுப்பையேற்ற பின்னர் ஒருமுறை ஹிம்ஸ் பிரதேசத்தில் இருந்து ஒரு தூதுக் குழு கலீபாவைச் சந்திக்க வந்தது. அவர்களிடம் கலீபா உமர் (ரலி) அவர்கள், உங்கள் பகுதியில் உள்ள பரம ஏழைகளின் பெயர்களை எழுதித் தாருங்கள். அவர்களது தேவைகளை அறிந்து உதவி செய்யலாம் என்றார்கள். வந்த தூதுக் குழுவினர் ஒரு பட்டியலை வழங்கினர். அதில் கவர்னர் ஸஅத் இப்னு ஆமிரின் பெயரும் இருந்தது.

கலீபா : ஸஅத் இப்னு ஆமிர் யார்?

தூதுக் குழு : எங்கள் தலைவர் ஸஅத் தான்.

கலீபா : உங்கள் தலைவர் ஒரு பக்கீரா

தூதுக் குழு : ஆம் கலீபா அவர்களே! எங்கள் தலைவர் வீட்டில் பல நாட்கள் அடுப்பு எரிவதே இல்லை.

இந்தச் செய்தி கேட்டு உருக்கு போன்ற உமரும் உருகினார். கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. உடனே ஒரு பையில் ஆயிரம் தீனார் நாணயங்களைப் போட்டு இதை ஸஅதிடம் கொடுத்து “கலீபா உங்களுக்கு ஸலாம் கூறினார். இந்தப் பணத்தை உங்களது சொந்தத் தேவைகளை நிறைவு செய்ய பயன்படுத்துங்கள்” எனக் கூறுங்கள் என்று கூறி தூதுக் குழுவிடம் கொடுத்தார்.

தூதுக் குழு கவர்னர் ஸஅத் அவர்களிடம் உமர் (ரலி) கொடுத்தனுப்பிய பணத்தை வழங்கிய போது வேண்டாத பொருளைக் கண்டு விலகுவது போல் அவர் பின்வாங்கினார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் என்று உரக்கக் கூறினார்.

வேதனையுடன் வெளிப்பட்ட வெறுப்புக் கலந்த இந்த வார்த்தைகளை மட்டும் உள்ளிருந்து கேட்ட மனைவி அதிர்ச்சியடைந்தவர்களாக என்ன நடந்தது கலீபா அவர்கள் மரணித்து விட்டார்களா? என்று அதிர்ச்சியில் கேட்டார்கள்.

ஸஅத் : இல்லை, அதை விடப் பெரிய முஸீபத் இது.

மனைவி : என்ன நடந்தது? முஸ்லிம்கள் ஏதேனும் பொறியில் சிக்கிக் கொண்டார்களா?

ஸஅத் : இல்லை, அதை விட மோசமான செய்தி இது.

மனைவி : என்னதான் நடந்தது என்று கூறுங்களேன்?

ஸஅத் : எனது மறுமையைக் குழப்ப துன்யா என்னில் நுழைந்து விட்டது. பித்னா என் வீட்டுக்குள்ளேயே வந்து விட்டது.

மனைவி : அந்த பித்னாவிலிருந்து நீங்கள் ஒதுங்கிக் கொள்ளுங்கள். (பண விவரம் அவர்களுக்குத் தெரியாது).

ஸஅத் : இந்த விஷயத்தில் நீ எனக்குத் துணை நிற்பாயா?

மனைவி : நிச்சயமாக துணை நிற்பேன். இந்த உறுதியைப் பெற்ற பின் அந்த ஆயிரம் நாணயங்களையும் ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்து விட்டார்கள்.

செல்வம் தானாகவே வந்த போதும் ஏழ்மையாக இருந்த நிலையிலும் அதை விரட்டியடித்த இந்த மாமனிதரை இனி ஒருபோதும் வரலாறு காணப்போவதில்லை என்பது மட்டும் உறுதியாகும்.

கலீபாவின் வருகை

உமர் (ﷺ) அவர்கள் ஒவ்வொரு பகுதிகளுக்கும் கவர்னரை தகுதிக்குத் தக்கவாறு நியமனம் செய்தார்கள். அவ்வாறு பதவி வழங்கும் போது மிகுந்த எச்சரிக்கையுடனேயே நடந்து கொண்டார்கள். அப்படி இருந்தும் ஒவ்வொரு பிரதேச கவர்னர்கள் குறித்த மக்கள் அபிப்பிராயங்களைப் பெற்று அதனடிப்படையில் அவர்களை விசாரிப்பதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

அதேபோல கலீபா உமர் (ﷺ) அவர்கள் ஹிம்ஸ் பகுதிக்கு வந்தபோது மக்களை அழைத்து உங்கள் தலைவர் எப்படி நடந்து கொள்கின்றார் என விசாரித்தார்கள்.

ஸஅத் (ﷺ) அவர்களது புனிதமான வாழ்வின் காரணமாக மக்கள் அவருக்குக் கட்டுப்பட்டாலும் கலீபா வந்த போது நான்கு குற்றச்சாட்டுக்களை சுமத்தி விசாரிக்குமாறு வேண்டினர்.

01. அவர் அதிகாலையில் எம்மிடம் வரமாட்டார். பகல் பொழுதில் தான் வருவார்.
02. இரவில் எங்கள் பிரச்சினைகளுக்கு நேரடியாக முகம் கொடுக்க மாட்டார்.
03. மாதத்தில் இரண்டு நாட்கள் முழுமையாக எம்மிடம் வருவதில்லை.

04. அவர் அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்து விடுகிறார். இதுகுறை கிடையாது பலவீனம் தான்.

என்று கூறினர். இது கேட்ட உமர் (ﷺ) அவர்கள் அவர் ஒரு நல்லடியார் என்பது எனக்குத் தெரியும். என் நல்லெண்ணம் கெட்டு விடக்கூடாது என தனக்குள் எண்ணிக் கொண்டு விசாரணையை ஆரம்பித்தார்கள் கலீபா அவர்கள்.

ஸஅத் (ﷺ) அவர்கள் பின்வருமாறு தனது தரப்பு விளக்கத்தைக் கூறினார்கள்.

இது வரை இந்தச் செய்திகளை வெளிப்படுத்துவதை வெறுத்து வந்தேன். ஆனால், இப்போது சொல்லியாக வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது.

கலீபா அவர்களே! என்னிடம் பணியாட்கள் இல்லை நானே என் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். காலையில் மாவு அரைத்து பிசைந்து ரொட்டி சுட்டு பின்னர் வீட்டுப் பணிகளைச் செய்து விட்டுத்தான் நான் வெளியில் வருவேன். இதுதான் எனது தாமதத்திற்குக் காரணமாகும்.

அடுத்து, நான் இரவில் மக்கள் பணியில் ஈடுபடுவதில்லை. எனது பகல் பொழுதை மக்கள் பணிக்காகவும் இரவுப் பொழுதை எனது ஆன்மிகப் பக்குவத்திற்காக இறைவணக்கத்திற்கென்று நான் ஒதுக்கியுள்ளேன்.

அடுத்து மாதத்தில் இரு நாள் நான் வீட்டில் இருப்பதுண்டு. கலீபா அவர்களே! ஏற்கனவே கூறியது போல் என்னிடம் பணியாள் இல்லை. அதே வேளை நான் அணிந்துள்ள இந்த ஆடையைத் தவிர வெளியில் அணியக்கூடிய வேறு ஆடை என்னிடமில்லை. மாதத்தில் இரு நாட்கள் இந்த ஆடையைக் கழுவி சுத்தம் செய்து அது காயும் வரை நான் வெளியில் வருவதில்லை. அந்த இரு நாட்களும் மாலைப் பொழுதில் தான் நான் மக்கள் பணிக்காக வருவேன்.

அடுத்து நான் மயக்கம் போட்டு அடிக்கடி விழுவதுண்டு. கலீபா அவர்களே! ஹுபைப் (ﷺ) அவர்கள் அம்புகளால் துளைக்கப்பட்டு கொல்லப்பட்ட அந்தக் கொடூரத்தை நான் கண்களால் கண்டேன். அப்போது அவர்கள் செய்த பிரார்த்தனைகள் என்னையும் பாதிக்குமோ என்று நான் அஞ்சுவதுண்டு. என்மீது இடி விழுந்து விடுமோ என்று நான் அஞ்சுவதுண்டு. அந்த வேளையில்

நான் அவருக்கு உதவாததையிட்டு நான் மனம் வருந்துகின்றேன். அல்லாஹ் என்னையும் தண்டித்து விடுவானோ என நான் அஞ்சும் போதெல்லாம் மயங்கி விழுந்து விடுகின்றேன் என்று கூறினார்கள்.

இந்தப் பதில்களைக் கேட்டு திருப்தி கொண்ட உமர் (ؓ) அவர்கள் என் நல்லெண்ணத்தைச் சரியாக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள்.

மீண்டும் பணப்பொதி

கவர்னரின் குடும்பக் கஷ்டங்களை அறிந்த கலீபா மீண்டும் பண முடிச்சொன்றை அனுப்பினார்கள். இது கண்ட ஸஅத் (ؓ) அவர்களின் மனைவி 'நீங்கள் கஷ்டப்பட்டு உதவி செய்ய வேண்டும் என்ற நிலையை நீக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! இதை வைத்து வீட்டுத் தேவைகளை நிறைவு செய்து ஒரு பணியாளையும் நியமித்துக் கொள்ளலாம்' என்று கூறினார்கள்.

கவர்னர் : இதைவிடச் சிறந்த வழி இருக்கிறதே!

மனைவி : என்ன வழி?

கணவன் : நமக்கு இது இப்போது தேவைப்படுவதை விட அதிகமாகத் தேவைப்படும் போது எம்மிடம் கொண்டு வந்து தரக்கூடியவர்களிடம் இதை ஒப்படைப்போம்.

மனைவி : எப்போது?

கணவன் : இதை அல்லாஹ்வுக்கே அழகிய கடனாக கொடுத்து விடுவோம்.

(தர்மம் செய்து விடுவோம். நாளை மறுமையில் கஷ்டத்தில் இருக்கும் போது அது நம்மிடம் மீளவரும்.)

மனைவி : ஆம் நல்லதுதான். அப்படியே செய்வோம்.

இந்த உரையாடல் முடிந்ததும் தனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை அழைத்து இந்தப் பணத்தை எடுத்துச் சென்று இன்னின்ன விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் வழங்கி விடுங்கள் எனக் கூறினார்கள்.

இவ்வாறு இவரது வாழ்வே அற்புதமானதாகத் திகழ்ந்தது. ஒரு பிரதேசத்தின் அமீராக இருந்து கொண்டு வறுமையான எளிமையான வாழ்வைத் தேர்ந்தெடுத்து வாழ்ந்தார். இல்லை தனது மறுமை வாழ்வை அழித்து விடக்கூடாது என்பதில் கண்ணும்

கருத்துமாக இருந்தார். இத்தகைய உயர்நிலையை நபி (ﷺ) அவர்களிடம் குர்ஆனிய பாடம் படித்த இவர் போன்றவர்களைத் தவிர வேறு எவரிடம் தான் காண முடியும்.

இவர் போன்றவர்களுடைய வாழ்வில் நாம் பாடம் பயில வேண்டும். மறுமை எக்கேடு கெட்டாலென்ன இம்மையை அடைந்து விட வேண்டும் என்ற வேட்கையுடன் செயல்படும் நமது வாழ்க்கையின் தவறான ஓட்டத்தை இவரது வாழ்வு தடுத்து நிறுத்த வேண்டும். உலகை அனுபவிக்கலாம்; அது ஆகுமான வழியில் அடையப்பெற்றதாக இருக்க வேண்டும். எந்த நிலையிலும் மறுமைக்குத் துரோகமிழைத்து இம்மையைப் பெறுவதில்லை என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.



சத்தியத் தேடலில்
ஸல்மான் பாரிஸ் (ﷺ)

இஸ்லாம் எனும் இந்த சத்திய சன்மார்க்கம், சாதி, இனம், தேசம் என்பவற்றையெல்லாம் கடந்த சகலருக்குமான சர்வதேச சமயமாகும். இந்த தூய தீனின் தூதுச் செய்தியை சுமப்பதிலும், உலகெல்லாம் எடுத்துச் செல்வதிலும் சகலரும் ஆரம்ப காலம் தொட்டே பங்காற்றி வந்துள்ளனர். அவர்களுள் பாரசீகத்தை சேர்ந்த ஸல்மானும் ஒருவராவார்.

இவர் சத்தியத் தாகம் கொண்டு, அதைத் தேடித்திரிந்து இஸ்லாத்தில் இணைந்தவராவார். இதோ அவர் இஸ்லாத்தில் இணைந்த சரித்திரத்தை அவரே இப்படிக் கூறியுள்ளார்.

நான் பாரசீகத்தின் இஸ்பஹான் பிரதேசத்தைச் சேர்ந்தவன். நான் பிறந்த ஊர் 'ஜய்யான்' ஆகும். (இது முன்னைய அஸ்பஹானின் எல்லைப்புறக் கிராமமாகும். இதனை ஸஹ்ருஸ்தான் என்று அஜமிகள் அழைப்பர். ஹதீஸ் கற்கைத் துறையில் இந்த ஊர் மகீனா என்றே அழைக்கப்படுகின்றது) எனது தந்தை ஊரில் மிகப்பெரும் செல்வந்தராகவும் செல்வாக்கு மிக்கவராகவும் இருந்த போதிலும் நெருப்பு வணக்கத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவராவார்.

எனது தந்தை என்னை மிகவும் நேசித்தார். அதனால், கன்னிப் பெண்களை வீட்டில் வைத்துப் பாதுகாப்பது போல் என்னைக் கண்காணித்து வந்தார். நானும் தந்தையைப் பெரிதும் நேசித்தேன். அவரது நெருப்பு வணக்கத்தில் பற்றுக்கொண்டேன். இப்படி வணங்குவதற்காக எரிக்கப்படும் நெருப்பு இரவிலோ பகலிலோ அணைந்து விடாவண்ணம் கண்ணும் கருத்துமாக காத்து வந்தேன்.

எனது தந்தைக்குப் பலன் தரும் பல அசையா சொத்துக்கள் இருந்தன. ஒரு நாள் ஒரு தேவைக்காக அவர் என்னை வெளியில் அனுப்பினார். அனுப்பும் போதே விரைவாக வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். நான் போகும் போது ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தைக் கண்டேன். அதில் வழிப்படுவோரின் ஓதல்களைக் கேட்டேன். அது என்னில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

என் தந்தை என்னைப் பொத்திப் பொத்தி வளர்த்ததால் கிறிஸ்தவம் பற்றியோ ஏனைய சமயங்களைப் பற்றியோ எதையும் நான் அறிந்திருக்கவில்லை. இதனால் இக்காட்சியைக் கண்டு அதிசயித்த நான், அவர்கள் என்ன செய்கிறார்கள் எனப் பார்ப்பதற்காகத் தேவாலயத்திற்குள் சென்றேன்.

அவர்களது வணக்க முறை என்னைக் கவர்ந்தது. நான் கிறிஸ்தவத்தில் காதல் கொண்டவனாக "இது நான் இருக்கும் மதத்தை விடச் சிறந்ததாக இருக்கிறதே" என எனக்குள்ளேயே கூறிக் கொண்டேன். தந்தையின் பணிக்குப் போகாமல் மாலை வரை அங்கேயே இருந்தேன். பின்னர் அவர்களிடம் சென்று, இந்த மதம் எங்கிருந்து தோன்றியது என்று கேட்டேன். அவர்கள் இது பலஸ்தீனத்தில் தோன்றியது என்றனர். நான் இரவில் வீட்டிற்குச் சென்றதும் தந்தை என்னை விசாரித்தார். அப்போது நான் நடந்தவற்றைக் கூறிய போது தந்தை அதிர்ச்சியடைந்தவராக 'மகனே! கிறிஸ்தவத்தில் எந்த நன்மையுமில்லை. உனது மூதாதையரின் மதமாகிய நாம் பின்பற்றும் மஜூஸி மதம் தான் சிறந்த மதம்' என்று கூறினார்.

அதற்கு நான், 'இல்லை தந்தையே! இல்லை! அவர்களது சமயம் எமது மதத்தை விட மேன்மையானது' என்று மறுமொழி கூறினேன். இது கேட்டு அச்சமுற்ற என் தந்தை நான் மதம் மாறிவிடுவேனோ என அஞ்சி; என்னை வீட்டிலேயே அடைத்து வைத்தார்.

எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்த போது கிறிஸ்தவர்களிடம் பலஸ்தீனத்திலிருந்து பிரயாணக் கூட்டங்கள் வந்தால் எனக்கு அறிவிக்குமாறு கூறினேன். அதன்பின் பலஸ்தீன் நோக்கி ஒரு வியாபாரக் கூட்டம் செல்லும் செய்தி கிடைத்தது. நான் வீட்டை விட்டும் வெளியேறி அந்தக் கூட்டத்துடன் பலஸ்தீன் நோக்கிப் பயணமானேன்.

நான் பலஸ்தீன் சென்று, 'கிறிஸ்தவ சமயத்தில் சிறந்தவர் யார்' எனக் கேட்டேன். அவர்கள் தேவாலயப் பொறுப்பாளர் ஒருவரைக் குறிப்பிட்டனர். நான் அவரிடம் சென்று ;

நான் கிறிஸ்தவத்தை விரும்புகின்றேன். எனவே, உங்களுடன் இருந்து, உங்களுக்கு பணிவிடை செய்யவும், உங்களிடம் படிக்கவும், உங்களுடன் இருந்து வழிபடவும் ஆவல் கொள்கிறேன். அனுமதிப்பீர்களா? என்று கேட்டேன். அவரும் சம்மதித்தார். நான் அவருக்கு பணிவிடை செய்யலானேன். நெருங்கிச் சென்று அவரது நடவடிக்கைகளைப் பார்த்தபோது அவர் மோசமானவர் என்று எனக்குப் புரிந்தது. அவர் தர்மம் செய்யுமாறு மக்களுக்குப் போதிப்பார். தர்மம் சேர்ந்ததும் யாருக்கும் கொடுக்காமல் தனக்காகப் புதைத்து வைத்துக் கொள்வார். இவ்வாறு ஏழு பெரும் பைகளில் தங்கத்தைப் புதைத்து வைத்திருந்தார்.

இந்தத் துரோகச் செயலைக் கண்டு அவர் மீது கடுமையாகச் சினமுற்றேன். சில தினங்களுக்குள்ளேயே அவர் மரணித்தார். மக்கள் பக்தி சிரத்தையோடு அவரை நல்லடக்கம் செய்ய முன்வந்தனர். நான் அவர்களிடம் இவர் குறித்துக் கூறியபோது, உனக்கு எப்படித் தெரியும் என்று வினவினர். நான் அவரது புதையல்களைத் தோண்டிக் காட்டினேன். இதனால் ஆத்திரம் கொண்ட அம்மக்கள் இவரை அடக்க மாட்டோம் எனக் கூறி அவரைச் சிலுவையில் அறைந்து கல்லால் அடித்தனர்.

இதன் பின்னர் இறந்தவரின் இடத்திற்கு வேறொருவர் நியமிக்கப்பட்டார். அவர் மிக நல்லவர், உலக பற்றற்றவராகவும் மறுமையை நோக்கமாகக் கொண்டு செயல்படுபவராகவும் இரவு, பகலாக இறைவழிபாட்டில் திழைத்தவராகவும் அவர் இருந்தார். இதனால் நான் அவரைப் பெரிதும் நேசித்தேன். அவரிடமே தங்கியிருந்தேன்.

அவருக்கு மரணம் நெருங்கிய போது, ‘உங்களுக்குப் பின் நான் யாருடன் இருக்க வேண்டும் என்று நீங்கள் எனக்கு வஸிய்யத் செய்யுங்கள்’ எனக் கேட்டேன். அதற்கவர் மவ்ஸிலில் ஒருவர் இருப்பதாகவும் அவரிடம் செல்லுமாறும் குறிப்பிட்டார்.

இவர் மரணித்ததும் அவரிடம் சென்று நடந்ததைக் கூறினேன். அவரின் சம்மதத்தின் பெயரில் அவருடன் இருந்தேன். அவருக்கு மரணம் நெருங்கிய போது அவர் நஸீபைனில் ஒருவர் இருப்பதாகவும் அவரிடம் செல்லுமாறும் கூறினார். அவரிடம் சென்று பணிபுரிந்தேன். அவரின் மரணத்தின் போது “உமுரிய்யா”வில் ஒருவர் இருப்பதாகவும் அவரிடம் செல்லுமாறும் கூறினார்.

நான் அவரிடம் சென்று தங்கினேன். அவரும் முன்னவர்கள் போல் மிக நல்லவராக இருந்தார். நான் அவரிடம் தங்கி இருக்கையில் அவருக்கு மரணம் நெருங்கியது. அவரிடம் கேட்டபோது,

மகனே! சத்திய தீனை சரியாகப் பின்பற்றும் எவரும் பூமியில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனினும் அரபு நாட்டில் தோன்றக் கூடிய நபி வருவதற்கான காலம் கனிந்து விட்டது. அவர் இப்றாஹீமின் மார்க்கத்தைப் போதிப்பார். ஈச்சம் மரங்கள் நிறைந்த இடத்திற்கு (மதீனாவிற்கு) ஹிஜ்ரத் செய்வார். அவருக்கு சில அடையாளங்கள் உள்ளன. அவர் அன்பளிப்பை ஏற்பார், ஸதகாவை உண்ணமாட்டார். அவரது இரு தோல் புஜங்களுக்கிடையேயும் இறுதி நுபுவத்தின் அடையாளங்கள் இருக்கும். முடியுமானால் நீ அந்தப் பிரதேசத்திற்குச் சென்று விடு என்றார்.

அவர் மரணித்த பின்னர் சிறிது காலம் அங்கேயே தங்கினேன். அங்கே அரபு நாட்டின் “கல்ப்” கிளையைச் சேர்ந்த வியாபாரக் குழு வந்தது. நான் அவர்களிடம் சென்று அரபுப் பிரதேசத்திற்கு உங்களுடன் என்னையும் அழைத்துச் செல்லுங்கள். அதற்குப் பகரமாக நான் என்னிடம் இருக்கும் இந்தப் பொருட்களைத் தருகின்றேன் என்று கேட்டேன். அவர்கள் சம்மதித்ததும் எனது பொருட்களைக் கொடுத்து விட்டு அவர்களுடன் சென்றேன்.

அவர்கள் ஷாமுக்கும் மதீனாவுக்கும் இடையிலுள்ள “வாதில் குரா” பள்ளத்தாக்கு வந்ததும் எனக்குத் துரோகம் செய்து யூதன் ஒருவனுக்கு என்னை விற்றுவிட்டனர். நான் அவனுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தேன்.

பின்னர் பனூகுரைழாவைச் சேர்ந்த என் எஜமானனின் சிற்றப்பாவின் மகன் ஒருவர் வந்து என்னை வாங்கினார். நான் அவருடன் பேரீத்தம் சோலைகள் நிறைந்த யத்ரிப் (மதீனாவின் முன்னைய பெயர்) நகருக்கு வந்தேன். மதீனாவைக் கண்ணுற்ற போது எனது உமூரிய்யாத் தோழர் கூறிய இடம் இது தான் என அறிந்து அங்கேயே தங்கினேன்.

இச்சந்தர்ப்பத்தில் நபி (ﷺ) அவர்கள் மக்காவில் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆயினும் நான் அடிமையாக இருந்ததால் அது குறித்து அறியாதிருந்தேன். சில நாட்கள் கழித்த நிலையில்...

நான் என் எஜமானுக்காக ஒரு ஈச்ச மரத்தின் கீழ் பணி செய்து கொண்டிருந்தேன். அது நபி (ﷺ) அவர்கள் ஹிஜ்ரத் வந்த சந்தர்ப்பமாகும். அப்போது என் எஜமானனின் சிற்றப்பாவின் மகன் அங்கே வந்து,

அவ்ஸ் - ஹஸ்ரஜ் கோத்திரத்தார் அழிந்து போவார்களாக! இவ்வளவு காலமும் பிரிந்து சண்டைசெய்து கொண்டிருந்த அவர்கள் தன்னை நபியெனக் கூறிக் கொண்டு மக்காவிலிருந்து வந்த ஒரு மனிதனின் தலைமையில் குபாவில் ஒன்று சேர்ந்துள்ளனர் எனக் கோபத்தோடு கூறிக்கொண்டு வந்தார்.

இந்தச் செய்தி கேட்டதும் என் உடலெல்லாம் புல்லரித்தது. தலை சுற்றியது. என் எஜமானனின் மீது விழுந்து விடுவேனோ என நான் அச்சப்படும் அளவுக்கு ஆட்டம் கண்டேன். மகிழ்ச்சி வெள்ளம் பொங்க என்ன சொன்னீர்கள், சொல்லுங்கள்! சொல்லுங்கள்! எனக் கேட்டுக் கொண்டு நான் அவரிடம் சென்றேன். இது கண்டு

கோபமுற்ற என் எஜமான் என்னைக் கடுமையாகத் தாக்கி விட்டு நீ போய் உன் வேலையைப் பார் என்று விரட்டினார்.

அன்று மாலையானதும் நான் என்னுடன் வைத்திருந்த பேரீச்சம் பழங்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டு நபி (ﷺ) அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்றேன்.

சோதனையின் ஆரம்பம்

நபியிடம் சென்ற நான் நீங்கள் நல்ல மனிதர் என்றும் உங்களுடன் ஊருக்குப் புதிதாக வந்துள்ள தோழர்கள் தேவையுடையவர்களாக இருப்பதாகவும் செய்தி கிடைத்தது. என்னிடம் தர்மப் பொருள் உள்ளது. அதனைப் பெற்றுக் கொள்ள உலகத்திலேயே நீங்கள் தான் மிகத் தகுதியானவர்கள் என நான் கருதுகிறேன் எனக் கூறிக் கொண்டு ஈத்தம் பழங்களை வழங்கினேன்.

நபி (ﷺ) அவர்கள் அதிலிருந்து எதையும் தனக்கு எடுத்துக் கொள்ளாமல் தோழர்களை உண்ணுமாறு கூறினார்கள். இறுதிக் காலத்தில் வரும் இறைத்தூதர் ஸதகாவை உண்ணமாட்டார் என்ற முதல் அடையாளம் சரி என நான் எனக்குள்ளேயே கூறிக்கொண்டேன்.

இரண்டாம் சோதனை

பின்னர், நபி (ﷺ) அவர்கள் மதீனாவுக்கு வந்ததும் இன்னும் கொஞ்சம் ஈத்தம் பழங்களை எடுத்துக் கொண்டு நபி (ﷺ) அவர்களிடம் சென்று நீங்கள் தர்மப் பொருளை உண்ணாமலிருப்பதைக் கண்டேன். எனவே, இது உங்களைச் சங்கைப்படுத்த நான் வழங்கும் அன்பளிப்பாகும் எனக் கூறி அதனை வழங்கினேன். அதனை நபி (ﷺ) அவர்களும் சாப்பிட்டார்கள், தோழர்களும் சாப்பிட்டனர்.

அப்போது இரண்டாவது அடையாளமும் சரியாகவே உள்ளது என நான் எனக்குள் கூறிக்கொண்டேன்.

மூன்றாம் சோதனை

பின்னர் நபி (ﷺ) அவர்கள் பகீஉல் கர்கதில் ஒருவரை அடக்கம் செய்து கொண்டிருக்கும் போது நான் வந்தேன். அப்போது அவர்கள் ஓரிடத்தில் அமர்ந்தார்கள். அவர்கள் மீது இரண்டு ஆடைகள் இருந்தன. அவரின் இரு புஜங்களுக்கும் மத்தியில் உள்ள அடையாளத்தைக் காணலாம் என எதிர்பார்த்தவனாக நான் அவரைச் சுற்றிச் சுற்றி வந்தேன்.

என்னை நபி (ﷺ) அவர்கள் கண்டபோது என் நோக்கத்தை அறிந்து விட்டார்கள் போலும்! அவர்கள் தமது ஆடையை விலக்கினார்கள். நான் அந்த அடையாளத்தைக் கண்டு கொண்டேன். அவர்தான் என் தோழர் சொன்ன இறுதி நபி என்பதை அறிந்து கொண்டேன். என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியாது அழுதேன்.

இதைக் கண்ட நபியவர்கள் என்னைச் சமாதானப்படுத்தி என் கதையைக் கேட்டார்கள். நான் சத்தியத்தைத் தேடி மேற்கொண்ட என் பயணக் கதையை முழுமையாகக் கூறினேன். இதைக் கேட்டு நபியவர்கள் பெரிதும் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் தோழர்களிடம் நான் இதைக் கூற வேண்டும் என விரும்பினார்கள். நான் அவர்களிடம் என்னைப் பற்றி கூறியபோது பெரிதும் ஆச்சரியப்பட்டனர்; மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர்.

இது ஸல்மான் (رضي الله عنه) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற சரித்திரம் மட்டுமேயாகும். இஸ்லாத்தை ஏற்ற ஸல்மான் ஆழ்ந்த ஈமானிய பலமும் மார்க்கத் தெளிவும் உடையவராகத் திகழ்ந்தார் என்பதை அவரது பிற்கால வரலாறு உணர்த்துகின்றது. பத்தாயிரம் மக்கத்து குறைஷிகள் ஒன்று திரண்டு மதீனாவை அழித்துவிட வந்தபோது அகழி தோண்டி மதீனாவைப் பாதுகாக்கும் ஆலோசனையைக் கூறியவரும் இவரே! இதன் மூலம் அந்த யுத்தத்தில் முஸ்லிம்கள் பாதுகாக்கப்பட்டனர்.

ஸல்மான் பாரிஸ் (رضي الله عنه) அவர்களின் வாழ்வைப் படிப்பினையாகக் கொண்டு சத்தியத்தைத் தேடும் பணியை நாம் முடுக்கிவிட வேண்டும். அதனைப் பின்பற்றி வாழ உறுதி பூண வேண்டும்.

சத்தியத்தை தேடிய தன் இலட்சியப் பயணத்தில் வெற்றியை ஈட்டிய ஸல்மான் பாரிஸ் (رضي الله عنه) அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!



மணிமுடிக்கு முன் மண்டியிடாத மாமனிதர்
அப்துல்லாஹ் இப்னு ஹுதாபா (ரழி)

அப்துல்லாஹ் இப்னு ஹுதாபா (ரழி) அவர்கள் மனித வரலாற்றுக்கு மணிமகுடம் சூடும் ஒரு வரலாற்று நாயகராவார். இத்தகைய மனிதர்களால் தான் மனிதத்துவம் மாண்பு பெற்றுள்ளது. இத்தகையவர்கள் வரலாற்றுக்கு வனப்பையும் அழகையும் வழங்கியுள்ளனர்.

இவர் ஆரம்ப கால ஸஹாபாக்களுள் ஒருவர். ஹிஜ்ரத், பத்ர் யுத்தம் போன்ற பல தியாகங்களிலும் பங்கு கொண்டவர். இவரது சகோதரர் ஹுனைஸ் என்பவர் உமர் (ரழி) அவர்களின் மகள் ஹப்ஸா (ரழி) அவர்களை மணமுடித்திருந்தார். இவரது மரணத்தைத் தொடர்ந்து ஹப்ஸா (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் மணந்தார்கள்.

பிரச்சாரத்தின் புதிய கட்டம்

ஹிஜ்ரி - 6ம் ஆண்டு ஹுதைபிய்யா எனும் இடத்தில் முஸ்லிம்களுக்கும் மக்கத்து முஷ்ரிக்குகளுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தில் இரு தரப்பும் 10 வருட போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டனர். எனினும் காபிர்கள் இரு வருடங்களுக்குள்ளேயே இதை மீறினர்.

ஹிஜ்ரி - 6ல் இருந்து 8க்கு இடைப்பட்ட இரண்டு வருடங்களுக்குள் முஸ்லிம்கள் மக்கத்து காபிர்களின் அச்சமற்ற நிலையில் எங்கும் செல்ல முடிந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நபி (ஸல்) அவர்கள் அண்டை நாட்டுத் தலைவர்களுக்கும் பாரசீக, உரோம மன்னர்களுக்கும் இஸ்லாத்தை எடுத்துச் சொல்லும் கடிதங்களை அனுப்பினார்கள்.

இந்த வகையில், அப்துல்லாஹ் இப்னு ஹுதாபா அவர்களை பாரசீக மன்னருக்கும்,

அம்ர் இப்னு உமையதுல் ழம்ரி அவர்களை உரோமபுரி மன்னருக்கும்,

ஹாதிப் இப்னு அபீ பல்தா அவர்களை மிஸ்ரின் மன்னருக்கும்,

வலீத் இப்னு அம்ரிப்னுல் ஆமிரி அவர்களை யமாமாவின் தலைவருக்கும் மடல்களை அனுப்ப நபி (ஸல்) அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். மற்றும் பல சிற்றரசர்களுக்கும்; தனது தூதுவர்கள் மூலம் கடிதங்களை அனுப்பினார்கள்.

இந்தக் கடிதங்களில் அன்றைய இரு வல்லரசுகளான பாரசீக, உரோம மன்னர்களுக்கு நபி (ﷺ) அவர்கள் அனுப்பிய மடல்கள் அரசியல், சமய முக்கியத்துவம் பெற்றவையாகும்.

பயணம்

நபி (ﷺ) அவர்கள் பாரசீக மன்னருக்குரிய கடிதத்தை எழுதி, ஸல்மான் பாரிஸி (ரழி) அவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப, அதில் தனது முத்திரையைப் பதித்து அதனைப் பாரசீக மன்னரின் பஹ்ரைன் ஆளுநரான முன்திர் இப்னு ஸாவா அல்அப்தி அவர்களிடம் ஒப்படைத்து அதனை மன்னருக்கு அனுப்புமாறு வேண்டி அப்துல்லாஹ் இப்னு ஹுதாபாவிடம் கொடுத்தார்கள்.

உயிராபத்து நிறைந்த இப்பணியை அப்துல்லாஹ் தனது ஏனைய நண்பர்கள் போன்று துணிவுடன் ஏற்றார். பந்த பாசம் பார்க்காது பற்றியெரியும் பாலைவன நிலப்பரப்பில் பள்ளம் மேடு தாண்டி ஏற்ற பணியை நிறைவு செய்து ஏற்றம் பெறச்சென்றார். கடிதத்தை பஹ்ரைன் கவர்னர் வசம் ஒப்படைத்து அது இறைத்தூதரின் தூது என்றும், அது பாரசீக மன்னன் கிஸ்ராவின் கைக்குச் சென்றடைய வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

பாரசீக மன்னன்

பாரசீகப் பேரரசின் மன்னர்கள் பொதுவாக குஸ்ரூ-கிஸ்ரா (Cbosroes Eparwz) என்று அழைக்கப்படுவார்கள். கடிதம் அனுப்பும் போது "இப்னுவேஸ் பின் ஹுருஸ்" (வருடம் 590-628) என்ற மன்னனே பாரசீகப் பேரரசை ஆண்டதாக நம்பப்படுகிறது.

இம்மன்னனுக்கு நபி (ﷺ) அவர்கள் எழுதிய மடல் பின்வருமாறு அமைந்திருந்தது.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கிறேன்.

தூதர் முஹம்மதிடமிருந்து பாரசீகப் பேரரசர் கிஸ்ரா அவர்களுக்கு, சத்திய வழியைப் பின்பற்றுவோர் மீது சலாம் உண்டாகட்டுமாக!

'அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நீங்கள் விசுவாசியுங்கள். வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாரும் இல்லையென்றும் நான் மனித குலம் அனைத்தையும் எச்சரிக்க அனுப்பப்பட்ட இறைத்தூதர் என்றும் சாட்சி கூறுங்கள்.

(இதை நம்பி) ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் அமைதி பெறுவீர்கள். மாற்றமாக மறுத்தால், பாவம் உங்களைச் சாரும் என்று எழுதப்பட்டிருந்தது. (தபரி 3/90)

இந்த மடல் பஹ்ரைன் ஆளுனர் மூலமாக கிஸ்ராவைச் சென்றடைந்ததும் அவன் ஆத்திரமுற்றான். எனது அடிமை ஒருவன் எனக்கு இப்படிக் கடிதம் எழுதுவதா என்று கொதித்தான். கடிதத்தை அவமதித்துக் கசக்கிப் போட்டான். இந்த செய்தியறிந்த நபி (ﷺ) அவர்கள் 'யா அல்லாஹ் அவனது ஆட்சியைக் கசக்கிப் போடுவானாக' என்று பிரார்த்தித்தார்கள். (பார்க்க : புகாரி 4424)

நபிகளாரின் திருவாயிலிருந்து வெளிப்பட்ட இவ்வார்த்தைகளின் வலு என்ன என்பதை வரலாறு நிரூபிக்கின்றது.

நபிகளாருக்குப் பிடி ஆணை

பாரசீக மன்னன் தனது அரசியலில் ஆதிக்க வெறியின் உச்ச கட்டத்தில் தனது யெமன் நாட்டு கவர்னருக்கு நபி (ﷺ) அவர்களை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். யெமனின் பாரசீக ஆட்சியின் கவர்னர் 'பாதான்' என்பவர் பலம் பொருந்திய இருவரை நபி (ﷺ) அவர்களை அழைத்து வருவதற்காக ஹிஜாஸ் மாகாணத்திற்கு அனுப்பினான். அவர்கள் இருவரும் தாயிபில் வைத்து குறைஷிக் குல வியாபாரிகளிடம் நபி (ﷺ) அவர்களைப் பற்றி விசாரித்தபோது, அவர் மதீனாவில் இருக்கிறார் எனக் குறைஷிகள் கூறினர். பாரசீக மன்னன் முஹம்மதைத் தீர்த்துக் கட்டி விடுவான் என எண்ணிய குறைஷிகள் மக்காவுக்குச் சென்று மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். மக்களே! அதோ முஹம்மதைத் தேடி பாரசீகப் பேரரசர் ஆள் அனுப்பியுள்ளார். முஹம்மதின் கதை முடியப்போகிறது. அவரால் நமக்கு ஏற்பட்ட தொல்லைகள் தீரப் போகின்றன. குறைஷிக் குலத்தவரே குதூகலமடையுங்கள்; உங்களுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது என்று மக்கத்து மக்களுக்கு நற்செய்தி கூறினர்.

தூதுவர்களும் - தூதர் முஹம்மதும்

யெமனிலிருந்து வந்த இருவரும் மதீனா வந்து மனித குல மாணிக்கமாம் முஹம்மத் (ﷺ) அவர்களைச் சந்தித்தனர்.

எச்சரிக்கையும் ஆசையூட்டலும் கலந்த தொனியில் பின்வருமாறு கூறினர்.

'முஹம்மதே! எமது மன்னர் கிஸ்ரா அவர்கள் எமது தலைவர் பாதான் அவர்களுக்கு உம்மை அவரிடம் அழைத்துவருமாறு நிரூபம்

அனுப்பியுள்ளார். நீர் இதற்குக் கட்டுப்பட்டு எம்முடன் வந்தால் கிஸ்ராவிடம் சலுகையளிக்குமாறு எமது தலைவர் பேசுவார். அதுதான் உமக்கு நல்லது. நீர் மறுத்து விட்டால் முடிவு என்னவாக இருக்கும் என்பதை நீரே அறிவீர். கிஸ்ராவின் பலத்தையும் அவரது பிடியின் கடினத்தையும் நீர் அறிவீர். எனவே, எமக்குக் கட்டுப்படும். உன் சமூகமும் அவரது கோபப் பார்வையிலிருந்து தப்பிக்கொள்ளும் என எண்ணுகிறோம் என்று கூறினர்.

இவர்களின் இந்த எச்சரிக்கை கலந்த வேண்டுகோளுக்கு அண்ணல் நபியிடமிருந்து அழகிய புன்னகையொன்றே பதிலாக வந்தது. எதுவும் கூறாமல் நாளை வாருங்கள் என்றார்கள்.

தூதுவர்களோ வந்த வேலை இவ்வளவு இலகுவாக முடிந்து விட்டது என்ற ஆறுதலுடன் நகர்ந்தனர்.

அழிவின் ஆரம்பம்

மறுநாள் காலையில் முஹம்மத் (ﷺ) தம்முடன் வருவதற்குத் தயாராக இருப்பார் என்ற எண்ணத்தில் இருவரும் நபி (ﷺ) அவர்களிடத்தில் வந்தனர். நீர் எம்முடன் வந்து கிஸ்ராவைச் சந்திக்கத் தயாராகத்தானே இருக்கிறீர் என்று கேட்டனர்.

இதற்கு நபி (ﷺ) அவர்கள் கூறிய பதில் இடி இறங்கியது போன்று அவர்கள் மீது அதிர்ச்சியை அள்ளி வீசியது.

‘இதற்குப் பின்னர் நீங்கள் கிஸ்ராவைச் சந்திக்கப் போவதே இல்லை. அவரது மகன் ஷீராவைஹ் மூலமாக அல்லாஹ் கிஸ்ராவைக் கொன்றுவிட்டான்’ என்றார்கள்.

இதனைக் கேட்ட அவ்விருவரும் எங்கள் மன்னர் கொல்லப்பட்டு விட்டாரா? கிஸ்ராவை அவரது மகனே கொன்றுவிட்டானா? இதை எப்படி நம்புவது என முழித்தனர்.

இன்று ஒரு நிகழ்ச்சி நடந்தால் அடுத்த வினாடியே தொலைக்காட்சிப் பெட்டியில் “Flash News” என்ற பெயரில் அது உலகெங்கும் பரவிவிடும். தொலைத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி விண்ணளவு விரிந்து விட்டதன் விளைவு இது. ஆனால், அன்று பாரசீகத்தில் நடந்த ஒரு செய்தி அரபு நாட்டுக்கு வருவதற்கு மாதங்கள் சில தாண்ட வேண்டும். இந்த மனிதர் நேற்று எதையும் கூறவில்லை; இன்று கிஸ்ரா கொல்லப்பட்டான் என்றும், கொலை செய்தது அவனது மகன் ஷீராவைஹ் என்ற தகவல்களையும்

கூறுகின்றாரே என்ற ஆச்சரியத்துடன் இவர் நம்முடன் வருவதைத் தவிர்ப்பதற்காக இப்படிக் கதை கட்டுகிறாரோ என்ற ஐயமும் எழுந்துவிட்டது அவர்களுக்கு.

அவர்களுள் ஒருவர் இதனை யெமன் நாட்டு கவர்னருக்கு அறிவிக்கட்டுமா? என்று கேட்டார். அதற்கு நபியவர்கள், ஆம் அறிவியுங்கள். அத்துடன் அல்லாஹ்வின் இந்த மார்க்கம் கிஸ்ராவின் ஆட்சிப் பரப்பையெல்லாம் வெற்றி கொள்ளும்; யெமன் கவர்னர் இஸ்லாத்தில் இணைந்து கொண்டால் அவரது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை அவரிடமே ஒப்படைத்து அவரை அவரது ஆட்சியில் நிரந்தரமாக நீடிக்கச் செய்வேன் என்பதையும் சேர்த்துக் கூறுங்கள் என்று சொல்லியனுப்பினார்கள்.

பாதானின் மாற்றம்

இந்தச் செய்தியை உண்மை என்பதா, பொய் என்பதா எனப் புரியாது பாதானிடம் தகவலைக் கூறினர். இது கேட்ட பாதான் ஒரு முடிவுக்கு வந்தார். முஹம்மத் கூறியது உண்மையென்றால் அவர் ஓர் இறைத்தூதர் தான். அப்படி இல்லையென்றால் நிச்சயமாக அவரது முடிவு கஷ்டமாகத்தான் அமையப் போகின்றது எனும் தீர்மானத்துக்கு வந்தான்.

நாட்கள் சில நகர்ந்தன. பாரசீகத்திலிருந்து யெமன் கவர்னருக்கு ஒரு நிரூபம் வந்தது. அது கிஸ்ராவின் மகன் அனுப்பிய மடல். அதில்,

‘நான் என் தந்தையைக் கொன்றுவிட்டேன். என் சமூகத்தின் நலனுக்காகவே இதை நான் செய்தேன். அவர் என் சமூகத்தின் கண்ணியமிக்கவர்களை அழித்தார்; பெண்களைக் கற்பழித்தார்; பொருட்களைச் சூறையாடினார்; எனது இந்த மடல் வந்ததும் நீயும் உம்முடன் இருப்பவரும் எனக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்’ என்று மகன் ஷீராவைஹ் எழுதியிருந்தான்.

கசக்கப்பட்ட ஆட்சி

நபியவர்களின் துஆவின் பிரகாரம் கிஸ்ரா கொல்லப்பட்டான். கிஸ்ராவுக்கென்று சில விசுவாசிகள் இருந்தனர். அவர்கள் ஷீராவைஹுக்கு எதிராக செயல்பட்டனர். தனது தந்தையை தான் கொன்றதுபோல் தனது சகோதரர்கள் தன்னைக் கொன்று விடுவார்கள் என்று அஞ்சிய ஷீராவைஹ் தனது சகோதரர்கள் அனைவரையும் கொலை செய்தான். பிறகு கிஸ்ராவின் விசுவாசிகள் ஷீராவைஹைக் கொன்றனர். அதன் பின் ஆண் வாரிசு இல்லாததால் கிஸ்ராவின் மகள் “பூராண்” பாரசீகத் தலைவியானாள்.

இச்சந்தர்ப்பத்தில்தான் 'தன் ஆட்சி அதிகாரத்தை ஒரு பெண்ணிடம் ஒப்படைத்த ஒரு சமூகம் ஒருபோதும் உருப்படாது' என்ற ஹதீஸை நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (பார்க்க : புகாரி 4425)

பல ஆண்டுகளாக பாரசீகப் பேரரசு, கட்டிக் காத்து வந்த கண்ணியம், பெருமையெல்லாம் சிதைந்து கிஸ்ரா குடும்பக் குழந்தைகளின் கையில் அவர்களது மூதாதையர்கள் விட்டுச் சென்ற ஆட்சி விளையாட்டுப் பொருளாக மாறியது. தொடர்ந்தும் அரசியல் கொலைகளால் கிஸ்ராவின் ஆட்சி கசக்கிப் போடப்பட்டது. ஈற்றில் நபி (ﷺ) அவர்கள் கூறியது போல் பாரசீகம் முஸ்லிம்களின் கையில் வீழ்ந்தது. இது அப்துல்லாஹ் இப்னு ஹுதாபா மூலமாக நபி (ﷺ) அவர்கள் கிஸ்ராவுக்கு அனுப்பிய மடல் ஏற்படுத்திய மாற்றமாகும்.

இதேபோன்று, இவர் அன்றைய வல்லரசான ரோமாபுரி மன்னனைச் சந்தித்த நிகழ்ச்சியும் வரலாற்றில் பொன்னெழுத்துக் களால் பதியப்பட்டதொரு செய்தியாகும்.

உமர் (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்களுக்கும் ரோமர்களுக்குமிடையில் போர் மூண்டது. முஸ்லிம் வீரர்கள் பற்றியும் அவர்களது வீரதீரச் செயல்கள் பற்றியும் ரோம மன்னன் கேள்விப்பட்டிருந்தான். குறைந்தளவிலான ஆயுத, ஆள் பலத்துடன் வல்லரசுகளுடன் கூட வளைந்து கொடுக்காது போராடும் வல்லமையை இவர்கள் எப்படிப் பெறுகின்றனர் என்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எனவே, முஸ்லிம்களில் கைதிகளாகப் பிடிபடுகிறவர்களைக் கொன்று விடாது தம்மிடம் அழைத்து வருமாறு படைத் தளபதிகளுக்கு கட்டளை இட்டிருந்தான்.

ரோம மன்னன் முன்னிலையில்

முஸ்லிம்களில் சிலர் போர்க் கைதிகளாக ரோமபுரியின் மன்னன் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர். சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்த அவர்களிடத்தில் எந்த சலனமோ கலவரமோ இருக்கவில்லை. குற்ற உணர்வோ, குலை நடுக்கமோ கிஞ்சிற்றும் இருக்கவில்லை. வீரத்துடன் நெஞ்சை நிமிர்த்தி நின்றனர். இவர்களில் ஒருவரை மன்னன் தனக்கு அருகில் அழைத்தான். அவர்தான் அப்துல்லாஹ் இப்னு ஹுதாபா.

எந்தத் தயக்கமோ, தளர்வோ, தள்ளாட்டமோ இன்றி மன்னன் முன் அப்துல்லாஹ் போய் நின்றார். மன்னன் ஆசை வார்த்தைகளைக் கூறி இவர்களைக் கவிழ்த்து விடலாமா? என எண்ணினான்.

மன்னன் : நீ கிறிஸ்தவத்துக்கு வந்து விடு; உனக்கு எனது ஆட்சியின் ஒரு பகுதியைத் தருகிறேன்.

அப்துல்லாஹ் : உனது ஒட்டுமொத்த ஆட்சியையும் அரபிகள் அனைவரின் ஆட்சியையும் தந்தாலும் ஒரு நொடிப் பொழுது கூட நான் முஹம்மதின் மார்க்கத்தை விட்டு விட மாட்டேன்.

மன்னன் : அப்படியென்றால் நான் உன்னை கொல்லப் போகிறேன்.

அப்துல்லாஹ் : அதுதான் உன் முடிவு என்றால் நான் அதற்காக மன்றாடப் போவதில்லை.

மண்டபத்தில் ஒரு கம்பத்தில் அப்துல்லாஹ் இப்னு ஹுதாபா (ரலி) அவர்கள் கட்டப்பட்டார்கள். மன்னன் அம்பெறியுமாறு கட்டளையிட்டான். அம்பு அவரது மேலில் படாதவாறே எறியுமாறு கூறினான். சிலவேளை மரணத்தின் விழிம்பை அடையும்போது அவர் தன் முடிவை மாற்றிக் கொள்வார் என்பது அவனது எதிர்பார்ப்பாக இருந்தது. இந்த அம்புகள் அவர் தெம்பில் அணுவளவைக்கூட குறைத்து விடவில்லை.

பின்னர் எண்ணெய்யைக் கொதிக்க வைத்து முஸ்லிம் கைதிகளை அதில் தூக்கிப் போட்டனர். அவர்கள் துடி துடித்து வீரமரணம் அடைந்தனர். அப்போது இவரிடம் நீ கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்; இல்லையெனில் உன்னையும் தூக்கிப் போட்டு விடுவோம் என்று கூறப்பட்டது. அப்போது அவர் அழுதார். இச்செய்தி மன்னருக்கு அறிவிக்கப்பட்டது. இந்தக் கோரக் காட்சியை கண்டதும் அப்துல்லாஹ் கொள்கையில் மாற்றம் அடைந்துவிட்டார் என எண்ணிய மன்னன் அவரை அழைத்து வருமாறு ஏவினான். அவர் வந்தார். நீ கிறிஸ்தவத்துக்கு வரப் போகிறாயா? என மன்னன் கேட்டான். இல்லை என்றே பதிலளித்தார். அப்படியாயின் ஏன் அழுதாய் என்று கேட்டபோது,

எனக்கு இருப்பது ஒரே ஒரு உயிர்தான். ஒரு நொடிப் பொழுதில் ஒழிந்து விடும். என் உரோமங்களின் எண்ணிக்கையளவு எனக்கு உயிர் இருந்து அவை அத்தனையையும் அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணிக்கப்பட வேண்டுமே என்ற பேராவலினாலேயே அழுதேன் என்று அவர் கூறினார்.

தங்கம் கறுக்காது

நெருப்பில் எரித்தாலும் நீரில் நனைத்தாலும் தங்கம் கறுக்காது. அவர்களை அந்த மன்னன் பல்வேறுபட்ட சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் உட்படுத்தியதாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

மூன்று நாள் அவரைப் பட்டினியில் போட்டான். பின்னர் அவர் உண்பதற்காகப் பன்றி மாமிசமும் குடிப்பதற்கு மதுவும் வைக்கப்பட்டது. அவர் அதனை உண்ணவோ பருகவோ இல்லை. அது மாத்திரமின்றி நான் இருக்கும் நிலையில் இவை எனக்கு ஹலாலானதுதான் என்பது எனக்குத் தெரியும். எனினும் நான் தவறு செய்து உன்னை மகிழ்வடையச் செய்யமாட்டேன் என்று உறுதியாகக் கூறினார்கள்.

பிறகு அவருக்கு உணவளித்து அவரை ஒரு பெண் மூலம் கெடுக்க முற்பட்டான். அதுவும் முடியாமல் போனபோது மன்னன் தானாக இறங்கி வந்தான்.

மன்னன் : நீ என் தலையை முத்தமிட்டால் உன்னை நான் விடுதலை செய்வேன்.

அப்துல்லாஹ் : என்னை மட்டுமல்ல என் தோழர்களையும் விடுவிக்க வேண்டும்.

மன்னன் : செய்கிறேன்.


இவ்வாறு மன்னன் இறங்கி வந்ததும் மன்னனது தலையை முத்தமிட்டு, தன் தோழர்களை விடுவித்துக் கொண்டு வந்தார்கள். இதன் மூலம் முன்னூறு முஸ்லிம் வீரர்கள் விடுவிக்கப்பட்டார்கள். இவர்களின் வீரத்தையும் துணிச்சலையும் கண்டு வியந்த மன்னன், 3000 தீனார் பணம் மற்றும் பல பரிசுப் பொருட்களையும் கொடுத்து அனுப்பினான். இந்த மன்னன் இதன்பின் இரகசியமாக இஸ்லாத்தை ஏற்றிருக்கலாம் என அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். (அஃலாமுன்னுபலா 3/359)

கைதிகளை அழைத்துக் கொண்டு இவர் மதீனா வந்தபோது, இப்னு ஹுதாபாவின் தலையை முத்தமிட்டு அவரை கௌரவிப்பது அனைத்து முஸ்லிம்கள் மீதும் கடமையாகும். இதை நானே முதலில் ஆரம்பித்து வைக்கிறேன் எனக் கூறி கலீபா உமர் (ரழி) அவர்கள் இப்னு ஹுதாபா (ரழி) அவர்களது தலையை முத்தமிட்டு கௌரவித்தார்கள் என்பதை வரலாற்றில் காண்கிறோம்.

(வரலாற்று நூற்களில் இந்நிகழ்வு விரிவாகப் பேசப்பட்டாலும் இதன் அறிவிப்பாளர் தொடரில் பலத்த சர்ச்சை உள்ளது. இதில் அவர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டமை உறுதியானதாகும் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளலாம்)

கொள்கைக் குன்றாய் காட்சியளித்த இம்மாமனிதர் அப்துல்லாஹ் இப்னு ஹுதாபா (رضي الله عنه) அவர்கள் உஸ்மான் (رضي الله عنه) அவர்களின் ஆட்சிக் காலத்தில் மிஸ்ரில் வபாத்தானார்கள்.

இம்மாமனிதரிடம் காணப்பட்ட கொள்கைப் பற்று, உறுதி, தியாகம், துணிச்சல் போன்ற பண்புகளை நாமும் நமது அணிகலன்களாகக் கொண்டு தூய இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ முனைவோமாக!



வீரத்தின் விளைநிலம்
பராஃ இப்னு மாலிக் (رضي الله عنه)

குழி விழுந்த கன்னங்கள், எலும்பும் தோலுமான தோற்றம், காற்று சற்று வேகமாக வீசினால் கீழே விழுந்து விடுவாரோ என்று எண்ணத் தோன்றும் அங்க அமைப்பு என்று காட்சி தருபவர் தான் நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த பராஃ இப்னு மாலிக் (رضي الله عنه) என்ற நபித்தோழராவார்.

இவரது தோற்றத்திற்கும் போர் நடவடிக்கைகளுக்கு மிடையில் சம்பந்தமே இருக்கவில்லை. களம் புகுந்தால் புலியாக மாறி விடுவார். எதிரிப் படைகளை ஊடறுத்துச் சென்று அவர்களின் உற்கட்டமைப்புக்களை உருக்குலைத்து விடுவதில் இவர் வல்லவர். தனக்குப் பின்னால் இருக்கும் தோழர்கள் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் அதிரடி நடவடிக்கைகளில் இறங்கி விடுவார். இதனால் இவரது படைப்பிரிவில் செல்பவர்களும் இவரது தீவிரமான அதிரடித் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் செயல்பட வேண்டிய நிர்ப்பந்தம் நிகழ்வதுண்டு.

இதனைக் கருத்தில் கொண்டு உமர் (رضي الله عنه) அவர்கள் தமது படைத் தளபதிகளிடம் முஸ்லிம் படைப்பிரிவுகளில் எதற்கும் இவரைத் தலைவராகப் போட வேண்டாம். ஏனெனில், அவர் அழிவைப் பற்றிய அச்சம் கொள்ளாமல் பின்னால் உள்ளவர்களை அழைத்துச் செல்வார். (தபகாத் இப்னு ஸஅத் 7/11) என்று எழுதுமளவுக்கு இவரது இயக்கம் இருந்தது.

பல்வேறுபட்ட போர்க்களங்களில் நடைபெற்ற நேரடி மல்யுத்தத்தில் சுமார் நூறு பேரை வெட்டி வீழ்த்திய மாவீரராகத் திகழ்ந்த இவர் -ஹாதிமுர் ரஸூல்- இறைத்தூதரின் பணியாள் என சிறப்பித்து அழைக்கப்பட்ட அனஸ் (رضي الله عنه) அவர்களின் சகோதரராவார். அத்துடன் உஹுது யுத்தம், பைஅதுர் ரிழ்வான் எனும் ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் இவர் பங்கு கொண்டவராவார்.

வீரம் நிறைந்த உள்ளம்

பராஃ (رضي الله عنه) அவர்களது வீரத்திற்கு உதாரணமான நிகழ்வுகள் வரலாற்றுப் பக்கங்களில் நிறையவே உள்ளன. எனினும் அவரது உள உறுதிக்கும் பலத்திற்கும் உதாரணமாகப் பின்வரும் நிகழ்ச்சியைக் கூறலாம்.

நபி (ஸல்) அவர்களது மரணத்தின் பின்னர் முஸ்லிம் உலகு பல்வேறுபட்ட சோதனைகளைச் சந்தித்தது. சிலர் ஸகாத் கொடுக்க மறுத்தனர். பொய்யர்கள் பலர் தம்மையும் நபியென வாதிட்டனர். அவர்களின் பின்னாலும் மக்கள் கூட்டம் கூட்டமாக செல்லத் தொடங்கினர்.

இந்நிலையில் 12 படைப் பிரிவுகளை அபூபக்கர் (ரழி) அவர்கள் உருவாக்கி அவர்களிடம் கொடிகளைக் கொடுத்து முர்தத்துகளின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்தார்கள். அன்று அவர்கள் சந்தித்த பெரிய சவால் பொய்யன் முஸைலமாவின் பொய் நபித்துவ வாதம் தான். அவனது கோத்திரத்தைச் சேர்ந்த பனூ ஹனீபாக்கள் அவனுடன் ஒன்று சேர்ந்தனர். பொய்யன் முஸைலமாவை ஒழித்துக் கட்ட ஒரு படைப்பிரிவை அபூபக்கர் (ரழி) அனுப்பினார்கள். அபூபக்கர் (ரழி) அவர்களின் படையை எதிர்கொள்ள 40000 பேர் கொண்ட பெரும் படையுடன் முஸைலமாவும் தயாரானான்.

உக்கிரமான போர்

முஸைலமாவின் படையினர் முஸ்லிம்களுடன் முழு மூச்சுடன் போரிட்டனர். கோத்திர வெறியும் கொள்கை வேட்கையும் களம் குதித்தன. குறுதி ஆறு ஓடியது. முஸ்லிம்கள் தரப்பிலும் பலத்த இழப்பு ஏற்பட்டது. முதல் கட்டமாக இக்ரிமா (ரழி) அவர்களின் தலைமையிலும்; அடுத்து காலித் இப்னு வலீத் (ரழி) அவர்களின் தலைமையிலும் முஸ்லிம்கள் போர் நடத்தினர். காலித் (ரழி) அவர்களின் கூடாரத்தை எதிரிகள் கைப்பற்றும் அளவிற்கு எதிரிகளது கை ஓங்கியது. இதன் பின் காலித் (ரழி) அவர்கள் தமது படையை பல்வேறு ஒழுங்கமைப்புக்குள் கொண்டு வந்தார்கள். இந்தப் போரில் தோல்வியுற்றால் இறுதி நபித்துவக் கோட்பாடு சிதைந்து நபி (ஸல்) அவர்களது போதனைகள் பொய் நபித்துவ வாதிகளால் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிடும். எனவே, போரில் வெல்ல வேண்டிய அவசியத்தை முஸ்லிம்கள் உணர்ந்தனர்.

தியாகப் போர்

மீண்டும் போர் புழுதி கிளம்பியது. அழிவுகள் அதிகரித்தன. அன்ஸாரிகளின் கொடியை ஏந்திய தாபித் இப்னு கைஸ் (ரழி) அவர்கள் தனக்கு கபன் தயாரித்து கப்ரு தோண்டி கல்பு நிறைய ஷஹாதத் வேட்கையுடன் போராடி தியாகியானார்.

உமர் (ரலி) அவர்களது சகோதரர் ஸைத் (ரலி) அவர்கள், 'தோழர்களே! உறுதியாகப் போராடுங்கள். எதிரிகளை வெட்டி வீழ்த்திக் கொண்டு முன்னேறுங்கள். நண்பர்களே இதுதான் எனது கடைசி வார்த்தை. இதன் பின் முஸைலமா கொல்லப்பட வேண்டும் அல்லது நான் ஷஹீதாக வேண்டும். இரண்டில் ஏதேனும் ஒன்று நடந்தாக வேண்டும் என்று கூறிக் கொண்டே களம் கண்டு ஷஹீதானார்.

இவ்வாறே போர் நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருக்கையில் பராஃ (ரலி) அவர்கள் அன்சாரி இளைஞர்களை அழைத்து,

இளைஞர்களே! யாரும் மதீனா திரும்பிச் செல்லும் எண்ணம் கொள்ள வேண்டாம். இதற்குப் பிறகு உங்களுக்கு மதீனா கிடையாது. உங்களுக்கென இருப்பதெல்லாம் அல்லாஹ்வின் திருப்பொருத்தமும் சுவனமும் தான் என்று கூறிக்கொண்டே எதிரிகள் படைக்குள் ஊடுருவினார்கள். போர்க்களத்தில் தீப்பொறி பறந்தது. தலைகள் தரையில் விழுந்தன. முஸைலமாவின் படை ஆட்டம் கண்டது. பின்வாங்கி ஒரு கோட்டைக்குள் நுழைந்தனர். அந்தக் கோட்டைக்குள் நடந்த பயங்கர மோதலில் ஏற்பட்ட உயிர் இழப்புக்களைக் கவனத்தில் கொண்டு அந்த இடம் "ஹதீகதுல் மவ்த்" 'மரணத்தின் களம்' என்று அழைக்கப்படுகின்றது.

கோட்டைக்குள் பாய்ந்த புலி

கோட்டைக்குள் நுழைந்த முஸைலமாவின் படையினர் உள்ளே இருந்து கொண்டு அம்பு மழை பொழிந்தனர். உயரமான அந்த மதில் சுவர்களைத் தாண்டி எதிரிகளுடன் மோத முடியாத நிலை முஸ்லிம் படைக்கு ஏற்பட்டது. கோட்டையின் கதவு திறக்கப்பட்டால் தான் முஸைலமாவிற்கு ஒரு முடிவு கட்ட முடியும் என்ற நிலை. இவ்வேளையில் தான் பராஃ இப்னு மாலிக் (ரலி) அவர்கள் உறுதியானதொரு முடிவை எடுத்தார்கள்.

தன்னோடு இருந்த தோழர்களை அழைத்து என்னை ஒரு கேடயத்தில் நிறுத்துங்கள் பின்னர் கேடயத்தைத் தூக்கி பலபேர் ஒன்றாகச் சேர்ந்து உங்கள் அம்புகள் மீது வைத்து கோட்டைச் சுவர் அருகில் வைத்து உயர்த்தி என்னை கோட்டைக்குள் வீசுங்கள். உள்ளே சென்று முடிந்தால் கோட்டை வாயிலைத் திறக்கிறேன். இன்றேல் இறைவனுக்காக உயிரைத் தியாகம் செய்கிறேன் என்று கூறினார்கள்.

அவர் கூறியபடி கேடயத்தில் வைத்து கோட்டைக்குள் அவர் வீசப்பட்டார். அவரது மெலிந்த உடல் இதற்கு ஏதுவாக இருந்தது. ஆயிரக் கணக்கில் எதிரிகள் குழுமியுள்ள கோட்டைக்குள் அதுவும் கொலை வெறியுடன் இருக்கும் கூட்டத்தினர் மத்தியில் தன்னந்தனியே குதிப்பதென்றால் மரணத்தைக் கண்டு அஞ்சாத நெஞ்சமும், நெஞ்சுறுதியும் உள்ள ஒருவரால் மட்டுமே சாத்தியப்படக்கூடிய சமாச்சாரமாகும். இது சாதாரண விஷயமுமல்ல.

கதவு திறந்தது

கோட்டைக்குள் குதித்த பராஃ இப்னு மாலிக் (ரலி) அவர்கள் மின்னல் வேகத்தில் செயல்பட்டார்கள். எதிரிகள் இப்படியொரு இடி விழும் என்று எதிர்பார்க்கவேயில்லை. கோட்டை வாசல் திறக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் பராஃ (ரலி) அவர்கள். இதற்குத் தடையாக இருந்த பலரது தலைகள் தரையில் உருண்டன. போர்க்களங்களில் தனிப்பட்ட தாக்குதல்களில் நூறு பேரை வெட்டி வீழ்த்திய வெற்றி வீரர் அல்லவா இவர்.

கோட்டை வாயிலைத் திறக்கும் முயற்சியில் இவர் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது பல்வேறுபட்ட வெட்டுக்களும், ஈட்டி முனையின் குத்துக்களும் உடலில் விழுந்தன. எனினும் இலட்சியத்தில் கண்ணும் கருத்துமாக இருந்த அவர், கோட்டைக் கதவை திறந்து விட்டார்.

கட்டுடைந்த காட்டாறுகளாக முஸ்லிம் படைகள் கோட்டைக்குள் புகுந்தன. மீண்டும் உக்கிரமமான போர்; வாசல் பக்கம் முஸ்லிம் படை, கோட்டைக்குள் சிக்கிக் கொண்டோம் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற உறுதியுடன் முஸைலமாவின் படையும், இஸ்லாத்தைக் காக்க வேண்டும்; இறைதிருப்தியினைப் பெற வேண்டும், வீர மரணம் அடைய வேண்டும் என்ற ஆர்வத்தில் முஸ்லிம் படையும் முட்டி மோதின. ஈமானியப் படை வென்றது. இந்தக் கோட்டைக்குள் இருந்த முஸைலமாவின் படையில் ஆயிரக்கணக்கானோர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். முஸைலமாவும் கொல்லப்பட்டான். முஸ்லிம்கள் வெற்றி பெற்றனர். இந்த வெற்றிக்கான ஆரம்ப வாயிலைத் திறந்து விட்ட பராஃ இப்னு மாலிக் (ரலி) அவர்கள் மேனியெங்கும் புண்ணாகக் காட்சியளித்தார். உடல் முழுவதும் என்பதுக்கு மேற்பட்ட பாரிய வெட்டுக்கள் விழுந்திருந்தன. சுமார் ஒரு மாத காலமாகத் தளபதி காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களே இவர் அருகில் இருந்து இவரைப் பராமரித்து வந்தார்கள்.

வீர மரணம் வேண்டும்

வீட்டில் படுக்கையில் தான் மரணித்து விடக் கூடாது என்பதே இவரது ஆசை. போர்க்களத்தில் வீரனாக மரணிக்க வேண்டும். என்பதே இவரது இலட்சியமாக இருந்தது. இலட்சியம் நிறைவேறும் வேளை வந்தது.

தனது இலட்சியம் ஈடேற பல போர் முனைகளைக் கண்டார். நினைவு பலிக்கவில்லை. ஈற்றில் பாரசீகத்தில் “துஸ்தர்” நகரைக் கைப்பற்றிய போரில் அவர் வீர மரணம் அடைந்தார்.

இந்தப் போரில் பாரசீகர்கள் தோல்வியுறும் சந்தர்ப்பத்தில் கோட்டைக்குள் நுழைந்து கொண்டனர். முஸ்லிம்கள் கோட்டையைச் சூழ்ந்து முற்றுகையிட்டனர். முற்றுகை நீடித்த போது பாரசீகர்கள் ஒருவித போர்த்தந்திரத்தில் ஈடுபட்டனர். சங்கிலிகளில் சூடேற்றி அவற்றில் கொக்கிகளை மாட்டி அவற்றை ஒரு கருவியில் கொழுவி அதனை கோட்டைக்கு வெளியில் இருக்கும் முஸ்லிம்கள் மீது வீசினர். சிலர் கொக்கியாலே இறக்க மற்றும் சிலரை உள்ளே எடுத்துக் கொன்றனர். இது முற்றுகையைச் சிதைப்பதற்காக அவர்கள் கையாண்ட வழியாகும்.

ஒருமுறை இந்தக் கொக்கியில் நபிகளாரின் பணியாளரும் பராஃ இப்னு மாலிகின் சகோதரருமான அனஸ் (ரலி) அவர்கள் மாட்டிக் கொண்டார்கள். அவர்கள் உயர்த்தப்பட்ட போது பராஃ (ரலி) அவர்கள் மின்னல் வேகத்தில் கோட்டை சுவர் மீது பாய்ந்து சூடேற்றப்பட்ட சங்கிலியை இறுகப் பிடித்துக் கொண்டு கொக்கிகளிலிருந்து தம்பியை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அப்போது அவரது கை வெந்து கொண்டிருந்தது. அதனையும் பொருட்படுத்தாது தம்பியை தப்பிக்கச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். இறுதியில் தம்பியை விடுவித்து இருவருமாக கீழே விழுந்தனர். அப்போது பராஃ (ரலி) அவர்களின் இரண்டு கரங்களும் பொசுங்கிப் போயிருந்தன.

அவரது உடல் பலத்தை விட உள உறுதி தான் இந்தப் போராட்டத்தில் வெல்லக் காரணமாக இருந்தது என்றால் மிகையாகாது.

மரணத்தின் மடியில் மாவீரர்

போர்க்களங்களில் பிறரது உதவி இன்றி தனிநபர் போராட்டங்களில் சுமார் நூறு எதிரிகளை வெட்டி வீழ்த்திய இந்த வெற்றி வீரர் தனது நீண்டகால எதிர்பார்ப்பான வீர மரணத்தை ஈற்றில் அடைந்தார்கள்.

பாரசீகப் பேரரசின் பெருநகர்களில் ஒன்றான துஸ்தரைக் கைப்பற்றுவதற்கான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அன்றைய கால கட்டங்களில் நகரப் பாதுகாப்பிற்காக அதனைச் சூழ கோட்டை அமைப்பது வழக்கமாக இருந்தது. போரின் போது பாரசீகர் அந்நகரின் கோட்டைக்குள் நுழைந்து நுழைவாயிலை மூடி விட்டனர். முஸ்லிம்கள் நகரை முற்றுகையிட்டனர்.

அப்போது நகரின் மத்திய பகுதிக்குச் செல்லக் கூடிய ஒரு சுரங்கப் பாதை இருப்பது தெரிய வந்தது. இது அறிந்த பராஃ இப்னு மாலிக் (﵁) அவர்கள் மஜ்ஸஆ இப்னு தவ்ர் என்பவரைப் பார்த்து 'உங்களது கூட்டத்தைச் சேர்ந்த வீரமும் விவேகமும் நிறைந்த ஒருவரைக் காட்டுங்கள்' என்றார்கள். ஏன் என அவர் கேட்ட போது தேவைக்குத்தான் என்றார்கள். உடனே மஜ்ஸஆ (﵁) அவர்கள், நான் அதற்குத் தகுதியானவன் என்றார். உடனே அவரையும் மற்றும் சில போராளிகளையும் அழைத்துக் கொண்டு சுரங்கப் பாதை வழியாக நகரத்தின் மத்திய பகுதிக்குச் செல்லத் தலைப்பட்டார். மரணத்திற்கு அஞ்சாத மாவீரர்களுக்கு தூக்கு மேடையும் பஞ்சனை மெத்தைதான். சுரங்கப் பாதையும் அவர்களுக்கு அச்சத்தை ஊட்டவில்லை. எதிரிகளின் மையப் பகுதிக்குச் செல்லும் நாம் மையித்தாக நேரிடும் என்ற எண்ணமும் அவர்களை நெருடவில்லை. வெற்றி அல்லது வீர மரணம் என்பதே அவர்களின் இலக்காகவும் இலட்சியமாகவும் இருந்தது.

மஜ்ஸஆ (﵁) அவர்கள் தான் முதலில் சென்றார்கள். சுரங்கப் பாதையிலிருந்து மறுமுனையில் அவர்கள் தான் முதலில் வெளியே வந்தார்கள். எதிரிகள் அவரின் தலையில் பாராங்கல்லைப் போட்டு அவரை ஷஹீதாக்கினார்கள். ஆனால், பின்னால் வந்த பராஃ இப்னு மாலிக்கும் அவரது தோழர்களும் சுரங்கத்திலிருந்து சூரப்புலிகளாக வெளியில் வந்து வீரத்துடன் போரிட்டனர். இந்தப் போரில் துஸ்தர் பகுதி முஸ்லிம்களிடம் வீழ்ந்தது. வீரர் பராஃ இப்னு மாலிக் (﵁) அவர்கள் மரணத்தின் மடியில் வீழ்ந்தார்கள். வீரத் தியாகியானார்கள்.

இத்தகைய தியாகிகளின் தியாகத்தாலும் உழைப்பாலும் உதிரத்தாலும் வார்த்தெடுக்கப்பட்டது தான் இஸ்லாம் எனும் இந்த இனிய மார்க்கமாகும். இந்த மார்க்கத்தில் இருந்து கொண்டு அதற்காக ஒரு துரும்பைக்கூட அசைக்காது, எந்தத் தியாகத்தையும் நாம் செய்யாது குறைந்தபட்சம் இஸ்லாத்தை நடைமுறைப் படுத்துவதில் கூட அக்கறையில்லாது இருப்பது சரிதானா?

வீரர் பராஃ இப்னு மாலிக் (﵁) அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

வீரமரணத்தில் தீராத காதல் கொண்ட
அம்ர் இப்னுல் ஜமூஹ் (ரழி)

இவர் மதீனத்து தோழர்களுள் ஒருவரும், பனூஸலமாக் கோத்திரத்தின் முக்கிய தலைவருமாவார். மிகச் சிறந்த தனவந்தரும், மக்கள் மனதில் இடம்பிடித்தவருமான இவர், சிலை வணக்கத்தில் ஊறித் திளைத்து அதில் ஆழ்ந்த நம்பிக்கையும் பிடிப்பும் கொண்டவராகக் காணப்பட்டார்.

அக்காலத்துத் தலைவர்கள் தமது வீடுகளிலேயே சில சிலைகளைச் செதுக்கி வைத்து வழிபடுவது வழக்கம். இவர் தனது வீட்டில் “மனாப்” என்ற பெயரில் அழைக்கப்பட்டுவந்த ஒரு சிலையைச் செய்து தினமும் அதனை வணங்கி வந்தார். தனது வாழ்வில் எந்த முடிவை எடுப்பதாக இருந்தாலும் அச்சிலையை வணங்கி அதனிடம் முறையிட்டுவிட்டே செய்வார். அந்த அளவுக்கு அவர் அச்சிலை மீது பற்றுக் கொண்டிருந்தார்.

ஹிந்தா பின்து அம்ர் என்பவர் இவரது மனைவியாவார். இவ்வகையில் அப்துல்லாஹ் இப்னு அம்ர் அவர்கள் இவரது மைத்துனராவார். இவ்விருவரும் மிகுந்த நட்புறவுடன் வாழ்ந்து வந்தனர்.

அம்ர் இப்னு ஜமூஹ் அவர்களுக்கு அப்போது வயது 60. இஸ்லாமிய ஒளி முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்களின் பிரச்சாரத்தின் வாயிலாக மதீனாவின் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் நுழைந்துகொண்டிருந்தது. இவரது மனைவியும் முஅவ்வத், முஆத், ஹல்லாத் என்ற இவரது மூன்று புதல்வர்களும் ஆரம்பத்திலேயே இஸ்லாத்தில் இணைந்து கொண்டனர். இவர்கள் மூவரும் பத்ர் யுத்தத்தில் பங்குகொண்ட தியாகிகளும் மாவீரர்களுமாவார்கள்.

இவரது மகன் முஆத் (ரழி) மதீனாவாசிகள் மக்காவுக்கு வந்து அகபாவில் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் பங்கு கொண்ட பாக்கியவானாவார். பத்ர் யுத்தத்தில் இவர் செய்த தியாகமும் வீரமும் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பதிவு செய்யப்பட வேண்டியவையாகும்.

வீரத்தை உருவாக்கிய விளைநிலம்

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அறிவிக்கின்றார்கள் : பத்ர் களத்தில் எனது வலது, இடது புறங்களில் இரண்டு மதீனத்து

சிறுவர்கள் இருந்தனர். நான் பெரியவர்களுக்கு மத்தியில் சென்று யுத்தம் செய்ய நினைத்தேன். அப்போது அவர்களில் ஒருவன் என்னைத் தட்டி சிற்றப்பாவே! உங்களுக்கு அபூஜஹ்லைத் தெரியுமா? என்று கேட்டான். நான் ஏன் என்றேன். அவன் நபி (ﷺ) அவர்களைத் தரக்குறைவாக மக்காவில் வைத்து திட்டினான் என்று கேள்விப்பட்டேன். இந்தக் களத்தில் அவனைக் கண்டால், நானா, அவனா ன்று பார்த்து விடுவது என்ற உறுதியுடன் வந்துள்ளேன் என்று அவன் கூறினான். எனக்கு இது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அப்போது மறுபுறத்திலிருந்த சிறுவனும் இதே கேள்வியைக் கேட்டான். நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே அபூஜஹ்ல் குதிரையில் வந்தான். நான் இதோ நீங்கள் தேடும் ஆள் என்று காட்டிக் கொடுத்தேன். மின்னல் வேகத்தில் சென்ற அவ்விருவரும் அவனது குதிரையின் காலை வெட்டி, அவனைக் கீழே வீழ்த்தி வெட்டிக் கொன்றனர்.

அபூஜஹ்ல் குற்றுயிராய் தரையில் வீழ்ந்தான். மக்கா பூமியில் மாநபி (ﷺ) அவர்களை அவமதித்து, அடாவடித்தனம் செய்த அக்கிரமக்காரனை அடித்து வீழ்த்திய மற்றற்ற மகிழ்ச்சியில் அவ்விரு சிறுவர்களும் நபி (ﷺ) அவர்களிடம் ஓடிச் சென்று நான்தான் அபூஜஹ்லை வெட்டினேன் என்று அந்த செய்கைக்கு உரிமை கோரினர். நபி (ﷺ) அவர்கள் இவ்விருவரின் வாளின் இரத்தத்தையும் பார்த்து இருவருமே வெட்டியுள்ளீர்கள் என்று கூறினார்கள்.

முஆத் இப்னு அப்ரா, முஆத் இப்னு அம்ர் ஆகிய இருவரில் முஆத் இப்னு அம்ர் (رضي الله عنه) அவர்களே முதலில் வெட்டியதாகவும் நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (நூற்கள் : புகாரி, முஸ்லிம், அஹ்மத்)

அபூஜஹ்லை வெட்டும்போது அவனது மகன் இக்ரிமா (இவர் பின்னர் இஸ்லாத்தில் இணைந்து விட்டார்) முஆத் இப்னு அம்ரின் கையை வெட்டிவிட்டார். அது துண்டாகி தோலில் மட்டும் தொங்கிக்கொண்டிருந்தது. பலத்த காயம் ஏற்பட்ட பின்னர் கூட இவர் களத்திலிருந்து ஒதுங்காமல், உக்கிரமாகப் போரிட்டுக் கொண்டிருந்தார். தொங்கிக் கொண்டிருந்த கை உக்கிரமான போராட்டத்திற்கு இடைஞ்சலாக இருப்பதால் கையைக் காலால் மிதித்து, இழுத்து உடலில் இருந்து வேறாக்கிவிட்டுப் போராடினார். (ஸீரது இப்னு ஸிஹாம் 1/634-635, அஃலாமுன்னுபலா 3/156)

இத்தகைய துணிகரமிக்க குழந்தைகளின் தந்தையாக அம்ர் இப்னுல் ஜமூஹ் (رضي الله عنه) திகழ்ந்தார்.

இஸ்லாத்தில் இணைதல்

சிலை வணக்கத்தில் ஊறித்திளைத்த அம்ர் அவர்கள் தனது புதல்வர்கள் புதிய மார்க்கத்தில் இணைந்து விடக் கூடாது என்ற எண்ணத்தில் இருந்தார். ஆனால், புதல்வர்கள் முன்னமே இஸ்லாத்தில் இணைந்து விட்டதை அவர் அறிந்திருக்கவில்லை. இவர் தன் கொள்கையில் உறுதியாக இருந்தாலும் முஸ்அப் இப்னு உமைர் (ﷺ) அவர்கள் ஓதிய அல்குர்ஆன் வசனங்களை செவிமடுத்தார். அது அவரது உறுதியை உடைத்து; உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. எவ்வளவு அழகான, அர்த்த புஸ்டியான, ஆழமான ஆயத்துக்கள் இவை என மெய்மறந்துபோனார்.

எனினும் தனது வழமைப் பிரகாரம் தனது மனாப் சிலையிடம் வந்து, இதுகுறித்து வேண்டுதல் செய்துவிட்டு, இது தனது கடவுளுக்கு பிடிக்கவில்லை என்று தனக்குத் தானே முடிவு செய்துகொண்டார்.

தனது தந்தைக்கு சிலை வணக்கக் கொள்கையில் சிறிது தளர்வு ஏற்பட்டுவிட்டதை அறிந்து அவரது பிள்ளைகளும் அவருடன் விளையாடிப் பார்க்க முனைந்தனர். இதற்கு அவர்களது தோழர் முஆத் இப்னு ஜபல் (ﷺ) அவர்களும் உடந்தையாக இருந்தார்கள்.

காணாமல் போன கடவுள்

ஒரு நாள் இரவு முஆத் இப்னு ஜபலும், அம்ரின் மகன் முஆதும் தந்தைக்குத் தெரியாமல் அவரது சிலையைத் திருடி குப்பையில் போட்டு விட்டனர். காலையில் அம்ர் அவர்கள் கண் விழித்ததும் தனது கடவுளைக் கண்டு வணக்கம் செலுத்த கண்ணியமாகச் சென்றவர் அதிர்ந்து போனார்.

யார் இந்த நாசத்தைச் செய்தது. எங்கே சிலை என கடுகடுத்த முகத்துடன் தேட ஆரம்பித்தார். ஈற்றில் சிலையைக் குப்பையிலிருந்து எடுத்து சுத்தம் செய்து, அத்தர் பூசி, பயபக்தியுடன் இருந்த இடத்தில் மீள வைத்தார்.

இதன் பின்னரும் ஓரிருமுறை இந்நிகழ்வு நடந்தது. அப்போது ஆத்திரம் கொண்ட அம்ர், வாளை எடுத்து சிலையின் கழுத்தில் கட்டி உன்னை இந்நிலைக்கு ஆளாக்குபவனை நீயே அழித்துவிடு எனக்கூறி வைத்தார். இளைஞர்கள் வாளை எடுத்துவிட்டு, சிலையை இறந்த நாயுடன் கட்டி கிணறு ஒன்றில் போட்டு விட்டனர். வழமைபோல் தேடினார். தேடிய பின் கிடைத்தது சிலை. நாயும் சிலையும் வித்தியாசம் இல்லாமல் கிடப்பதைக் கண்டுவிட்டு,

'அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீ தெய்வமாக இருந்தால், நாயைப் போன்று நாதியற்று கிணற்றில் கிடக்கமாட்டாய்' என்று கூறிவிட்டு இஸ்லாத்தில் இணைந்து கொண்டார். (அல் இஸாபா 4/291)

நபி (ﷺ) அவர்கள் மக்காவில் 13 வருடங்கள் சிலை வணக்கத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தாலும் மக்காவில் எந்த சிலையும் உடைக்கப்பட்டதில்லை. கஃபாவில் 360 க்கும் மேற்பட்ட சிலைகள் இருந்தும் எந்தச் சிலைக்கும் எந்த சேதாரமும் நடந்ததில்லை. இது ஒரு வீட்டிற்குல் தந்தை, பிள்ளைகளுக்கும் உறவுகளுக்குள்ளேயும் நடந்ததொரு நிகழ்வாகவே நோக்க வேண்டியுள்ளது.

தலைவரானார்

உளப்பூர்வமாக இஸ்லாத்தில் இணைந்த அம்ர் (رضي الله عنه) அவர்கள், தான் கடந்த காலங்களில் சிலைவணக்கத்தில் கொண்டிருந்ததை விட அதிகமான உறுதியையும் ஈடுபாட்டையும் பற்றுதலையும் இஸ்லாத்தின் மீது கொண்டிருந்தார்கள். கடந்த காலத்தைப் போன்றே இஸ்லாத்துக்குப் பின்னரும் அவர் தனது தியாகங்களால் மக்கள் தலைவராகத் திகழ்ந்தார்.

ஒருமுறை நபி (ﷺ) அவர்கள் பனூஸலமா கோத்திரத்தாரிடம் உங்கள் தலைவர் யார்? என்று கேட்டார்கள். அதற்கவர்கள் ஜஹ்த் இப்னு கைஸ் என்பவரே எங்கள் தலைவர். ஆனால், அவரை கஞ்சத்தனமிக்கவராக நாம் கருதுகின்றோம் என்று கூறினர். இதுகேட்ட நபியவர்கள் கஞ்சத்தனத்தை விட பெரிய நோய் வேறென்ன இருக்கின்றது என்று கூறிவிட்டு அம்ர் இப்னு ஜமூஹ்தான் உங்கள் தலைவர் என்று கூறினார்கள். (ஹில்லியதுல் அவ்லியா 7/318)

இச்செய்தி இவரது சிறப்பிற்கு சான்று பகர்கின்றது.

வீர மரணத்தின் தீராத காதல்

இவர் தனது செல்வத்தை இறைவழியில் செலவு செய்வதிலும் அதீத ஆர்வம் காட்டியதோடு தனது உயிரையும் சத்திய இஸ்லாத்திற்காகத் தியாகம் செய்ய பேரார்வம் கொண்டிருந்தார். அதற்கான வாய்ப்பு பத்ர் யுத்தம் மூலம் வந்தது. எனினும், இவரது ஒரு கால் சரியாக இயங்காமல் இருந்தது. அத்துடன் இவரது வயோதிபத்தையும் உடல் குறைபாட்டையும் காரணம் காட்டி இவரது புதல்வர்கள் இவரைத் தடுத்துவிட்டு அவர்கள் களம் சென்றனர்.

இவ்வாறே உஹுது யுத்தத்திற்குத் தயாரான போதும் தந்தைக்கும் புதல்வர்களுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. புதல்வர்கள், உங்களுக்கு வயதாகிவிட்டது, அத்துடன் உங்களுக்கு சரியாக நடக்கவும் முடியாது என்று கூறினர். இது கேட்டு சினமுற்ற முதியவர் அம்ர் இப்னு ஜமூஹ்(ﷺ) அவர்கள், நபி (ﷺ) அவர்களிடம் சென்று அல்லாஹ்வின் திருத்தூதரே! நான் நொண்டி என்ற காரணத்தைக் கூறி என் புதல்வர்கள் என்னை ஷஹாதத் எனும் நற்பாக்கியத்தை விட்டும் தடுத்துவிடப் பார்க்கின்றனர். இப்படித்தான் பத்ரிலும் இவர்கள் நடந்துகொண்டனர். நான் எனது இந்த நொண்டிக் காலுடன் சுவனத்தில் உலாவ விரும்புகின்றேன் என்று கூறினார்கள். இது கேட்ட நபி (ﷺ) அவர்கள் இவர்களது புதல்வர்களைப் பார்த்து,

"அவரை அவர் வழியில் விட்டு விடுங்கள்; அல்லாஹுதஆலா அவரது மன விருப்பம் போல் அவருக்கு ஷஹாதத்தை வழங்கலாம்" என்று தெரிவித்தார்கள். இதுகேட்ட புதல்வர்களும் தந்தைக்கு இட்ட தடையைத் தளர்த்தி அவருக்கு உதவ முன்வந்தனர்.

முழுக் குடும்பமும் உஹுதுக் களத்திற்குச் செல்ல தயாரானது.

சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும்...

சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறையாது என்பார்கள். மரணத்தை விரும்புபவனை விட பெரிய வீரன் யாரும் இருக்க முடியாது. அவனை யாரும் எதுவும் செய்துவிடவும் முடியாது. இதனை இவரது இறுதிப் பயணம் உறுதி செய்கின்றது.

இவரும் இவரது புதல்வர்களும் பனூ ஸலமாக்களும் போருக்குத் தயாராகின்றனர். இவர் புறப்படும் முன்னரே கஃபாவை முன்னோக்கி "யா அல்லாஹ்! எனக்கு வீர மரணத்தை நல்கி விடு; என்னை அஞ்சிய பின்வாங்கியவனாக என் குடும்பத்தின் பக்கம் மீள அனுப்பி விடாதே!" என்று பிரார்த்தித்துவிட்டே சென்றார். அவரது துஆவும் அங்கீகரிக்கப்பட்டது.

போர்க்களம் தீப்பொறியை கக்கிக் கொண்டிருந்த வேளை, "நபியவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள்" என்ற வதந்தியுடன் முஸ்லிம் படை சின்னாபின்னமாகிப் புறமுதுகு காட்டி ஓடிய போது இவர் ஒற்றைக் காலால் பாய்ந்து பாய்ந்து எதிரிகளுடன் போராடினார். இவருக்குத் துணையாக இவரது மகன் ஹல்லாத் (ﷺ) அவர்கள் இவருடன் சேர்ந்து போராடிக் கொண்டிருந்தார்கள்.

இவ்விருவரும் நபி (ﷺ) அவர்களை நோக்கி வந்த எதிரிகளைத் தடுப்பதில் தம் உயிரைத் தியாகம் செய்தனர். தந்தையும் தனயனும் சில நொடிப்பொழுது இடைவெளியில் வீர மரணம் அடைந்தனர்.

நல்லடக்கம்

உஹுதுக் களம் ஈற்றில் முஸ்லிம்களுக்கு சாதகமாக மாறியது. போர் முடிந்தபோது முஸ்லிம்கள் தரப்பில் சுமார் எழுபதுக்கும் அதிகமான தோழர்கள் வீர மரணத்தைத் தழுவியிருந்தனர். மற்றைய தோழர்கள் பெரும்பாலானவர்கள் பெரிய, சிறிய காயங்களுக்கு உட்பட்டிருந்தனர். நபி (ﷺ) அவர்களின் பல் உடைபட்டு, முகத்தில் இரண்டு ஆணி குத்தி அவர்களும் காயப்பட்டிருந்தார்கள். உஹுதுக் களத்தில் நேர்ந்த சோதனையால் உள்ளத்தாலும் உடலாலும் துவண்டுபோயிருந்த தோழர்களை வைத்துத் தனித்தனி கப்ருகள் தோண்டி ஷஹீதானவர்களை நல்லடக்கம் செய்வது இன்னும் அதிக சிரமத்தை அவர்கள் மீது சுமத்துவதாக அமைந்து விடும் என்பதால் ஒரு கப்ரில் பலரின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

இவ்வகையில் அம்ர் இப்னு ஜமூஹ்(رضي الله عنه) அவர்களையும் அவர்களது மைத்துனரும் நெருங்கிய நண்பருமான அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஹராம் (رضي الله عنه) அவர்களையும் ஒரே கப்ரில் நல்லடக்கம் செய்யுமாறு நபி (ﷺ) அவர்கள் பணித்தார்கள். அதன்படி அவ்விருவரும் ஒன்றாக நல்லடக்கம் செய்யப்பட்டனர். முதுமையிலும் உளஉறுதியுடன் ஷஹாதத்தை நேசித்து அதனை அடைந்து கொண்ட அம்ர் இப்னு ஜமூஹ்(رضي الله عنه) அவர்களையும் அவர்களது வீர மைந்தர்களையும் அல்லாஹுதஆலா பொருந்திக் கொள்வானாக. அருமைக் கணவரையும் அன்புக் குழந்தைகளையும் இஸ்லாமியப் பணிக்காக அர்ப்பணித்த அந்தத் தாயாரையும், இறைவழியில் போரிட்டு உயிர் நீத்த அவரது சகோதரர் அப்துல்லாஹ் இப்னு அம்ர் (رضي الله عنه) அவர்களையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக!

அவர்களைப் போன்று ஈமானிய உறுதியும், கொள்கைப் பற்றும், தியாக உள்ளமும் கொண்டவர்களாக எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மையும் ஆக்கி அருள்புரிவானாக!.

إن الله مع الصابرين

இஸ்லாத்தில் முதல் தூதுவர்
முஸ்அப் இப்னு உமைர் (ரழி)

இஸ்லாமிய எழுச்சியின் ஆரம்ப கால அஸ்திவாரங்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்தான் முஸ்அப் இப்னு உமைர் (ரழி). மக்காவில் மதிப்புமிக்க குடும்பமாகிய ஹாஸிம் கிளையைச் சேர்ந்த இவர், பிறவியிலேயேப் பெரும் செல்வந்தராவார். உலகில் பல செல்வச் சீமான்கள் உள்ளனர். ஆனால் ஓயாமல் உழைத்துக் கொண்டிருப்பதால் உண்டு மகிழவோ, அணிந்து அழகு பார்க்கவோ அவர்களுக்கு வாய்ப்பு கிட்டுவதில்லை. ஆனால், முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்களோ மக்காவிலேயே மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் ஆடை அணிபவர். அவர் செல்லும் பாதையெல்லாம் மணம் கமழும் என்று கூறக்கூடிய அளவுக்கு நறுமணங்களைப் பூசி வலம் வருபவர். ஆம், அவர் வாழ்க்கையை அனுபவித்தார்.

முஸ்அப்பின் பெற்றோர் இவர் மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்தனர். அந்தக் காலத்திலேயே 200, 300 தங்கக் காசுகளின் பெறுமதிக்குரிய ஆடம்பர ஆடைகளை அவருக்கு அணிவித்து அழகுபார்த்தனர். மக்காவிலேயே அதிக மணங்கமழும் இளைஞர் எனப் போற்றப்படும் அளவுக்கு அவர் நறுமணம் பூசி உலா வருவார். சபைகளில் முஸ்அப் இருப்பது அச்சபைகளுக்கே கௌரவமாகத் திகழ்ந்தது. இவ்வாறு இன்பத்திலேயே பிறந்து இன்பத்துடன் வாழ்ந்து வந்த இளைஞர் தான் முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்கள். இந்நிலையில்தான் நபி (ஸல்) அவர்களது இரகசியப் பிரச்சாரம் குறித்த தகவல் இவருக்குக் கிட்டியது.

நபி (ஸல்) அவர்கள், அர்கம் (ரழி) அவர்களது இல்லத்தில் அந்தரங்கப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தபோது முஸ்அப் அங்கு சென்றார். அல்குர்ஆன் வசனங்களை அண்ணலார் ஓத செவிமடுத்தார். அது முஸ்அபின் அடிமனதின் ஆழம் வரை ஊடுருவிப் பாய்ந்தது. முஸ்அப் முஸ்லிமானார். அதிலும் அல்குர்ஆன் புகழ்ந்துரைக்கும் ஆரம்பகால முஸ்லிமானார்.

இஸ்லாத்தை மறைத்தல்

முஸ்அப் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்கும்போது அவரது நெஞ்சில் நெருடியது அவரின் தாயாரின் அளவில்லா அன்பும் பாசமும் தான். உலகமே திரண்டு வந்தாலும் அஞ்சாத துணிவும் அசைந்து கொடுக்காத உறுதியும் முஸ்அபிடம் தாராளமாகவே

இருந்தது. மக்கத்து மாந்தர்கள் மடமையில் வழிபட்டு வந்த சிலைகளால் தனக்கு எதுவும் செய்ய முடியாது என்பதும் அவருக்குத் தெரியும்.

கரடு முரடான மக்கத்துக் காபிர்கள் தன் மீது கைவைப்பார்கள் என்கிற அச்சம் கூட அவருக்கு இருக்கவில்லை. இவருக்கிருந்த குடும்ப அந்தஸ்தும் பணபலமும் யாரையும் திடீரென கை ஓங்க வைக்காது. ஆனால், தன் மீது உயிரையே வைத்திருக்கும் தாய், சிலை வணக்கத்திலே மலை போல் உறுதியான நிலையில் உள்ளவர். அதே வேளை தன் மீது பாசத்தை சொரிபவர். தாயின் அன்பை எப்படித் தட்டிக் கழிப்பது? தாய் இச்செய்தியைக் கேட்டு தாங்கிக் கொள்வாரா? என்றெல்லாம் சிந்தித்தார். எனவே, இஸ்லாமிய காந்தத்தால் தான் ஈர்க்கப்பட்ட இந்நிகழ்ச்சியை இரகசியமாக வைத்துக்கொள்வது என்று முடிவு செய்தார்கள்.

பாசம் பகையானது

எவ்வளவுதான் முயன்றாலும் அவருக்கு இஸ்லாத்தை மறைத்து வைக்க முடியவில்லை. தாய்க்குத் தகவல் சென்றது. முஸ்அப் மீது அன்பு வெறிகொண்டிருந்த அந்தத் தாய் தன் மகன் தனக்கே துரோகம் செய்து விட்டதாகக் கருதினாள். தான் வணங்கும் தெய்வங்களை என் மகன் போலி என்கிறானா? என் கடவுளை மறுப்பவனுக்கு நான் உணவளிக்க முடியாது என்ற முடிவுக்கு அவள் வந்தாள். எப்படி முஸ்அபின் தாய் அவர் மீது அன்பு காட்டினாளோ அதேபோல் அவர் மீது வெறுப்பையும் வெளிப்படுத்தினாள். பாசத்தைப் பொழிந்த தாயே பகையாளியானாள்.

ஹிஜ்ரத்

ஆரம்ப கட்டத்தில் ஹபஸாவுக்கு ஹிஜ்ரத் செய்த முஸ்லிம்களில் முஸ்அப் இப்னு உமைர் (رضي الله عنه) அவர்களும் ஒருவர். உறவுகள் கைவிட்ட நிலையில் செல்வச் செழிப்பில் வாழ்ந்த முஸ்அப் உண்ண உணவின்றி, அணிய போதிய ஆடைகளின்றி வாட வேண்டியதாயிற்று. சில சந்தர்ப்பங்களில் பசியின் கோரத்தால் நடக்க முடியாமல் தள்ளாடும் நிலையை அவர் அடைவார். சில செய்திகளின் படி அவரது தோல் பாம்புத் தோல் போல் சுருண்டு விடும் அளவுக்கு வறுமையில் வாடினார். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காக தன் ஆருயிர் தாயின் அன்பை இழந்தார். இதுவரை தான் அனுபவித்து வந்த ஆடம்பரமான, உல்லாச வாழ்வை இழந்தார். வறுமையின் கோரத்தையும் கொடூரத்தையும் அனுதினமும் அனுபவித்தார்.

முற்றாக முறிந்த உறவு

ஹபஸா சென்ற முஸ்லிம்கள் வதந்தி ஒன்றால் திரும்பி வந்தபோது இவரும் மக்கா திரும்பினார். பின்னர் இரண்டாம் முறையாக ஹபஸா செல்ல முடிவு செய்தபோது இவரை சிறைப்பிடிக்க இவரது தாய் முடிவு செய்தாள். அதற்கு உதவ குடும்பம் முன்வந்தது. தாயின் அன்புக்கு முன்னால் எதுவும் செய்ய முடியாது. கொள்கையில் மட்டும் உறுதியாக இருந்த முஸ்அப் (ﷺ) அவர்கள் அப்போது தான் உருமாறினார்கள்.

என் தாய் என்னை சிறையிலிட்டால் அதற்கு யார் யாரெல்லாம் உதவி செய்கிறார்களோ அவர்கைளயெல்லாம் நான் நிச்சயம் பழி தீர்ப்பேன் என்று முஸ்அப் உறுமினார். முஸ்அப் முடிவு எடுத்தால் அதில் உறுதியாக இருப்பார் என்பதை அவரைப் பெற்ற தாயும் மற்றவர்களும் அறிந்திருந்தனர். எனவே, மகனை இனியும் மாற்ற முடியாது என்பதை உணர்ந்து அவள் இறுதி முடிவு எடுத்துவிட்டாள். குப்ரில் தாய் பிடிவாதமாக நின்றாலும் இஸ்லாத்திலும் ஈமானிலும் மகன் இறுக்கமாக இருந்ததால்,

“நீ போவதாக இருந்தால் போய்விடு; இனி என்னிடம் திரும்பி வராதே“ என முடிவாகக் கூறிவிட்டாள்.

உறவு முறியும் அளவுக்கு பிரச்சினை முற்றி விட்டதை மகன் உணர்ந்தார். அன்புடன் தன் ஆருயிர் தாயிடம் சென்று,

“தாயே! நீங்கள் நேர்வழி பெற வேண்டும். கலிமாவைக் கூறுங்கள். முஹம்மத் இறைத்தூதர் என்று சாட்சி கூறுங்கள்“ என்று கூறினார். ஆனால், அவள் தனது குப்ரில் பிடிவாதமாகவே இருந்தாள். இஸ்லாத்தை ஏற்க மறுத்து விட்டாள். இந்நிலையில் தனது சொந்த பந்தங்களையெல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு இஸ்லாத்தையும் ஈமானையும் மட்டுமே தனது சொத்தாகவும் சொந்தமாகவும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார் தியாகி முஸ்அப் (ﷺ) அவர்கள்!

சுகமான சுமை

சோகங்களையே சொந்தமாக்கி வாழ்வில் பெரும் சுமைகளைத் தாங்கிக் கொண்டு இஸ்லாமிய வழியில் பயணித்த முஸ்அப் (ﷺ) அவர்கள் ஒரு சுகமான சுமையை சுமக்க வேண்டி ஏற்பட்டது.

ஆரம்ப கால கட்டத்தில் நபி (ﷺ) அவர்கள் மதீனாவிலிருந்து மக்காவிற்கு வந்த யாத்திரிகர்களிடம் இஸ்லாத்தை எடுத்துச் சொன்னார்கள். அவர்களில் ஒரு சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது மட்டுமன்றி இஸ்லாத்தின் தூதை உரிய முறையில் எடுத்துச் சொல்லக்கூடிய ஒருவரை தம்முடன் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொண்டனர். இந்த மிக முக்கிய பணிக்கு முஸ்அப் (رضي الله عنه) அவர்களை நபி (ﷺ) அவர்கள் தெரிவு செய்தார்கள். ஆம்! இஸ்லாத்தில் முதல் அழைப்பாளராக முஸ்அப் இப்னு உமைர் அனுப்பப்பட்டார்.

இஸ்லாமிய எழுச்சியில் ஹிஜ்ரத் நிகழ்ச்சி மிக முக்கியமானதாகும். நபி (ﷺ) அவர்கள் மதீனாவிற்குச் செல்வதற்கு முன்னரே அங்கே நபிகளாரின் வரவிற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் இந்தப் பணி பாரியதும் இஸ்லாமிய எழுச்சியில் மிக முக்கியத்துவமிக்கதுமாகும். இவ்வகையில் இஸ்லாமிய எழுச்சிக்கு முஸ்அப் (رضي الله عنه) அவர்கள் ஆற்றிய பணி மிக முக்கியமானதாகும்.

மதீனாவில் மாபெரும் எழுச்சி

முஸ்அப் (رضي الله عنه) மற்றும் கதீஜா (ரழி) அவர்களின் உறவுக்காரர்களில் ஒருவரான அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (رضي الله عنه) ஆகிய இருவரும் மதீனா சென்று இஸ்லாமியப் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டனர். மதீனாவின் ஒவ்வொரு வீட்டுக் கதவையும் இஸ்லாத்தின் தூது தட்டியது. இவர்களின் தீவிரப் பிரச்சாரத்தின் பயனை நபி (ﷺ) அவர்கள் அடுத்த ஆண்டிலேயே கண்டு கொண்டார்கள். ஆம், முதல் வருடத்தில் 12 பேர் நபி (ﷺ) அவர்களிடத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அடுத்த வருடம் மதீனாவாசிகளின் தூதுக்குழுவில் 70க்கும் மேற்பட்டவர்கள் வந்தனர். இது இவர்களின் பணியின் பயன்பாட்டையே உணர்த்துகின்றது.

நபிகளாரின் தூதுவராகச் சென்ற முஸ்அப் (رضي الله عنه) அவர்களும் அவர்களுடன் தொடராக இணைந்து கொண்ட அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம், பிலால், ஸஅத் இப்னு அபீவக்காஸ், அம்மார் போன்றவர்களின் பணியாலும் நபி (ﷺ) அவர்கள் மதீனாவிற்குச் செல்லும்போது அவர்களை வரவேற்க அங்கே பெரும் கூட்டம் திரண்டது. மதீனா முஸ்லிம்கள் முஸ்அப் அவர்கள் மூலமாகவே "ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா" போன்ற பல சூராக்களை மனனம் செய்து கொண்டனர். அதன் பின்தான் நபியவர்களே மதீனா சென்றார்கள்.

பிரச்சாரப் பணியில் முஸ்அப்

இந்த மாபெரும் வெற்றியை மதீனாவில் அடைவதற்கு அல்லாஹ்வின் அருளுக்குப் பின்னர் முஸ்அப் (رضي الله عنه) அவர்களிடம் காணப்பட்ட ஆழமான இஸ்லாமிய அறிவு, பற்று, துணிவு, நற்பண்புகள் என்பன காரணமாக அமைந்தன என்றால் அது மிகையாகாது. அண்ணலார் தெரிவுசெய்த தூதுவரல்லவா? அவர் தகுதியற்றவராக இருப்பாரா?

முஸ்அப் (رضي الله عنه) அவர்கள் ஒருமுறை மதீனாவில் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் மதீனாவில் பனூ அப்துல் அஷ்ஹல் கோத்திரத் தலைவர் உஸைத் இப்னு ஹுழைர் உருவிய வாளுடன் கோபம் கொந்தளிக்க வந்தார். அப்போது முஸ்அப் (رضي الله عنه) அவர்களுடன் அவருக்குப் புகழிடமளித்த அஸ்அத் இப்னு ஸுராரா (رضي الله عنه) அவர்களுமிருந்தார்கள். கோபத்துடன் வந்த உஸைத் வாளை ஓங்கியவாறு,

‘எதற்காக எங்கள் பகுதிக்கு வந்தீர்கள். இங்குள்ள பலவீனமானவர்களை முட்டாள்களாக்கப் பார்க்கின்றீர்களா? வாழ வேண்டும் என்ற ஆசை இருந்தால் இங்கிருந்து உடனடியாகப் போய்விடுங்கள்’ என்று உறுமினார்.

உருவிய வாளோ, உஸைதின் உறுமலோ முஸ்அபின் முகபாவத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. களங்கமற்ற அதே முகம், அதே தொனி, அதே அமைதியுடன் பேசினார்:

‘நீங்கள் எங்களுடன் அமர்ந்து நாம் என்ன சொல்கின்றோம் என்று கேட்கக் கூடாதா? நாம் கூறுவது சரி எனப்பட்டால் ஏற்றுக் கொள்ளுங்கள் இல்லையென்றால் விட்டுவிடுங்கள்.’

இந்தத் தெளிவான நிதானமான பேச்சு உஸைதை உசுப்பியது. அவரது உணர்ச்சி வேகத்தைத் தடுத்தது. நியாயத்தை உணரச் செய்தது. உஸைத் ஒரு அறிவாளி, படித்தவர். வெறுமனே அவர் பேசுவதைக் கேட்குமாறு தானே கூறுகிறார். கேட்டுத்தான் பார்ப்போமே என்று எண்ணினார். பிரச்சினையைக் கத்தியால் தீர்ப்பதை விட்டு விட்டு புத்தியால் தீர்க்கப் புறப்பட்டார்.

ஆம், முஸ்அப் இஸ்லாத்தின் அடிப்படைகளை எடுத்துக் கூறினார். அல்குர்ஆன் வசனங்களை ஓதினால். அது உஸைதிடம் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியது. கொல்லுவேன் என்று எச்சரித்தவர் சத்தியத்தை ஏற்று கொள்கைவாதியானார். இவ்வாறே ஸஃத் இப்னு

முஅத், ஸஃத் இப்னு உப்பாதா போன்ற தலைவர்களும் சத்தியத்தின் முன் தலைவணங்கினர். இவர்கள் இஸ்லாத்தில் இணைந்தது மதீனாவில் மாபெரும் மாற்றத்திற்கு வழிவகுத்தது. இந்தத் தலைவர்கள் எல்லாம் இஸ்லாத்தில் இணைந்து விட்ட பின்னர் அதை ஏற்றுக்கொள்ள நாம் ஏன் பின் நிற்க வேண்டும் என்று சிந்தித்த மக்கள், கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் இணைய ஆரம்பித்தனர். இந்த மாற்றம் தான் ஹிஜ்ரத் எனும் இஸ்லாமிய எழுச்சியின் அடிப்படையாக அமைந்தது.

போர்க்களத்தில் முஸ்அப் (ரழி) அவர்கள்

ஹிஜ்ரத்திற்குப் பின் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பூண்டோடு ஒழித்துக் கட்ட திட்டம் தீட்டி எதிரிகள் படையெடுத்து வந்தனர். 1000 பேர் கொண்ட அப்படையை 313 பேர் கொண்ட சிறு படை போதிய வளமோ, ஆயுத பலமோ இன்றி புறமுதுகிட்டு ஓடச் செய்தது.

பத்ரில் ஏற்பட்ட இந்த இழப்புக்கு பதில் நடவடிக்கையாக உஹுதுக் களம் நோக்கி எதிரிகள் 3000 பேர் வந்தனர்.

இந்தப் போரில் முஸ்லிம் அணியின் கொடியை நபி (ஸல்) அவர்கள் முஸ்அப் (ரழி) அவர்களிடமே ஒப்படைத்தார்கள். போர் மூண்டது. முஸ்லிம்கள் வெற்றி கொண்டு காபிர்களைத் துரத்தித் தாக்கினர். இவ்வேளையில் நபி (ஸல்) அவர்கள் உஹுது மலையின் பின்புறமாக நிறுத்தியிருந்த காவல் வீரர்கள் தமக்கு இடப்பட்ட கட்டளையை மீறி களத்திற்கு வந்தனர். இதனைக் கண்ணுற்ற எதிரிப் படையின் தலைவர்களுள் ஒருவரான காலித் இப்னு வலீத் (அப்போது அவர் இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை) அந்த வழியாக வந்து தாக்கினார். போரின் நிலவரம் தலைகீழாக மாறியது. ஓடிய காபிர்கள் திருப்பித் தாக்கினர். இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் இரண்டு புறமும் காபிர்களால் சூழப்பட்டனர். எதிரிகளுடன் மோதுவதற்குப் பதிலாக முஸ்லிம்கள் தமக்குள்ளேயே மோதுகின்ற அளவுக்கு நிலைமை தலைகீழாக மாறியது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நபி (ரழி) அவர்களைத் தீர்த்துக் கட்டி விட பலரும் முயற்சித்தனர். இவ்வேளையில் பல நபித்தோழர்கள் உயிரைப் பணயம் வைத்து நபியவர்களைப் பாதுகாத்தனர்.

எதிரிகள் நபி (ரழி) அவர்களைத் தேடுவதைக் கண்டு அவர்களது தலைவனைத் திசை திருப்புவதற்காக முஸ்அப் (ரழி) அவர்கள் கொடியை உயர்த்திப் பிடித்து உரத்த குரலில் தக்பீர் கூறினார். எதிர்பார்த்தபடி எதிரிகள் சூழ்ந்தனர். போராடினார்;

போராடினார். எதிரிகளின் ஒரு குதிரை வீரன் முஸ்அப் (ﷺ)அவர்களது கரங்களை வெட்டினான். ஒருவன் ஈட்டியை எறிந்தான். முஸ்அப் (ﷺ) அவர்கள் வீர மரணத்தைத் தழுவி கீழே விழுந்தார். அவர் தங்கியிருந்த கொடியும் கீழே விழுந்தது.

கபன் இல்லாத ஷஹீத்

உஹுதுக் களத்தில் மரணித்த மாவீரர்கள் பலருக்கும் முறையாகக் கபன் செய்யக்கூடிய அளவுக்கு துணிகள் இல்லாத நிலையில் இருந்தது. அவரிடம் இருந்த துணியால் அவரின் தலையை மூடினால் கால் தெரிந்தது. காலை மூடினால் தலை தெரிந்தது. எனவே, தலையைத் துணியாலும் காலைப் புல்லினாலும் மறைத்து அவர்களை அடக்கம் செய்யுமாறு நபியவர்கள் கூறினார்கள்.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ﷺ) அவர்கள் மிகப் பெரும் செல்வந்தராவார். ஒருமுறை நோன்பு திறப்பதற்காக விதவிதமான உணவுகள் அவர் முன்வைக்கப்பட்டன. அதனைப் பார்த்த அவர் வேதனை கலந்த குரலில்,

'முஸ்அப் (ﷺ) என்னை விடச் சிறந்தவர். அவர் உஹுதுப் போரில் வீர மரணம் அடைந்தபோது, அவரைக் கபனிட போதிய துணி அவரிடமிருக்கவில்லை. இதே போன்று தான் ஹம்ஸா (ﷺ) அவர்களும். அவரும் என்னை விடச் சிறந்தவர். நாம் செய்த நல்லறங்களுக்கான பிரதிபலன்கள் விரைவாக உலகத்திலேயே கிடைக்கச் செய்யப்பட்டு விடுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது' எனக் கூறிவிட்டு அவர்கள் அழுதார்கள். (பார்க்க: புகாரி 1274,1275)

வாழ்வில் வசந்தங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் வள்ளல் அப்துர்ரஹ்மான கஷ்டங்களை அனுபவித்து மரணித்தவர்களை எண்ணி கண் கலங்குகின்றார். எமது கூலிகள் உலகிலேயே கிடைத்து விடுமோ என்று வேதனைப்படுகின்றார்.

ஹிஜ்ரத்தை அனுபவிக்காத முதல் முஹாஜிர்

ஏற்கனவே மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த முதல் நபர் முஸ்அப்தான் என்பதைக் கண்டோம். மதீனா ஹிஜ்ரத்திற்குப் பின்னர் முஸ்லிம்கள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி உமர் (ﷺ) அவர்களது ஆட்சிக் காலத்தில் அன்றைய வல்லரசுகளான ரோம, பாரசீக அரசுகளையெல்லாம் வெற்றி கொண்டார்கள். இக்காலத்தில் வாழ்ந்த நபித்தோழர்கள் வறுமையின் கொடுமையிலிருந்து மீட்சி

பெற்றார்கள். அச்சமற்ற சூழ்நிலையில் வாழ்ந்தார்கள். ஆனால், முதலாவது முஹாஜிர் முஸ்அப் (ؓ) ஹிஜ்ரத்தின் பயனை அனுபவிக்காமலேயே ஆரம்ப காலகட்டத்திலேயே மரணித்துப் போனவராவார். இது குறித்து ஹப்பாப் (ؓ) அவர்கள் கூறும் போது,

'நாங்கள் நபி (ﷺ) அவர்களுடன் அல்லாஹ்வுக்காகவே ஹிஜ்ரத் செய்தோம். எங்களுக்கான கூலி அல்லாஹ்விடத்தில் உள்ளது. எங்களில் சிலர் தமது கூலியை (இவ்வுலகத்தில்) காணாமல் இறந்துள்ளனர். அவர்களில் முஸ்அப் (ؓ) அவர்களும் ஒருவராவார்கள். எங்களில் சிலர் (இவ்வுலகில் பூத்துக் குலுங்கிச் செழித்து அனுபவித்ததும் உண்டு.) முஸ்அப் (ؓ) அவர்கள் உஹதுப் போரில் கொல்லப்பட்டார். அவரது உடலைக் கபன் செய்வதற்கு ஒரேயொரு சால்வை மட்டுமே அவரிடம் இருந்தது. அதைக் கொண்டு அவரது தலையை மறைத்தால் கால்கள் வெளியில் தெரிந்தன. கால்களை மறைத்தால் தலை வெளியில் தெரிந்தது. அப்போது அவரது தலையை துணியால் மறைத்துவிட்டு கால்களை இத்கீர் எனும் புல்லைப் போட்டு மறைக்குமாறு நபி (ﷺ) அவர்கள் கட்டளையிட்டார்கள். (புகாரி 1274)

கபன் துணி கூட இல்லாமல் புற்களாலும் இலை குலைகளாலும் கால்கள் மறைக்கப்பட்டு அவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். ஹிஜ்ரத்தை ஆரம்பித்த அவர் அதன் பலனில் எதையும் அனுபவிக்காமல் அனைத்தையும் மறுமைக்காகவே சேமித்துக் கொண்டார்.

கருணை நபி கண்ணீருடன்

உஹதுக் களம் இரத்தத்தில் தோய்ந்து போயிருந்தது. சுமார் 15 வருடங்கள் படாத பாடுபட்டு எண்ணற்ற தியாகங்களைச் செய்து கண்ணீரையும் செந்நீரையும் பாய்ச்சி வளர்த்தெடுத்த ஸஹாபாக்கள் எனும் மனித மாணிக்கங்கள் சுமார் எழுபது பேர் உயிரைத் தியாகம் செய்து வெற்றுடலாகக் காட்சியளித்தனர். எஞ்சியிருந்தவர்களும் உடலெல்லாம் வெட்டும் குத்துமெனக் காட்சியளித்தனர். அண்ணலாரின் முகத்திலும் இரத்தக் கறை. இரண்டு ஆணிகள் கன்னத்தில் ஏறியிருந்தது. பல்கூட உடைபட்டிருந்தது. வேதனையின் விளிம்பை நபித்தோழர்கள் அடைந்திருந்த கட்டம்.

அங்கே நபிகளாருக்கு பெரும் துணையாக இருந்த அவரது சிறிய தந்தை ஹம்ஸா கோரமாக கொல்லப்பட்டிருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு நபித்தோழர்களையும் நபி (ﷺ) அவர்கள்

பார்த்து அவரவர் பற்றிய சில சிறப்புக்களையும் அவர்களது நல்லடக்கம் குறித்தும் கூறிக் கொண்டிருந்தார்கள்.

முஸ்அப் (رضي الله عنه) அவர்களிடம் நபியவர்கள் வந்தார்கள். அவரது உயிரற்ற உடலைப் பார்த்து கண்ணீர் மல்க,

'நம்பிக்கையாளர்களில் இத்தகையவர்களும் இருக்கின்றனர். அல்லாஹ்விடம் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை அவர்கள் மெய்ப்படுத்திக் காட்டி விட்டிருக்கின்றார்கள். அவர்களுள் சிலர் தமது நேர்ச்சையை நிறைவேற்றிவிட்டார்கள். இன்னும் சிலர் அதற்கான நேரத்தை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள். - அவர்கள் (தம்முடைய நடத்தையில்) எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லை'. (அல்குர்ஆன் - 33:23)

என்ற வசனத்தை ஓதினார்கள். பின்னர் அவர் கபனிடக்கூட துணியில்லாத நிலையில் இருப்பதைக் கண்டு, 'முஸ்அபே மக்காவில் உம்மை விட அழகான ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து அழகுப் பொருளாக காட்சி தந்த ஒருவரை நான் கண்டதில்லை' என்று அவரது பழைய வாழ்விற்கும் அவரது தியாகத்தைத் தொடர்ந்து இப்போது அவர் இருக்கும் நிலைக்கும் ஒப்பிட்டுப் பேசினார்கள்.

பின்னர் ஒட்டு மொத்த ஸஹாபாக்களுக்குமாக,

'அல்லாஹ்வின் தூதர் நாளை மறுமையில் அல்லாஹ்விடம் நீங்களெல்லாம் வீர மரணமடைந்த தியாகிககள் தான் என்பதற்கான சாட்சியாகத் திகழ்வார் என்று கூறினார்கள்.

இஸ்லாமிய கொள்கைக்காக இவ்வாறாக வாழ்வின் இன்பங்களை எல்லாம் இழந்து, வாழ்வின் அனைத்து கஷ்டங்களையும் ஏற்று தன்னுயிரையும் அர்ப்பணம் செய்த முஸ்அப் (رضي الله عنه) அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக. அவர் போன்ற கொள்கை உறுதிகொண்டவர்களாகவும் தியாகிகளாகவும் நம்மை ஆக்கி அருள்வானாக!

சுவனத்தைக் கொண்டு சுபசோபனம் சொல்லப்பட்ட நபித்தோழர் ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ﷺ)

இஸ்லாமிய பிரச்சாரம் மக்காவில் துவக்கப்பட்ட ஆரம்ப காலங்களிலேயே அதில் இணைந்தவர்களில் இவரும் ஒருவர். மூன்றாவது அல்லது நான்காவது நபராக இவர் இஸ்லாத்தில் இணைந்தவராகக் கருதப்படுகிறார்.

மக்காவில் வசித்த ஸஅத் இளமை பருவத்திலேயே சமூகத்தின் அந்தஸ்தையும், மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தவர். இளமைக்கே உரித்தான துடிப்பும், துணிவும் அவரிடம் தாராளமாகவே இருந்தன. பெற்றோரைப் பேணல், பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளல் போன்ற பண்புகளால் நல்ல பிள்ளையென பெயர் பெற்றவர். அத்தோடு இவர் நபி (ﷺ) அவர்களின் தாய் வழியில் நபியவர்களது நெருங்கிய உறவினராகவும் இருந்தார்.

அன்புச் சோதனை

அன்பால் ஒருவன் சோதிக்கப்படுவது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகும். எதிரியின் வாளுக்கு அஞ்சாதவர்கள் கூட அன்பு கொண்டவர்களின் அழுகைக்கு அடங்கிவிடுவர். ஸஅத் இஸ்லாத்தில் இணைந்ததும் அன்பு கொண்ட உறவால் சோதிக்கப்பட்டார்.

இவரது சோதனையின் உச்சகட்ட வெற்றியினால் திருமறை வசனங்கள்கூட அருளப்பட்டன. இதோ தான் இஸ்லாத்தை ஏற்றதும், அதன்பின் ஏற்பட்ட சோதனைகள் குறித்து ஸஅத் (ﷺ) அவர்களே கூறுவதைக் கேளுங்கள்.

'நான் இஸ்லாத்தில் இணைந்த செய்தி என் தாய்க்கு எட்டியது. நானோ என் தாய்க்கு அதிகம் நன்றியுடையவனாகவும், தாயை மிகவும் நேசிப்பவனாகவும் இருந்தேன் என்பதால் என்னிடம் என் தாய்,

'ஸஅதே! நீ புதிய மார்க்கத்தில் இணைந்திருப்பதாக அறிந்தேன். உன் பெற்றோர் மதத்தை நீ விட்டுவிடலாமா? உன் புதிய மதத்தைத் துறந்து தாய் மதத்தைத் தழுவவில்லையானால் நான் மரணிக்கும் வரை உண்ணவோ பருகவோ மாட்டேன். நான் அப்படியே இறந்து விட்டால் தாயைக் கொன்ற பிள்ளை என்ற அவப்பெயர் காலம் முழுதும் உன்னைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்' என்றார்கள்.

தாய் உண்ணாமல் இருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? தாய்ப் பாசம் ஸஅதை வாட்டினாலும் சத்தியத்தை விட்டுக் கொடுக்க அவர் அணுவளவும் தயாராக இல்லை. என் அன்புத்தாயே! அப்படிச் செய்யாதீர்கள், எதற்காகவும் நான் ஏற்றுக்கொண்ட மார்க்கத்தை விட்டுக்கொடுக்க நான் தயாரில்லை என்றேன்.

எனினும் என் தாய் தான் செய்த சத்தியத்தில் பிடிவாதமாய் இருந்தார்கள். உண்ணாவிரதத்தில் சில நாட்கள் கழிந்தன. தாயின் உடல் தளர்ந்தது, எலும்புகள் பலமிழந்தன. அவரது சத்தியெல்லாம் அற்றுப் போனது. நான் அடிக்கடி தாயிடம் வந்து எதையேனும் உண்ணுங்கள்! ஒரு மிடறு நீரையாவது பருகுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தேன். எனினும் என் தாய் நீ பழைய மார்க்கத்திற்கு வர வேண்டும் அல்லது என் உயிர் இப்படியே பிரிய வேண்டும் என்று கூறி மறுத்துவிட்டார். அப்போது நான் என் தாயைப் பார்த்து, அன்புத்தாயே! நான் உங்கள் மீது வைத்திருக்கும் அன்பை விட அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர் மீதும் அன்பு கொண்டுள்ளேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக உங்களுக்கு ஆயிரம் உயிர்கள் இருந்து அவை அத்தனையும் ஒன்றன் பின் ஒன்றாக உங்கள் உடலை விட்டும் பிரிந்து செல்வதை நான் பார்த்துக் கொண்டிருந்தாலும், நான் எனது மார்க்கத்தை விடப் போவதில்லை' என்று கூறினேன். என் தளராத உறுதியைக் கண்ட தாய் தனது பிடிவாதத்தை விட்டு விட்டு உண்ண ஆரம்பித்தார்கள். இது குறித்து குர்ஆன் வசனம் பின்வருமாறு அருளப்பட்டது.

"ஆனால், நீ எது பற்றி அறிவு (ஆதாரம்) பெற்றவனாக இல்லையோ அதனை இணைவைக்குமாறு உன்னை பெற்றோர்களான அவ்விருவரும் வற்புறுத்தினால் அப்போது நீ அவ்விருவருக்கும் வழிபட வேண்டாம்; ஆனால் இவ்வுலக வாழ்க்கையில் அவ்விருவருடனும் அழகிய முறையில் உறவு வைத்துக்கொள்; யாவற்றிலும் என்னையே நோக்கி நிற்போரின் வழியையே நீ பின்பற்றுவாயாக. பின்னர் உங்கள் (அனைவருடைய) மீளுதலும் என்னிடமேயாகும்; நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்பதை (அப்போது) நான் உங்களுக்கு அறிவிப்பேன்" என்ற (31:15) வசனமும் அருளப்பட்டது.

பத்ரு களத்தில் தம்பியுடன்

ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ரலி) அவர்கள் தமது தம்பி உமைருடன் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டார்கள். அப்போது உமைர் முகத்தில் ஒரு முடிகூட முளைக்காத அளவுக்கு இளம் வயதினராக இருந்தார். நபி (ஸல்) அவர்கள் படையினரை

பார்வையிட்டுக் கொண்டிருக்கும் போது தன்னைக் கண்டால் திருப்பி அனுப்பி விடுவார்கள் என்ற அச்சத்தில் அவர் ஒளிந்து கொண்டார். எனினும் நபி (ﷺ) அவர்கள் அவரைக் கண்டு இளம் வயது என்பதால் திருப்பி அனுப்பிவிட்டார்கள். (இதனால் கவலையுற்ற உமைர், நபியவர்களே பணிந்து செல்லும் அளவுக்கு அழ ஆரம்பித்தார்கள்)

அவரது ஆர்வத்தையும் பிடிவாதத்தையும் கண்டு நபி (ﷺ) அவர்கள் தமது படையுடன் இணைய அனுமதித்ததும் ஸஅத் மிகுந்த மகிழ்ச்சியுடன் தம்பியைப் போருக்குத் தயார் செய்து தன்னருகிலேயே வைத்துக் கொண்டார். போர் முடிந்து மதீனா திரும்பும்போது ஸஅத் தனியாகவே வீடு திரும்பினார். ஆம், தன் அன்புத் தம்பியை ஷஹீதாக அல்லாஹ்வின் பொறுப்பில் விட்டுவிட்டுத்தான் வீடு திரும்பினார்.

உஹதுக் களத்தில்

உஹதுப் போர்க்களத்தில் படை நிலவரம் குழம்பிய சூழலில் ஸஅத் நபி (ﷺ) அவர்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டார். தேர்ந்த வில் வீரராக இருந்த அவர் அம்பு எறியும் போது நபியவர்கள், 'ஸஅத்! என் தாயும் தந்தையும் உனக்கு அர்ப்பணமாகட்டும்! எறி ஸஅதே எறி' என்றார்கள் இதுகுறித்து ஸஅத் அவர்களே பெருமிதமாகப் பேசுபவர்களாக இருந்தார்கள்.

நபியின் துஆவைப் பெற்றவர்

சுவனத்தைக் கொண்டும் சுப செய்தி சொல்லப்பட்ட (அஷரதுல் முபஷ்ஷிரீன்) பத்துப் பேர்களில் ஒருவரான இவர் நபி (ﷺ) அவர்களது துஆக்களைப் பல தடவைகளில் பெற்றுள்ளார்.

தனக்கு நோய் நீங்க நபி (ﷺ) அவர்கள் பிரார்த்தித்தது குறித்து ஸஅத் (رضي الله عنه) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் :

'நான் மக்கா வந்தபோது நோயுற்றேன். நபி (ﷺ) அவர்கள் என்னை நோய் விசாரிக்க வந்து என் முகம், நெஞ்சு, வயிறு ஆகியவற்றைத் தமது கரங்களால் தடவி 'யா அல்லாஹ்! ஸஅதுக்கு சுகமளிப்பாயாக!' என்றார்கள். அவர்களின் கரத்தின் குளிர்ச்சியை என் இதயத்தில் இன்றும் நான் உணர்கிறேன்.' (புகாரி, அஹ்மத்)

ஸஅதின் துஆ

நபி (ﷺ) அவர்கள் ஸஅத் (رضي الله عنه) அவர்களுக்காகப் பிரத்தியேகமானதொரு துஆக் கேட்டிருந்தார்கள்.

'யா அல்லாஹ்! ஸஅதின் பிரார்த்தனைக்குப் பதிலளிப்பாயாக' என்று பிரார்த்தித்திருந்தார்கள். (திர்மிதி, ஹாகிம், பஸ்ஸார்) எனவே, இவரது துஆவுக்கு மிகுந்த மரியாதை இருந்தது. இது குறித்து வரலாற்று நிகழ்ச்சிகளில் பரவலாகக் காணமுடிகின்றது.

ஒருமுறை ஒரு மனிதர் அலீ, தல்ஹா, சுபைர் (ரலி) ஆகிய முக்கிய ஸஹாபாக்களைத் திட்டினார். ஸஅத் (ரலி) அவர்கள் தடுத்தும் அவர் கேட்காமல் திட்டிக்கொண்டிருந்தார். இதனால் கவலையுற்ற ஸஅத், “அப்படியாயின் உனக்கு எதிராக நான் பிரார்த்திப்பேன்” என்றார். அந்த மனிதரோ “நீர் ஒரு நபி போல் என்னை எச்சரிக்கிறாயா?” எனக் கடிந்து கொண்டார்.

ஸஅத் (ரலி) உழூச் செய்து கொண்டு இரண்டு ரக்அத் தொழுதுவிட்டு 'அல்லாஹ்வே! இம்மனிதர் உன்னிடத்தில் நன்மதிப்புப் பெற்றவர்களை ஏசுவதாக நீ கண்டால், இவரது ஏச்சு உன்னை அதிருப்தியடையச் செய்திருந்தால் ஒரு அத்தாட்சியைக் காட்டுவாயாக! அதனைப் பிறருக்குப் பாடமாக ஆக்குவாயாக!' என்று பிரார்த்தித்தார்கள்.

இது நடந்து சிறிது நேரத்தில் ஒரு ஒட்டகம் மக்களுக்கு மத்தியில் புகுந்து எதையோ தேடுவதுபோல் ஓடியது. அந்த மனிதரைக் கண்டதும் அவரை இழுத்து கீழே போட்டு, இறக்கும் வரை மிதித்தது. (ரிஜாலுன் ஹவ்லர் ரஸூல் - 146, அஃலாமுன்னுபலா3/73, தபரானியின் - அல்கபீர், அல் மஜ்மஃ, இப்னு அஸாகீர்) இந்நிகழ்ச்சி ஸஅத் (ரலி) அவர்களது பிரார்த்தனையின் பலத்தை உணர்த்துகின்றது.

ஸஅதின் தர்மம் :

ஸஅத் (ரலி) அவர்கள் அதிகம் தர்மம் செய்பவர்களாக இருந்தார்கள். அவர் நோயுற்ற போது தனது சொத்தில் 3ல் 2 பகுதியை தர்மம் செய்ய முற்பட்டார். அதனை நபியவர்கள் மறுக்கவே அரைவாசியை தர்மம் செய்யவா? எனக் கேட்டார்கள். இதனை நபியவர்கள் மறுத்தபோது மூன்றில் ஒரு பகுதியை தர்மம் செய்ய அவர் தீர்மானித்தார். அதனை நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்தாலும் இதுகூட அதிகம் தான் என்றார்கள். அத்துடன் நீ உன் சந்ததிகளை பிறர் தயவில் வாழும் நிலையில் விட்டுச் செல்வதை விட செல்வந்தர்களாக விட்டுச் செல்வதே மேல். அல்லாஹ்வின் திருப்தியை நாடிச் செய்யப்படும் சின்னதொரு செலவுக்கும் அல்லாஹ்விடத்தில் நற்கூலி உண்டு. நீ உன் மனைவியின் வாயில் ஒரு கவள உணவை ஊட்டினாலும் அதற்கும் கூலி உண்டு என ஆறுதல் கூறினார்கள்.

இந்த சம்பவம் மூலம் ஸஅத் (ரலி) அவர்களின் தர்ம சிந்தனையை நாம் புரிந்து கொள்ளலாம்.

நபியின் பாதுகாவலர்

உஹதுப் போர்க்களத்தில் நபி (ஸல்) அவர்களைப் பாதுகாக்கப் போராடியது போன்றே இவர் பல சந்தர்ப்பங்களில் நபியவர்களின் மெய்ப்பாதுகாவலர் போன்று செயல்பட்டுள்ளார். இதற்குப் பின்வரும் நிகழ்ச்சியும் ஒரு சான்றாகத் திகழ்கின்றது.

ஒரு நாள் இரவு நபி (ஸல்) அவர்கள் சில எச்சரிக்கைகளை உணர்ந்தவர்களாக, 'இன்றிரவு எதிரிகளிடமிருந்து என்னைப் பாதுகாக்கக்கூடிய ஒரு ஸாலிஹான தோழர் இல்லையா?' எனக் கேட்டார்கள். அப்போது வெளியில் ஆயுதச் சத்தம் கேட்டது. யார் அது? என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். இன்றிரவு உங்களுக்கு காவல் இருக்க வந்தேன் என்று ஸஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள். இதன் பின் குறட்டைச் சத்தம் கேட்கும் அளவிற்கு நபி (ஸல்) அவர்கள் நிம்மதியாகத் தூங்கினார்கள் என ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (இப்னு ஹிப்பான் 6986, புகாரி 7231, முஸ்லிம் 2410)

ஈராக் வெற்றி

இஸ்லாமிய கிலாபத்தின் ஸ்திரத்தன்மையைச் சீர் குலைக்க ரோமர்கள்; திரைமறைவில் சதித்திட்டம் தீட்டி செயல்பட்டு வந்தனர். இதனால் உமர் (ரலி) அவர்கள் முதன்னா (ரலி) அவர்களின் தலைமையில் படையொன்றைப் பாரசீகம் நோக்கி அனுப்பினார்கள். அப்படை பாரசீகப் பெரும் படையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இப்போரில் முதன்னாவுக்கு உதவிப்படை தேவை என்ற நிலை வந்தபோது உமர் (ரலி) அவர்கள் தானே களம் செல்லத் தயாரானார்கள். இதனை மூத்த ஸஹாபாக்கள் தடுத்தபோது தனக்குப் பகரமாக அப்படைக்குத் தளபதியாக ஸஅத் (ரலி) அவர்களையே கலீபா உமர் (ரலி) அவர்கள் நியமித்தார்கள்.

ஸஅத் (ரலி) அவர்களின் அந்தப் படையில் சுமார் 99 பத்ர் ஸஹாபாக்களும் பைஅதுர் ரிழ்வானில் கலந்து கொண்டோர் தொடங்கி நபியின் நெருக்கத்தைப் பெற்ற சுமார் 310 பேர்களும், மக்கா வெற்றியில் கலந்து கொண்ட சுமார் 300 பேர்களும் நபித்தோழர்களின் இளம் குமாரர்கள் 700 பேரும் இடம்பெற்றிருந்தனர்.

இந்தச் சிறப்புமிக்க படையை உமர் (﵁) அவர்கள் வழியனுப்பும் போது,

'ஸஅதே! நீ அல்லாஹ்வுக்கும் படைப்புகளுக்குமிடையில் அவனது கட்டளைக்கு வழிப்படுவதைத் தவிர வேறு குடும்ப உறவு எதுவும் கிடையாது. மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் பார்வையில் சமமானவர்களே! எனினும் இறையச்சத்தின் மூலமே அவனது உதவியைப் பெற முடியும். எனவே, நபி (ﷺ) அவர்கள் போர்க்களங்களில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை அவதானித்து அதனைக் கடைபிடிப்பீராக!' என உபதேசித்து அனுப்பினார்கள். ஸஅத் (﵁) அவர்கள் போர்க்களத்திலும் இஸ்லாமிய நெறியைக் கடைப்பிடித்து இஸ்லாமிய உலகிற்கு மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்தார்கள்.

காதிஸிய்யா வெற்றி

ஸஅத், காலித் இப்னு வலீத் போன்ற தளபதிகளின் நுணுக்கமான திட்டமிடல், போர் தந்திரம் போன்றவற்றின் மூலம் பாரசீகப் பெரும் படை சிதைக்கப்பட்டு ஈடு இணையற்ற வெற்றி இஸ்லாமிய உலகுக்குக் கிடைத்தது. காதிஸிய்யா, ஜலூலாப் போர்களில் ஸஅத் (﵁) அவர்கள் இஸ்லாமிய உலகுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தார்கள்.

மரணம்

ஸஅத் (﵁) அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்த நபித்தோழர்களில் ஒருவராவார். முஹாஜிர்களில் இவரே இறுதியாக மரணித்தவராவார். (இப்னு அஸாகிர்) இவரது மரண நேரம் குறித்து இவரது மகன் முஸ்ஹல் பின்வருமாறு கூறுகின்றார்கள் :

'என் தந்தையின் தலை என் மடியில் இருந்தது. நான் கவலை மேலீட்டால் அழுதேன். அப்போது அவர் தனது தலையை உயர்த்தி, அன்பு மகனே! ஏன் அழுகிறாய்? எனக் கேட்டார். தந்தையே! உங்கள் நிலை கண்டுதான் கலங்குகின்றேன் என்று நான் கூறினேன். அதற்கவர், அழாதே மகனே! அழாதே! அல்லாஹ் நிச்சயமாக என்னை வேதனை செய்யமாட்டான். ஏனென்றால், நான் சுவனவாசிகளில் ஒருவனாவேன்' என்று நபி (ﷺ) அவர்கள் கூறியுள்ளதை நினைவுகூர்ந்து ஆறுதல் படுத்தினார்கள். (தபகாத் இப்னு ஸஃத் 3/147)

நபி (ﷺ) அவர்களால் ஒரே நேரத்தில் சுவனவாதிகள் என நற்செய்தி கூறப்பட்ட பத்து நபித்தோழர்களில் இவரும் ஒருவர்.

அதனையே ஸஅத் (رضي الله عنه) அவர்கள் மேற்படி நிகழ்வில் குறிப்பிட்டார்கள். நபி (ﷺ) அவர்களின் ஸகராத்தின் போது கலங்கிய தனது மகள் பாத்திமா (رضي الله عنها) அவர்களையும் நபி (ﷺ) அவர்கள் இப்படித்தான் ஆறுதல்படுத்தினார்கள்.

இவர் தனது மரணம் நெருங்கிய நேரத்தில் ஒரு கம்பளி ஆடையை எடுத்துக் காட்டி நான் மரணித்ததும் இந்த ஆடையால் என்னைக் கபனிடுங்கள். ஏனெனில், இதை அணிந்த நிலையில் தான் நான் பத்ரில் முஷ்ரிக்குகளைச் சந்தித்தேன். இந்த நாளை எதிர்பார்த்துத்தான் இத்தனை ஆண்டுகளாக இதைப் பாதுகாத்து வந்தேன் என்று கூறினார்கள்.

தயாளம், வீரம், துணிவு, தியாகம் போன்ற அருங்குணங்கள் குடிகொண்ட ஸஅத் (رضي الله عنه) அவர்கள் தனது 82ம் வயதில் வபாத்தானார்கள். (தஹ்தீபுத் தஹ்தீப் 2333, தஹ்தீபுல் கமால் 2211)

அல்லாஹ் ஸஅத் (رضي الله عنه) அவர்களைப் பொருந்திக் கொள்வதுடன் அவரது அழகிய வழிமுறைகளைப் பின்பற்றும் நல்லடியார்கள் கூட்டத்தில் நம்மனைவரையும் சேர்த்தருள்வானாக!



ஹம்ஸா (ﷺ) அவர்களைக் கொன்ற வஹ்ஷீ (ﷺ)

உஹதுப் போர்க்களத்தில் வேங்கையாக எதிரிகளை வேட்டையாடிக் கொண்டிருந்த ஹம்ஸா (ﷺ) அவர்களின் அடிவயிற்றை வேகமாக வந்த அம்பொன்று ஊடுருவிச் சென்றது. அந்த அம்பை வஹ்ஷி எனும் ஹபஷா நாட்டு அடிமைதான் எறிந்தார். அப்போது அவர் இறைமறுப்பாளராக இருந்தார். பிற்காலத்தில் இஸ்லாத்தில் இணைந்த இவர், முஸ்லிம் உலகில் தலைசிறந்த ஒருவரைக் கொன்றதற்காக இஸ்லாத்தின் மிகப் பெரும் எதிரி ஒருவனைப் போர்க்களத்தில் கொல்ல வேண்டும் என்று தீர்மானம் செய்தார்கள். இதன் அடிப்படையில் நபியெனத் தன்னை வாதிட்ட முஸைலமா எனும் பொய்யனைக் கொள்ளும் வாய்ப்பை இவர் போர்க்களம் ஒன்றில் பெற்றார். இதோ அவரது வரலாற்றை அவரே கூறுகின்றார்.

நான் குறைஷிகளின் தலைவர்களுள் ஒருவரான ஜுபைர் இப்னு முத்இம் என்பவரின் அடிமையாக இருந்தேன். அவரது சிற்றப்பா துஅய்மா, பத்ருப் போரில் ஹம்ஸா (ﷺ) அவர்களால் கொல்லப்பட்டிருந்தார். இதனால் என் எஜமானர் மிகுந்த துயரத்திலிருந்தார். எனவே, எப்படியாவது ஹம்ஸாவைப் பழிதீர்ப்பதென்று வெறியோடிருந்தார். இதற்காக லாத், உஸ்ஸா எனும் தெய்வங்கள் மீது (ஹம்ஸாவைக் கொல்வதென்று) சத்தியம் செய்துமிருந்தார். இதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

இதேபோன்று பத்ர் களத்தில் உறவுகளைப் பலிகொடுத்த பலரும் பழிவாங்கும் வெறியிலிருந்தனர். அவர்கள் அனைவரும் பழிதீர்ப்பதற்காகவும் முஹம்மத் அவர்களைத் தீர்த்துக் கட்டுவதற்காகவும் உஹதுக் களம் நோக்கிச் செல்லத் திட்டமிட்டிருந்தனர். திட்டப்பிரகாரம் படை திரட்டப்பட்டு அதற்கு அபூசுப்யான் இப்னு ஹர்ப் தலைவராக்கப்பட்டார். (இவர் பின்னர் இஸ்லாத்தில் இணைந்துவிட்டார்)

அபூசுப்யான் பத்ர் களத்தில் உறவுகளைப் பலிகொடுத்தவர்களிலுள்ள முக்கியமானவர்களை ஒன்று திரட்டி அவர்களிடையே போர் வெறியைத் தூண்டி உஹத் படையைத் தயார் செய்திருந்தார். இந்தக் கட்டத்தில் அவரது மனைவி ஹின்தா பின்து உத்பாவும் இருந்தார். (இவரும் இறுதியில் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்.) இவருடைய தந்தை, சிற்றப்பா, சகோதரர் அனைவரும் பத்ர் யுத்தத்தில் கொல்லப்பட்டனர். அதற்கு ஹம்ஸா, அலீ ஆகியோரே காரணமாகவும் இருந்தனர்.

படை தயாரான போது என் எஜமானர் என்னைப் பார்த்து,

“அபூ தஸ்தமாவே! (இது என் புனைப்பெயர்) உனக்கு சுதந்திரமடைய விருப்பமா?” எனக் கேட்டார்.

இதுகேட்ட நான், “யார் என்னை விடுவிப்பார்கள்?” என்று வினவினேன். அதற்கு, “நான் பொறுப்பு” என அவர் கூறிவிட்டு,

“என் சிற்றப்பாவை ஹம்ஸா கொலை செய்தார்; நீ அவரைக் கொலை செய்தால் நான் உன்னை விடுவிப்பேன்” என்று கூறினார்.

“இந்த ஒப்பந்தத்திற்கு யாரைச் சாட்சியாக்குவது?” என நான் கேட்டேன். ‘யாரை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்’ என்று அவர் கூறினார். ‘நான் எல்லா மக்களும் சாட்சியாக இருக்க வேண்டும்’ என்று தெரிவித்தேன். அவரும் அதற்கு உடன்பட்டார். நான் அம்பு எய்வதில் கைதேர்ந்தவனாக இருந்தேன். நான் எறிந்தது குறிதவறிய சரித்திரமே இல்லை.

நான் எதிர்பார்த்தபடி உஹது போர்க்களம் சென்றேன். அங்கு நான் அம்பை எடுத்துக் கொண்டு படையின் பிற்பகுதியில் பெண்களுக்கு நெருக்கமாகச் சென்று கொண்டிருந்தேன். எனக்குப் போரில் நாட்டமிருக்கவில்லை. என் உள்ளத்தில் இருந்ததெல்லாம் சுதந்திரத் தாகம் மட்டும் தான்.

அபூசுப்யானின் மனைவி என்னைக் கடந்து சென்றபோது, சூரியனின் ஒளி பட்டு என் அம்பு இலங்கியதைப் பார்த்த அவர், ‘அபூ தஸ்தமாவே! கோபத்தில் எம் உள்ளங்கள் கொதித்துக் கொண்டிருக்கின்றன; வேதனையில் வெந்து கொண்டிருக்கின்றன; இந்தப் போரில் ஹம்ஸாவைக் கொல்வதன் மூலம் குமுறிக் கொண்டிருக்கும் எமது உள்ளங்களைக் குளிரச் செய்வாயாக!’ என்று கூறினாள்.

போர் மூண்டபோது நான் ஹம்ஸாவைத் தேடித் திரிந்தேன். மக்காவில் வைத்தே நான் அவரைக் கண்டுள்ளேன். அடுத்து களத்தில் ஹம்ஸாவைத் தேடுவது ஒன்றும் சிரமமாக இருக்கவில்லை. களத்தின் முன்னனியில் அவர் போராடிக் கொண்டிருந்தார். அவரது தனித்துவமான ஆடையும் அவரை வேறுபடுத்திக் காட்டியது. வெறிகொண்ட வேங்கையாக ஹம்ஸா போராடிக் கொண்டிருந்தார். அவரின் வாள் சுழற்சியின் வேகத்தின் முன்னால் எதிரிகள் புழுதியாகப் பறந்தனர். நான் மறைந்து மறைந்து ஹம்ஸாவை நெருங்கிக் கொண்டிருந்தேன்.

அப்போது குறைஷிகளின் மாவீரர் ஸபாஃ இப்னு அப்துல் உஸ்ஸா என்பவன், 'ஹம்ஸாவே! வா என்னுடன் மோதிப்பார்' என்று கூறிக்கொண்டு அவரை நெருங்கி வந்தான். ஹம்ஸாவோ, 'வாடா இணைவைப்பவனின் மகனே, வா! மோதிப்பார்க்கலாம் எனக் கூறிக்கொண்டே வேகமாகத் தாக்கினார். இதனால் ஸபாஃ இரத்த வெள்ளத்தில் மூழ்கினான். ஹம்ஸா வெற்றிக் களிப்பில் மூழ்கினார்.

இதுதான் சரியான சந்தர்ப்பம் எனக் கருதிய நான் எனது அம்பை ஹம்ஸாவை நோக்கி எறிந்தேன். அது அவரது அடிவயிற்றில் பட்டு இரு கால்களுக்கிடையாக வெளியேறியது. அம்பு வந்த திசையைப் பார்த்த ஹம்ஸா (ﷺ) அவர்கள் என்னை நோக்கி, இரண்டு எட்டு எடுத்துவைத்தார். அதன்பின் அப்படியே சரிந்தார். அம்பு அவர் உடலிலேயே இருந்தது. அவர் மரணமாவது உறுதியாகும் வரை இருந்து விட்டு அம்பை இழுத்து எடுத்துக் கொண்டு கூடாரத்துக்குச் சென்று அமர்ந்துவிட்டேன். எனக்குப் போர் செய்ய வேண்டும் என்ற தேவையிருக்கவில்லை. சுதந்திரமடைவதற்காகவே ஹம்ஸாவைக் கொன்றேன்.

போர் உக்கிரமடைந்தது. இரு தரப்பிலும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் குறைஷிகள் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் உடல்களைச் சிதைத்துத் தமது வெறியைத் தணித்துக் கொண்டனர். இவ்வாறே ஹம்ஸாவின் உடலும் சிதைக்கப்பட்டது. நான் ஹம்ஸாவைக் கொன்றதற்கு சன்மானமாக ஹிந்தா தனது மாலையையும் தங்கக் காப்புகளையும் எனக்குத் தந்தார். போர் முடிந்து மக்கள் சென்றபோது என் எஜமானர் கூறியபடியே என்னை உரிமை விட்டார். நான் சுதந்திரப் பறவையாக மாறினேன்.

போர் முடிந்துவிட்டது. எனினும், இஸ்லாம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து கொண்டே வந்தது. இஸ்லாம் மேலோங்க மேலோங்க எனக்கு உள்ளத்தில் அச்சமும் கவலையும் தொற்றிக் கொண்டது. இஸ்லாத்தின் வளர்ச்சி மக்கா வெற்றி வரை தொடர்ந்தது. நபி (ﷺ) அவர்களால் நான் கொல்லப்படுவேன் என அஞ்சி தாயிபுக்கு ஓடினேன். தாயிப் மக்களும், தாம் இஸ்லாத்தில் இணைவதாகக் கூறி நபி (ﷺ) அவர்களிடம் தூது அனுப்பினர்.

அப்போது யமனுக்கு அல்லது சிரியாவுக்கு செல்ல எண்ணியிருந்தேன். அச்சந்தர்ப்பத்தில்தான் என்னிடம் ஒருவர்,

'முஹம்மத் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் எவரையும் பழிவாங்குபவர் அல்லர்' என்று கூறினார். உடனே நான் மதீனாவை

நோக்கிச் சென்றேன். நபி (ﷺ) அவர்கள் மஸ்ஜிதுன் நபவியில் இருக்கும் போது உள்ளே நுழைந்து கலிமாவை மொழிந்தேன்.

சத்தம் கேட்டு என்னை நோக்கிய நபி (ﷺ) அவர்கள் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டு நீதான் ஹம்ஸாவைக் கொன்ற வஹ்ஷியா? எனக் கேட்டார்கள். நான் ‘ஆம்’ என்று மறுமொழி பகன்றேன். அமரும்படி கூறினார்கள்; அமர்ந்தேன். ஹம்ஸாவை எப்படிக் கொன்றீர் எனக் கேட்டபோது நடந்தவற்றைக் கூறினேன். அப்போது நபி (ﷺ) அவர்கள் வேதனை தாங்காது கண் கலங்கியவாறு, ‘வஹ்ஷியே! தயவு செய்து என் முன்னால் நிற்காதீர்! இதற்குப் பின்னர் உம்மை நான் இங்கே கானக்கூடாது’ என்று கூறினார்கள்.

இதன் பின்னர் நான் நபி (ﷺ) அவர்களின் பார்வையை விட்டு ஒதுங்கியிருந்தேன். சபைகளில், முன்னிலையில் இருக்காமலும் பிற்பகுதிகளில் மறைந்தே இருந்து வந்தேன். நபியவர்களின் மரணம் வரை இப்படியே இருந்தேன்.

இஸ்லாத்தை ஏற்பதன் மூலம் கடந்த காலத் தவறுகள் மன்னிக்கப்படும் என்பதை நான் அறிந்தாலும், நான் செய்த செயலால் இஸ்லாமிய மார்க்கத்திற்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட இழப்பை எண்ணி வருந்தினேன். கடந்த காலத்தில் நான் செய்த இந்தத் தவறுக்குப் பிராயச்சித்திமாக ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணிச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன்.

சந்தர்ப்பம் வந்தது

அபூபக்கர் (رضي الله عنه) அவர்களது ஆட்சிக் காலத்தில் முஸைலமா தன்னை நபியென வாதிட்டான். பனூ ஹனீப் கோத்திரத்தார் அவனை ஏற்று மதம் மாறினார்கள். கலீபா அபூபக்கர் (رضي الله عنه) அவர்கள் மதம் மாறியவர்களுக்கு எதிராகப் படைதிரட்டினார்கள்.

அப்போது நானே எனக்குள், ‘வஹ்ஷியே! இதுதான் சரியான தருணம், இதனைக் கை நழுவ விட்டுவிடாதே’ என்று உள்ளத்திற்குள் கூறிக்கொண்டேன். வீரர் ஹம்ஸாவைக் கொன்ற அம்பை எடுத்து முஸைலமாவைக் கொல்வது அல்லது இந்தப் போரில் ஷஹீதாகுவது என்ற உறுதியுடன் களம் நோக்கிப் படையுடன் சென்றேன்.

போர் மூண்டது. களம் எங்கும் மரண ஓலம். நான் முஸைலமாவைக் குறிவைத்துத் தேடிக் கொண்டிருந்தேன். அவன் என் கண்ணுக்குள் சிக்கிக் கொண்டான். கையில் வாளுடன் இருக்க, நான் அவனைக் கண்டேன். நான் அவனைக் கொல்ல எதிர்பார்த்திருந்தது

போன்றே உம்மு அம்மாரா (رضي الله عنه) அவர்களின் மகனும் அன்ஸாரிகளுள் ஒருவரும் முஸைலமாவைக் கொல்ல எதிர்பார்த்திருந்தனர்.

சந்தர்ப்பம் சரியாக வாய்த்தபோது நான் அம்பை எறிந்தேன். அதே பொழுதில் அந்த அன்ஸாரித் தோழர் தனது வாளால் அவனை வெட்டினார். எனது அம்பால் அவன் இறந்தானா? அன்ஸாரியின் வெட்டால் இறந்தானா என்பதை அல்லாஹ்தான் அறிவான். என் கையால் அவன் இறந்திருந்தால் நபிக்குப் பின்னர் சிறந்த ஒருவரை கொன்ற நான் மனிதர்களிலேயே மோசமானவனையும் கொன்றேன் என்று திருப்திகொள்வேன்.

அல்லாஹுதஆலா வஹ்ஷி (رضي الله عنه) அவர்களைப் பொருந்திக் கொள்வானாக! எமது சகோதரர்களுள் பலரும் ஷிர்க், பித்அத்துக்களை வளர்த்தவர்களாகவும் அவற்றைப் போதித்தவர்களாகவும் இருக்கலாம். இவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் கடந்த காலத்தில் தாம் செய்த செயல்களுக்குப் பிராயச்சித்தமாக சத்தியப் பிரச்சாரத்துக்கு துணைபுரியலாம்.

பித்அத்தான, அனாச்சாரமான வழிகளில் செலவழித்தவர்கள் நல்வழிகளில் தற்போது அதனைச் செலவிடலாம். வீண்விரயங்களிலும் ஆடம்பரத்திலும் செலவு செய்தவர்கள் அந்தத் தவறுகளை விட்டு விலகியிருக்கலாம். அந்தத் தவறுகளுக்காகச் செலவிட்ட தொகைகளை நல்வழிகளில் செலவிடலாம். இத்தகைய நல்லதொரு முன்மாதிரியை வஹ்ஷியிடமிருந்து நாம் கற்றுக் கொள்வோமாக!



உண்மையால் உயர்வுபெற்ற கஅப் இப்னு மாலிக் (ரலி)

மதீனத்து ஸஹாபாக்களில் கஸ்ரஜ் கிளையைச் சேர்ந்த ஒரு கவிஞர் தான் கஅப் இப்னு மாலிக் (ரலி) அவர்கள்.

'நான் மன்னித்துவிட்டேன்' என்று அல்லாஹ் அல்குர்ஆனில் கூறிய மூவருள் இவரும் ஒருவராவார். மதீனாவாசிகள் நபி (ஸல்) அவர்களை மக்காவின் அகபா பள்ளத்தாக்கில் வைத்து மதீனாவுக்கு அழைத்த நிகழ்ச்சியில் பங்குகொண்டவர். சுமார் 30 ஹதீஸ்களை அறிவிப்புச் செய்துள்ளார். இத்தகைய சிறப்புக்களைப் பெற்ற இவரது ஈமானிய வாழ்வில் மிகப்பெரும் சோதனைப் புயல் ஒன்று வீசியது. அல்லாஹ்வின் தீர்ப்பை எதிர்பார்த்து நபி (ஸல்) அவர்களும் அவர்களின் நன்னெறித் தோழர்களும் கஅப் இப்னு மாலிக்குடன் 50 நாட்கள் தங்களது எல்லாத் தொடர்புகளையும் நிறுத்தியிருந்தனர். அப்போது உலகமே அவருக்கு இருண்டதாக மாறிவிட்டது. இத்தகைய சோதனையிலும் வாய்மையைப் பேணி வல்லோன் இறைவனின் அருளைப் பெற்ற இம்மாமனிதரின் வாழ்வில் படிப்பினை பெறுவதற்காக அவரது சரித்திரக் குறிப்புகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

போர்க்களத்தில்

இவர் தபூக், பத்ர் யுத்தம் தவிர நபி (ஸல்) அவர்கள் கலந்து கொண்ட எல்லா யுத்தங்களிலும் பங்கு கொண்ட மாவீரராவார். உஹத் யுத்தத்தில் நபி (ஸல்) அவர்கள் மரணித்துவிட்டார்கள் என்று வதந்தி பரவிய போது நபி (ரலி) அவர்களைக் கண்டு நபியவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்ற நற்செய்தியை உரத்துக்கூறிய முதல் நபர் இவராவார். இந்தப் போரில் 17 வெட்டுக் காயங்களுக்கு இவர் உள்ளானார். (இப்னு ஹிஷாம் 2/43)

நுஸ்ரத்தில் முன்னுதாரனம்

மக்காவிலிருந்து வந்த முஸ்லிம்களுக்கு மதீனத்துத் தோழர்கள் உதவி புரிந்தனர். அனைத்தையும் இழந்து வந்த மக்கத்து ஸஹாபாக்களுக்கும் மதீனத்து தோழர்களுக்குமிடையில் நபி (ஸல்) அவர்கள் சகோதரத்துவ உறவுகளை ஏற்படுத்தினார்கள். இந்த வகையில் கஅப் (ரலி) அவர்களுடன் சுபைர் (ரலி) அவர்களை நபியவர்கள் சகோதரர்களாக இணைத்துவிட்டார்கள். இந்த

சகோதரத்துவ பிணைப்பு முற்றி, கஅப் மரணித்தால் அவரது சொத்து மக்காவாசியான சுபைர் (ரலி) அவர்களுக்குச் சேர்ந்துவிடும் என்ற நிலைக்குச் சென்றுவிட்டது. உஹத் யுத்தத்தில் இவருக்கு ஏற்பட்ட படுகாயங்களால் இவர் மரணித்து விடுவார் என்று அஞ்சப்பட்டது. இந்த நிலையில் கஅப் (ரலி) அவர்களின் சொத்து சுபைர் (ரலி) அவர்களுக்குச் செல்வது இஸ்லாமிய வாரிசுரிமை முறைக்கு முரணானதாகும். இது குறித்துப் பின்வரும் வசனம் அருளப்பட்டது.

“இதன் பின்னரும், எவர்கள் ஈமான் கொண்டு, தம் ஊரைத் துறந்து, உங்களுடன் சேர்ந்து (மார்க்கத்திற்காகப்) போர் புரிகின்றார்களோ, அவர்களும் உங்களைச் சேர்ந்தவர்களே. இன்னும் அல்லாஹ்வின் வேத விதிப்படி உங்கள் உறவினர்களே; ஒருவர் மற்றொருவருக்கு மிக நெருக்கமுடையவர்களும் ஆவார்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் - 8:75)

இந்நிகழ்ச்சி நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய சகோதரத்துவ பிணைப்புக்கு கஅப் (ரலி) அவர்கள் வழங்கிய அந்தஸ்தையும் மதிப்பையும் எடுத்துக் காட்டுகின்றது.

தபூக் போரும் வேதனையும்

தபூக் போரில் இவர் கலந்து கொள்ளாத, அதனால் ஏற்பட்ட சோதனை, பின்னர் அல்லாஹ் வழங்கிய மன்னிப்பு என்பன பற்றியெல்லாம் கஅப் (ரலி) அவர்கள் விரிவாகப் பேசியுள்ளார்கள். இதோ அவர் கூறுகிறார்; படித்துப் பாருங்கள்.

தபூக் போரைத் தவிர நபி (ஸல்) அவர்கள் கலந்துகொண்ட அனைத்து யுத்தங்களிலும் நான் பங்குகொண்டுள்ளேன். எனினும் ‘பத்ர்’ போரில் நான் பங்குபெறவில்லை. அதில் பங்குபெறாத எவரும் கண்டிக்கப்படவுமில்லை. ஏனெனில், அது முன்னேற்பாடு இன்றி நடந்த போராகும். குறைஷிகளின் வியாபாரக் கூட்டத்தைக் குறிவைத்தே நபி (ஸல்) அவர்கள் சென்றார்கள். யுத்தம் எதிர்பாராமல் மூண்டதாகும்.

மக்காவில் வைத்து அகபாவில் நடந்த உறுதிமொழியில் நான் பங்கு கொண்டேன். மக்கள் மத்தியில் அகபா உடன்படிக்கையைவிட பத்ர் யுத்தம் பிரபலமாகப் பேசப்படும் ஒன்றாக இருப்பினும் அகபாவுக்கப் பதிலாக பத்ரில் கலந்து கொண்டிருக்கலாமே என்று நான் எப்போதும் எண்ணியது கிடையாது.

தபூக் போரின் போது நான் வசதி வாய்ப்பும், சக்தியும் பெற்றிருந்தது போல் வேறு எப்போதும் நான் பெற்றிருந்ததில்லை. அப்போது என்னிடம் இரண்டு வாகனங்கள் இருந்தன. வழமையாகப் போருக்குத் தயாராகும் போது அதுகுறித்து அதிகமான விளக்கங்களை நபி (ﷺ) அவர்கள் வெளியிடுவதில்லை. எனினும் ரோமர்களுடன் போர் புரிய இருப்பதால், அவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும் முஸ்லிம்கள் தம்மை நன்கு தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் போர் குறித்த முழு விபரங்களையும் கூறியிருந்தார்கள். (அதாவது வாய்ப்பு இருந்தது, நபியவர்கள் கூறியும் இருந்தார்கள். அப்படியிருந்தும் நான் தவற விட்டுவிட்டேன்.)

அப்போது போரில் பங்குபற்றுவோர் குறித்த பதிவேடு இல்லாததால் யாரும் கலந்துகொள்ளாவிட்டால் அல்லாஹ் அறிவித்தாலேயன்றி அதுபற்றித் தெரியவராது என்று போரில் கலந்துகொள்ளாதோர் எண்ணிக்கொள்வர்.

தபூக் போருக்கு நபி (ﷺ) அவர்களும் தோழர்களும் தயாரான போது கடும் கோடை காலமாகவும் பேரீத்தம் பழ அறுவடைக் காலமாகவும் இருந்தது. எனவே, வெயிலில் பயணிப்பதை விட பேரீத்த மர நிழல் இனிமையளிப்பதாக இருந்தது.

நபி (ﷺ) அவர்களும் தோழர்களும் போருக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். நானும் போருக்குத் தயாராக விரும்பினேன். அதற்கான ஏற்பாடுகள் செய்ய வெளியில் செல்வேன், பின்னர் எந்த ஏற்பாடும் செய்யாமல் திரும்பி விடுவேன். நான் விரும்பியிருந்தால் போருக்குத் தயாராகியிருக்கலாம். இவ்வாறு நான் ஏற்பாடு செய்யாமல் தாமதித்துக் கொண்டிருந்தபோது படை புறப்பட்டுவிட்டது. என்னிடம் விரைவாக செல்லும் ஒட்டகம் ஒன்றும் இருந்தது. அதன்மூலம் விரைவாகச் சென்று அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம் என்று நான் எண்ணினேன். ஆனால், அப்படியும் நான் செய்யவில்லை. நபியவர்கள் சென்ற பின்னர் நயவஞ்சகர்கள் என குறைசொல்லப்பட்டவர்கள், பலவீனர்களைத் தவிர என் போன்ற எவரையும் மதீனாவில் நான் காணவில்லை. இதனால் நான் பெரிதும் கவலையடைந்தேன்.

தபூக்கைச் சென்றடையும் வரை நபியவர்கள் என்னை நினைவுகூரவில்லை. தபூக்கில் தோழர்களுடன் அமர்ந்திருக்கையில் ‘கஅப் இப்னு மாலிக் என்ன செய்கிறார்’ என்று கேட்டுள்ளார்கள். அதற்கு பனூஸலமா கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் ‘அவரது செல்வச் செருக்கு அவரைப் போருக்கு வரவிடாமல் தடுத்துவிட்டது’ என்று தெரிவித்துள்ளார்.

அப்போது முஆத் இப்னு ஜபல் (ﷺ) அவர்கள் இதை மறுத்து, 'இது தவறு, அவர் விஷயத்தில் நன்மையைத் தவிர வேறு எதனையும் நாம் அறியமாட்டோம் அல்லாஹ்வின் தூதரே!' என்று கூறியதைக் கேட்ட நபியவர்கள் அமைதியாக இருந்து விட்டார்கள்.

போர் முடிந்தபின்

நபி (ﷺ) அவர்கள் போர் முடிந்து திரும்பிவிட்டார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தபோது என் கவலை மேலும் அதிகரித்தது. பொய்க் காரணங்களை நினைவுகூரவும், நபியவர்களின் கோபத்தை விட்டு எப்படித் தப்புவேன் என எனக்குள் கூறிக்கொண்டு, என் குடும்பத்தைச் சேர்ந்த புத்திக்கூர்மையுள்ளவர்களிடம் உதவி தேட ஆரம்பித்தேன்.

நபியவர்கள் மதீனாவை நெருங்கிவிட்டார்கள் என்ற செய்தி எனக்குக் கூறப்பட்டதும் அசாத்தியமான யோசனைகள் என்னைவிட்டும் நீங்கிவிட்டன. (இந்த யோசனைகள்) எதுவும் என்னைக் காக்காது என்று உறுதியாக நம்பியதுடன் உண்மையைத் தவிர வேறு எதையும் கூறுவதில்லை என்றும் முடிவெடுத்தேன். நபி (ﷺ) அவர்கள் மதீனா வந்து சேர்ந்தார்கள். அவர்கள் பயணத்திலிருந்து திரும்பினால் மஸ்ஜிதுக்கு வந்து இரண்டு ரக்அத்துகள் தொழுது விட்டு மக்களுடன் உரையாடுவார்கள். அவ்வாறே தபூகில் இருந்து திரும்பிய நபி (ﷺ) அவர்களிடம் போருக்குச் செல்லாதோர் வந்து தாம் போருக்கு வராததற்கான காரணங்களைச் சத்தியம் செய்து கூறினர். நபி (ﷺ) அவர்கள் அவர்களது வெளிப்படையான கூற்றை நம்பி, அவர்களுக்காகப் பாவமன்னிப்பும் கோரினார்கள். அவர்களது ரகசியத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்தார்கள். இத்தகையவர்களுள் சுமார் 80 பேர் இருந்தனர்.

எனது நேரம் வந்தபோது நான் ஸலாம் கூறினேன். நபியவர்கள் கோபத்துடன் சிரித்து விட்டு, 'இங்கே வா' என்று கூறினார்கள். நான் அவர்களின் முன் அமர்ந்தேன்.

நபி (ﷺ) அவர்கள் : ஏன் போருக்கு வரவில்லை? வாகன வசதி உம்மிடம் இல்லையா?

நான், 'அல்லாஹ்வின் தூதரே! வேறொருவர் என்றால் நான் ஏதாவது காரணத்தைக் கூறித் தப்பித்துக்கொள்வேன். நான் தங்களிடம் பொய் கூறினால் நீங்கள் என்னைப் பொருந்திக் கொள்வீர்கள். ஆனால், அல்லாஹ் என்மீது கோபம் கொள்வான். எனினும் நான் அப்படிச் செய்யாமல் இது விஷயத்தில் அல்லாஹ்வின்

முடிவை ஆதரவு வைக்கின்றேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! எனக்கு எந்தத் தடங்களும் இருக்கவில்லை. நான் இப்போது பெற்றிருப்பது போல் வேறு எப்போதும் சக்தியும் வாகன வசதியும் பெற்றிருக்கவுமில்லை.'

இவ்வாறு நான் கூறியதும், நபி (ﷺ) அவர்கள் சபையைப் பார்த்து, 'இவர் உண்மை கூறிவிட்டார்' என்று கூறிவிட்டு, என்னை நோக்கி, 'எழுவீராக! உமது விஷயத்தில் அல்லாஹ் தீர்ப்புக் கூறுவான்' என்று கூறினார்கள். (நான் வேதனையுடன் சபையை விட்டு வெளியே வந்தபோது) பனூஸலமா கோத்திரத்தைச் சேர்ந்த சிலர் என்னைப் பின்தொடர்ந்து வந்து, 'இதற்கு முன் நீர் எந்தப் பாவத்தையும் செய்ததாக நாம் அறியவில்லை; மற்றவர்கள் போல் ஏதாவது காரணத்தைக் கூறி நீரும் தப்பியிருக்கலாம். நபி (ﷺ) அவர்கள் உமக்காகப் பிழைபொறுக்கத் தேடியிருப்பார்கள். அதுவே உமது பாவத்தைப் போக்க போதுமானதாக இருந்திருக்குமே' என்று கூறினார்கள்.

அவர்களது பேச்சைக் கேட்ட நான், நபி (ﷺ) அவர்களிடம் திரும்பச் சென்று சங்கடம் இருந்ததால்தான் போருக்கு வர முடியாமல் போனது என்று கூறலாமா என்று யோசித்தேன்.

பின்னர் 'இதே பிரச்சினையைச் சந்தித்த என்னைப்போல வேறு எவராவது உள்ளனரா' என்று கேட்டேன். அதற்கவர்கள், 'ஆம் இருவர் உள்ளனர். உங்களுக்கு சொல்லப்பட்டது போன்றே அவர்களுக்கும் சொல்லப்பட்டது' என்று தெரிவித்தனர். 'அவர்கள் யார்' எனக் கேட்டதற்கு, 'முராரா இப்னு ரபீஃ, ஹிலால் இப்னு உமைய்யா (رضي الله عنه) ஆகியோர்' என்று பதில் கிடைத்தது. அவ்விருவரும் நல்ல மனிதர்கள்; பத்ர் ஸஹாபாக்கள் ஆவர். அவர்கள் இது விஷயத்தில் எனக்கு முன்மாதிரியாக உள்ளனர் என்பதால் என் முடிவில் உறுதியாக இருந்தேன்.

எங்கள் மூவருடனும் தோழர்கள் பேசுவதை நபி (ﷺ) அவர்கள் தடைசெய்தார்கள். அதனால் மக்கள் எம்முடன் பேசுவதை நிறுத்திக் கொண்டனர். அதனால் உலகே எனக்கு வெறுப்பாக மாறிவிட்டது. பூமியே நான் அறியாத வேறொரு பூகோளமாக மாறிவிட்டது. மற்ற இருவரும் மனம் சோர்ந்து அழுதவர்களாக தமது வீட்டிலேயே அமர்ந்துவிட்டனர்.

நான் வாலிபனாகவும் பலமுள்ளவனாகவும் இருந்ததால் வெளியில் சென்று முஸ்லிம்களுடன் தொழுகையில்

கலந்துகொள்வேன்; கடை வீதிகளில் சுற்றி வருவேன்; ஆனாலும், என்னிடம் யாரும் பேசமாட்டார்கள்.

நான் நபியவர்களிடம் வருவேன். அவர்கள் தொழுதவிட்டு அமர்ந்திருக்கும் போது அவர்களுக்கு ஸலாம் கூறுவேன். (அதற்குப் பதிலளிக்க) அவர்களது உதடுகள் அசைந்ததா இல்லையா? என்பதை நான் அறியமாட்டேன். பின்னர் அவர்களுக்கு அருகிலேயே தொழுவேன். நான் தொழும்போது அவர்கள் என்னைப் பார்ப்பார்கள்; நான் அவர்களைப் பார்த்தால் என்னைப் பார்க்காமல் வேறுபக்கம் பார்ப்பார்கள். இவ்வாறே முஸ்லிம்களின் புறக்கணிப்புத் தொடர்ந்தது.

இந்நிலையில் ஒருநாள் அபூகதாதாவின் தோப்புக்குச் சென்றேன். அவர் என் சிற்றப்பாவின் மகனாவார். மனிதர்களில் எனக்கு மிக விருப்பமானவர் அவர். நான் அவருக்கு ஸலாம் கூறினேன். சத்தியமாக அவர் எனக்குப் பதில் கூறவில்லை. எனவே, அபூகதாதாவே! அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கேட்கிறேன். நான் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நேசிப்பவன் என்பது உமக்குத் தெரியாதா?' என்று கேட்டேன். அவர் பதில் கூறவில்லை. நான் திரும்பத் திரும்ப கேட்டபோது, 'அல்லாஹ்வும் அவனது தூதரும்தான் அதை அறிவார்கள்' என்று பதிலளித்தார். இந்தப் பதிலைக் கேட்டதும் என் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. (வேதனையால் வெதும்பியவனாக) தோட்டத்தை விட்டு வெளியேறினேன்.

பின்னர் (ஒரு நாள்) மதீனாவின் கடைவீதியில் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது சிரியாவிலிருந்து தானியங்களை விற்க வந்த ஒரு விவசாயி, 'கஅப் இப்னு மாலிக் என்பவர் யார்? என்று கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது மக்கள் என்னைச் சுட்டிக்காட்டினர். அப்போது அந்த சிரியாவாசி என்னிடம் வந்து, கஸ்ஸான் மன்னர் எழுதிய கடிதம் ஒன்றை என்னிடம் கொடுத்தார். அதனை வாங்கி வாசித்தேன். அதில்,

'உம் தோழர் முஹம்மத் (ﷺ) உம்மை வெறுத்துவிட்டதாகச் செய்தி வந்தது. இழிவுமிக்க, கேவலமான பூமியில் வசிக்குமாறு அல்லாஹ் உம்மை ஆக்கவில்லை. நம்முடன் வந்து சேர்ந்து கொள்வீராக. நாம் உமக்கு ஒத்தாசையாக இருப்போம்' என எழுதப்பட்டிருந்தது. நான் இதைப் படித்துவிட்டு, 'இதுவும் ஒரு சோதனைதான்' என்று கூறிவிட்டுக் கடிதத்தை அடுப்பில் போட்டு எரித்துவிட்டேன்.

இவ்வாறு 50 நாட்களில் 40 நாட்கள் கழிந்துவிட்டன. அப்போது நபியவர்களின் தூதர் என்னிடம் வந்து, 'உம் மனைவியை விட்டு நீங்கி விடுமாறு நபியவர்கள் உமக்குக் கட்டளை யிட்டுள்ளார்கள்' என்று தெரிவித்தார். அப்பொழுது நான் 'மனைவியைத் தலாக் கூறி விட வேண்டுமா?' எனக் கேட்டேன். அதற்கவர், 'இல்லை; பிரிந்திரு; அவளை நெருங்க வேண்டாம்' என்று கூறினார். இவ்வாறே எனது மற்ற இரு தோழர்களிடமும் கூறப்பட்டது. நான் என் மனைவியை அழைத்து 'அல்லாஹ் ஒரு தீர்ப்பை வழங்கும் வரை நீ உன் குடும்பத்தாரிடம் சென்று அங்கேயே தங்கியிரு' என்று கூறிவிட்டேன்.

இதேவேளை ஹிலால் இப்னு உமையா (ரலி) அவர்களின் மனைவி நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'என் கணவர் பலவீனமானவர்; வயது முதிர்ந்தவர்; அவருக்குப் பணிவிடை செய்ய யாருமில்லை; அவருக்கு நான் பணிவிடை செய்வதை வெறுக்கிறீர்களா?' எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள், 'இல்லை; ஆனாலும் அவர் உன்னை நெருங்கக் கூடாது' என்று கூறினார்கள். அதற்கு அப்பெண்மணி, 'சத்தியமாக அவருக்கு எதிலும் நாட்டமில்லாது அன்று முதல் இன்று வரை அழுதவராகவே உள்ளார்' என்று கூறினார். (நபி (ஸல்) அவர்கள் அப்பெண்மணி அருகில் இருந்து அவருக்கு உதவ அனுமதி யளித்தார்கள்.)

என் குடும்பத்தில் சிலர், 'நீங்களும் மனைவி விஷயத்தில் அனுமதி கோரினால் என்ன?' என்று ஹிலால் (ரலி) அவர்களது மனைவிக்கு வழங்கப்பட்ட அனுமதியைக் கூறி விளக்கினர். அதற்கு, 'நான் வாலிபனாக இருக்கிறேன். நான் அனுமதி கேட்டால் நபி (ஸல்) அவர்கள் என்ன கூறுவார்களோ தெரியாது' என்று கூறி மறுத்துவிட்டேன். (மனைவியைப் பிரிந்து) பத்து நாட்கள் கழிந்தன. இத்துடன் எங்களுடன் பேசுவது தவிர்க்கப்பட்டு 50 நாட்கள் முழுமையாகிவிட்டன.

50 வது நாள், அதிகாலையில் பஜ்ருத் தொழுகையை என் வீட்டில் மேல் தளத்தில் தொழுதேன். விசாலமான பூமியும் என் உள்ளமும் எனக்கு நெருக்கடியாகிவிட்டதே என்ற ஏக்கத்துடன் அமர்ந்திருந்தேன். அப்பொழுது மதீனாவின் 'ஸிகவு' மலையில் ஏறி உரத்த குரலில் ஒருவர், (அபூபக்கர் (ரலி) அவர்கள்) "கஅப் இப்னு மாலிகே! நல்வாழ்த்துப் பெறுவீராக!" என்று அறிவித்தார். உடனே நான் சுஜூதில் விழுந்தேன்; மகிழ்ச்சியான செய்தி வந்துவிட்டது என்பதை அறிந்துகொண்டேன்.

நபி (ﷺ) அவர்கள் சுப்ஹுத் தொழுகைக்குப் பின்னர், எங்களை அல்லாஹ் மன்னித்தது குறித்த செய்தியை அறிவித்துள்ளார்கள். அந்த நற்செய்தியை மக்கள் எமக்குக் கூற ஆரம்பித்தார்கள். எனக்கு முன்னரே இரு தோழர்களிடமும் மக்கள் சென்றுவிட்டனர். என்னிடம் குதிரையில் சவாரி செய்தவராக ஒருவர் வேகமாக வந்தார். (அவர் ஜுபைர் இப்னு அவாம் (رضي الله عنه) ஆவார்.) பின்னர் எனக்கு முன்னால் அஸ்லம் கிளையைச் சேர்ந்த ஒருவர் வேகமாக வந்து மலையில் ஏறினார். அவரது சப்தம் குதிரையை விட வேகமாக இருந்தது. (அவரும் எனக்கு மன்னிப்புக் கிடைத்த செய்தியைக் கூறினார்) (அவர் ஹம்ஜா இப்னு அம்ரு அல்அஸ்லமீ) ஆவார்.) எனக்கு நல்வாழ்த்துச் சொல்ல அவர் என்னிடம் வந்தபொழுது அவருக்கு என் இரு ஆடைகளை அணிவித்து அவரது வாழ்த்துச் செய்திக்காக அவரைக் கௌரவித்தேன். வேறு இரு ஆடைகளை நான் அணிந்து கொண்டேன்.

பின்னர் நான் நபியவர்களைச் சந்திக்கப் புறப்பட்டேன். (வழியில்) மக்கள் என்னை அணி அணியாகச் சந்தித்து வாழ்த்துக் கூறிய வண்ணமிருந்தனர். நான் மஸ்ஜிதுன் நபவியில் நுழைந்தேன். அங்கு அண்ணல் நபி (ﷺ) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். என்னைக் கண்டதும் நபித்தோழர்களில் தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் (رضي الله عنه) ஓடி வந்து, என்னிடம் முஸாபஹா செய்து வாழ்த்துச் சொன்னார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! மக்கத்து நபித்தோழர்களில் அவரைத் தவிர வேறு எவரும் எழவில்லை. தல்ஹாவின் இந்தப் பாச உணர்வை நான் எப்பொழுதும் மறக்கவில்லை. பின்னர் நான் அண்ணல் நபி (ﷺ) அவர்களுக்கு ஸலாம் உரைத்தேன். அவர்களது திருமுகம் மகிழ்ச்சிப் பெருக்கால் இலங்கிக் கொண்டிருந்தது. அண்ணலார் கூறினார்கள் : 'உமது தாய் உம்மை ஈன்றெடுத்த நாள் முதல் சிறந்த நன்னாளைக் கொண்டு இன்று நல்வாழ்த்து பெறுவீராக!' (இந்தச் செய்தி) 'தங்களிடமிருந்தா அல்லாஹ்விடமிருந்தா?' என்று கேட்டேன். அதற்கு அண்ணலார், 'இது அல்லாஹ்வின் புறத்திலிருந்துதான்' என்று பதிலளித்தார்கள். அண்ணல் நபி (ﷺ) அவர்கள் (ஏதாவதொரு செய்தியால்) மகிழ்ச்சியடைந்தால் அவர்களது முகம் முழு நிலவின் ஒரு துண்டுபோல் பிரகாசிக்கும். அதனை நாங்கள் அறிந்துகொள்வோம். நான் நபி (ﷺ) அவர்களுக்கு முன் அமர்ந்து, 'இறைவனின் திருத்தூதர் அவர்களே! எனது தவ்பா ஏற்கப்பட்டதற்கு நன்றியாக எனது செல்வங்கள் அனைத்தையும் அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்துவிட்டு நான் அச்செல்வங்களிலிருந்து நீங்கிக்கொள்ள விரும்புகிறேன்' என்று கூறினேன். அதற்கு அண்ணலார் '(அவ்வாறு செய்யாதீர்) உம் செல்வங்களில் சிலதை உமக்காக வைத்துக்கொள்ளும்; அதுவே

உமக்குச் சிந்ததாக இருக்கும்' எனக் கூறினார். அதற்கு நான், 'கைபரில் உள்ள எனது தோட்டத்தின் பங்கை எனக்காக வைத்துக் கொள்கிறேன் (மீதியை ஸதகா செய்து விடுகிறேன்)' என்று கூறினேன்.

பின்னர் நான், 'இறைவனின் திருத்தூதர் அவர்களே! நிச்சயமாக எனது வாய்மையைக் கொண்டு அல்லாஹ் என்னைக் காப்பாற்றி விட்டான். எனது வாழ்நாளில் எஞ்சியுள்ள காலம் முழுவதும் உண்மையைத் தவிர வேறெதனையும் பேசமாட்டேன். இது எனது தவ்பாவில் அடங்கியதாகும்' என்று கூறினேன். அண்ணலாரிடம் இதனை நான் உறுதியளித்ததிலிருந்து உண்மையை உரைப்பதில் அல்லாஹ் எனக்கு அருள்புரிந்ததைவிட மிக அழகாக வேறொருவருக்கும் அருள் புரிந்திருப்பான் என்று நான் எண்ணவில்லை. (முழுக்க முழுக்க உண்மையே உரைக்க எனக்கு அருள்புரிந்தான்.) நான் நபியவர்களிடம் இதனை (உறுதியாகக்) கூறியதிலிருந்து இன்றுவரை நான் பொய்யை நாடவில்லை. மீதமுள்ள காலத்திலும் அல்லாஹ் என்னைப் பாதுகாப்பான் என ஆதரவு வைக்கிறேன். அல்லாஹுதஆலா,

"மேலும் விவகாரம் ஒத்திப் போடப்பட்டிருந்த மூவரையும் அவன் மன்னித்தான்.அவர்களது நிலைமை எந்தளவு மோசமாகி விட்டிருந்ததெனில், பூமி இத்துணை விரிவாய் இருந்தும் அவர்களைப் பொறுத்தவரை அது குறுகி, அவர்கள் உயிர் வாழ்வதே கஷ்டமாகிவிட்டிருந்தது! இன்னும் அல்லாஹ்விடமிருந்து தப்பிப்பதற்கு அவனுடைய அருளின் பக்கம் திரும்புவதைத் தவிர வேறு புகலிடம் இல்லை என்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள். பின்னர் அவர்கள் பாவமன்னிப்புக் கோரி தன்னிடம் மீண்டு வரவேண்டும் என்பதற்காக அல்லாஹ் அவர்கள் மீது கருணை பொழிந்தான். திண்ணமாக அவன் மிக மன்னிப்போனும், கருணையுடையோனுமாய் இருக்கின்றான்.

இறைநம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் வாய்மையாளர்களுக்குத் துணையாக இருங்கள்!'" (அல்குர்ஆன் - 9:119-119)

என்ற வசனத்தை இறக்கி வைத்தான்.

இஸ்லாத்தின்பால் எனக்கு அல்லாஹ் நல்வழிகாட்டிய பின், அல்லாஹ் எனக்கு அருளிய மாபெரும் அருட்கொடையாக நான் கருதுவது, அண்ணலாரிடம் பொய் கூறி, பொய்யர்கள் அழிந்தது போல் நான் அழியாமல் உண்மையைக் கூறியதைத்தான். வஹி இறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் பொய் கூறியவர்களை மிகக் கடுமையாக அல்லாஹ் கண்டிக்கிறான்.

அல்லாஹ் கூறுகிறான் : “போரிலிருந்து நீங்கள் அவர்களிடம் திரும்பி வந்தால் (அவர்களை நீங்கள் குறை சொல்லாமல்) அவர்களை விட்டு நீங்கள் புறக்கணித்து விடாமலிருப்பதற்கு உங்களிடம் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வார்கள். எனவே, நீங்கள் அவர்களைப் புறக்கணித்து விடுங்கள்! நிச்சயமாக அவர்கள் அசுத்தமானவர்கள், அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்ததற்குப் பிரதிபலனாக அவர்களின் ஒதுங்குமிடம் நரகமாகும்.

அவர்களைப் பற்றி நீங்கள் திருப்தியடைவதற்காக உங்களிடம் அவர்கள் சத்தியம் செய்கின்றனர். எனவே, அவர்களைப் பற்றி நீங்கள் திருப்தியடைந்தாலும், நிச்சயமாக அல்லாஹ் பாவிகளின் கூட்டத்தாரைப் பற்றி திருப்தியடையமாட்டான்.”

(அல்குர்ஆன் : 9:95-96)

கஅப் கூறுகிறார் : பொய்க் காரணம் கூறி சத்தியம் செய்தவர்களை நபியவர்கள் ஏற்றார்கள். அவர்களுக்காகப் பிழை பொறுக்கத் தேடினார்கள். ஆனால், எங்களது விஷயத்தை அல்லாஹ் ஒரு முடிவு கூறும் வரை தள்ளிப்போட்டார்கள். அல்லாஹ் ‘பிற்படுத்தப்பட்ட மூவர்’ என்று கூறுகிறான். போரை விட்டும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற கருத்தில் அதனை அவன் கூறவில்லை. (மாறாக) பொய்க் காரணம் கூறி, சத்தியம் செய்து அதனை அண்ணலார் ஏற்றுக்கொண்டுவிட்ட மக்களைவிட, நாங்கள் மூவர் பிற்படுத்தப்பட்டவர்கள். அண்ணலார் எங்களுக்கு முடிவை வழங்க வஹியை எதிர்பார்த்துப் பிற்படுத்திவிட்டார்கள் என்ற கருத்திலேயே அதனை அல்லாஹ் கூறினான். (புகாரி, முஸ்லிம்)

இவரது இந்த நீண்ட வரலாறே நமக்குப் பல பாடங்களைப் போதிக்கின்றது. எனவே, இதற்கு மேலதிக விளக்கம் தேவையில்லை.

சோதனையிலும் உண்மை கூறி அதனால் உயர்வு பெற்றுச் சாதனை படைத்த கஅப் இப்னு மாலிக் (ؓ) அவர்கள் நீண்டகாலம் வாழ்ந்தார்கள். முஆவியா (ؓ) அவர்கள் காலத்தில், இவர் கண் பார்வை இழந்ததாக அறிய முடிக்கின்றது. (அல் இஸாபா 3/302, இமாம் இப்னு அஸாகிர் தாரிஹு திமிஷ்க் 21/190) இவர் மரணித்த ஆண்டு குறித்துக் கருத்து வேறுபாடு இருந்தாலும் நீண்டகாலம் உயிர் வாழ்ந்தவர் என்பதிர் முரண்பாடு இல்லை.

உண்மையால் உயர்வுபெற்ற உத்தமர் கஅப் இப்னு மாலிக் (ؓ) அவர்களைப் பின்பற்றி, உண்மை பேசி, நன்மை செய்து நற்பேறு பெறுவோமாக!

நபிக்கு விருந்தளிக்க அல்லாஹ் தேர்ந்தெடுத்த அபூஅய்யூப் அல்அன்ஸாரி (ﷺ)

இவர் மதீனத்து நபித்தோழராவார். மதீனாவில் வாழ்ந்த அவ்ஸ், அல்ஹஸ்ரஜ் என்ற இரு பிரதான கிளைகளில் இவர் ஹஸ்ரஜ் கிளையைச் சேர்ந்தவர். ஹஸ்ரஜ் கிளையின் பனூநஜ்ஜார் குடும்பத்தைச் சேர்ந்த இவரது இயற்பெயர் ஹாலித் இப்னு ஸைத் என்பதாகும். எனினும், இவர் அபூஅய்யூப் என்றும், இவரது மனைவி உம்மு அய்யூப் என்றும் இஸ்லாமிய உலகில் அறிமுகமாகினர். இஸ்லாமிய வரலாற்றில் இவருக்கென்று தனியொரு மதிப்பும் உயர்வும் இருக்கின்றது.

மதீனாவுக்கான அழைப்பு

மதீனாவில் இருந்து மக்கா வந்து அகபா பள்ளத்தாக்கில் வைத்து மதீனத்து மாமனிதர்கள் நபி (ﷺ) அவர்களைத் தமது மண்ணுக்கு அழைத்தனர். நீங்கள் அங்கு வந்தால் எங்கள் மனைவி குழந்தைகளை எப்படியெல்லாம் காக்கின்றோமோ அதைவிட உங்களை நாம் பாதுகாப்போம் என்று உறுதிமொழி அளித்தனர். இந்த உறுதிமொழியில் அபூஅய்யூப் (ﷺ) அவர்களும் பங்கு கொண்டார்கள். இஸ்லாமிய வரலாற்றின் திருப்புமுனைக்கு வழிவகுத்த இந்த அகபா உடன்படிக்கையும், அதில் பங்கு கொண்டவர்களும் சிறப்புக்குரியவர்களே!

மதீனா வருகை

நபி (ﷺ) அவர்கள் மதீனா நோக்கித் தமது பயணத்தை ஆரம்பித்த செய்தி அறிந்த அன்ஸாரிகளும், முஹாஜிர்களும் அண்ணல் நபியின் வருகையை வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தனர். பிரிந்த தாயும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் எப்படி ஏக்கத்துடன் எதிர்பார்த்திருப்பார்களோ அதைவிட இவர்களது ஏக்கம் பெரிதாக இருந்தது.

எனினும், நபி (ﷺ) அவர்கள் நேராக மதீனா வராது மதீனாவுக்கு சுமார் இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள 'குபா' என்ற இடத்தில் தங்கி அங்கு ஒரு மஸ்ஜிதைக் கட்டினார்கள். இதுதான் நபி (ﷺ) அவர்கள் கட்டிய முதல் மஸ்ஜிதாகும். பின்னர் நபி (ﷺ) அவர்கள் மதீனா நோக்கி வந்தார்கள். நபி (ﷺ) அவர்களின் வருகைக்காகக் காத்திருந்த முஹாஜிர்களும் மதீனத்து நபித்தோழர்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர். அவர்கள் முகமும் அகமும் மலர்ந்து, அண்ணல் நபியை வரவேற்றனர்.

இப்போது நபி (ﷺ) அவர்கள் மதீனாவில் யாரேனும் ஒருவர் வீட்டில் தங்கவேண்டும். மதீனத்துத் தலைவர்கள் அனைவரும் நபி (ﷺ) அவர்களைத் தமது இல்லத்தில் தங்கவைக்கும் பாக்கியம் தமக்கே கிடைக்க வேண்டும் என்று பேராவல் கொண்டனர்.

பனூ பயழா, பனூ ஸஅத், பனூ நஜ்ஜார் என ஒவ்வொரு கோத்திரமும் எங்களிடம் வாருங்கள்; எங்களிடம் வாருங்கள் என்று வரவேற்றனர். நபி (ﷺ) அவர்கள் ஒட்டகத்தை விட்டு விடுங்கள்; எங்கே நிற்க வேண்டும் என்பது அதற்கு ஏவப்பட்டுள்ளது. அது நிற்கும் இடம்தான் நான் தங்குமிடம் என்று கூறினார்கள். ஒட்டகம் விடப்பட்டது; அந்த ஒட்டகம் எதையோ தேடுவது போல் அங்கும் இங்கும் பார்த்த வண்ணம் சென்று கொண்டிருந்தது.

அங்கிருந்த அனைவரது கண்களும் ஒட்டகத்தின் மீதே ஒட்டுமொத்தமாக விழுந்தது. இது என் வீட்டின் முன்னால் நிற்காதா என்ற ஏக்கத்துடன் அனைவரும் அதனைப் பார்த்தனர். அது ஒவ்வொரு வீடாகத் தாண்டும் போது அந்த வீட்டின் உரிமையாளர், ஆ! தவறிவிட்டதே என்று தனக்குள் கவலை கொள்வார். இவ்வாறு சென்று கொண்டிருந்த ஒட்டகம் அபூஅய்யூப் அல்அன்ஸாரியின் வீட்டின் முன்னால் போய் அமர்ந்தது.

அல்லாஹ்வின் தூதர் தங்கும் இடம் இதுதான் என்று தீர்மானமானது. இந்த ஒரு நிகழ்ச்சியே அபூஅய்யூப் (رضي الله عنه) அவர்களுக்கு சிறப்பும் பெருமையும் சேர்க்கப் போதுமானதாகும். ஏனெனில், இது அல்லாஹ்வின் தேர்வாகும். தனது தூதர் இவர் வீட்டில் தங்க வேண்டும் என்று அல்லாஹ் இவரைத் தேர்ந்தெடுத்தான் என்பது எவ்வளவு சிறப்புமிக்க அம்சமாகும் என்பது சிந்திக்கத்தக்கதாகும்.

மனச் சஞ்சலம்

அபூஅய்யூபின் வீடு இரண்டு மாடிகளைக் கொண்டதாகும். மேல்மாடி பலகைகளால் செய்யப்பட்டிருந்தது. நபி (ﷺ) அவர்களை நபித்தோழர்கள் வந்து சந்திப்பதற்கு வசதியாக, நபி (ﷺ) அவர்கள் கீழ்மாடியில் இருந்தார்கள். அபூஅய்யூப் (رضي الله عنه) அவர்களும் மனைவியும் மேல்மாடியில் இருந்தனர். அன்றிரவு அபூஅய்யூப் அல்அன்ஸாரி (رضي الله عنه) அவர்கள் தம் மனைவியைப் பார்த்து,

‘நாம் என்ன செய்துவிட்டோம். அல்லாஹ்வின் தூதர் கீழே படுக்க, நாம் மேலே இருப்பதா? அவருக்கும் வஹிக்கும் இடையில்

நாம் இருப்பதா? இது தவறாகி விடுமோ என்ற அச்சத்தில் வீட்டின் ஓரப்பகுதியில் இருந்தனர். அதிகாலை விடிந்ததும் இந்தச் சஞ்சலத்தை அபூஅய்யூப் (﵁) அவர்கள் நபி (ﷺ) அவர்களிடம் கூறினார்கள்.

அதற்கு நபியவர்கள், ‘அபூஅய்யூபே! நீங்கள் உங்களை வீணாகச் சிரமப்படுத்திக் கொள்ளாதீர்கள். நான் மேலே இருந்தால் என்னைக் காண வருபவர்களுக்கும் சிரமமாகும்; உங்களுக்கும் சிரமமாகும். இதை நீங்கள் பொருட்படுத்த வேண்டியதில்லை’ என்று ஆறுதல் கூறினார்கள். இதனால், அபூஅய்யூப் ஆறுதல் அடைந்தார்கள்.

தண்ணீரால் தளம் மாறியது

இவ்வாறு இருக்கையில், ஒரு கடும் குளிரான இரவில் மேல்மாடியில் ஒரு குவளை உடைந்து, அதன் தண்ணீர் கொட்டி விட்டது. கீழே தண்ணீர் வடிந்து அண்ணல் நபிக்கு அசௌகரியத்தைக் கொடுத்துவிடுமே என்ற ஆழ்ந்த கவலையுடன் அபூஅய்யூபும் அவரது மனைவியும் வேகமாக துணிகளால் தண்ணீரைத் துடைத்து எடுத்தனர்.

மறுநாள் காலை, அபூஅய்யூப் அவர்கள் நபி (ﷺ) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! உங்களைக் கீழே விட்டு விட்டு மேலே வசிக்க எமக்கு மனம் இடம் தரவில்லை. எனவே, நீங்கள் தயவு கூர்ந்து மேலே செல்லுங்கள் எனக் கூறினார்கள். அவர்கள், தினம் தினம் இதை நினைத்து வருந்திக்கொண்டிருப்பதை அறிந்த நபி (ﷺ) அவர்கள் மேலே செல்ல சம்மதித்தார்கள். உடனே, அபூஅய்யூப் நபி (ﷺ) அவர்களுக்குச் சொந்தமான ஓரிரு பொருட்களை மேலே எடுத்துச் சென்று மகிழ்வுடன் வைத்தார். கணவனும் மனைவியும் மனதெல்லாம் மகிழ்வையும் நிம்மதியையும் சுமந்து கொண்டு கீழ்த்தளம் வந்தனர். (பார்க்க: முஸ்லிம், திர்மிதி)

அன்பின் வெளிப்பாடு

நபி (ﷺ) அவர்கள், அபூஅய்யூபின் இல்லத்தில் இருந்தபோது நபிகளாருக்கு வரும் அன்பளிப்புகளில் இவருக்கும் பங்குண்டு. அதேபோன்று அபூஅய்யூபும் அவர் மனைவியும் வீட்டில் சமைத்தால் உணவை முதலில் நபி (ﷺ) அவர்களுக்குக் கொடுப்பார்கள். அவர்கள் உண்டு விட்டு மீதமான உணவை அவர்கள் கை பட்ட இடத்திலிருந்து உண்ண ஆரம்பிப்பர். இது நபி (ﷺ) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாகும்.

ஒரு நாள் உணவை நபி (ﷺ)அவர்களுக்குக் கொடுத்துவிட்டு மீத உணவை எடுத்துவந்து பார்த்தனர். உணவு வைத்தது போல் அப்படியே இருந்தது. நபி (ﷺ) அவர்கள், அதை உண்ணவில்லை என்பதை அறிந்த அபூஅய்யூப் நபி (ﷺ) அவர்களிடம் சென்று, ‘அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் உண்ணவில்லையே!’ எனக் கேட்டார். அதற்கு நபி (ﷺ) அவர்கள், ‘அப்படியல்ல, அதில் வெள்ளைப்பூண்டு உள்ளது. அதைச் சாப்பிட்டால் துர்வாடை வீசும். எனவேதான், அதை வெறுக்கிறேன். நீங்கள் சாப்பிடுங்கள்’ என்று கூறினார்கள். அதற்கு அபூஅய்யூப், ‘நீங்கள் வெறுப்பதை நானும் வெறுப்பேன்; நீங்கள் உண்ணாததை நானும் உண்ணமாட்டேன்’ என்று கூறினார்கள். இது அபூஅய்யூப் (رضي الله عنه) அவர்கள் அண்ணல் நபி (ﷺ) அவர்கள் மீது கொண்டிருந்த அபரிமிதமான அன்பின் வெளிப்பாடாகும்.

பின்னர் நபி (ﷺ), ‘எனக்கும் உங்களுக்கும் சில வித்தியாசங்கள் உள்ளன. நான் எப்போதும் வஹியை எதிர்பார்த்திருப்பவன்; வெள்ளைப்பூண்டு சாப்பிட்டால் வாய் துர்வாடை வீசும் நிலையில் எனக்கு வஹி வருவதை நான் வெறுக்கின்றேன். மனிதர்களைப் போலவே வானவர்களுக்கும் கெட்ட வாசனையை நுகர நேர்ந்தால் சங்கடப்படுகின்றனர் என்று ஆறுதல்கூற வேண்டியதாயிற்று. (பார்க்க: முஸ்லிம்)

அண்ணலாரின் அண்டை வீட்டார் :

நபி (ﷺ) அவர்கள், அபூஅய்யூபின் இல்லத்தில் சுமார் 7 மாதங்கள் தங்கியிருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில்தான் மஸ்ஜிதுன் நபவியும் அதனை ஒட்டினாற்போல் நபி (ﷺ) அவர்களுக்கு ஓர் அறையும் கட்டப்பட்டன. மஸ்ஜிதுன் நபவி அபூஅய்யூபின் இல்லத்துக்கு அருகில்தான் கட்டப்பட்டது. புதிதாகக் கட்டப்பட்ட அறையில் நபிகள் நாயகம் குடியேறினார்கள். இந்த வகையில் இதுவரை ஒரே வீட்டில் வசித்த நபி (ﷺ) அவர்கள், இவரது அண்டை வீட்டினராக மாறினார்கள். எனினும் அபூஅய்யூப் அல்அன்ஸாரி (رضي الله عنه) அவர்களிடம், நபி (ﷺ) அவர்கள் உரிமையுடன் நடந்து கொண்டார்கள். இதனை பின்வரும் நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.

கோடை காலத்தில் ஒரு நாள் கடினமான உஷ்ன நேரத்தில் அபூபக்கர் (رضي الله عنه), உமர் (رضي الله عنه)ஆகிய இருவரும் மஸ்ஜிதுன் நபவிக்கு வந்தனர். இவர்களைக் கண்ட நபி (رضي الله عنه) அவர்கள், ‘ஏன் இந்த நேரத்தில் வந்தீர்கள்?’ எனக் கேட்டார்கள்.

கடுமையான பசி தாங்க முடியாமல் வந்துள்ளோம் என்றனர் அபூபக்கர், உமர் ஆகியோர்.

நீங்கள் வந்த அதே காரணத்திற்காகத்தான் நானும் வந்தேன். வாருங்கள்! அபூஅய்யூப் அவர்களின் இல்லம் செல்வோம் என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். மூவரும் அபூஅய்யூப் (رضي الله عنه) அவர்களது இல்லம் சென்றனர். பசியோடு வந்த இருவரை தமது இல்லத்திற்கு அழைத்துச் செல்வது போல் அபூஅய்யூப் அவர்களது இல்லத்துக்கு அழைத்துச் செல்லக்கூடிய அளவுக்கு அவருடன் நபி (ﷺ) அவர்கள் நெருக்கமாகப் பழகி இருப்பதைத்தான் இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.

தோழர்கள் மூவரும் சென்றபோது அபூஅய்யூப் (رضي الله عنه)அவர்கள் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். உம்மு அய்யூப் (رضي الله عنها) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் மற்றும் அவர்களுடன் வந்திருப்போரின் வரவு நல்வரவாகட்டும் என்று முகமலர்ச்சியுடன் வரவேற்றார்கள். அபூஅய்யூப் (رضي الله عنه) இல்லம் வந்த போது, அண்ணல் நபியும் அவர்களது அருமைத் தோழர்களான அபூபக்கரும் உமரும் தம் இல்லம் வந்திருப்பதைக் கண்டு இன்பமுற்றவராக, இன்றைய தினம் என்னை விடச் சிறந்த விருந்தாளிகளைப் பெற்ற எவரும் உலகத்தில் இருக்கமாட்டார்கள் எனக் கூறிக்கொண்டு, தோட்டத்திற்குச் சென்று, பிஞ்சு, முற்றிய, கனிந்த என அனைத்து வகை ஈத்தம் குலைகளையும் எடுத்துவந்து வைத்துவிட்டுக் கத்தியை எடுத்தார்கள்.

அவர் ஆட்டை அறுக்கத் தயாராகிறார் என்பதை அறிந்த நபி (ﷺ) அவர்கள், 'ஆட்டை அறுப்பதாயின் பால் தரும் ஆட்டை அறுத்து விடாதீர்' என்று கூறினார்கள்.

ஆடு அறுக்கப்பட்டு சமைக்கப்பட்டது. ரொட்டி தயார் செய்யப்பட்டது. மூவரும் வயிறு நிறைய உண்டனர். பின்னர் நபி (ﷺ) அவர்கள், கலங்கியவராக பசிதாங்க முடியாமல் வந்த எமக்கு ரொட்டி, மாமிசம், விதவிதமான ஈத்தம் பழங்கள் என்று அல்லாஹ்வின் அருள் வழங்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் அருள்கள் பற்றி நாம் விசாரிக்கப்படுவோம் என்று கூறினார்கள்.

நபி (ﷺ) அவர்கள், தனக்கு யாரும் உதவி செய்தால் அதற்கு ஈடுசெய்யும் விதமாக உதவி செய்தவருக்கு ஏதேனும் செய்துவிடக்கூடிய உயர்ந்த நாகரிகமுடையவராக இருந்தார்கள். அதேவேளை, ஒருவரைப் பார்த்தால் அவரின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து கொள்ளக்கூடிய ஆளுமையுள்ளவர்களாகவும்

இருந்தார்கள். எனவே, அபூஅய்யூபைப் பார்த்து நாளை நீர் எம்மிடம் வர வேண்டும் என்று கூறினார்கள்.

கட்டளையைப் பின்பற்றுவதில் காட்டிய கரிசனை

அபூஅய்யூப் (ரழி), நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். நேற்றைய விருந்தின் போது அபூஅய்யூப் (ரழி) அவர்களும் மனைவியும் மிக வேகமாகச் செயற்பட்டதைக் கண்ட நபி (ஸல்)அவர்கள், துணைக்கு ஒரு பணியாளனை அன்பளிப்புச் செய்ய விரும்பினார்கள். எனவே, நபி (ஸல்) அவர்கள் ஓர் அடிமைச் சிறுமியைக் காட்டி, 'இவளை அழைத்துச் செல். ஆனால், இவளிடம் நீதியில்லா முறையில் நீங்கள் நடந்துகொள்ள வேண்டாம்' என்று கூறி அனுப்பினார்கள்.

அபூஅய்யூப் (ரழி) அவர்கள் அடிமைப் பெண்ணை அழைத்துக் கொண்டு வீடு சென்றார்கள். நடந்ததை மனைவியிடம் கூறினார்கள். சாதாரண பெண்ணாக இருந்தால்தான் வேலைப்பளு குறைந்து விட்டது என்று மகழ்ந்திருக்க வேண்டும். ஆனால், உம்மு அய்யூப் (ரழி), கணவனிடம் நபி (ஸல்) அவர்கள், அவளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளச் சொல்லியிருந்தார்களே! அவளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதில் ஆக உச்சகட்டம் என்ன என்று சிந்தித்தனர். பின்னர் விடுதலை செய்வதுதான் நல்ல முறையில் நடப்பதின் உச்சகட்டம் என அறிந்து அவளை விடுதலை செய்வோம். அதுதான் அவளிடம் நாம் மிக நன்றாக நடந்துகொள்ளும் விதமாக இருக்கும் எனக்கூறி விடுதலை செய்தனர். இது நபி (ஸல்) அவர்களின் வாழ்வை அணு அணுவாகப் பின்பற்றுவதில் இந்தத் தம்பதிகள் காட்டிய கரிசனையை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. (பார்க்க: முஸ்லிம், திர்மிதி, இப்னுமாஜா)

வீர மரணத்தில் தீராத மோகம்

அபூஅய்யூப் (ரழி) அவர்கள் வீரமரணத்தில் தீராத மோகம் கொண்டவராகத் திகழ்ந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் பங்கு கொண்ட போர்கள் அனைத்திலும் பங்குகொண்டார்கள். நபிகளார் காலத்திற்குப் பின்பு நடந்த அனைத்துப் போர்களிலும் பங்கு கொண்டார்கள். அவர்கள் பங்குகொள்ளவில்லை என்றால் அதே காலத்தில் வேறொரு யுத்தத்தில் பங்கு கொண்டிருப்பார்கள். அவர்கள் காலத்தில் நடந்த ஒரே ஒரு யுத்தத்தில் மட்டும் அவர்கள் பங்கு கொள்ளவில்லை என்றும் அது குறித்து, பின்னர் பெரிதும் கவலையடைந்தார்கள் என்றும் குறிப்புகள் கூறுகின்றன.

மரணம்

அலீ (رضي الله عنه), முஅவியா (رضي الله عنه) ஆகிய இருவருக்குமிடையே நடந்த போர்களில் இவர் அலீ (رضي الله عنه) அவர்கள் பக்கமிருந்தார்கள். பின்னர் முஆவியா (رضي الله عنه) அவர்கள் சட்டபூர்வமாக கலீபாவானதும் அவருடன் இணைந்து பணி செய்தார்கள். முஆவியா (رضي الله عنه) அவர்கள் அவரது மகன் யஸீத் அவர்களின் தலைமையில் கான்ஸ்டான்டி நோபிளுக்கு எதிராகப் படை திரட்டினார்கள். அப்போது இவர் 80 வயதைத் தாண்டிய முதியவராக இருந்தார். எனினும் இறைப்பாதையில் வீரமரணம் அடைய வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் அவரது உள்ளத்தில் அப்போதும் இளமையாகவே இருந்தது. போருக்குச் செல்லும் வழியில் இவர் நோயுற்றார். படைத்தளபதி யஸீத் அவர்கள், இவரை அணுகி, அவரது ஆசை குறித்து விசாரித்தார்கள். இதற்கு அபூஅய்யூப் (رضي الله عنه) அளித்த பதில்தான் ஆச்சரியமானது. பொதுவாக எவரும், தான் மரணித்தால் தனது உடல் உறவினர்களிடம் போய்ச்சேர வேண்டும் என விரும்புவார். இவரோ,

'முஸ்லிம் படை வீரர்களுக்கு எனது ஸலாமை எடுத்துரையுங்கள். நான் மரணித்தால் என்னை எதிரிகளின் பூமியில் எவ்வளவு தூரம் எடுத்துச் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் எடுத்துச் சென்று அங்கே அடக்குங்கள்' என்று கூறினார்கள்

அண்ணல் நபியின் அன்பைப் பெற்ற
உஸாமா இப்னு ஸைத் (ﷺ)

ஒரு முறை நபி (ﷺ) அவர்கள் சமவயதுடைய இரண்டு ஆண் குழந்தைகளைத் தமது வலதும் இடதுமாக அமர வைத்து, 'அல்லாஹ்வே! நான் இவ்விருவரையும் நேசிக்கின்றேன். நீயும் இவர்களை நேசிப்பாயாக!' என்று பிரார்த்தித்தார்கள். (புகாரி **3735**, திர்மிதி)

அந்த இரு செல்வங்களில் ஒருவர் பார்ப்பதற்கு நபியைப் போன்ற தோற்றமுடைய சிவப்பு நிறமும் அழகும் நிறைந்த நபிகளாரின் பேரர் ஹஸன். அடுத்தவர் கறுப்பான, மெலிந்த தோற்றமுடைய உஸாமா இப்னு ஸைத் (ﷺ) ஆவார்.

உஸாமா இவ்வாறு நபி (ﷺ) அவர்களால் சிறப்பித்துக் கூறப்படக் காரணம் என்ன? நபி (ﷺ) அவர்கள் தனது பிள்ளையையும் பிறர் பிள்ளையையும் ஒன்றுபோல் மதிப்பவர்கள். அவரிடம் அழகு, நிறம் என்பன எந்தத் தாக்கத்தையும் செலுத்தவில்லை. நபிகளாரின் இந்த அன்பைப் பெற முக்கிய காரணம், அவரது பெற்றோர்களாவர்.

உஸாமாவின் தாயார் உம்மு அய்மன் எனும் அபீசீனிய பெண்ணாவார். இவர் நபிகளாரின் தாயார் ஆமினா அவர்களிடம் அடிமையாக இருந்தவர். ஆமினா உயிருடன் இருக்கும் போதும், இறந்த பின்பும் நபி (ﷺ) அவர்களை அன்புடன் அரவணைத்து வளர்த்தவர். இதனால் இவர்கள் மீது நபி (ﷺ) பெருமளவில் அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். நபி (ﷺ) அவர்கள் உம்மு அய்மன் குறித்து, 'எனது தாய்க்குப் பின் என் தாய்' எனக் கூறுவார்கள்.

அடுத்து இவருடைய தந்தை இஸ்லாத்துக்கு முன்னர் நபிகளாரின் வளர்ப்பு மகனாக இருந்தவர். தன்னை வளர்த்த தாய்க்கும், தான் வளர்த்த மகனுக்கும் பிறந்தவர் என்ற அடிப்படையில் இவர் மீது நபி (ﷺ) அவர்கள் மிகுந்த பாசத்தைப் பொழிவார்கள். இவர் வளர்ந்த பின்னர் இவரிடம் காணப்பட்ட இஸ்லாத்தின் மீதான பற்று, புத்திக்கூர்மை, வீரம் என்பன நபி (ﷺ) அவர்களுக்கு இவர் மீது இன்னும் அதிகளவில் அன்பை ஏற்படுத்தியது.

நபி (ﷺ) அவர்கள் உஸாமா (ﷺ) அவர்கள் மீது வைத்திருந்த நேசத்தை உறுதிப்படுத்தும் ஏராளமான செய்திகளைக் காணலாம். தனது மகள் பாத்திமாவுக்கு அடுத்தபடியாக நபியவர்கள் உஸாமா மீது அன்பு வைத்திருந்தார்கள்.

தான் அவர்மீது அன்பு வைத்திருந்தது மட்டுமன்றி பிறரையும் அவர் மீது அன்புவைக்கத் தூண்டினார்கள்.

ஆயிஷா (ரழி) அவர்களிடம், 'ஆயிஷாவே! நான் உஸாமாவை நேசிக்கின்றேன்; நீயும் அவர் மீது அன்பு வைப்பாயாக' என்று கூறினார்கள். (திர்மிதி)

இவ்வாறே 'யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் உஸாமாவையும் நேசிக்கட்டும்' என்று ஒட்டுமொத்த முஸ்லிம்களும் இவரை நேசிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். (முஸ்லிம், நஸாஈ)

நபியுடனான நெருக்கம்

உஸாமாவுக்கும் நபியவர்களுக்குமிடையே சுமார் 47 வயது வித்தியாசமிருந்தது. இருப்பினும் நபி (ஸல்) அவர்கள் இவரிடம் பிரத்தியேகமான அன்பையும் நட்பையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ஆயிஷா (ரழி) அவர்கள் மீது கயவர்கள் அவதூறு குற்றம் சுமத்திய போது நபி (ஸல்) அவர்கள் தமது மருமகன் அலீ (ரழி) மற்றும் உஸாமா (ரழி) ஆகிய இருவரிடமும் இது குறித்து என்ன செய்வது என்று ஆலோசனை கேட்டார்கள் என்பதை புகாரி உட்பட பல அறிவிப்புகளில் காணலாம்.

இவ்வாறே நபி (ஸல்) அவர்கள் போருக்குச் செல்லாத வேளைகளில் தமது ஆயுதத்தை அலீயிடமும் உஸாமாவிடமும் கொடுத்து வைப்பார்கள் என்றும் வரலாறு கூறுகின்றது.

நபி (ஸல்) அவர்களது இறுதி ஹஜ்ஜின் போதும் இவர் நபியுடனேயே இருந்தார். மக்கா கைப்பற்றப்பட்டு, கஃபா திறக்கப்பட்டபோது நபி (ஸல்) அவர்களது வலதும் இடதுமாக பிலாலும் உஸாமாவும் இருக்க, நபியவர்கள் கஃபாவைத் திறந்து உள்ளே சென்றார்கள் என ஹதீஸ்கள் கூறுகின்றன. (புகாரி)

இந்தச் செய்தி உஸாமா (ரழி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்களிடமிருந்த நெருக்கத்தை வெளிப்படுத்துவதோடு இஸ்லாத்தில் நிற, குல பேதமில்லை என்று ஓங்கி முழங்குகின்றது.

பிலாலும் உஸாமாவும் கறுப்பர்கள். பிறப்பின் அடிப்படையில் அடிமைகள். நபி (ஸல்) அவர்களுடன் கஃபாவுக்குள் நுழையும் அந்தஸ்தைப் பெற்றார்கள். பிலால் கஃபா மீதே ஏறி அதான் கூறிய காட்சியைக் கண்ட இறைமறுப்பாளர்கள் அதை அருவருப்பாகவே நோக்கினர்.

நபியின் மகிழ்ச்சிக்குக் காரணம்

ஸைத் வெள்ளை நிறத்தவர்; அவரது மனைவி கறுப்பர். மகன் உஸாமாவும் கறுப்பானவர். ஸைதையும் உஸாமாவையும் பார்ப்பவர்கள் உஸாமா ஸைதிற்கு பிறந்தவர்தானா என ஐயப்படுவர். அந்த அளவு வேறுபாடு காணப்பட்டது. உஸாமா அவரது தாய் சாயலில் இருந்தார்.

ஒரு நாள் ஸைதும் உஸாமாவும் போர்வையைப் போர்த்தியவாறு பாதம் வெளியில் தெரியும் விதத்தில் படுத்திருந்தனர். அந்தக் காலத்தில் கால் பாத அமைப்பைப் பார்த்து ஒருவருடைய பரம்பரையைத் தீர்மானிக்கும் ஒருவிதக் கல்வியைக் கற்றோர் இருந்தனர். (இன்று மரபணு பார்ப்பது போன்று ஒரு கலை அது) அவர்களில் ஒருவர் ஸைது - உஸாமா ஆகியோரின் பாதங்களைக் கண்டு, “இது தந்தையினதும் மகனினதும் பாதங்கள்” என்று கூறினர். அப்போது இதை நபி (ﷺ) அவர்களும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு நபி (ﷺ) அவர்கள் தமது மனைவி ஆயிஷாவின் இல்லம் சென்றார்கள். நபியவர்களின் முகத்தில் மகிழ்ச்சி நிரம்பி இருந்ததைக் கண்டு ஆயிஷா (ரலி) அவர்கள் விசாரித்த போது நடந்ததைக் கூறினார்கள். இதிலிருந்து ஸைத் - உஸாமா தொடர்பான சமூகத்தின் சந்தேகம் நபி (ﷺ) அவர்களுக்கு வேதனையைக் கொடுத்திருப்பதும், அந்த சந்தேகம் நிவர்த்தியானதால் நபியவர்கள் பெரிதும் மகிழ்ந்துள்ளார்கள் என்பதையும் விளங்கலாம்.

சட்டத்தில் சலுகை கிடையாது

நபியவர்கள் யார் மீது நேசம் வைத்தாலும் நீதி, நியாயம் என்று வந்துவிட்டால் சுய விருப்புவெறுப்புக்களைத் தாண்டி சட்டப்படி நடப்பார்கள். ஒருமுறை குறைஷிகளின் உயர்ந்த கோத்திரமான மக்ஸூமி கோத்திரத்தைச் சேர்ந்த பாத்திமா என்ற பெண் திருட்டுக்குற்றம் சுமத்தப்பட்டாள். குற்றம் நிரூபிக்கப்பட்டு கை வெட்டப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தச் சட்டத்தில் ஒரு சலுகையை நபித்தோழர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், இது குறித்து யார் நபியவர்களிடம் பேசுவது என்று யோசித்த போது நபியவர்களின் செல்லப்பிள்ளை உஸாமாவைத் தவிர வேறு எவரும் இது குறித்துத் துணிச்சலுடன் பேச முடியாது எனக்கருதி, உஸாமாவை அனுப்பினர். நபியவர்களிடம் உஸாமா (ரலி) சென்று பாத்திமாவுக்காக பரிந்து பேசியபோது நபி (ﷺ) அவர்கள் அவரைக் கண்டித்து, சட்டத்தில் ஏற்றத்தாழ்வு காட்டியதால்தான் முன்னைய சமூகம் அழிந்ததாகக் கூறி, ‘முஹம்மதின் மகள் ஃபாத்திமா திருடினாலும் முஹம்மது அவளது கையை வெட்டுவார்’ எனப் பகிரங்கமாக அறிவித்தார்கள். (புகாரி)

இந்த சம்பவம் உஸாமா நபியவர்களுக்கு எந்தளவு நெருக்கமாக இருந்தார் என்பதையும் நபி (ﷺ) அவர்களிடத்தில் சட்டத்தை நிலைநாட்டுவதில் பாசம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதையும் தெரிவிக்கின்றது.

தியாகப் போர் செய்ய ஆர்வம்

உஸாமா மீது நபி (ﷺ) அவர்கள் பற்றுவைக்க அவரிடம் காணப்பட்ட நல்ல பழக்கவழக்கங்கள், இஸ்லாமிய உணர்வு என்பன பிரதானமான காரணங்களாகும். உஹுதுப் போருக்காக படை திரட்டப்பட்ட போது உஸாமாவும் அணியில் நின்றார். ஐ.நா. சபையோ, பொதுவான உலகச் சட்டங்களோ இல்லாத காலத்திலும் நபி (ﷺ) அவர்கள் சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்து வந்தார்கள். எனவே, படையணியைப் பார்வையிட்ட நபியவர்கள் உஸாமாவையும் அவர் போன்ற சிறுவர்களையும் திருப்பி அனுப்பினார்கள். போரில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்காத உஸாமா அழுதவராக வீடு திரும்பினார்.

கன்தக் போரின் போது உஸாமாவும் அவருடன் இன்னும் பல இளைஞ்ஞர்களும் போருக்குத் தயாராக வந்தனர். நபி (ﷺ) அவர்கள் படையணியைப் பார்வையிடும் போது தான் சிறுவன் என்பதால் தன்னை நபியவர்கள் திருப்பி அனுப்பி விடுவார்களோ என அஞ்சிய உஸாமா, தனது குதிகால்களை உயர்த்தி நின்று கொண்டார். உஸாமாவின் ஆர்வம், துணிவு ஆகியவற்றைக் கண்ட நபியவர்கள் அவருக்கு அனுமதியளித்தார்கள். 15 வயதாக இருந்த போதே இறைப்பாதையில் ஜிஹாத் செய்யும் பேற்றை உஸாமா பெற்றார்.

இதன் பின்னர் நடந்த பல போர்களிலும் உஸாமா (رضي الله عنه) அவர்கள் ஈடுபட்டு தனது வீரத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். ஹுனைன் யுத்தத்தின் போது நபித்தோழர்கள் சிக்கலுக்குள் மாட்டி புறமுதுகிட்டு ஓட நேர்ந்த போது உஸாமா, அப்பாஸ் (رضي الله عنه) போன்ற குறிப்பிட்ட நபர்களின் மூலம் நபி (ﷺ) அவர்கள் எதிரிகளைச் சமாளித்து முஸ்லிம்களை ஒன்றுதிரட்ட முடிந்தது.

தந்தையின் கீழ் தனயன்

முஅத்தா போரில் தனது தந்தை ஸைத் (رضي الله عنه) அவர்களின் தலைமையில் உஸாமாவும் போரிட்டார். தனது தந்தை தன் கண் முன்னால் சுமார் நூறு காயங்களை உடலெங்கும் தாங்கி உயிரற்று விழுவதைக் கண்ட பின்னர்கூட களத்தில் பழைய உற்சாகத்துடனேயே போரிட்டார்கள். நபி (ﷺ) அவர்கள் குறிப்பிட்ட மூன்று தளபதிகளும்

வீரமரணமடைந்த பின்னர் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களை முஸ்லிம் வீரர்கள் தளபதியாகத் தெரிவு செய்தனர். இந்தச் செய்தி நபியவர்களுக்கு எட்டிய போது, தந்தை கொல்லப்பட்ட ஒருவரிடம் தலைமைத்துவத்தை ஒப்படைத்திருக்கலாமே எனக் கூறி உஸாமாவைத் தளபதியாக்கியிருக்கலாமே என்ற கருத்தை முன்வைத்தார்கள்.

தளபதியாக

நபி (ஸல்) அவர்கள் தமது மரணத்தறுவாயில் ஒரு போருக்கு உஸாமாவைத் தளபதியாக்கினார்கள். அபூபக்கர், உமர் (ரலி) போன்ற மூத்த நபித்தோழர்கள் இருந்தபோதும் இளவயதுடைய உஸாமா (ரலி) தளபதியாக்கப்பட்டது குறித்து நபித்தோழர்களுக்கு மத்தியில் சர்ச்சை எழுந்தது. செய்தியறிந்த நபி (ஸல்) அவர்கள், 'இவரது தலைமைத்துவம் குறித்து சிலர் குறை கூறுகின்றனர். இவரது தந்தையின் தலைமைத்துவம் குறித்தும் குறை கூறப்பட்டது. உண்மையில் அவர் தலைமைத்துவத்திற்குத் தகுதியானவர்; மனிதர்களுள் எனக்கு அவர் விருப்பத்திற்குரியவர். அவருக்குப் பின் அவரது மகன் எனது விருப்பத்திற்குரியவர்' என்று கூறினார்கள் (புகாரி 3730)

நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின் அபூபக்கர் (ரலி) அவர்கள் உஸாமா (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பத் தீர்மானித்தார்கள். இதனால் அதிருப்தியடைந்த நபித்தோழர்கள் சிலரின் வேண்டுகோளுக்கிணங்க, உமர் (ரலி) அவர்கள் உஸாமாவின் தலைமை குறித்து அபூபக்கர் (ரலி) அவர்களிடம் பேசச் சென்றார்கள்.

அபூபக்கர் (ரலி) அவர்கள் அப்போது உமர் (ரலி) அவர்களிடம் நபியவர்களது நியமனத்தை மாற்றச் சொல்கிறீரா? எனக் கேட்டுக் கண்டித்தார்கள். அதன் பின்னர் உமர் (ரலி) அவர்கள், தனது தவறை உணர்ந்தது மட்டுமன்றி அவர் கலீபாவாக இருந்தபோது உஸாமா (ரலி) அவர்களைக் கண்டால், 'என் தலைவரே! நபியின் நேசத்திற்குரியவரே! என்றே அழைப்பார்கள். காரணம் கேட்டால், 'நபியவர்கள் இவரை எங்களுக்கு தளபதியாக நியமித்த நிலையில்தான் வஃபாத்தானார்கள்' என்று கூறுவார்கள்.

மேற்கூறிய நிகழ்ச்சி உஸாமா (ரலி) அவர்களின் போர்த்திறமைக்கான நற்சான்றாகக்கூட அமைவதைக் காணலாம்.

தந்தை விட்ட பணியில் தனயன்

நபியவர்கள் தயார் செய்த படை அவர்களது மரணத்தின் பின் கலீபாவால் வழியனுப்பப்பட்டது. அப்போது கலீபா அவர்கள் தமக்குத் துணையாக உமரை விட்டுச் செல்லுமாறு கேட்டதற்கிணங்க, உமர் (ரழி)அவர்களை விட்டுவிட்டுப் படை விரைந்தது. தனது தந்தை போரிட்ட அதே பகுதிகளில் படையை நகர்த்திச் சென்று உரோமப் பேரரசின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றி மிகப்பெரும் கனீமத்துடன் மதீனா வந்தார். பலஸ்தீனில் சில பகுதிகள் வெல்லப்பட்டு எகிப்து, வட ஆபிரிக்கா வெற்றிக்கான பாதைகளையும் திறந்து விட்டதுடன் உரோமர்கள் என்றால் வீழ்த்த முடியாத கொம்பர்கள் என்ற எண்ணத்தையும் தகர்த்துவிட்டு வந்தார். இந்தப் போரில் கிடைத்த கனீமத்தால் உஸாமாவின் படையினர் செல்வந்தர்களாயினர் என்று கூறுமளவு பெரும்வெற்றி கிடைத்தது.

போரில் கிடைத்த பாடம்

உஸாமா ஒரு போரில் பெரும் வெற்றி பெற்றார். அதேவேளை அதில் மிகப்பெரும் பாடத்தையும் பெற்றார்.

ஓர் எதிரி முஸ்லிம்களைக் கடுமையாகத் தாக்கிக் கொண்டு வந்தான். அவனால் பலருக்குப் பாதகம் ஏற்பட்டது. எனவே, அவனுடன் மோதி அவனை வீழ்த்த உஸாமா சென்றார். சண்டையின் போது அவன் தோல்வியுற்று, உஸாமா வாளை ஓங்கியபோது அவன், 'லாயிலாஹ இல்லல்லாஹ்' எனக் கூறினான். இருந்தாலும் உஸாமா அவனை வெட்டி விட்டார். இந்தச் செய்தி நபியவர்களுக்குத் தெரிந்த போது, 'அவன் கலிமா கூறிய பின்னரும் வெட்டினாயா?' எனக் கேட்டார்கள்.

அதற்கு உஸாமா, 'அல்லாஹ்வின் தூதரே! அவன் தன்னைக் காத்துக் கொள்ள அப்படிக் கூறினான்' என்று பதில் கூறினார்.

இது கேட்ட நபியவர்கள், 'நீ அவனது உள்ளத்தைப் பிளந்து பார்த்தாயா? நாளை மறுமையில் இந்தக் கலிமாவை உனக்கு எதிராகக் கொண்டுவந்தால் என்ன செய்வாய்?' என்று திரும்பத் திரும்பக் கேட்டார்கள். இது உஸாமாவின் உள்ளத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. 'இந்த யுத்தம் முடிந்த பின்னர் நான் இஸ்லாத்திற்கு வந்திருக்கக் கூடாதா?' என வேதனை கொள்ளும் அளவுக்கு நபிகளாரின் இந்தக் கேள்வி உஸாமாவின் உள்ளத்தில் வேலாய்ப் பாய்ந்தது. எனவே, கலிமா கூறிய எவருக்கு எதிராகவும் வாள் ஏந்தக் கூடாது என்பதில் உஸாமா உறுதியாக இருந்தார்.

அலீ (رضي الله عنه) அவர்களின் ஆட்சியின் போது ஏற்பட்ட குழப்பத்தில் தமக்கு உதவியாக நிற்குமாறு அலீ (رضي الله عنه)அவர்கள் உஸாமாவிடம் கேட்டார்கள். அதற்கு உஸாமா (رضي الله عنه) அவர்கள், “நீங்கள் ஒரு சிங்கக் குகையில் இருந்தாலும் உங்களுடன் வந்து நிற்க நான் தயங்கமாட்டேன். ஆனால், நான் இந்தப் போரை சரியெனக் கருதவில்லை. கலிமா கூறிய ஒருவருக்கு எதிராக நான் எனது வாளை எந்தச் சந்தர்ப்பத்திலும் தூக்கமாட்டேன்” எனக்கூறி மறுத்துவிட்டார்கள்.

உஸாமா அவர்கள் அலீ (رضي الله عنه) அவர்களுடன் மிக நெருங்கிய நட்பு வைத்திருந்த போதும் அந்தப் போர்ச் சம்பவத்தை நினைவில் வைத்து கலிமா கூறியவருக்கு எதிராக வாளே தூக்குவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

இந்த உத்தமரின் வாழ்வைப் படித்து அதனை நாம் நல்லதொரு முன்னுதாரணமாகக் கொள்வோமாக!



அதீஃ இப்னு ஹாதிம் அத்தாயீ (﵁)

அறியாமைக் காலத்தில் வாழ்ந்த கொடை வள்ளல்களுள் பிரபலமான ஒருவர்தான் ஹாதிம் அத்தாயீ. அவர்களது மகன் அதீஃ அவர்களது வரலாற்றைத்தான் நாம் இப்போது பார்க்க இருக்கின்றோம்.

ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பின்னர் நபி (ﷺ) அவர்கள் மேற்கொண்ட பிரச்சார யுக்தியால் இஸ்லாம் வெகு வேகமாகப் பரவ ஆரம்பித்தது. நபி (ﷺ) அவர்கள் இக்காலத்தில் மன்னர்களுக்கு விடுத்த இஸ்லாமிய அழைப்பும் வெற்றியளித்துக் கொண்டு வந்தது.

ஹாதிம் அவர்களுக்குப் பின்னர் அவருடைய மகன் அதீஃதான் 'தாயீ' கோத்திரத்தின் தலைவராக இருந்தார். போரில் கிடைக்கும் பொருட்களில் 1/4 பங்கு அவருக்கு வழங்குவதாகவும், அம்மக்கள் அவருக்குக் கட்டுப்படுவதாகவும் உடன்படிக்கை செய்யப் பட்டிருந்தது. நபி (ﷺ) அவர்களது ஆட்சி விரிவடைந்து பல சிற்றரசுகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு வந்தன. இதை அறிந்த அதீ தனது ஆட்சிக்கும் முஸ்லிம்களால் ஆபத்து வரப்போகின்றது என எண்ணி இஸ்லாத்தைக் கடுமையாக எதிர்த்தார். அவர் இஸ்லாத்தையோ நபி (ﷺ) அவர்களைப் பற்றியோ தெளிவாக அறிந்திருக்கவில்லை. அறியாமலேயே தனது அதிருப்தியைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி வந்தார்.

இஸ்லாத்தை ஏற்றல்

அதீஃ அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தது குறித்து அழகியதொரு சம்பவம் வரலாற்று நூற்களில் இருக்கிறது. இது குறித்து அவரே விளக்கியுள்ளார்.

நபி (ﷺ) அவர்கள் பற்றி நான் அறிந்தபோது அவர் மீது வெறுப்புக் கொண்டேன். என்னைப் போல் எவரும் அவர் மீது வெறுப்புக் கொண்டிருக்க மாட்டார்கள் என்றே எண்ணுகிறேன். அவ்வளவு அதிகமாக வெறுத்தேன். நான் என் சமூகத்தின் கிறிஸ்தவத்தைப் பின்பற்றக்கூடிய கண்ணியமான மனிதனாக மதிக்கப்பட்டேன். ஏனைய அரபுத் தலைவர்கள் போலவே போரில் 1/4 பங்கு எனக்கு என்றும், மக்கள் எனக்குக் கட்டுப்பட வேண்டும் என்றும் காலம் போய்க் கொண்டிருந்தது.

அப்போது நபி (ﷺ) அவர்களது பலம், அதிகாரம் விரிவானது. அவரது படை கிழக்கு மேற்கெல்லாம் பரவிச் சென்றது. அவரை எதிர்த்து நிற்கும் சக்தி என்னிடம் இருக்கவில்லை. எனவே, எனது பணியாளனை அழைத்து, 'நல்ல திடமான ஒட்டகத்தைத் தயார் நிலையில் வைத்திரு; முஹம்மது நபியோ அவரது படையோ இந்த ஊருக்குள் அடியெடுத்து வைத்தால், உடனே எனக்கு அதை அறிவித்து விடு' எனக் கூறி வைத்தேன். அதுபோல,

ஒரு நாள் அந்தப் பணியாள் என்னிடம் ஓடிவந்து, 'எஜமானே! முஹம்மதின் படை உங்கள் பூமியில் அடியெடுத்து வைத்தால் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எண்ணி இருந்தீர்களோ அதைச் செய்யுங்கள்' என்று கூறினான்.

நான் 'ஏன் அப்படிக் கூறுகின்றாய்' என்று கேட்டேன். அதற்கவன், 'ஒரு படையொன்று வந்தது, அது குறித்து நான் வினவிய போது அது முஹம்மதின் படையென தெரியவந்தது' என்று கூறினான்.

உடனே நான் ஒட்டகத்தைத் தயார்படுத்து எனக் கூறிவிட்டு என் திட்டப்படி கிறிஸ்தவர்கள் வாழும் ஷாம் பிரதேசத்துக்குத் தப்பியோடும் திட்டத்துடன் என் குடும்பத்தை ஒன்றுதிரட்டினேன்.

எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஓடும்போது தான் எனது சகோதரியைத் தவற விட்டுவிட்டதை உணர்ந்தேன். மீண்டும் அங்கு சென்று அழைத்து வருவதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. எனவே, ஷாமுக்குச் சென்று அங்குள்ள கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தேன். நான் பயப்பட்டது போன்றே என் சகோதரி கைதியானாள். முஹம்மதின் படை எனது நாட்டைப் பிடித்து எனது சகோதரியையும் கைதியாகப் பிடித்துச் சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

சகோதரியின் கதை :

போர்க் கைதிகள் மஸ்ஜிதுக்கு முன்னால் நிறுத்தப் பட்டிருந்தனர். நபி (ﷺ) அவர்கள் மஸ்ஜிதுக்கு வந்த போது அதீயின் சகோதரி நபி (ﷺ) அவர்களைப் பார்த்து,

'அல்லாஹ்வின் தூதரே! என் தந்தை மரணித்துவிட்டார். என் பொறுப்புதாரி ஓடிவிட்டார். எனக்கு அருள் புரியுங்கள். அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவான்' என்று கேட்டுக் கொண்டாள்.

நபி (ﷺ) அவர்கள், 'யார் உன் பொறுப்புதாரி?' என வினவினார்கள். அதற்கு அவள், 'அதீஃ இப்னு ஹாதிம்' என்று

கூறினாள். நபி (ﷺ) அவர்கள் 'அல்லாஹ்வையும் அவனது தூதரையும் கண்டு வெருண்டோடியவரா?' எனக் கேட்டுவிட்டுச் சென்று விட்டார்கள்.

இரண்டு நாட்கள் இப்படி நடந்தது. மூன்றாம் நாள் நபி (ﷺ) அவர்கள் வந்தபோது கேட்டால் கிடைக்காது என சளைத்துப்போய் அவள் கேட்காமல் இருந்தாள். அப்போது ஒருவர் மீண்டும் கேட்குமாறு கூறவே கேட்டாள்.

அப்போது நபி (ﷺ) அவர்கள், 'உன்னை விடுவிக்கிறேன்' என்று கூறினார்கள். அதற்கவள், 'நான் ஷாமுக்குச் சென்று என் உறவினர்களுடன் சேர்ந்து வாழ விரும்புகின்றேன்' என்று கூறினாள். இதுகேட்ட நபி (ﷺ) அவர்கள், 'நல்லது; ஆனால், அவசரப்பட வேண்டாம். ஷாமுக்கு உன்னை அழைத்துச் செல்லக்கூடிய நம்பிக்கையான ஒருவர் கிடைக்கும் வரை நீ இங்கேயே இருக்கலாம். உனக்கு நம்பிக்கையான ஒருவர் கிடைத்துவிட்டால் கூறு; நான் அனுப்பி வைக்கிறேன்' என்று கூறினார்கள். அவள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தாள். இந்த முறை பேசிப்பார்க்குமாறு கூறியவர் யார் என விசாரித்த போது அவர் அலீ (رضي الله عنه) அவர்கள் எனப் பதில் கிடைத்தது.

பயணம் ஆரம்பமானது

சிறிது நாட்கள் அவள் மதீனாவிலேயே இருந்தாள். அப்போது மதீனா வந்த பயணக் கூட்டத்தில் தனக்கு நம்பிக்கையானவர்கள் இருப்பதை அறிந்து, செய்தியை நபி (ﷺ) அவர்களிடம் கூறினாள். உடனே நபி (ﷺ) அவர்கள், அவள் பயணிப்பதற்காக ஓர் ஒட்டகத்தையும், செலவுக்குப் பணத்தையும் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். பயணம் தொடங்கியது.

சகோதரியின் ஆலோசனை

என் சகோதரியின் செய்திகள் எனக்குக் கிடைத்தன. முஹம்மது இவ்வளவு நல்லவர் என்று நான் நினைத்திருக்கவில்லை. சகோதரியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்.

அவள் வந்ததும், 'அநியாயக்காரனே! நீ உனது குடும்பத்தை மட்டும் காப்பாற்றி விட்டு என்னை விட்டுவிட்டாயே' என்றெல்லாம் என்னை ஏசத்துவங்கினாள். நான் என் நிலையைக் கூறி அவளை சமாதானம் செய்தேன். அவள் மிகவும் புத்திசாலியான பெண். இறுதியில் நான் அவளிடம், 'சகோதரியே! முஹம்மதைப் பற்றி என்ன

நினைக்கின்றாய்?' என்று கேட்டேன். அதற்கவள், 'நீங்கள் விரைவாக அவருடன் சேர்ந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கின்றேன். அவர் நபியாக இருந்தால் அவருடன் முதன்முதலில் இணைபவர்களுக்குச் சிறப்பு இருக்கிறது. (அது உங்களுக்குக் கிடைக்கும்) அவர் ஒரு மன்னராக இருந்து, அவரிடம் சென்றால் நீங்கள் அவமானப் படுத்தப்பட மாட்டீர்கள். நீங்கள் உங்கள் கண்ணியத்துடனேயே வாழ்வீர்கள்' என்று கூறினாள்.

சத்தியத்தை நோக்கிய பயணம்

நான் மதீனா செல்லலானேன். முன்கூட்டியே இதுகுறித்து அறிவிக்கவோ அவரிடம் பாதுகாப்புக்காக ஒப்பந்தமோ செய்யவில்லை. “அதீயின் கரத்தை அல்லாஹ் என் கரத்துடன் இணைக்க வேண்டும்” என்று நபி (ﷺ) அவர்கள் கூறியதாக அறிந்தேன்.

நான் மதீனா சென்று பள்ளியில் அவர்களைச் சந்தித்து ஸலாம் கூறினேன். பிறகு நான் என்னை அறிமுகப்படுத்தினேன். உடனே, நபி (ﷺ) அவர்கள் எழுந்து என் கையைப் பற்றி என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

அப்போது, ஒரு பலவீனமான வயோதிப மாது சிலருடன் வந்து அவரிடம் பேசியபோது, நீண்ட நேரம் அவளது பிரச்சினையைக் கேட்டுத் தீர்த்தார்கள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த நான் 'சத்தியமாக இவர் ஒரு மன்னராக இருக்க முடியாது' என எனக்குள் கூறிக்கொண்டேன்.

பின்னர் நபிகளாரின் வீடு சென்றதும் தோலாலான ஒரு விரிப்பை எடுத்துப்போட்டு அமருமாறு கூறினார்கள். அவர் அமர்வதற்கு முன்னர் அமரக் கூச்சப்பட்ட நான், 'இல்லை, நீங்கள் இருங்கள்' எனக் கூறியபோது, அவர் என்னை அமரச் செய்தார். நான் அமர்ந்த பின் வேறு விரிப்பு இல்லாததால் அவர் தரையில் அமர்ந்தார். இதைப் பார்த்த நான் மனதுக்குள், 'இது மன்னர்களது வழக்கமல்ல' என எனக்குள் கூறிக்கொண்டேன். (ஏனெனில், மன்னர்கள் தமக்கு முன்னர் எவரும் அமர்வதை விரும்பமாட்டார்கள். தான் தாழ்ந்த நிலையில் இருக்கவும் மாட்டார்கள்.)

பின்னர் நபி (ﷺ) அர்கள் என்னைப் பார்த்து, 'நீங்கள் கிறித்தவத்துக்கும் மதம் மாறுதலுக்கும் இடைப்பட்ட ஒரு மார்க்கத்தைப் பின்பற்றவில்லையா?' என்று வினவினார்கள். நான், 'ஆம்' என்று பதிலளித்தேன். தொடர்ந்து நபியவர்கள், 'உங்களது மார்க்கச் சட்டப்படி ஹராமான முறையில் நீங்கள் வரிகளையும்

பங்குகளையும் பெறவில்லையா?' என்று வினவினார்கள். இந்தக் கேள்விகள் மூலம் இவர் இறைத்தூதர்தான் என்பதை அறிந்துகொண்டேன்.

'அதீஃயே! இந்த மக்கள் வறுமையில் வாடுவதைப் பார்த்து நீங்கள் இந்த மார்க்கத்தை ஏற்க மறுக்கிறீர்களா? அப்படியாயின், இப்போது நான் சொல்வதைக் கேளுங்கள். இவர்கள் மத்தியில் செல்வம் பெருகும்; கொடுப்பவர் இருப்பார்; வாங்க ஆள் இல்லை என்ற அளவுக்கு செல்வம் பெருகும்.'

'அதீஃயே! இந்த மார்க்கத்தைப் பின்பற்றுகின்றவர்கள் குறைவாகவும், இதை எதிர்ப்பவர்கள் அதிகமாகவும் இருப்பது இந்த மார்க்கத்தை ஏற்கத் தடையாக இருக்கின்றதா? காதிஸிய்யா நாட்டிலிருந்து ஒரு பெண் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சாமல் கஃபாவைத் தரிசித்துச் செல்லும் அளவுக்கு எங்களுக்கு அச்சமற்ற சூழ்நிலை ஏற்படும்.

அதீயே! அரசர்களும் சுல்தான்களும் முஸ்லிம்களாக இல்லையே! ஆட்சி அதிகாரம் இறைமறுப்பாளர்கள் கையில்தானே இருக்கின்றது என்பதுவே இந்த மார்க்கத்தை ஏற்கத் தடையாக இருந்தால் ஈராக்கின் பாபிலோனில் உள்ள அரச மாளிகைகளை முஸ்லிம்கள் வெற்றிகொண்டார்கள் கிஸ்ரா (ரோம) மன்னனின் கருவூலங்கள் எல்லாம் முஸ்லிம்கள் கைவசம் வந்துவிட்டது என்ற செய்தியை நீ உன் செவிகளால் கேட்கலாம்' என்று கூறினார்கள்.

உடனே, நான் ஆச்சர்ய மிகுதியால், 'உரோமப் பேரரசர் கிஸ்ரா இப்னு ஹுர்மூஸ் அவர்களையா குறிப்பிடுகின்றீர்கள்?' எனக் கேட்டேன். அதற்கு நபி (ﷺ) அவர்கள், 'ஆம்! கிஸ்ராவை வெற்றிகொள்வார்கள்' என்று கூறினார்கள். அப்போது தான் நான் ஷஹாதத் கலிமாவை மொழிந்து தூய இஸ்லாமிய மார்க்கத்தில் நுழைந்துகொண்டேன்.

இஸ்லாமிய மார்க்கத்தை அறிந்துகொள்ளும் ஆர்வம்

அதீஃ (ؓ) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றதுடன் அதைத் தெளிவாக அறிந்து பின்பற்ற வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டினார்கள்.

“.... இன்னும் ஃபஜ்ரு (அதிகாலை) நேரம் என்ற வெள்ளை நூல் (இரவு என்ற) கருப்பு நூலிலிருந்து தெளிவாகத் தெரியும் வரை உண்ணுங்கள்; பருகுங்கள். பின்னர், இரவு வரும் வரை நோன்பைப் பூர்த்தி செய்யுங்கள்...” (அல்குர்ஆன் - 2:187)

என்னும் வசனம் அருளப்பட்டதும் ஃபஜ்ருடைய நேரத்தை அறிந்து கொள்வதற்காகத் தலையணைக்கு அடியில் வெள்ளை மற்றும் கறுப்பு நூல்களை வைத்துக்கொண்டு அதனைப் பார்த்து நேரத்தைத் தீர்மானித்தார். பின்னர் நபி (ﷺ) அவர்களிடம், 'வெள்ளை, கறுப்பு நூல் தெரியும் வரை என்றால் என்ன?' என்று வினவினார்கள். அதற்கு நபி (ﷺ) அவர்கள், 'அது நூலைக் குறிக்காது; இரவின் இருள் நீங்கி பகலின் வெளிச்சம் ஆரம்பமாகும் நேரம் வரை உண்ணலாம், பருகலாம் என்பதைக் குறிக்கும்' என்று விளக்கமளித்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

"அவர்கள் அல்லாஹ்வை விட்டும் தம் பாதிரிகளையும், தம் சந்நியாசிகளையும், மர்யமுடைய மகனாகிய மஸீஹையும் தெய்வங்களாக்கிக் கொள்கின்றனர். ஆனால், அவர்களோ ஒரே இறைவனைத் தவிர (வேறெவரையும்) வணங்கக்கூடாதென்றே கட்டளையிடப்பட்டுள்ளார்கள். வணக்கத்திற்குரியவன் அவனையன்றி வேறு இறைவன் இல்லை. அவன் அவர்கள் இணை வைப்பவற்றை விட்டும் மிகவும் பரிசுத்தமானவன்" (அல்குர்ஆன் -9:31)

இவ்வசனம் குறித்து அதீஃ (ரழி) அவர்கள், நபி (ﷺ) அவர்களிடம் விளக்கம் கேட்டார். கிறிஸ்தவர்கள் பாதிரிகளை வணங்குவதில்லை. அப்படி இருக்க அவர்களைக் கடவுள்களாக எடுத்துக்கொண்டதாக எப்படிக் கூற முடியும்? எனக் கேட்டார். அதற்கு நபி (ﷺ) அவர்கள், பாதிரிகள் அல்லாஹ் ஆகுமாக்கியதைத் தடை செய்தார்கள். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். அவ்வாறே அல்லாஹ் தடை செய்ததை அவர்கள் ஆகுமாக்கினர். அதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர். இதுதான் கிறிஸ்தவர்கள் பாதிரிகளுக்குச் செய்த வழிபாடாகும் என்று கூறினார்கள். இவ்வாறு அதீஃ (ரழி) அவர்கள் மார்க்க விளக்கங்களை நபி (ﷺ) அவர்களிடம் கேட்டுத் தெளிவு பெற்றுக்கொண்டார்கள்.

சொன்னது நடந்தது

இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்த அதீஃ (ரழி) நீண்ட காலம் வாழ்ந்தார்கள். அவர்கள் அடிக்கடி நபியவர்கள் கூறிய இரண்டும் நடந்துவிட்டது. மூன்றாவதும் நடந்துதான் தீரும் என்று கூறிவந்தார்கள்.

இஸ்லாம் மேலோங்கி முஸ்லிம்களுக்கு மிகப்பெரும் பாதுகாப்பு ஏற்பட்டு ஒரு பெண் தன்னந்தனியாக காதிஸிய்யாவிலிருந்து வரக்கூடிய அளவிற்கு அச்சமற்ற சூழ்நிலை ஏற்பட்டது.

கிஸ்ராவின் மீது தாக்குதல் தொடுத்த முஸ்லிம் குதிரைப் படையின் முன்னனி நபர்களுள் நானும் ஒருவனாக இருந்தேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக மூன்றாவதும் நடக்கும் என்று உறுதிபடக் கூறினார்கள்.

ஆம்! மூன்றாவது முன்னறிவிப்பும் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களது ஆட்சிக் காலத்தில் நடந்தது. ஸகாத் பணத்தை வைத்துக் கொண்டு அதைப் பெருபவர்களைத் தேடியலையும் அளவுக்கு முஸ்லிம் உலகில் வறுமை ஒழிக்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ் கிறிஸ்தவத்திலிருந்து தூய இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்த நபித்தோழர் மங்காப் புகழைப் பெற்ற அதீஃ இப்னு ஹாதிம் (﵁) அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!



நெறி தவறாது வாழ்ந்த நபித்தோழர்
ஹபீப் இப்னு ஸைத் (ரலி)

ஹபீப் இப்னு ஸைதுல் அன்சாரி (ரலி) அவர்கள் புகழ்பெற்ற நபித்தோழர்களுள் ஒருவராவார். இவருடைய பெற்றோர் ஸைது இப்னு ஆஸிம் மற்றும் நுஸைபா பின்து கஅப் (உம்மு அம்மாரா) ஆகியோருடன் இவரும் இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவினார். அகபா உடன்படிக்கையில் பங்குபெற்ற 73 உத்தம ஸஹாபாக்களில் இம்மூவரும் அடங்குவர். அண்ணலார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்று மதீனாவில் குடியேறிய பின்னர் ஹபீப் அவர்கள் அண்ணலாருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள். அண்ணலார் பங்கேற்ற அனைத்துப் போர்களிலும் இவரும் பங்கேற்று பல்வேறு சாதனைகளைப் புரிந்தார்.

முஸைலமாவின் வெறியாட்டம்

அரேபியத் தீபகற்பத்தின் தெற்கே யமாமாவில் முஸைலமா எனும் கொடியவன் தோன்றி நுபுவ்வத் எனும் நபிப்பட்டம் தனக்குக் கிடைத்துவிட்டதாகப் பிரகடனம் செய்தான். இந்தப் பொய் வாதத்தை ஏற்கும்படி மக்களை வற்புறுத்தினான்.

தனது கோத்திரமான ‘பனூ ஹனீப்’ குலத்தாரைத் தூண்டிவிட்டு முஹம்மத் (ஸல்) அவர்களை ஏற்றுக்கொண்ட முஃமின்களுக்குத் தீங்கு விளைவித்தான். இவன் வாழ்ந்த பகுதியில் இஸ்லாமிய அழைப்புப் பணிக்காக நபி (ஸல்) அவர்களால் அனுப்பப்பட்ட தோழர்களையும் துன்புறுத்தினான். அத்தோடு அண்ணலாருக்கு வழங்கப்பட்ட நபித்துவத்திலும் உரிமை கொண்டாடினான். ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தன் அவையில் வீற்றிருந்தபோது ஒருவர் கடிதம் ஒன்றை ஏந்திய வண்ணம் வந்தார். முஸைலமா இக்கடிதத்தைக் கொடுத்தனுப்பியதாகக் கூறி அண்ணலாரிடம் அதைக் கொடுத்தார். அண்ணலாருக்கு அதில் உள்ளவைகள் வாசித்துக் காட்டப்பட்டது. அதில், ‘இறைத்தூதர் முஸைலமா இறைத்தூதர் முஹம்மதுக்கு எழுதிக் கொள்வது என்னவென்றால், உமக்கு சாந்தி உண்டாகட்டும். நானும் உம்முடன் பங்குதாரர் ஆக்கப்பட்டுள்ளேன். இப்பூமியில் இரண்டிலொரு பகுதி எமக்கும், மீதி குறைஷிகளுக்கும் உரியதாகும். ஆனால், குறைஷிகள் அக்கிரமக்காரர்கள்’ என்று எழுதப்பட்டிருந்தது. இதைக்கேட்ட அண்ணலார் (ஸல்) அவர்கள் தனது எழுத்தார்களுள் ஒருவரை அழைத்து முஸைலமாவிற்கு இப்படி பதில் வரைந்தார்கள்.

முஸைலமாவிற்கு எதிராக நபி (ﷺ) அவர்களின் பதில்

‘பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். மாபெரிய பொய்யன் முஸைலமாவிற்கு இறைத்தூதர் முஹம்மத் எழுதிக் கொள்வது என்னவென்றால், நேர்வழியில் செல்வோருக்கு சாந்தி உண்டாகட்டும்! பரந்து விரிந்த இப்பூமி அல்லாஹ் ஒருவனுக்கே உரியது. அவன் தனது அடியார்களுள் தான் நாடியவர்களுக்கு அதில் அதிகாரத்தை வழங்குவான். ஆனால், அல்லாஹ்வை அஞ்சி அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களுக்கு மட்டுமே நல்ல முடிவு உண்டு.’

இக்கடிதத்தை அதே மனிதரிடம் கொடுத்தனுப்பினார்கள். பதில் கடிதத்தைப் பார்த்த முஸைலமா ஆத்திரத்தால் குமுறி எழுந்தான். தூதுத்துவத்தை முதலீட்டுப் பிழைப்பாகவும் பாரம்பரியச் சொத்தாகவும் கருதிக் கொண்டிருந்த அவனுக்கு இக்கடிதம் சாட்டையடியாக அமைந்தது. அவனது நப்பாசைகளையெல்லாம் நபி (ﷺ) அவர்களது பதில் தகர்த்தெறிந்துவிட்டது. அவன் கர்ஜித்தான்; சினம் கொண்டான். அவன் வாழும் பிரதேசங்களுக்கு தூய இஸ்லாமிய மார்க்கத்தைப் போதிப்பதற்காக நபி (ﷺ) அவர்கள் அனுப்பிய தூதர்களையெல்லாம் துன்புறுத்தினான். பனூ ஹனீப் கோத்திரத்தை தூண்டிவிட்டு அத்தூதர்களுக்குத் துன்பமிழைத்தான்.

ஹபீப் (رضي الله عنه) அவர்களின் இறுதிப் பயணம்

முஸைலமாவின் அடாவடித்தனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அறிந்த நபி (ﷺ) அவர்கள், அவனது அக்கிரமங்களை அடக்கும் நோக்கில் ஆரம்பமாக ஒரு கடிதம் மூலம் எச்சரிக்க நாடினார்கள். அதன் விளைவாக கடிதத்தை முஸைலமாவிடம் கொண்டு செல்ல அருமைத் தோழர் ஹபீப் (رضي الله عنه) அவர்களை அண்ணலார் தெரிவுசெய்தார்கள். அதன்படி கடிதத்தை எடுத்துக்கொண்டு யமாமாவை நோக்கி ஹபீப் (رضي الله عنه) அவர்கள் விரைந்தார்கள். உன்னதமான பொறுப்பை அண்ணலார் தன்னிடம் ஒப்படைத்திருப்பதை எண்ணி அவருடைய மனம் மகிழ்ந்தது. கடிதத்தைப் பார்த்துவிட்டு முஸைலமா ஒருவேளை திருந்திவிட்டால் தனக்குக் கிடைக்கும் நன்மைகளை எண்ணி மனமகிழ்ந்தார்கள். ஆனால், யமாமாவை நோக்கிய இப்பயணம் தனது இறுதிப்பயணம் என்பதை ஹபீப் (رضي الله عنه) அவர்கள் அறிந்திருக்கவில்லை.

ஹபீப் இப்னு ஸைதுல் அன்சாரி (رضي الله عنه) அவர்கள் முஸைலமாவைச் சந்தித்து, தான் கொண்டு வந்த கடிதத்தை ஒப்படைத்தார். அதைப் படித்துப் பார்த்ததும் முஸைலமாவின் இருண்ட இதயம் இன்னும் கருமையடைந்தது. இக்கடிதத்தில்

அண்ணலாரின் பொன்மொழிகளைப் படித்தும் படிக்காதவனைப் போல முகத்தைத் திருப்பிக் கொண்டான். வழிகேட்டிலேயே நிலைத்திருப்பது என்று தீர்மானித்து ஹபீப் (ﷺ) அவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். தூதர் பொறுப்பைச் சுமந்து செல்லும் எவரையும் அரபியர்கள் தொல்லைப்படுத்தமாட்டார்கள். ஒருவன் எவ்வளவுதான் கடும் பகைவனாக இருந்த போதிலும் மற்றொரு குழுவின் தூதர் என்ற அந்தஸ்துடன் வந்தால் அவர் மதிக்கப்படுவார். தீங்குகள் செய்யப்படமாட்டார். அரபியர்களின் நற்குணங்களுள் இதுவம் ஒன்று.

ஆனால், முஸைலமாவிடம் இதுபோன்ற நற்பண்புகள் காணப்படவில்லை. அவன் அயோக்கியனாகவும், மனிதாபிமானம் அற்றவனாகவும் இருந்தான். நபி (ﷺ) அவர்கள் தூதராக அனுப்பிய ஹபீப் (ﷺ) அவர்கள் மீது முஸைலமா அக்கிரமங்கள் பலவற்றை அவிழ்த்துவிட்டான். எப்படியாவது ஹபீப் தன்னை நபியாக ஏற்றுத் தன் பக்கம் இணைந்துகொள்ள வேண்டும் என்பதுதான் அவனது ஆசையாக இருந்தது. என்னை நபியாக ஏற்றுக்கொள்; இல்லையெனில் உன்னைக் கொலை செய்து விடுவேன் என மிரட்டினான். ஹபீப் (ﷺ) அவர்கள் பொது மக்கள் மத்தியில் தன்னை நபியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக முஸைலமா ஒரு சூழ்ச்சி செய்தான். தன் மக்களுக்கு மத்தியில் அவர் என்னை ஏற்றுக்கொள்ள வைக்க வேண்டும் என்பது அவனது ஆசையாக இருந்தது. அதற்காக ஒரு நாளை அவன் தெரிவு செய்தான். குறிப்பிட்ட அந்த நாளில் முஸைலமாவை ஏற்றுக்கொண்ட மக்களுக்கு மத்தியில் ஹபீப்(ﷺ) அவர்கள் விலங்குகள் மாட்டப்பட்ட நிலையில் கொண்டுவரப்பட்டார். ஹபீபின் மேனியெங்கும் காயங்கள். இனி உயிருக்குப் பயந்தாவது என்னை நபியாக ஏற்கக்கூடும் என்று எண்ணிய முஸைலமா அவரிடம் இப்படி வினவினான்.

'நீர் முஹம்மதை இறைத்தூதராக ஏற்கின்றீரா?'

'ஆம்!' என்று பதிலுரைத்தார் ஹபீப் அழுத்தமாக.

'என்னையும் இறைத்தூதராக ஏற்பீரா..?'

'முடியாது; நீ சொல்லும் எதையும் நான் ஏற்கத் தயாராக இல்லை' என்று ஓங்கி முழங்கினார் ஹபீப்.

இதைக் கேட்டதும் முஸைலமாவின் முகம் ஆத்திரத்தால் சிவந்தது. பொது மக்களைத் திரட்டி வந்து அவர்கள் முன் ஏதோ சாதனை படைக்கப்போவதாகக் கருதிக் கொண்டிருந்த அக்கொடியவனின் எண்ணங்களை ஹபீப் (ﷺ) அவர்கள் தூள்

தூளாக்கிவிட்டார்கள். முஸைலமா வெறி பிடித்த நாய் போல மாறினான்.


ஈமானின் உறுதி

பின்னர் முஸைலமா தனது அடிவருடிகளின் உதவியால் ஹபீப் (رضي الله عنه) அவர்களை சித்திரவதை செய்து உயிரைப் பறிக்க முடிவுசெய்தான். மறு வினாடி..! ஹபீப் (رضي الله عنه) அவர்களின் உடல் உறுப்புக்கள் துண்டு துண்டாக வெட்டி சிதைக்கப்பட்டன. சற்று நேரத்தில் ஹபீப் (رضي الله عنه) அவர்கள் கொத்தப்பட்ட மாமிசம் போல் ஆகிவிட்டார்கள். இத்தகைய பயங்கரக் கொடுமைகளைக் கொடுத்தும்கூட ஹபீப் (رضي الله عنه) அவர்களின் இஸ்லாமிய உணர்வுகளை வெறியன் முஸைலமாவால் அசைக்க முடியவில்லை.

மரணம்

தனது உயிர் பிரிந்தாலும் சரி இஸ்லாத்தை விட்டு விடமாட்டேன் என்ற ஓர் இலட்சியத்தோடு இருந்து முஸைலமாவின் கொடுமைக்குட்பட்டு இறுதி மூச்சுவரை கலிமா ஷஹாதாவை மொழிந்தபடியே இறைவனை நோக்கிச் சென்றார்கள் ஹபீப் (رضي الله عنه) அவர்கள்.

இந்த வரலாறு இஸ்லாமிய மார்க்கத்தை துச்சமாக எண்ணும் முஸ்லிம்களுக்குச் சிறந்த படிப்பினையாக அமையட்டும்.



கஃபாவில் கலிமாவை மொழிந்த அபூதர் அல் கிபாரி (ரலி)

இவர் ஆரம்ப கால முஸ்லிம்களுள் ஒருவராவார். இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்த ஆரம்ப நபர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார். உலகப்பற்றற்ற சுபாவம், சத்தியத்தை துணிந்து சொல்லும் வீரம், அறிவும் செயலும் ஒன்றிணைந்த செயற்பாடு, மார்க்கத்தைச் சொல்வதில் மக்களின் தூற்றுதல்களைப் பொருட்படுத்தாத தன்மை எனப் பல நல்ல பண்புகளின் இலக்கணமாகத் திகழ்ந்தவர். இவரின் இயற்பெயர் ஜுன்துப் இப்னு ஜுனாதா என்பதாகும். இருப்பினும் அபூதர் அல்கிபாரி என்ற பெயரில்தான் பிரபலமாகியுள்ளார்.

இஸ்லாமிய மார்க்கத்தில் இணைதல்

அபூதர் அல்கிபாரி (ரலி) அவர்கள் அறியாமைக் காலத்திலும் சிலை வணக்கம் புரியாதவராகவே இருந்தார். 'அல்கிபாரிய்யா' என்பது இவரது கோத்திரம். கொள்ளையடிப்பதையும் வழிப்பறியையும் குலத் தொழிலாகக் கொண்டிருந்தது இக்கோத்திரம்.

இக்கோத்திரத்தில் பிறந்த இவர் எப்படி இஸ்லாத்தில் இணைந்தார் என்பது குறித்து அவரே கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

'அபூதர் அல்கிபாரி (ரலி) கூறினார்கள் : மக்காவில் ஒருவர் தன்னை நபி என வாதிடுவதாகக் கேள்விப்பட்டு அதுபற்றி அறிந்து வர சகோதரரை அனுப்பினேன். அவர் சென்று நபியவர்களைச் சந்தித்து விட்டு வந்தபோது, நான் அவரிடம் அவரது அபிப்பிராயத்தைக் கேட்டேன் அதற்கவர், 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அந்த மனிதர் நல்லதை ஏவுகிறார்; தீமையைத் தடுக்கின்றார்' என்று கூறினார். நான் நேரடியாக நபியவர்களைச் சந்திக்க விரும்பி மக்காவுக்குப் புறப்பட்டேன். எனக்கு நபியவர்களைத் தெரியாது. அதேவேளை, எவரிடமாவது அவர் பற்றி விசாரிப்பதையும் நான் விரும்பவில்லை. அதன்படி மக்கா வந்து கஃபாவில் ஸம்ஸம் நீரைக் குடித்துக்கொண்டு நேரத்தைக் கடத்தினேன்.

பின்னர் அலீ (ரலி) அவர்கள் மூலம் நபியவர்களைச் சந்தித்து இஸ்லாத்தில் இணைந்து கொண்டேன். நபி (ஸல்) அவர்கள் 'அபூதர்ரே! இந்த விஷயத்தை மறைவாக வைத்திருங்கள். உங்கள் ஊருக்குச் சென்று மக்காவில் இஸ்லாம் செல்வாக்குப் பெற்றதாக அறிந்தால்

இங்கே வாருங்கள்' என்று கூறினார்கள். எனினும், 'உங்களைச் சத்தியத்தைக் கொண்டு அனுப்பியவன் மீது ஆணையாக! இந்த மக்கள் மத்தியில் நான் இஸ்லாத்தைப் பகிரங்கப்படுத்துவேன்' என்று நான் கூறினேன்.

பின்னர், மஸ்ஜிதில் குறைஷிகள் குழுமியிருக்க, அங்கு வந்து 'குறைஷிகளே! அல்லாஹ் ஒருவன் மட்டுமே வணக்கத்திற்குரிய இரட்சகன்; முஹம்மத் (ﷺ) அவர்கள் அவனது அடியாரும் அவனுடைய திருத்தூதருமாவார் என்று சாட்சி கூறுகிறேன் என சத்தமாகக் கூறினேன். அவர்கள் அப்படியே திரண்டு வந்து கொலை வெறியோடு என்னைத் தாக்கினர். அப்போது அப்பாஸ் (அவர் அப்போது இஸ்லாத்தில் இணைந்திருக்கவில்லை) அங்கு வந்து என்னை அவர்களிடமிருந்துப் பாதுகாத்தார். குறைஷிகளைப் பார்த்து, 'இவர் கிபாரி கோத்திரத்தைச் சேர்ந்தவர்; உங்கள் வியாபாரிகள் இவர்களைக் கடந்துதான் போக வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்' என்று கூறினார். அதன்பின் அவர்கள் என்னை விட்டு விட்டார்கள். மறுநாள் காலையிலும் கஃபாவில் கலிமாவைப் பகிரங்கமாக மொழிந்தேன். முதல் நாள் நடந்தது போன்றே அன்றும் நடந்தது. (சுருக்கம் புகாரி 3861)

இந்நிகழ்ச்சி அபூதர் (رضي الله عنه) அவர்களிடம் காணப்பட்ட சத்தியத் தாகத்தையும் துணிவையும், சத்தியத்திற்காகச் சோதனைகளைத் தாங்கிக் கொள்ளும் தியாக உணர்வையும் படம் பிடித்துக் காட்டுகின்றது. கஃபாவில் கலிமாவைப் பகிரங்கமாக மொழிந்த முதல் முஸ்லிமாக இவர் திகழ்கிறார்.

தஃவாப் பணியில் அபூதார் (رضي الله عنه)

மக்காவாசிகளே மக்காவில் இஸ்லாத்தைப் பகிரங்கப்படுத்த முடியாத சூழ்நிலையில் கஃபாவில் பகிரங்கமாகக் கலிமா முழக்கம் செய்த முதல் முஸ்லிம் அபூதர் ஆவார். அவர் தனது ஊர் சென்றால் சும்மாவா இருப்பார். அங்கு அவர் சத்தியப் பிரச்சாரத்தைத் தீவிரமாகச் செய்தார். இதன் மூலம் கிபாரி கோத்திரம் இஸ்லாமியக் கோத்திரமாக மாறியது. வழிப்பறிக் கொள்ளை என்ற கொடிய மனம் கொண்ட அவர்களையும் இஸ்லாம் ஆரத்தழுவியது.

மதீனா வருகை

நபி (ﷺ) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் வந்த பின் ஒரு நாள் மதீனாவை நோக்கி ஒரு மக்கள் கூட்டம் அணிதிரண்டு வந்தது. அவர்கள் இஸ்லாத்திற்கெதிராக அணிதிரண்டவர்களல்லர். அவர்களின் நாவுகளில் தக்பீர் முழக்கம். ஆம்! அபூதர்

அல்கிபாரியுடன் கிபாரி கோத்திரத்தினர் வந்து கொண்டிருந்தனர். தன்னந்தனியாக நபியவர்களிடமிருந்து சென்ற அபூதர், தனது கோத்திரத்துடன் மதீனா வந்து நபியவர்களைச் சந்தித்தார்கள்.

கிபாரி கோத்திரத்தை அல்லாஹ் மன்னிப்பானாக! அது இஸ்லாத்தை ஏற்றது; அல்லாஹ் அதனை ஸலாமத்தாக்குவானாக என்று நபி (ﷺ) அவர்கள் துஆச் செய்தார்கள். (முஸ்லிம் - 2483, அஹ்மத் 8/2158)

தபூக் போரில் தனித்தவர்

தபூக் போர் முஸ்லிம்கள் சந்தித்த மிக முக்கிய போர்களில் ஒன்றாகும். இப்போரின் போது பலர் பின்வாங்கினர். நபி (ﷺ) அவர்கள் போய்க் கொண்டிருக்கும்போதே சிலர், அவர் வரவில்லை; இவர் வரவில்லை எனக் கூறிக் கொண்டு சென்றனர். அதற்கெல்லாம் நபி (ﷺ) அவர்கள், 'விடுங்கள் அதில் ஏதும் நலவிருக்கும் அல்லது அவர் பின்னால் வரலாம்; அப்படி இல்லையென்றால் அவருடைய தொல்லையிலிருந்து அல்லாஹ் நம்மைக் காத்ததாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று ஆறுதல் கூறிக்கொண்டு வந்தார்கள். அபூதர் பின்வாங்கி விட்டார் என்றும் கூறப்பட்டது.

போருக்கு வந்த அபூதர் (رضي الله عنه) அவர்களது ஒட்டகம் இடையில் இடைஞ்சல் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. எனவே, அபூதர் தனது பொதிகளைச் சுமந்து கொண்டு சுட்டெரிக்கும் பாலைவன மணலில் நடந்தே படையணியை நோக்கிப் புறப்பட்டார். அவர் படையின் கண்ணுக்கெட்டிய தூரத்தில் வந்தபோது ஒருவர் பின்னால் திரும்பிப் பார்த்து விட்டு இதோ ஒருவர் நடந்து வருகிறார் என்று கூறினார். அப்போது நபியவர்கள், அவர் அபூதர்ராக இருக்கட்டும் எனக் கூறினார்கள். அவர் அண்மித்த போது, அவர் அபூதர்தான் எனத் தோழர்கள் கூறினார்கள். அப்போது நபி (ﷺ) அவர்கள் :

'அல்லாஹ் அபூதருக்கு அருள் புரிவானாக! தனிமையில் நடந்தார்; தனிமையில் மரணிப்பார்; தனிமையில் எழுப்பப்படுவார்' என்று கூறினார்கள். (முஹ்தஸர் தாரிகு திமிஷ்க் 28/286-287)

சபதமேற்றார்

அபூதர் அல்கிபாரி (رضي الله عنه) அவர்களிடம் இயல்பிலேயே தீவிரப்போக்குக் காணப்பட்டது. இன்பங்களைப் பின்பற்றுவதை விட சிரமங்களைத் தாங்கிக் கொண்டு உயர்ந்த நிலையில் இஸ்லாத்தைப் பின்பற்றத்தான் விரும்பினார். இதனால்தான்

இஸ்லாத்தை ஏற்றுள்ளதை மறைக்கலாம் என நபி (ﷺ) அவர்கள் கூறியபோதிலும் அதைப் பகிரங்கப்படுத்தி, சோதனைகளைச் சந்தித்தார்கள். இவ்வாறே உலக இன்பங்களை அனுபவிக்க இஸ்லாம் அனுமதித்திருந்தாலும் நபி (ﷺ) அவர்கள் வாழ்ந்தது போல் எளிமையாக வாழ வேண்டும் என்று அவர் விரும்பினார். அவரது இந்த இயல்பு அவருக்கும் நபித்தோழர்களுக்குமிடையில் சற்று கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தது. இவரது இயல்பினை அனுசரித்து இவருக்கென சில உத்தரவுகளையும் ஆலோசனைகளையும் நபி (ﷺ) அவர்கள் வழங்கியிருந்தார்கள்.

என் தோழர் எனக்கு பின்வரும் ஏழு விஷயங்களை அறிவுறுத்தினார் என்று அபூதர் (رضي الله عنه) அறிவிக்கும் செய்தி அஹ்மதில் இடம்பெற்றுள்ளது.

01. ஏழைகளை நேசி.
02. அவர்களுடன் நெருங்கி வாழ்.
03. யாரிடமும் எதையும் கேட்காதே.
04. உறவினர்கள் ஒதுங்கிச் சென்றாலும் அவர்களுடன் இணைந்து நடந்துகொள்.
05. கசப்பாக இருந்தாலும் உண்மையைப் பேசு.
06. அல்லாஹ்வின் விஷயத்தில் தூற்றுவோரின் தூற்றுதலுக்கு அஞ்சாதே.
07. லாஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹ் என்பதை அதிகமாகக் கூறு என அறிவுறுத்தினார்கள். (அஹ்மத் 8/21472)

தலைமைத்துவம் வேண்டாம்

அபூதர் (رضي الله عنه) அவர்கள், நபி (ﷺ) அவர்களிடம் ஒரு நிர்வாகப் பொறுப்பைக் கேட்டார்கள். அப்போது நபி (ﷺ) அவர்கள், ‘அபூதர்ரே! நீர் பலவீனமானவர்; அதிகாரத்தை உரிமையுடன் எடுத்து அதனைச் சரிவர செய்யவில்லையென்றால் அது இழிவும் தொல்லையுமாகும்’ (தபகாத் இப்னு ஸஅத் 4/238) ‘மூன்று பேர் கொண்ட குழுவுக்கோ, அநாதைகளின் சொத்துக்கோ நீ பொறுப்புதாரியாக வேண்டாம்’ என நபி (ﷺ) அவர்கள் இவருக்கு அறிவுரை கூறினார்கள். (முஸ்லிம் 1826, அஹ்மத் 8/21619)

இந்தப் போதனையால் பின்னர் இவர் மூலம் முஸ்லிம் உலகில் புரட்சி ஒன்று வெடிப்பது தவிர்க்கப்பட்டது. உஸ்மான் (رضي الله عنه) அவர்களது ஆட்சிக் காலத்தில் இவர் செல்வச் செழிப்புக்கும் ஆடம்பரத்திற்கும் எதிராகப் பிரச்சாரம் செய்து வந்தார். இவரது இறுதிக் காலத்தில் ‘ரப்தா’ என்ற இடத்தில் தனித்திருந்தார்.

அப்போது கூபாவாழ் மக்களில் சிலர் வந்து, நீங்கள் ஆட்சிக்கு எதிரான புரட்சிக்கு தலைமை தாங்கினால் உங்களுக்குப் பின்னால் எவ்வளவு மக்களை வேண்டுமானாலும் அணிதிரட்ட முடியும் என்று தலைமை தாங்குமாறு கேட்டதற்கு,

"மக்களே! உங்கள் நோயை என்னிடம் கொண்டு வராதீர்கள்; ஆட்சியாளர்களை இழிவுபடுத்தாதீர்கள்; நிச்சயமாக ஆட்சியாளர்கள் என்னைப் பலகையில் ஆணி வைத்து அடித்தாலும் அதையும் ஏற்றுக்கொண்டு பொறுமையுடன் கட்டுப்படுவேன்" என்று கூறினார்கள். (தாரீஹ் இப்னு அஸாகிர் 28/302)

தனித்துவமான கட்டளைகள்

'உன் மீது அதிகாரம் உள்ளவர் கூறுவதைக் கேள்! அவருக்குக் கட்டுப்படு' என நபி (ﷺ) அவர்கள் அபூதர் (رضي الله عنه) அவர்களுக்குக் கூறியிருந்தார்கள். (தாரீஹ் திமிஷ்க் 28/292) இந்தக் கட்டளைக்கேற்ப அவர்கள் கலீபாக்களுடன் முரண்பட்டாலும் கிளர்ச்சி செய்யாது கட்டுப்பட்டு வந்தார்கள்.

வாயால் போராடலாம்

இவரது உணர்வுகளையும் இயல்புகளையும் கவனத்தில் கொண்ட நபி (ﷺ) அவர்கள், இவர்களுக்கு முக்கியமானதொரு கட்டளையிட்டார்கள்.

அபூதர் முடிந்தவரை நபி (ﷺ) அவர்களுக்கு ஹித்மத் செய்து கொண்டிருப்பார். வேலை எதுவுமில்லையென்றால் பள்ளியில் ஓய்வெடுப்பார். ஒருநாள் அபூதர் பள்ளியில் படுத்திருந்தார். அப்போது நபி (ﷺ) அவர்கள் தமது காலால் அவரைச் சுரண்டி, 'இங்கேயா உறங்கிக் கொண்டிருக்கின்றாய்?' என்று கேட்டார்கள். எழுந்து அமர்ந்த அவர், 'இதை விட்டால் வேறு வீடா இருக்கின்றது?' என்று கூறினார். அப்போது நபி (ﷺ) அவர்கள் அவரருகில் அமர்ந்து 'இதை விட்டு உன்னை வெளியேற்றினால் என்ன செய்வாய்?' என்று கேட்டார்கள். அதற்கு அபூதர் நான் ஷாமுக்குச் செல்வேன். (ஷாம் என்றால் சிரியா, பலஸ்தீன் அனைத்தையும் உள்ளடக்கும்) ஏனெனில், அது ஹிஜ்ரத்தின் பூமி; நபிமார்கள் வாழ்ந்த பகுதி. நானும் அதன் குடிமக்களில் ஒருவனாகிவிடுவேன்' என்று கூறினார்.

'உன்னை ஷாமிலிருந்து வெளியேற்றினால் என்ன செய்வாய்?' என நபியவர்கள் மீண்டும் கேட்டார்கள். 'நான் மீண்டும் இங்கேயே வந்து விடுவேன்' என்று கூறினார். இரண்டாம் முறையும் 'உன்னை மதீனாவிலிருந்து வெளியேற்றினால் என்ன செய்வாய்?' என்று

நபியவர்கள் கேட்டார்கள். அதற்கவர் 'எனது வாளை எடுத்து மரணிக்கும் வரை போராடுவேன்' என்று கூறினார்.

அதைவிடச் சிறந்ததை உனக்கு நான் சொல்லட்டுமா? என நபி (ﷺ) அவர்கள் வினவியபோது, 'கூறுங்கள் அல்லாஹ்வின் தூதரே!' என அவர் கேட்டார். அப்போது நபி (ﷺ) அவர்கள், 'அவர்கள் உன்னை எங்கே அனுப்பினாலும் அங்கே போய்க்கொண்டிரு! நீ மரணித்து என்னைச் சந்திக்கும் வரை இதே நிலையைக் கைவிடாதே!' எனக் கூறினார்கள். (அஹ்மத் 8/21344)

இந்த ஹதீஸ் நபி (ﷺ) அவர்களது மரணத்திற்குப் பின்னரும் அபூதர் உயிர் வாழ்வார் என்பதையும் அவருக்கும் ஆட்சியாளர் களுக்குமிடையில் ஏற்படும் முரண்பாடுகளால் அவர் நாடு கடத்தப்படலாம் என்பதையும் கூறுகின்ற அதேவேளை, ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து நீ போராடக் கூடாது என்று நபி (ﷺ) அவர்கள் அபூதர்ருக்கு இடும் கட்டளையாகவும் அமைகின்றது. இந்தக் கட்டளையில்லையென்றால் உஸ்மான் (رضي الله عنه) அவர்களது ஆட்சிக் காலத்திலேயே இவர் மூலம் ஒரு கிளர்ச்சி வெடித்திருக்கும். இவர் நபி (ﷺ) அவர்களின் இந்த உத்தரவிற்கேற்ப ஆட்சியாளர்களுடன் கருத்து முரண்பட்டு வாதாடிய போதிலும் அவர்களுக்கெதிராக வாளேந்திப் போராடுவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

முரண்பாட்டின் மூலம்

அபூதர் (رضي الله عنه) அவர்கள் இஸ்லாத்தை மிகத் தீவிரமாகப் பின்பற்றும் இயல்புடையவர். அதேவேளை, உலக இன்பங்களை அனுபவிப்பதில் நாட்டமில்லாதவர். அத்தோடு, நபி (ﷺ) அவர்கள் இவரிடம் கூறிய சில ஹதீஸ்களும் நபி (ﷺ) அவர்களிடம் இவர் அளித்த வாக்குறுதியும் இவரிடம் வித்தியாசமானதொரு பொருளாதாரச் சிந்தனையைத் தோற்றுவித்தது.

இவர் செல்வங்களைச் சேர்த்து வைப்பதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். அதற்கவர் கூறிய காரணம்,

ஒரு நாள் என் தோழர் என்னை அழைத்தார். 'உனக்கு உஹத் மலை தெரிகிறதா' என்று கேட்டார்கள். நபியவர்கள் உஹத் மலைக்கு ஏதோ வேலைக்கு என்னை அனுப்பப் போகின்றார்கள் என நான் நினைத்தேன். 'ஆமாம்! தெரிகிறது' என்று நான் கூறினேன். அப்போது நபி (ﷺ) அவர்கள் உஹத் மலையளவு தங்கம் என்னிடம் இருந்தாலும்

மூன்று நாட்களுக்கு மேல் அதைத் தர்மம் செய்யாமல் அது என்னிடம் தங்கியிருப்பதை நான் விரும்பவில்லை என்று கூறினார்கள். ஆனால், இவர்களோ உலகத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறினார்.

மேற்படி நபிமொழியும் அவரது பொருளாதாரச் சிந்தனையின் அடிப்படையாகத் திகழ்ந்தது. பொருள் சேமிப்பதை இஸ்லாம் தடுக்கவில்லை. நபி (ﷺ) அவர்கள் அப்படிச் சேமித்து வைக்காததால் ஆட்சியாளர்கள் செல்வச் செழிப்பில் இருப்பதை இவரால் ஜீரணிக்க முடியாதிருந்தது. இதற்கு மற்றொரு காரணமும் இருந்தது.

அளித்த வாக்குறுதி

ஒரு நாள் நபி (ﷺ) அவர்கள், 'நான் மரணிக்கும் நேரம் உங்களை விட்டுச் செல்லும் அதே நிலையில் என்னைச் சந்திப்பவர் (மரணிப்பவர்) உங்களில் யார்?' எனக் கேட்டார்கள். அதற்கு அபூதர் 'நான்' எனப் பதிலளித்தார்கள். அப்போது நபி (ﷺ) அவர்கள், 'அபூதர்ரை விட உண்மை பேசக்கூடிய ஒருவருக்கு வானம் நிழல் கொடுக்கவுமில்லை; பூமி இடம் கொடுத்ததுமில்லை' எனக் கூறினார்கள். அதாவது, 'நான் மரணிக்கும் நிலையில் அபூதர் எப்படி இருப்பாரோ அதே நிலையில்தான் அவர் மரணிப்பார்' என்று நபி (ﷺ) அவர்கள் உறுதிப்படுத்தினார்கள். எனவே, அபூதர் நபிகளாரின் மரணத்தின் பின் தனக்குப் பட்டமோ, பதவிகளோ, பணமோ அதிகரித்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். இதனால் ஆட்சியாளர்களுடன் அவர் முரண்பட்டார்.

உஸ்மானுடன் கலந்துரையாடல்

ஒரு முறை அபூதர் (رضي الله عنه) உஸ்மான் (رضي الله عنه) அவர்களைச் சந்தித்த போது, 'அபூபக்கர், உமர் (رضي الله عنهما) ஆகிய இருவரையும் விட நீங்கள் சிறந்தவர் என்று கூறினீர்களா?' என உஸ்மான் (رضي الله عنه) அவர்கள் கேட்டார்கள். அபூதர் (رضي الله عنه) அவர்கள், 'நான் அப்படிக் கூறவில்லை என்று மறுத்தபோது, அப்படியாயின் எப்படிக் கூறினீர்கள்?' என்று கேட்டார் உஸ்மான் (رضي الله عنه) அவர்கள். அதற்கவர், 'உங்களில் எனக்கு மிக விருப்பமானவரும் நெருக்கமானவரும் யார் எனின், நான் செய்துகொண்ட உடன்படிக்கையைப் பேணும் நிலையில் என்னைச் சந்திப்பவரே' என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். 'நீங்கள் அனைவரும் (நபியின் மரணத்தின் பின்) உலக இன்பங்களை அனுபவித்துவிட்டீர்கள். நான் நபி காலத்தில் இருந்தது போன்றே இருக்கிறேன்' என்று கூறினார்கள்.

மேலே நாம் சுட்டிக்காட்டிய ஹதீஸை இந்தக் கலந்துரையாடல் மேலும் உறுதிப்படுத்துகின்றது.

ஷாமுக்குப் பயணம்

இதன் பின் அபூதர் (ﷺ) அவர்களிடம் உஸ்மான் (ﷺ) அவர்கள், ஷாமுக்குச் சென்று முஆவியாவுக்கு உதவியாக இருக்குமாறு கூறினார்கள். அபூதர் (ﷺ) அவர்கள் ஷாமுக்குச் சென்று மக்களுக்கு நபிமொழிகளைப் போதித்தார்கள். மக்கள் கவனம் அவர் பக்கம் திரும்பியது. இவருடைய சில வழிகாட்டல்கள் முஅவியா (ﷺ) அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இவர் மக்களிடம், 'கடனை அடைப்பதற்கு அல்லது அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதற்காகத் தவிர வேறு காரணங்களுக்காக உங்கள் வீடுகளில் ஒரு தீனாரையோ, திர்ஹமையோ, வெள்ளியையோ வைத்த நிலையில் ஓர் இரவைக்கூட நீங்கள் கழிக்க வேண்டாம்' என்று கூறினார்.

முஆவியா (ﷺ) அவர்கள், 'இவர் உண்மையாகத்தான் பேசுகிறாரா அல்லது வெறுமனே பேசுகிறாரா' என்பதைச் சோதிக்கும் வண்ணம் 1000 தீனார்களை இவருக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்கள். ஆனால், அந்த இரவிலேயே அபூதர் அவ்வளவு பணத்தையும் தர்மம் செய்திருந்தார். எனவே, அவர் தான் செயல்படுத்துவதைத்தான் பேசுகிறார். அவர் குழப்பம் ஏற்படுத்துவதற்காகப் பேசுபவர் அல்லர் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

இதன் பின் உஸ்மான் (ﷺ) அவர்களுக்குக் கடிதம் எழுதி, அதன் மூலமாக அபூதர் (ﷺ) அவர்களை மீண்டும் மதீனாவுக்கு அழைத்துக் கொள்ளச் செய்தார்கள். (சுருக்கம் முஹ்தஸர் தாரீகு திமிஷ்க்)

ரப்தாவுக்குப் பயணம்

மதீனா வந்த அபூதர்ரைத் தம்முடன் இருக்குமாறு உஸ்மான் (ﷺ) அவர்கள் கேட்டபோது, 'உங்களது உலகச் செல்வங்கள் எதுவும் எனக்கு வேண்டாம்' எனக்கூறி மதீனாவுக்கு அருகே உள்ள ரப்தா எனுமிடத்துக்குச் செல்ல அனுமதி கேட்டு அங்கே சென்று தனித்திருக்கலானார்கள்.

இறுதிப் பயணம்

ரப்தாவில் மிக எளிமையாக அபூதர் வாழ்ந்து வந்தார். இவருக்கு அன்பளிப்புகள் கிடைத்தால் தன்னை விட வறியவர்களுக்கு வழங்கி விடுவார்கள். இவர் மனைவியும் அடிமையும் இவருடைய எளிய வாழ்க்கைக்கு ஒத்துழைத்தனர். இவர் தான் அணியும் ஆடைகளைத்தான் தனது அடிமைக்கும் அணிவித்தார்.

இவர் ரப்தாவில் இருந்த போதுதான் இவரது இறுதிப் பயணம் நடந்தது. அவர் மரணிக்கும் முன்னரே கபன் செய்யும் வசதி இருந்தால் வேறு எவரிடமும் கபன் துணி பெறவேண்டாம் என்றும் அப்படியே வசதி இல்லாவிட்டாலும் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களிடமிருந்து கபன் பெறக்கூடாது என்றும் கூறியிருந்தார்.

மரணத்தறுவாயில்

இவர் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, அந்தப் பாலைவனப் பிரதேசத்தில் அவரது மனைவி மற்றும் அடிமையைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை. அப்போது அவரது மனைவி அழுதுகொண்டிருந்தார். 'அழாதே' என அபூதர் ஆறுதல் கூறிய போது, நீங்களோ தன்னந்தனிமையில் பாலைவனப் பிரதேசத்தில் மரண நிலையில் இருக்கிறீர்கள். என்னிடமோ உங்களைக் கபன் செய்யப் போதிய துணிகூட இல்லையே என்று கூறினார்கள்.

அப்போது அபூதர், 'அழாதே! ஒரு நாள் நான் சில தோழர்களுடன் நபி (ﷺ) அவர்களிடம் இருந்தேன். அப்போது உங்களில் ஒருவர் பாலைவனத்தில் மரணிப்பார். அவரை முஃமின்களில் ஒரு கூட்டம் அப்போது சந்திக்கும்' என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். 'அதில் இருந்த அனைவரும் கிராமத்தில் கூட்டத்துடன் மரணித்தனர். நான் மட்டும்தான் மீதமிருக்கின்றேன். அதுவும் பாலைவனத்தில் இருக்கிறேன். என்னை ஒரு கூட்டம் நிச்சயம் சந்திக்கும். நீங்கள் அவர்களிடம் உதவி தேடுங்கள். நான் இப்போது கூறுவதை நீங்கள் காணத்தான் போகின்றீர்கள்' என்று கூறினார்.

நிறைவுபெற்ற முன்னறிவிப்பு

அதுபோல அபூதர் பாலைவனத்தில் மரணித்தார். அவரது இறுதிக் கிரிகைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அவரது மனைவியும் அடிமையும் அல்லலுற்றனர். அப்போது ஒரு கூட்டம் அங்கே வந்தது. அதில் இப்னு மஸ்ஊத், மாலிக் இப்னு அஸ்கர், ஹிஜ்ர் இப்னு அப்தர் போன்ற அன்ஸாரிகளும் இருந்தனர்.

இந்தக் கூட்டம் அவர்களை நெருங்கிய போது அபூதர்ரின் அடிமை இதோ அல்லாஹ்வின் தூதரின் தோழர்கள் வருகிறார்கள் என்று கூறியபடி அவர்களிடம் அபூதர் (رضي الله عنه) மரணம் பற்றி கூறியபோது அனைவரும் இறங்கி அருகில் வந்தனர்.

இப்னு மஸ்ஊத் (رضي الله عنه) அவர்கள் அழுதவர்களாக ஜனாஸாவை

நெருங்கினார்கள். அவரது முகத்தைப் பார்த்து விட்டுத் தேம்பித் தேம்பி அழுதார்கள்.

அல்லாஹ்வின் தூதர் உண்மைதான் கூறினார்கள்.
‘தனிமையில் நடந்தார்;
தனிமையில் மரணிப்பார்;
தனிமையாக எழுப்பப்படுவார்
என்று நபி (ﷺ) அவர்கள் கூறியது நடந்து விட்டது’ என்று கூறி தொழுகை நடத்தி நல்லடக்கம் செய்தார்கள்.

இந்நிகழ்ச்சி ஹிஜ்ரி - **32** இல் நடந்தது.

அல்லாஹுதஆலா அபூதர் (رضي الله عنه) அவர்களைத் பொருந்திக் கொள்வானாக!



அல்குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்ட நபித்தோழர்
ஸைத் இப்னு ஹாரிஸ் (ﷺ)

நபி (ﷺ) அவர்களது காலத்தில் வாழ்ந்த இருவரின் பெயர்கள் அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளன. அவர்களில் ஒருவன் நபி (ﷺ) அவர்களது குடும்ப உறுப்பினர். ஆனால், அவன் இஸ்லாத்தின் எதிரி அபூலஹப். அல்குர்ஆனில் பெயர் குறிப்பிடப்பட்டு அவன் கண்டிக்கப்பட்டுள்ளான். அடுத்தவர் அடிமையாக இருந்து இஸ்லாத்தில் இணைந்த, நபி (ﷺ) அவர்களால் தமது வளர்ப்புப் பிள்ளை என ஆரம்ப காலகட்டத்தில் அறிவிக்கப்பட்ட ஸைத் (رضي الله عنه) அவர்களாவார்கள். இந்தச் செய்தி இஸ்லாத்தில் எவரும் குடும்ப உறாவாலோ, குலப் பெருமையாலோ அந்தஸ்தைப் பெற்றுவிட முடியாது என்பதை அறிவிக்கின்றது. வாருங்கள் ஸைத் (رضي الله عنه) அவர்களின் அதிசய வரலாற்றைப் படித்துப் பார்ப்போம்.

சந்தையில் அடிமையாக

அன்றைய கால கட்டத்தில் கோத்திரங்களுக்கு மத்தியில் அடிக்கடி சண்டை மூழ்வதும் ஒருவர் மற்றவரைத் தாக்கி, அவரது உடமைகளை அபகரிப்பதும், மனிதர்களைப் பிடித்து சந்தையில் அடிமைகளாக விற்பதும் வழக்கமாக இருந்தது. அதுபோல ஒரு நாள் ஸைத் சிறுவராக இருந்த போது தனது தாய் சுஃதா அவர்களுடன் தம் தாயின் குடும்பத்தினரான பனூமஃன் கோத்திரத்தாரைச் சந்திக்கச் சென்றார். அப்போது திடீரென ஒரு கூட்டம் வந்து அவர்களைத் தாக்கி பொருட்களை சூறையாடியது. பலரை அடிமைகளாகக் கடத்திச் சென்றது. இந்தத் தாக்குதலின் போது சிறுவரான ஸைதையும் அவர்கள் தூக்கிச்சென்றனர்.

தூக்கிச் சென்ற கொள்ளையர்கள் இவரை மக்காவின் உக்காழ் எனும் சந்தையில் அடிமையாக விற்றனர். அவரை 400 வெள்ளிக்காசுகளுக்காக கதீஜா நாயகியின் சகோதரர் ஹிசாமின் மகன் ஹகீம் வாங்கினார். இந்த அடிமைச் சிறுவர்களை அழைத்து வந்த அவர் தனது மாமியிடம் (கதீஜா நாயகியிடம்), நான் சில அடிமைகளை அழைத்து வந்துள்ளேன். அவர்களில் எவரை வேண்டுமானாலும் நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். நான் அவரை உங்களுக்கு அன்பளிப்பாகத் தந்து விடுகிறேன் என்று கூறினார். கதீஜா (رضي الله عنها) அவர்கள் ஸைத் (رضي الله عنه) அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

மனைவியின் அன்பளிப்பு

அடிமையாக விற்கப்பட்ட ஸைத் மக்காவின் செல்வச் சீமாட்டி கதீஜாவின் கண்காணிப்பில் மகிழ்வுடன் வாழ்ந்தார். இந்நிலையில் நபி (ﷺ) அவர்கள் அன்னை கதீஜா (رضي الله عنها) அவர்களை மணம் புரிந்தார்கள். எனவே, கதீஜா (رضي الله عنها) அவர்கள் ஸைத் (رضي الله عنه) அவர்களை நபியவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள். அப்போது நபி (ﷺ) அவர்கள் நபித்துவத்தைப் பெற்றிருக்கவில்லை. நபியவர்கள் உடனடியாக ஸைத் (رضي الله عنه) அவர்களை விடுதலை செய்தார்கள். இதன் மூலம் அடிமைத்துவத்திலிருந்து விடுதலை பெற்று நபியவர்கள் மற்றும் கதீஜா நாயகி ஆகியோரின் அன்பான உபசரிப்புடன் ஸைத் வளர்ந்து வரலானார்.

தனயனைத் தேடிய தந்தை

ஒரு முறை ஸைத் (رضي الله عنه) அவர்களின் குடும்பத்தினர் சிலர் ஹஜ்ஜுக்கு வந்திருந்த போது, கஃபாவில் ஸைதைக் கண்டு சுகம் விசாரித்தனர். அவரைப் பற்றிய முழுமையான தகவலைப் பெற்றவர்கள் உடனடியாக ஊர் சென்று, மகனைத் தேடி அலையும் தந்தையிடம் தகவல் தெரிவித்தனர்.

ஸைத் இருக்கிறாரா? இல்லையா? இருந்தால் நல்ல முறையில் இருக்கிறாரா, சிரமப்படுகிறாரா என்றெல்லாம் கலங்கிக் கண்ணீர்விட்ட பெற்றோர் தமது மகன் மக்காவில் மிக்கச் செல்வாக்குள்ள குடும்பத்தில் மிகுந்த சுதந்திரத்துடன் நல்ல முறையில் வாழ்கிறார் என்பதை அறிந்ததும் பெரிதும் மகிழ்ந்தனர். இதுவரை அவர்கள் அடைந்த கவலையெல்லாம் கதிரவனைக் கண்ட இருள் போல முழுமையாக மறைந்து போனது.

செய்தி கிடைத்ததும் ஹாரிஸ் தனது சகோதரரையும் அழைத்துக் கொண்டு தனது கண்களின் மணியான, உடலின் உயிரான அன்பு மகனை விலை கொடுத்து வாங்குவதற்கான ஏராளமான பணத்தையும் எடுத்துக் கொண்டு மக்கா நோக்கி விரைந்தார்.

முஹம்மதின் முன்னிலையில் ஹாரிஸ்

ஹாரிஸ் தம் சகோதரருடன் நபி (ﷺ) அவர்களது இல்லம் நோக்கி வந்தார்.

ஹாரிஸ் : அப்துல் முத்தலிபின் புதல்வரே! நீங்கள் அல்லாஹ்வின் வீட்டின் அண்டை வீட்டார்; கேட்டவருக்கு இல்லை என்று கூறாது வாரி வழங்குபவர். பசித்தோருக்கு உணவளிப்பவர். பாதிக்கப்பட்டோருக்கு பாதுகாப்புக்

கொடுப்பவர். நாங்கள் எங்கள் மகன் விஷயமாகப் பேச வந்துள்ளோம். அவனை அழைத்துச் செல்ல எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறோம். நீங்கள் எங்கள் விஷயத்தில் கருணை காட்டுங்கள்.

நபி (ﷺ) : நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?

ஹாரிஸ் : உங்கள் அடிமை ஸைதைக் குறிப்பிடுகிறோம்.

நபி (ﷺ) : நான் ஒரு முடிவைச் சொல்லட்டுமா?

ஹாரிஸ் : என்னது?

நபி (ﷺ) : நீங்கள் ஸைதை அழையுங்கள். அவர் யாருடன் செல்ல விரும்புகிறார் என்று கேளுங்கள். அவர் உங்களைத் தேர்ந்தெடுத்தால் நீங்கள் அவரை அழைத்துச் செல்லலாம். எனக்குப் பணம் தர வேண்டியதில்லை. மாறாக, அவர் என்னுடன் இருக்க விரும்பி என்னைத் தேர்ந்தெடுத்தால் என்னை விரும்பிய ஒருவரை நான் விட்டுக் கொடுக்கமாட்டேன்.

ஹாரிஸ் : நீங்கள் எங்கள் விஷயத்தில் அருள் செய்து விட்டீர்கள். அதை நிறைவாகவே செய்து விட்டீர்கள்.

இந்த உடன்பாட்டின் பின்னர் நபி (ﷺ) அவர்கள் ஸைத் (رضي الله عنه) அவர்ககளை அழைத்தார்கள்.

நபி (ﷺ) : இவர்கள் இருவரும் யார்?

ஸைத் : இவர் என் தந்தை ஹாரிஸ் இப்னு சுறாஹில்; இவர் என் சிற்றப்பா கஃப்.

நபி (ﷺ) : உனக்கு நான் தெரிவு செய்யும் உரிமையைத் தந்து விட்டேன். விரும்பினால் நீ அவர்களுடன் செல்லலாம். என்னுடன் இருக்க விரும்பினால் இருக்கலாம்; நீ இது விஷயத்தில் சுதந்திரமாக முடிவு செய்யலாம்.

ஸைத் : இல்லை; நான் உங்களுடனேயே இருக்க விரும்புகிறேன்.

ஹாரிஸ் : ஸைதே! உனக்கு என்ன கேடு பிடித்துவிட்டது. பெற்ற தாயையும் தந்தையையும் விட்டுவிட்டு அடிமைத்தனத்தைத் தேர்ந்தெடுக்கிறாயே என ஆத்திரத்தில் கூறினார்.

அதற்குப் பதிலாக ஸைத் (رضي الله عنه) இவரிடம் நான் சில விடயங்களைக் காண்கிறேன். நான் ஒருபோதும் இவரை விட்டுப் பிரியமாட்டேன் என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் நபி (ﷺ) அவர்கள் எவ்வளவு சிறந்த

மனிதராக நபித்துவத்திற்கு முன்னரே வாழ்ந்துள்ளார்கள் என்பதை அறியலாம். அடிமைகள் மிருகங்களை விடக் கேவலமாக நடத்தப்பட்ட அந்தக் காலத்தில் பெற்றோரைவிட தன்னைத் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையில் நபியவர்கள் ஸைதுடன் நடந்துள்ளதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

ஸைத் வளர்ப்புப் பிள்ளையாக

இந்த நிகழ்ச்சியின் போது நபி (ﷺ) அவர்கள் ஸைதின் கையைப் பிடித்துக் கொண்டு நேராக கஃபாவிற்கு வந்து, குறைஷிகள் கூடி நின்ற இடத்தில் நின்று கொண்டு, 'குறைஷிகளே! இவர் எனது மகன் என்பதற்கும், எனக்கு இவர் வாரிசு, இவருக்கு நான் வாரிசு என்பதற்கும் நீங்கள் சாட்சியாக இருங்கள்' என்று கூறினார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின் முஹம்மதின் மகன் ஸைத் என்றே அவர் அழைக்கப்பட்டார். நபி (ﷺ) அவர்கள் நபித்தவத்தைப் பெற்று, 'பிள்ளைகளை அவர்களின் பெற்றோர் பெயர் கூறியே அழையுங்கள்' (33:05) என்ற வசனம் அருளப்படும் வரை இந்நிலை நீடித்தது. (நஸஈ)

பிரிவிலும் மகிழ்ச்சி

ஸைதைப் பிரிவது அவரது தந்தைக்குக் கவலையளித்தாலும் அவன் தன்னிடம் இருந்து வளர்வதை விட அழகிய முறையில் வாழ்வதைக் கண்ணால் கண்டு முஹம்மதின் மகனாகப் பிரகடனப்படுத்தியதைக் காதால் கேட்டு மகிழ்வுற்றார். மகன் எம்மிடம் இல்லை என்பதுதான் குறை. ஆனால், அவன் உயரிய அந்தஸ்துடன் நல்ல முறையில் வாழ்கிறான் என்ற நிம்மதியுடன் நாடு திரும்பினார் ஹாரிஸ்.

நல்ல தேர்வு

ஸைத் (رضي الله عنه) அவர்கள் இந்தத் தேர்வினைச் செய்த நேரம், தான் ஒரு இறைத்தூதரைத் தேர்வு செய்துள்ளேன் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை; தனது தலைவர் ஆதி முதல் அந்தம் வரையுள்ள எல்லா மனிதர்களுக்கும் தலைவர் என்பதையும் அறிந்திருக்கவில்லை. வஹியின் ஆட்சி இவர் மூலம் பூமியில் நிலைநாட்டப்பட்டு கிழக்கு மேற்கெல்லாம் பூரண நீதியும் நியாயமும் இவர் மூலம் நிலை நாட்டப்படும். அந்த ஆன்மீக ஆட்சியின் அத்திவாரங்களில் நாமும் ஒருவராக இருப்போம் என்பதையும் அவர் அறியார். ஆனால், அண்ணல் நபியிடம் தான் கண்ட அற்புதமான பழக்க வழக்கங்கள் அடிமையான தன்னிடம் அவர் காட்டிய ஈடிணையற்ற அன்பு போன்றவற்றால் கட்டுண்ட ஸைத், நல்ல தெரிவைச் செய்துவிட்டார்.

நபியின் நட்பும் பாசமும்

தனது குடும்பத்தை விட தன்னைத் தேர்வு செய்த ஸைத் (ﷺ) அவர்கள் மீது நபியவர்கள் மிகுந்த நட்பும் பாசமும் வைத்திருந்தார்கள். இதனால், ‘ஸைதுல் ஹிப்பி’ நேசத்திற்குரிய ஸைத் என்றும், ‘ஹிப்பு ரஸூலில்லாஹ்’ நபியின் நேசத்துக்குரியவர் என்றும் அழைக்கப்பட்டார். இவரது மகன் உஸாமா (ﷺ) அவர்களும் ‘நபியின் நேசத்துக்குரியவர்’, நபியின் நேசத்துக்குரியவரின் மகன்’ என்று அழைக்கப்பட்டார்.

அல்குல்ஆனில் கூட “அன்அமல்லாஹு வஅன்அம்த அலைஹி - அவர் மீது அல்லாஹ்வும் அருள் புரிந்தான். நீரும் அருள் புரிந்தீர்” என்று குறிப்பிடுகிறான். (33:37). அந்த அளவுக்கு அவர் மீது பாசம் கொண்டிருந்தார்கள்.

இந்தப் பாசத்தின் காரணத்தால் ஸைத் மீது நபிகளார் அன்பு மழை பொழிவார்கள். ஸைதைப் பிரிவது நபியவர்களுக்கு மிகுந்த துயரத்தைக் கொடுக்கும். பயணம் சென்று, திரும்பி அவர் வந்தால் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள். யாரையும் வரவேற்காத அளவுக்கு மகிழ்வுடன் அவரை வரவேற்பார்கள். இதோ அன்னை ஆயிஷா (ﷺ) அவர்களின் அறிவிப்பைக் கேளுங்கள்.

‘ஸைத் (ﷺ) அவர்கள் மக்காவில் இருந்து நாடு துறந்து மதீனா வந்தார்கள். அப்போது எனது வீட்டில் நபியவர்கள் இருந்தார்கள். ஸைத் கதவைத் தட்டினார். நபி (ﷺ) அவர்கள் ஸைதின் வருகையால் மகிழ்வுற்று, அவரை நோக்கி வேகமாக கீழாடை அவிழ்ந்து பூமியில் படச்சென்று ஆரத்தழுவி முத்தமிட்டார்கள்’ (திர்மிதி)

‘அவர் மீது நபி (ﷺ) அவர்கள் வைத்திருந்த மதிப்பின் காரணமாக ஏதேனும் படையை அனுப்பினால் அதற்கு இவரைத் தலைவராக அனுப்புவார்கள்’ என ஆயிஷா (ﷺ) அவர்கள் அறிவித்துள்ளார்கள். இவ்வாறு சுமார் ஏழு முறை போர்ப் படைகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார். (தபகாத் இப்னு ஸஅத்)

சில வேளைகளில் நபித்தோழர்கள் இவரைத் தலைவராக நியமிப்பதில் அதிருப்தி தெரிவித்துள்ளனர். நபி (ﷺ) அவர்கள் அவரிடம் தலைமைத்துவத் தகுதி இருப்பதையும், தனக்கு அவர் மிக நேசத்துக்குரியவர் என்பதையும் காரணமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். நபி (ﷺ) அவர்களுக்குப் பின் ஸைத் இருந்தால் அவர்தான் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பார் என்ற அளவுக்கு ஆயிஷா (ﷺ) அவர்கள் இவர் குறித்து சிறப்பித்துக் கூறியுள்ளார்கள்.

திருமணம்

தனது பிள்ளை போல் வளர்த்து வந்த ஸைத் (ரலி) அவர்களுக்காக நபி (ஸல்) அவர்கள் தனது மாமி மகள் ஸைனப் பின்து ஜஹ்ஷ் (ரலி) அவர்களைத் திருமணம் பேசினார்கள். ஆரம்பத்தில் தனது குடும்ப குலப் பெருமையை எண்ணி அவர்கள் மறுத்தாலும் நபி (ஸல்) அவர்களது கட்டளை என்பதை அறிந்து அதாவது,

“மேலும், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப் பற்றிக் கட்டளையிட்டு விட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்ராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ, பெண்ணுக்கோ உரிமையில்லை. ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்.” (அல்குர்ஆன் - 33:36)

என்ற வசனம் அருளப்பட்டதை உணர்ந்து ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்விருவருடைய இல்லற பந்தம் இனிமையானதாக இருக்கவில்லை. அடிக்கடி பிரச்சினைகள் எழுந்தன. இவர்களால் சேர்ந்து வாழ முடியாது என்பதை அறிந்த பின்னரும் முகத்தாற்சனைக்காக சேர்ந்து வாழுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் ஸைதிடம் கூறினார்கள். இதற்காக நபியவர்கள் கண்டிக்கப் பட்டார்கள்.

பின்னர் ஸைத் (ரலி) அவர்கள் ஸைனப் (ரலி) அவர்களைத் தலாக் கூறினார்கள். ஸைனப் (ரலி) அவர்களது இத்தாக்காலம் முடிவடைந்த பின்னர் அல்லாஹ்வே, நபி (ஸல்) அவர்களுக்கு ஸைனப் (ரலி) அவர்களை மணமுடித்து வைத்தான்.

இத்திருமணம் குறித்து இறைமறுப்பாளர்கள் குற்றம் சுமத்தினர். முஹம்மத் தனது மகனின் மனைவியை (மருமகளை) மணந்துவிட்டார் என்று கூறினர். அதற்குப் பதிலாக முஹம்மதுக்கு ஆண்மகன் எவரும் கிடையாது என்றும்; அவர் இறுதி நபி; இஸ்லாமிய சட்டங்கள் அவர் மூலமாகவே அறிமுகம் செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு வளர்க்கப்பட்ட ஒருவர் மணந்து விவாகரத்துச் செய்த பெண்ணை வளர்த்த ஒருவர் மணக்கலாம் என்று விளக்கங்கள் அடங்கிய வசனங்கள் அருளப்பட்டன. (பார்க்க - 33:36-40)

உயிர்த்தியாகம்

ஏற்கனவே, நாம் குறிப்பிட்டது போன்று பல போர்களில் பங்கு பெற்றுத் தனது ஈமானிய உணர்வையும், உடல் வலிமையையும் வெளிப்படுத்தியிருந்தார் ஸைத். அவரது வீரமும் தியாகமும் நிறைந்த இறுதிப் போரையும் அவர் சந்திக்கும் தருணம் வந்தது.

முதல் தலைவர்

ரோம வல்லரசுடன் மோதவேண்டிய நிர்ப்பந்தம் நபியவர்களுக்கு ஏற்பட்டது. அதற்கான படையைத் தயார் செய்த நபியவர்கள், ‘ஸைத் இப்னு ஹாரிஸ் உங்களுக்குத் தலைவர்; அவர் கொல்லப்பட்டால் ஜஃபர் இப்னு அபூதாலிபையும் அவரும் கொல்லப்பட்டால் அப்துல்லாஹ் இப்னு ரவாஹாவையும் தலைவராக்குங்கள். அவரும் கொல்லப்பட்டால் அதன்பின் உங்களுக்கு விரும்பிய ஒருவரைத் தலைவராகத் தெரிவு செய்து கொள்ளுங்கள்’ என்று கூறி அனுப்பினார்கள்.

ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு 3000 பேரைக் கொண்ட முஸ்லிம் படையும் , சுமார் இரண்டு இலட்சம் பேர்களைக் கொண்ட ரோமப் படையும் மோதவேண்டிய நிலை ஏற்பட்டது. முஸ்லிம்கள் ஜோர்டானில் கிழக்குப் பகுதியில் முகாமிட்டனர்.

எதிரிகளின் எண்ணிக்கையை அறிந்த முஸ்லிம்களுக்கு மத்தியில் சின்ன சலனமேற்பட்டது. இரண்டு தினங்கள் என்ன செய்வது என்று ஆலோசனை செய்தனர். சிலர் நபி (ﷺ) அவர்களுக்குத் தூது எழுதி, இன்னும் படையை அனுப்பும்படி வேண்டுவோம் என்று கருத்துக் கூறினர்.

ஆனால், தளபதி ஸைத், ‘நாம் ஆயுத, ஆள் பலத்தை வைத்துப் போரிடுபவர்கள் அல்லர். இந்த சத்திய மார்க்கத்திற்காகப் போரிடுபவர்கள்; நமக்குத் தோல்வி கிடையாது; வெற்றி அல்லது ஷஹாதத் என்ற மாபெரும் வெற்றி; இரண்டில் ஒன்று கிட்டும். எனவே, நமக்கு ஏவப்பட்டபடி போரிடுவோம்’ என்று கூறினார்.

முஅத்தா போர்

பயங்கரமான போர் மூண்டது. ஈமானிய உறுதிக்கு முன்னால் ரோமப் படை ஆட்டம் கண்டது. முஸ்லிம்களிடமிருந்து இத்தகைய பாரிய எதிர்ப்பை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. மிகக் கடுமையான போரின் போது நபி (ﷺ) அவர்கள் கூறிய பிரகாரம் ஸைத், ஜஃபர், அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (رضي الله عنهم) என ஒருவர் பின் ஒருவராக

வீரமரணம் அடைந்தனர். ஸைத் (رضي الله عنه) அவர்களின் உடலில் சுமார் நூறு காயங்கள் இருந்தன.

மூன்று தளபதிகளின் மரணத்தால் முஸ்லிம்கள் பெரிதும் சோகத்தில் மூழ்கினர். இதன்பின் படைக்கு காலித் இப்னு வலீதைத் தளபதியாக முஸ்லிம்கள் நியமித்தனர். அல்லாஹ்வின் அருளால் வெற்றிபெற்றனர்.

நேசரின் மரணம்

ஸைத் (رضي الله عنه) அவர்களது மரணமும் தம்பி ஜஃபரின் மரணமும் நபி (ﷺ) அவர்களுக்குப் பெருத்த இழப்பாகவே இருந்தது. நபி (ﷺ) அவர்கள் ஸைதின் மரணச் செய்தியுடன் அவரது இல்லம் சென்றபோது அவரது குழந்தை அழுதது. அதுகண்டு நபி (ﷺ) அவர்களும் கண்ணீர் விட்டு அழுதார்கள். அப்போது ஸஃத் இப்னு உப்பாதா (رضي الله عنه) அவர்கள், ‘அல்லாஹ்வின் தூதரே! என்ன இது அழுகிறீர்களே?’ எனக் கேட்டபோது, ‘இது நேசத்துக்குரியவரின் இழப்பால் ஏற்படும் அழுகையாகும்’ எனக் குறிப்பிட்டார்கள். ஸைத் (رضي الله عنه) அவர்களது ஈமானிய உறுதியும், கொள்கைப் பற்றும் நபி மீதான பாசமும் நம் அனைவருக்கும் நல்ல பாடமாக அமையட்டுமாக!



சத்தியத்தின் சான்று
அம்மார் இப்னு யாஸிர் (ரலி) அவர்கள்

ஆரம்ப காலத்தில் இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்து அதைப் பகிரங்கப்படுத்திய முன்னனி முஸ்லிம்களுள் அம்மாரும் ஒருவர். இவருடைய தந்தை யாஸிர், தாய் சுமையா, சகோதரர் அப்துல்லாஹ் ஆகிய அனைவரும் இஸ்லாத்தில் இணைந்ததற்காக குறைஷிகளால் சித்திரவதை செய்யப்பட்டனர். இந்தக் குடும்பம் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்படுவதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், 'ஸப்ரன் யா ஆல யாஸிர் பஇன்ன மவ்இதகுமுல் ஜன்னா' - யாஸிரின் குடும்பத்தாரே! பொறுத்துக் கொள்ளுங்கள். உங்களின் ஒதுங்கும் இடம் சுவர்க்கம்தான்' என ஆறுதல் கூறினார்கள்.

குடும்பத்தோடு சுவர்க்கத்தைக் கொண்டு சுபசோபனம் செய்யப்படும் அளவுக்கு அவர்கள் புரட்டி எடுக்கப்பட்டார்கள். சோதனைத் தீயில் வாட்டி வதைக்கப்பட்டார்கள்.

அம்மார் (ரலி) அவர்கள் மிக இளமைக் காலத்திலேயே இஸ்லாத்தில் இணைந்தவர். உயர்ந்த, மெலிந்த தோற்றம், விரிந்த மார்பு, தோல் புஜம் வரை வளர்ந்த ரோமம். இதுதான் அவர் தோற்றம். குறைஷிகள் இவரை சுடு மணலில் போட்டனர்; நீரில் மூழ்கடித்து அடித்தனர்; தீயினால் சுட்டனர். 'அவர் என்ன பேசுகிறார் என்று அவரே புரிய முடியாமல் உளறும் அளவுக்குக் கொடூரமாக அம்மார் தாக்கப்பட்டார்' என்று அம்ர் இப்னு மைமூன் அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த வேதனைகளின் போது குறைஷிகளின் சிலைகள் குறித்து நல்ல கருத்தைக் கூறுமாறு அவர் வேண்டப்பட்டார். இருந்தாலும் லாத், உஸ்ஸா பற்றி என்ன நினைக்கின்றாய் என்று கேட்டால், 'அவை பேசவோ, கேட்கவோ முடியாத வெறும் சிலைகள்' என்று உறுதியாகக் கூறினார். ஆனால், ஒரு நாள் வேதனையின் விளிம்பில் தாங்க முடியாத நிலையில் அவர்கள் கேட்டுக் கொண்டது போல் சில வார்த்தைகளைக் கூறினார். குறைஷிகளும் தமது முயற்சியில் வெற்றி கிட்டிவிட்டது என்ற மகிழ்ச்சியில் சித்திரவதையை நிறுத்தினர்.

ஆனால், அம்மார் வேதனையில் வெந்து போனார். இவ்வளவு காலமும் அவர்கள் செய்த சித்திரவதையால் கூட அவர் இவ்வளவு கவலை கொண்டிருக்கமாட்டார். தான் இறைநிராகரிப்பான வார்த்தைகளை மொழிந்ததற்காக மறுமையில் முடிவில்லாத வேதனையைச் சந்திக்க நேரிடுமோ என்று கலங்கினார்; கதறினார்;

நபி (ﷺ) அவர்களிடம் வந்து தனக்கு நேர்ந்த கொடுமையின் போது இப்படி பேசிவிட்டேனே என்று தனது கவலையைக் கூறினார். ‘நீ வாயால் இப்படிக் கூறினாய். உன் உள்ளம் எப்படி இருந்தது?’ என்று நபியவர்கள் கேட்டபோது, ‘அது ஈமானால் நிறைந்திருந்தது’ என அவர் பதில் கூறினார். அப்போது நபியவர்கள், ‘அம்மாரே! அவர்கள் மீண்டும் உம்மைச் சித்திரவதை செய்தால் இதைப்போலக் கூறித் தப்பிக்கொள்’ என்று கூறினார்கள். அம்மார் (رضي الله عنه) அவர்களின் கவலைக்கு மருந்தாக அருள்மறை வசனம் அருளப்பட்டது.

“எவர் ஈமான் கொண்ட பின் அல்லாஹ்வை நிராகரிக்கிறாரோ அவர் (மீது அல்லாஹ்வின் கோபம் இருக்கிறது) அவருடைய உள்ளம் ஈமானைக் கொண்டு அமைதி கொண்டிருக்கும் நிலையில் யார் நிர்ப்பந்திக்கப்படுகிறாரோ அவரைத் தவிர (எனவே, அவர் மீது குற்றமில்லை) ஆனால் (நிர்ப்பந்தம் யாதும் இல்லாமல்) எவருடைய நெஞ்சம் குப்ரைக் கொண்டு விரிவாகி இருக்கிறதோ இத்தகையோர் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டாகும்; இன்னும் அவர்களுக்குக் கொடிய வேதனையும் உண்டு.” (அல்குர்ஆன் - 16:106)

அம்மாரின் சிறப்புக்கள்

மேற்படி வசனம் அம்மார் (رضي الله عنه) அவர்களின் ஈமானின் உறுதித்தன்மையை உணர்த்துகிறது. நபி (ﷺ) அவர்களும் பல சந்தர்ப்பங்களில் அம்மார் (رضي الله عنه) அவர்களின் சிறப்புகளைக் கூறியுள்ளார்கள்.

அம்மாரின் எலும்புகள் கூட ஈமானில் நிரம்பியுள்ளது என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (நஸஈ, ஹாகிம்)

‘யார் அம்மாரைப் பகைத்துக் கொள்கிறாரோ அவர் அல்லாஹ்வைப் பகைத்துக் கொள்கிறார். யார் அம்மாரைக் கோபப்படுத்துகின்றாரோ அவர் அல்லாஹ்வைக் கோபப்படுத்துகிறார்’ என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத், ஹாகிம், தபரானி)

இவையெல்லாம் அம்மார் (رضي الله عنه) அவர்களின் சிறப்புக்குச் சான்று பகர்கின்றன. அம்மார் (رضي الله عنه) அவர்கள் குறித்து நபி (ﷺ) அவர்கள் முக்கியமான முன்னறிவிப்பு ஒன்றை செய்திருந்தார்கள்.

மஸ்ஜிதுன் நபவி கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. நபி (ﷺ) அவர்களும் அன்ஸார், முஹாஜிர்களும் கவிதை பாடியவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது மஸ்ஜித் கட்டுவதற்கான கற்களை நபித்தோழர்கள் ஒவ்வொன்றாகச் சுமந்து

வர அம்மார் (ரலி) அவர்கள் இரண்டிரண்டாக சுமந்து வந்தார். அதனால் அவர் தலைமுடி, மேனியெல்லாம் புழுதி படிந்துபோய் இருந்தது. நபி (ஸல்) அவர்கள் அம்மாரின் தலைப் புழுதியைத் தட்டிக் கொண்டே, 'அம்மாரே! வரம்பு மீறிய ஒரு கூட்டத்தால் நீ கொல்லப்படுவாய்' என்று கூறினார்கள். (பார்க்க: புகாரி - **447, 2812,** அஹ்மத்)

கொல்லப்படுவாய் என்று கூறப்பட்டால் குடல் நடுக்கமெடுப்பதுதான் இயல்பு. அத்துமீறிய கூட்டத்தால் கொல்லப்படுவதென்றால், தான் நீதியின் பக்கம் நின்று மரணிப்பேன் என்பதை அவர்கள் புரிந்து கொண்டதால் மகிழ்வடைந்தார்கள். அந்தக் குழப்பங்களிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பும் தேடினார்கள்.

போர்க் களங்களில்

அம்மார் (ரலி) அவர்கள் வீரமிக்கவராகத் திகழ்ந்தார்கள். நபி (ஸல்) அவர்களுடன் சகல போர்களிலும் பங்கு கொண்டார்கள். அவ்வாறே அபூபக்கர் (ரலி) அவர்கள் காலத்தில் நடந்த போர்களிலும் முழு வீச்சுடன் பங்கு கொண்டார். அவர் தனது **93**ம் வயதில் ஸிப்பீன் யுத்தத்தில் கொல்லப்படும் வரை வீரத்துடன் பல களங்களைச் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அரசியல் பொறுப்பில்

கலீபா உமர் (ரலி) அவர்கள் தனது ஆட்சியின் ஆளுநர்களைத் தெரிவு செய்யும் போது மிகுந்த கவனம் எடுப்பார்கள். நியமிக்கப்பட்டவர் எவ்வளவு நல்லவர் என்றாலும் அவர் எப்படி நடந்துகொள்கிறார் என்று மக்களிடம் விசாரிப்பார்கள். குறைகள் கூறப்பட்டால் பகிரங்கமாகவே விசாரணை செய்வார்கள். தனது ஆட்சி அதிகாரத்தில் தவறு நடந்துவிடக் கூடாது என்பதில் உமரவர்கள் காட்டிய அக்கறை அது. கூபாவுக்கான அதிகாரிகளாக யாரை நியமிப்பது என்று சிந்தித்த அவர்களுக்கு அம்மார் மற்றும் இப்னு மஸ்ஊத் (ரலி) ஆகிய இருவரும் மனதில் பட்டனர்.

அவர்களை நியமித்து கூபாவாசிகளுக்கு அதை அறிவிக்கும் கடிதத்தில்,

'நான் உங்களுக்கு அம்மார் (ரலி) அவர்களை அமீராகவும், இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களை அமைச்சராகவும் ஆசிரியராகவும் அனுப்புகிறேன். இவர்கள் இருவருமே நபித்தோழர்களாவர். பத்ர் போரில் பங்கு கொண்டவர்களாவர்.' என்று இருவரின் சிறப்புக்களையும் குறிப்பிட்டு எழுதினார்கள்.

ஈமானில் உறுதி இல்லாதவர்களுக்குப் பட்டம் பதவி என்பன தலைக்கணத்தையும் அகங்காரத்தையுமே அளிக்கும். ஆனால், அம்மார் (ரலி) போன்ற நபித்தோழர்களுக்கு பட்டம் பதவி என்பன பணிவையும், அல்லாஹ்வின் முன் பதில் சொல்லவேண்டுமே என்ற பயத்தையுமே அளித்தது.

அம்மார் (ரலி) அவர்கள் காலத்தில் கூபாவில் வசித்த இப்னு அபுல் ஹுதைல் என்பவர், 'அம்மார் (ரலி) அவர்கள் கூபாவின் அமீராக இருந்தபோது சந்தைக்குச் சென்று வீட்டுக் தேவையான பொருட்களை வாங்கிக் கட்டித் தன் முதுகின் மீது சுமந்தவராக வருவதை நான் கண்டுள்ளேன்' என்று கூறுகின்றார்.

ஆட்சியாளர்கள் எவ்வளவு நேர்மையாக இருந்தாலும் குறை கூறுபவர்கள் இருக்கவே செய்வர். அம்மார் (ரலி) அவர்களின் ஒரு காது, யமாமா போர்க்களத்தில் வெட்டப்பட்டு விட்டது. இது குறித்து அப்துல்லாஹ் இப்னுஅம்ர் (ரலி) அவர்கள் கூறும்போது, யமாமாப் போரில் முஸ்லிம்கள் பின்வாங்கும் நிலை வந்தபோது ஒரு கற்பாறை மேல் இருந்து, 'முஸ்லிம்களே! சொர்க்கத்தை விட்டா வெருண்டோடுகிறீர்கள்! இதோ நான் அம்மார் இப்னு யாஸிர், வாருங்கள்! என்னுடன் போர்க்களத்திற்கு' என அழைத்தார். அந்தப் போரில் அவரது காது வெட்டப்பட்டுத் தொங்கிக் கொண்டிருக்க அவர் கடுமையாகப் போரிட்டுக் கொண்டிருந்தார் எனக் குறிப்பிடுகின்றார்.

'ஒரு நாள் ஒரு சாதாரண மனிதன் அம்மார் (ரலி) அவர்களைப் பார்த்து, 'காது கிழிந்தவனே!' என அவமதித்துப் பேசினான். அதிகாரத்தில் இருந்த அம்மார் அவர்கள், 'நீ கோபப்படுத்திப் பேசிய அந்தக் காதுதான் என் காதுகளில் சிறந்தது. அது அல்லாஹ்வின் பாதையில் அறுபட்ட காது' என்று விளக்கிக் கூறியதைத் தவிர எந்த மாற்று நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வளவு மென்மையான அதிகாரிகளை ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்றில் தவிர வேறு எங்கும் காணமுடியாது.

குழப்பத்தின் போது

ஹுதைபதிப்னு யமான் (ரலி) அவர்கள், ஸாஹிபுஸ்ஸிர் (நபி (ஸல்) அவர்களது இரகசியங்களின் தோழர்) என அழைக்கப்பட்ட நபித்தோழராவார். நபி (ஸல்) அவர்கள் இவரிடம் ஏராளமான இரகசியங்களைக் கூறியிருந்தார்கள். இவரின் மரண நேரத்தில் இவரிடம், குழப்ப காலத்தில் 'மக்கள் யாருடைய வழிமுறையைப்

பின்பற்றுவது என்று கேட்டபோது சுமையாவின் மகனுடன் இருங்கள். ஏனெனில், அவர் மரணிக்கும் வரை சத்தியத்தைப் பிரியமாட்டார்' என்று கூறினார்கள். இவ்வகையில் அம்மார் (ﷺ) சத்தியத்தின் சான்றாகத் திகழ்கின்றார்.

ஸிப்பீன் போரில்

அலீ (ﷺ), முஆவியா (ﷺ) ஆகியோருக்கிடையே ஏற்பட்ட அரசியல் நெருக்கடி, போராக வெடிக்கும் நிலை தோன்றியது.

சிலர் அலீ (ﷺ) பக்கம்; சிலர் முஆவியா (ﷺ) பக்கம். 'தொழுகைக்கு அழைத்தால் பதிலளிப்பேன்; முஸ்லிம் சகோதரனைக் கொல்வதற்கழைத்தால் என்னால் பதிலளிக்க முடியாது' என்று இப்னு உமர் (ﷺ) அவர்கள் கூறினார்கள். இந்த அடிப்படையில் சிலர் எந்த அணியிலும் சேராமல் ஒதுங்கிக் கொண்டார்கள். இவ்வாறு மக்கள் மூன்று கூட்டங்களாகப் பிரிந்தனர்.

அம்மார் (ﷺ) அவர்கள் அலீ (ﷺ) அவர்கள் அணியுடன் இணைந்தார்கள். இது அலீ (ﷺ) அவர்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியையும் தமது நிலை சரிதான் என்ற உறுதியையும் அளித்தது. போருக்கு முன்னர் அம்மார் (ﷺ) அவர்கள் ஆற்றிய உரை அலீ (ﷺ) அவர்களுக்கு மேலும் வலிமை சேர்த்தது.

அப்போது அம்மார் (ﷺ) அவர்களுக்கு 93 வயதாகி இருந்தது. முஅவியா (ﷺ) அவர்கள் அணியில் இஸ்லாத்தில் புதிதாக இணைந்தவர்களே அதிகமாக இருந்தனர். அம்மார் (ﷺ) அவர்கள் இந்தப் போரின் போது முஆவியா (ﷺ) அவர்களின் அணியினரால் கொல்லப்பட்டார்கள்.

'வரம்பு மீறிய கூட்டத்தால் நீ கொல்லப்படுவாய்' என்ற நபிகளாரின் முன்னறிவிப்பு நிறைவேறியது.

இந்தக் கொலை அலீ (ﷺ) அவர்களின் அணிக்கு வலுவூட்டியது. முஆவியா (ﷺ) அவர்களுடன் இருந்த மூத்த அறிஞர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது.

முஆவியா (ﷺ) அவர்களின் வழியா? அலீயின் வழியா? எது மிகச் சரியானது என்பதைத் தீர்மானிப்பதற்கு இந்த மரணம் துணை புரிந்தது.

தனது இளமைக் காலம் முதல் முதுமை வரை தன் வாழ்வை இஸ்லாத்திற்கும் சத்தியத்திற்குமாக அர்ப்பணித்த அம்மார் இப்னு யாஸிரின் வாழ்வை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

அல்குர்ஆனை ஒன்றுதிரட்டிய மேதை

ஸைத் இப்னு ஸாபித் (ரழி)

ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்கள் அன்ஸாரிகளில் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். மதீனாவின் ஆரம்ப கால முஸ்லிம்களுள் ஒருவர். நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்த போது தனது தாய் தந்த உணவுத் தட்டை நபி (ஸல்) அவர்களிடம் வழங்கி நபியின் துஆவைப் பெற்றவர். வஹியைப் பதிவு செய்பவராகவும், பிற்காலத்தில் மதீனாவின் முப்தியாகவும் திகழ்ந்தவர்.

உஹுதுக் களத்தில்

பத்ர் யுத்தம் முடிந்துவிட்டது. இந்தப் போரில் பல நபித்தோழர்களுக்கு கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவர்கள் இன்னுமொரு முறை எதிரிகளைச் சந்திக்க நேரிட்டால் அதில் கலந்து கொண்டு ஜிஹாதின் பலனைப் பெற வேண்டுமென கங்கனம் கட்டியிருந்தனர். இந்நிலையில், ஹிஜ்ரி 3ல் மூவாயிரம் காபிர்கள் அணிதிரண்டு பத்ரில் ஏற்பட்ட தோல்விக்குப் பழிவாங்கும் எண்ணத்துடன் வந்துகொண்டிருக்கும் தகவல் மதீனாவுக்கு எட்டியது. அப்போது மதீனத்து முஸ்லிம்கள் தமக்குள் ஆலோசித்து உஹது மலையடிவாரத்தில் எதிரிகளைச் சந்திக்க திட்டமிட்டனர்.

அப்போது பெண்களுள் சிலர் தாமாக வந்து படையில் இணைந்தனர். நபி (ஸல்) அவர்கள் வந்தவர்களைத் திருப்பி அனுப்ப முற்பட்டபோது, அவர்கள் தாங்கள் போர் நடவடிக்கையில் ஈடுபட முடியாவிட்டாலும் உதவி ஒத்தாசை செய்ய முடியுமெனக் கூற அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் தமது படைகளை சரிசெய்து கொண்டிருக்கையில் அவர்களுள் இப்னு உமர், உஸாமா இப்னு ஸைத், பரா இப்னுல் ஆஸிம், உஸைர் இப்னு பஸீர் போன்ற பதிமூன்று வயதுகளையும் தாண்டாத சிறுவர்கள் இருந்தனர். அவர்களுள் ஸைத் இப்னு ஸாபிதும் ஒருவர். நபி (ஸல்) அவர்கள் இந்தச் சிறுவர்களின் உற்சாகத்தையும் உணர்வையும் பாராட்டி, நீங்கள் எதிர்காலங்களில் நிகழும் போர்களில் பங்கு கொள்ளலாம். இப்போது திரும்பிச் செல்லுங்கள் என அனுப்பிவிட்டார்கள். நபி (ஸல்) அவர்களின் தலைமையின் கீழ் போரிடும் வாய்ப்புக் கிடைக்காத இந்தச் சிறுவர்கள் அழுதவர்களாக இல்லம் திரும்பினர்.

அறிவுப் போராட்டம்

நபி (ﷺ) அவர்களின் பாசறையில் போர் புரியும் பாக்கியத்தை இழந்த தனது மகன் எப்போதும் நபி (ﷺ) அவர்களின் பாசறையிலேயே இருக்கும் வகையில் அவர்களது தாயார் வேறு ஒரு களத்தை அமைத்துக் கொடுத்தார்.

ஸைத், இயல்பிலேயே அதிக விவேகமும், மனன சக்தியும் மிக்கவராகக் காணப்பட்டார். இதேவேளை, எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தார். ஸைதின் தாயார் தன் மகனை நபி (ﷺ) அவர்களிடம் அழைத்து வந்து,

'இவர் அல்குர்ஆனை மனனமிட்டுள்ளார்; அழகாக ஓதுகிறார்; இந்த வகையில் அறிவுப் பணியில் இவரைப் பயன்படுத்துங்கள்' என்று வேண்ட, நபி (ﷺ) அவர்கள் சிறுவரை ஓதச் சொன்னார்கள். அப்போது அவர் சுமார் 17 அத்தியாயங்களை மனனமிட்டிருந்தார். அவர் மிக அழகாக அவற்றை ஓதினார். அவரிடம் காணப்பட்ட அறிவு ஆற்றலை இஸ்லாமிய எழுச்சிக்குப் பயன்படுத்த நபி (ﷺ) அவர்கள் எண்ணினார்கள். எனவே, அவரை வஹியைப் பதிவு செய்யும் ஒருவராக நியமித்ததுடன் யூதர்களின் வேத மொழியான சுர்யானி மொழியைப் படிக்குமாறு கூறினார்கள். இவர் சுமார் 15 அல்லது 17 நாட்களுக்குள் சுர்யானி மொழியை எழுத, வாசிக்க, பேசக் கற்றுக்கொண்டார். (புகாரி 7195, திர்மிதி 2715)

இதன் பின் நபி (ﷺ) அவர்களின் மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றினார்கள். நபியவர்கள் யூதர்களுக்கு ஏதும் தகவல் கூறினால் அதை சுர்யானி மொழியில் எழுதுவது, அவர்கள் ஏதும் மடல் அனுப்பினால் அதனை நபியவர்களுக்கு மொழிபெயர்த்துக் கூறுவது போன்ற பணிகளைச் செய்தார். இதனால் நபி (ﷺ) அவர்களுடன் மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்பைப் பெற்றார்.

வஹியைப் பதிபவர்

வஹி அருளப்படும்போது அதனை எழுதி வைப்பதே நபி (ﷺ) அவர்கள் ஸைதிற்கு வழங்கிய முக்கிய பொறுப்பாகும். நபி (ﷺ) அவர்களுக்கு வஹி அறிவிக்கப்பட்டால், 'ஸைதை அழைத்து வாருங்கள்' எனக் கூறி 'இந்த வசனத்தை இந்த இடத்தில் பதியுங்கள்' என்று கூறுவார்கள். (புகாரி). இதனால் இவர் மிக அதிகமாக நபி (ﷺ) அவர்களை அண்டி நிற்கும் வாய்ப்பையும் அல்குர்ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் அண்ணல் நபியின் வாயிலிருந்து வஹியின் வாசம் மாறாமலேயே கேட்டு மனனமிட்டுக் கொள்ளும் வாய்ப்பையும் பெற்றார்.

இவரின் கால் மேல் நபி (ﷺ) அவர்களின் கால் இருந்தபோது நபியவர்களுக்கு வஹி அருளப்பட்டு அதன்மூலம் வஹியின் கனத்தையும் அவர் உணர்ந்துள்ளார். தனது கால்கள் துண்டாகிவிடுமோ என்ற உணர்வைத் தான் உணர்ந்ததாகக் கூறுகின்றார்கள். (புகாரி)

அறிவின் ஆழம்

இவர் மிகுந்த அறிவு ஆழம் கொண்டவராகத் திகழ்ந்தார். உமர் (رضي الله عنه) அவர்களுக்கு ஏதும் ஐயம் ஏற்பட்டால் இவரிடம் விசேடமாக வினவுவார்கள். மர்வான் போன்ற உமையாக் கலீபாக்கள் கூட இவரின் அறிவை மதித்து இவரிடம் பத்வா பெற்றுள்ளனர். மதீனாவின் முப்தியாக இவர் கருதப்பட்டார். உமர் (رضي الله عنه) அவர்கள் பயணங்கள் செல்லும்போது இடைக்கால கலீபாவாக இவரை நியமித்துச் செல்வார்கள். இவரின் அறிவை அனைவரும் மதித்தனர்.

ஒரு முறை இவர் தனது கழுதை அல்லது குதிரையில் ஏறும்போது இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் ஓடிவந்து அதன் கடிவாளத்தைப் பிடித்து உதவிசெய்தார்கள். இவர் மரியாதைக்காக, 'நபியின் பெரியப்பா மகனே! விடுங்கள்' எனக் கூறியபோது, 'இல்லை, இல்லை இவ்வாறுதான் எங்கள் அறிஞர்களைக் கண்ணியப்படுத்த வேண்டும் என நாம் ஏவப்பட்டுள்ளோம்' என்று கூறினார்கள். ஸைத் (رضي الله عنه) அவர்கள் இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்களின் கரங்களை முத்தமிட்டு, 'இப்படித்தான் நபியின் குடும்பத்தாரை கண்ணியப்படுத்துமாறு நாம் ஏவப்பட்டுள்ளோம்' என்று கூறினார்கள்.

பிரிவைத் தடுத்த வாதம்

நபி (ﷺ) அவர்கள் வபாத்தான போது முஸ்லிம் உலகில் அடுத்த தலைவர் யார் என்ற முக்கியப் பிரச்சினை எழுந்தது. மதீனா தான் இஸ்லாமிய ராஜ்ஜியத்தின் தலைநகராக இருந்தது. எனவே, மதீனாவைச் சேர்ந்த ஒருவர் தான் கலீபாவாக வேண்டும் என்ற எண்ணம் முக்கிய அன்ஸாரித் தோழர்களின் உள்ளங்களில் குடிகொண்டிருந்தது. அதற்கான முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அபூபக்கர் (رضي الله عنه), அபூ உபைதா (رضي الله عنه) போன்ற மக்கத்து முஹாஜிர்கள் அவ்விடம் வந்து இதற்கு மாற்றமாகப் பேசினர். பிரச்சினையின் உச்சகட்டத்தில் அன்ஸாரிகள், 'உங்களுக்கு ஒரு தலைவர் எங்களுக்கு ஒரு தலைவர்' என்ற முடிவை முன்வைத்தனர். இது முஸ்லிம்களை இரு கூறாகப் பிரிப்பதாக அமையும். இச்சந்தர்ப்பத்தில் அன்ஸாரிகளில் ஒருவராக இருந்த ஸைத் (رضي الله عنه)

அவர்கள், ‘தோழர்களே! எமக்கு நபி (ﷺ) அவர்கள்தாம் தலைவராக இருந்தார்கள். நாம் அவருக்கு உதவியாளராகச் செயற்பட்டோம். நபி (ﷺ) அவர்கள் முஹாஜிர்தான். எனவே, இப்போதும் முஹாஜிர்கள் தலைவர்களாக இருக்கட்டும். நாம் அவர்களுக்கு உதவுபவர்களாக இருப்போம். இதோ தலைமைக்குத் தகுதியான அபூபக்கர் இருக்கிறார். அவருக்கு பைஅத் செய்யுங்கள்’ எனக் கூறினார்கள். அன்ஸாரிகளில் ஒருவராக இருந்துகொண்டு அவர் எடுத்துவைத்த இந்த வாதம், இரு கூறாக உடைய இருந்த முஸ்லிம் சமுதாயம் ஒரு கொடியின் கீழ் அணிதிரளப் பெரிதும் உதவியாக அமைந்தது எனலாம்.

அல்குர்ஆனைத் திரட்டும் பணி

யமாமாப் போரில் அநேக நபித்தோழர்கள் கொல்லப்பட்டனர். குர்ஆனை மனனமிட்டவர்கள் மரணித்து விட்டால் அல்குர்ஆனைப் பாதுகாப்பது கடினம் எனக் கருதிய உமர் (رضي الله عنه) அவர்கள், அபூபக்கர் (رضي الله عنه) அவர்களிடம் வந்து அல்குர்ஆனை முறையாக ஒன்றுதிரட்டிப் பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினார்கள். ஆரம்பத்தில் மறுத்த அபூபக்கர் (رضي الله عنه) அவர்கள் பின்னர் ஏற்றுக்கொண்டு இந்தப் பணிக்கு ஸைத் இப்னு ஸாபிதை பொறுப்பாக்கத் தீர்மானித்தார்கள்.

இதை ஸைதிடம் முறையிட்ட போது முதலில் இதை மறுத்தார். ஒரு மலையைச் சுமந்து இன்னோர் இடத்திற்கு மாற்றுவதை விட கடினமான பொறுப்பு இது எனக் கூறினார்கள். இருப்பினும் சிறிது சிறிதாக, தனித்தனி நபர்களிடம் உள்ள குர்ஆன் வசனங்களின் எழுத்தையும் நபித்தோழர் உள்ளங்களில் இருந்த குர்ஆனையும் ஒப்பிட்டுப் பார்த்து, ஒவ்வொரு வசனங்களுக்கும் குறைந்தது இரண்டு நபித்தோழர்களின் சாட்சியத்தைப் பெற்று குர்ஆனை நூல் வடிவில் தொகுக்கும் பெரும் பணியின் தலைமைப் பொறுப்பை ஸைத் (رضي الله عنه) அவர்கள் பின்னர் ஏற்றுக் கொண்டார்கள்.

அபூபக்கர் (رضي الله عنه) அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே இப்பணியைச் செவ்வனே செய்து முடித்து, அன்றிருந்த நபித்தோழர்கள் அனைவரின் ஏகமனதான சம்மதத்தைப் பெற்றார்கள். பின்னர் உஸ்மான் (رضي الله عنه) அவர்கள் காலத்தில் அல்குர்ஆனை ஒரே எழுத்து வடிவில் எழுதி அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பும் தேவை ஏற்பட்டபோது அந்தப் பணியையும் இவர்கள் பொறுப்பெடுத்துச் செய்தார்கள். உஸ்மான் (رضي الله عنه) அவர்கள் காலத்தில் தொகுக்கப்பட்ட குர்ஆன் பிரதி இன்றும் அரும்பொருட்காட்சிச் சாலையில் பார்வைக்கு உள்ளது.

இந்த இவரது பணி ஒன்றே இவரது பெருமைக்குப் போதிய சான்றாகும்.

அறிவின் மறைவு

உமர் (ﷺ) அவர்கள், 'குர்ஆனைப் பற்றி அறிய விரும்புபவர் ஸைத் இப்னு ஸாபிதிடம் செல்லுங்கள்' என்று கூறுவார்கள். இவர் மரணித்த போது முஸ்லிம் உலகு அறிவு மேதையை இழந்துவிட்ட சோகத்தில் அழுதது. அபூஹுரைரா (ﷺ) அவர்கள் இவர் மரணித்த போது, 'இன்றைய தினம் இந்தச் சமுதாயத்தின் படித்த ஞானி ஒருவர் மரணித்துவிட்டார். அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ﷺ) அவர்கள் மூலம் அந்த இடத்தை அல்லாஹ் நிரப்புவான்' என்று கூறினார்கள்.

இவர் மரணித்த போது மர்வான் இப்னு ஹகம் தொழுகை நடத்தினார். அப்போது அன்ஸாரிப் பெண்கள் அழுதனர். ஸைத் (ﷺ) அவர்களின் மகள் அழாதீர்கள் என்று அவர்களை அமைதிப்படுத்திய போதும், 'இல்லை; மூன்று நாட்கள் நாம் நமது சோகம் தீர அழுவோம்' என்று கூறி அழுதவண்ணம் இருந்தனர். மர்வான் அவர்களுக்கான உணவு ஏற்பாட்டைச் செய்தார். இவரை நல்லடக்கம் செய்த நபித்தோழர்கள், 'நிறைந்த அறிவை நாம் அடக்கம் செய்து விட்டோம்' என்று கவலை கொண்டனர். ஒவ்வொரு முஸ்லிமும் அல்குர்ஆனைப் புரட்டும் போது அதை ஒன்றுதிரட்டுவதற்காகப் பாடுபட்ட ஸைத் (ﷺ) அவர்களின் கபுறுக்கும் நன்மைகள் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கும்.

தனது அறிவு ஆற்றலால் முஸ்லிம்களின் உள்ளங்களில் நீங்காது நீடித்து நிற்கும் அவரது பணிகளை அல்லாஹுத்தஆலா பொருந்திக் கொள்வானாக!



உருவ அமைப்பிலும் நற்குணத்திலும் நபியவர்களை ஒத்த ஜஃபர் இப்னு அபூதாலிப் (ரலி)

அச்சம் துளிகூட இல்லாத மாவீரர். வறுமையைப் பற்றி அணுவளவும் அஞ்சாமல் வாரி வழங்கிய வள்ளல். இரக்கத்தாலும் ஈகைக் குணத்தாலும் 'அபுல் மஸாகீன்' ஏழைகளின் தந்தை என எல்லோராலும் போற்றப்பட்ட குணக்குன்று. உடல் தோற்றத்திலும் குண இயல்புகளிலும் நபி (ஸல்) அவர்களை அச்சில் வார்த்தது போன்ற இயல்பான தன்மையைப் பெற்ற உத்தமர்.

ஆம்! அவர்தாம் அலீ (ரலி) அவர்களின் சகோதரர், நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தையின் புதல்வர் ஜஃபர் இப்னு அபூதாலிப்தான். அத்தனை சிறப்புக்களுக்கும் சொந்தக்காரரர்.

அபூதாலிபின் மகன் ஜஃபரும், அப்பாஸின் மகன் குதமும், அலீயின் மகன் ஹஸனும், நபியவர்களின் பெரிய தந்தை ஹாரிஸின் மகன் அபூசுப்யான் மற்றும் இமாம் ஷாபியின் பாட்டனார் ஸாயிப் இப்னு உபைத் (ரலி) அவர்களும் நபியவர்களின் குடும்பத்தில் நபியின் சாயலையுடையோராக இருந்தனர். இவ்வகையில் நபி (ஸல்) அவர்கள் ஜஃபர் (ரலி) அவர்களைப் பார்த்து, 'நீ தோற்றத்திலும், குண இயல்புகளிலும் என்னை ஒத்தவனாக இருக்கின்றாய்' என்று கூறி இருப்பது ஜஃபர் (ரலி) அவர்களின் சிறப்புக்குச் சான்றாகும். (அஹ்மத், புகாரி 2699, திர்மிதி 3765)

இளமைப் பருவம்

நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு முன்பு மக்காவில் ஒரு முறை பெரும் பஞ்சம் நிலவியது. அப்போது ஹாஷிம் குடும்பத்தில் நபியவர்களும், அப்பாஸ் (ரலி) அவர்களும் மட்டுமே பொருளாதார வளத்துடன் காணப்பட்டனர். அபூதாலிப் வறுமையால் பாதிக்கப்பட்டார். தன்னைச் சிறுவயதில் அன்புடன் அரவணைத்த அபூதாலிபுக்கு நபி (ஸல்) அவர்கள் உதவ எண்ணினார்கள்.

எனவே, அப்பாஸ் (ரலி) அவர்களிடம் சென்று, 'பெரிய தந்தையே! அபூதாலிப் அவர்கள் வறுமையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார். நாம் அவர்களது பிள்ளைகளுள் சிலரைப் பொறுப்பெடுத்து வளர்த்தால் அவரது குடும்பச் சுமை கொஞ்சம் குறையும் அல்லவா? அப்படிச் செய்யலாமா?' என்று கேட்டார்கள். இதுகேட்ட அப்பாஸ் (ரலி), 'ஒரு நல்ல பணிக்காக நீ என்னை அழைத்துள்ளாய்' என்று சம்மதித்தார்.

பின்னர் இருவரும் அபூதாலிபிடம் சென்று தாம் வந்த நோக்கத்தைக் கூறினர். அவரும் ‘உகைல்’ என்ற மகனை விட்டுவிட்டு யாரை வேண்டுமானாலும் நீங்கள் பொறுப்பெடுக்கலாம் என்று கூறினார். எனவே, நபி (ﷺ) அவர்கள் அலீ (رضي الله عنه)யையும், அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் ஜஃபரையும் பொறுப்பெடுத்தார்கள். நபி (ﷺ) அவர்கள் நபித்துவத்தைப் பெற்று பிரச்சாரத்தை ஆரம்பித்து இவ்விருவரும் இஸ்லாத்தில் இணையும் வரை இவர்களது பொறுப்பபிலேயே இவ்விருவரும் இருந்தனர்.

இந்த நிகழ்ச்சி நபித்துவத்திற்கு முன்னரே நபி (ﷺ) அவர்களிடம் காணப்பட்ட குடும்ப உறவைப் பேணுதல், கஷ்டப்படுவோருக்கு உதவுதல், உதவத் தூண்டுதல், அடுத்தவர் சிரமங்கள் குறித்தும் சிந்தித்தல், நன்றி மறவாது நடத்தல் போன்ற பல்வேறு நற்பண்புகள் குடிகொண்டிருந்ததை உணர்த்தி நிற்கிறது.

இஸ்லாமிய மார்க்கத்தில் இணைதல்

ஜஃபர் (رضي الله عنه) அவர்கள் அஸ்மா பின்து உமைஸ் என்ற பெண்மணியை மணந்திருந்தார்கள். இருவரும் ஆரம்பகால முஸ்லிம்களாவர். இவ்விருவரும் அபூபக்கர் (رضي الله عنه) அவர்களின் மூலம் இஸ்லாத்தில் இணைந்தனர். பொதுவாக ஆரம்பகால முஸ்லிம்கள் அத்தனை நெருக்கடிகளையும் இவ்விளம் தம்பதியினரும் சந்தித்தனர். சுவனத்துப்பாதை என்பது இலகுவானதல்ல என்பதைத் தெளிவாக அறிந்திருந்த இத்தம்பதியினர் இன்னல்களைச் சகித்துக் கொண்டனர். எனினும், இஸ்லாமிய வழிபாட்டில் இன்பம் காண முடியாமல் தாம் தடுக்கப்படுவதுதான் அவர்களுக்கு வேதனை தருவதாக இருந்தது. எனவே, நிம்மதியாக தடைகள் இல்லாமல் முஸ்லிமாக வாழ்வதற்கான வழி பற்றிச் சிந்தித்தனர்.

முதல் ஹிஜ்ரத்

மக்கா, முஸ்லிம்களுக்கு பூகம்ப பூமியாக மாறியது. நபி (ﷺ) அவர்களாலும் முஸ்லிம்களைப் பாதுகாக்க முடியாத நிலை. எனவேதான் உயிருக்குயிராக நேசித்த ஜஃபரின் தலைமையில் நீதியான அரசனால் ஆளப்படும் ஹபஷா நாட்டிற்கு ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள்.

அந்த ஆரம்ப முஸ்லிம்கள், தாம் பிறந்து வளர்ந்து விளையாடிய, தாம் பள்ளிப் பருவத்தையும் இளமைப்பருவத்தையும் கழித்த அந்தச் சூழலை, தாம் உறவுகளுடன் வசித்த இல்லங்களை விட்டு அகதிகளாக ஹபஷா சென்றனர்.

அரசியல் சூழ்ச்சி

ஹபஷா சென்ற முஸ்லிம்கள் இஸ்லாத்தை ஏற்ற பின் முதன் முதலான சுதந்திரக் காற்றை சுவாசித்தனர். அமைதி, நிம்மதி என்பவற்றைக் கண்டனர். யாருடைய தடையும் இடையூறும் இன்றி வழிபாட்டில் ஈடுபட்டனர். இந்த நிம்மதி நிலையைக் குலைக்கும் விதத்தில் குறைஷிகள் அரசியல் சூழ்ச்சி ஒன்றை செய்தனர்.

அதாவது அம்ரு இப்னு ஆஸ், அப்துல்லாஹ் இப்னு அபூரபீஆ என்ற இரண்டு ராஜதந்திரிகளை குறைஷிகள் ஹபஷாவுக்கு அனுப்பினர். அவர்கள் பெருமளவு அன்பளிப்புப் பொருட்களுடன் அங்கே சென்று கிறிஸ்தவ மதகுருக்களுக்கு அன்பளிப்புகளை வழங்கி, ‘எங்கள் பிரதேச இளைஞர்கள் சிலர் எமது மதத்தைப் புறக்கணித்து இங்கு வந்துள்ளனர். அவர்கள் விஷயமாக மன்னரிடம் நாம் பேசவுள்ளோம். அப்போது அந்த இளைஞர்களை எங்களிடம் ஒப்படைத்து விடுமாறு நீங்களும் மன்னரிடம் கூறுங்கள்’ எனக் கேட்டுக் கொண்டனர். அவர்களும் அதற்கு உடன்பட்டனர்.

மன்னர் நஜ்ஜாஷியின் சபைக்கு வந்த குறைஷித் தூதர்கள், ‘மன்னரே! எங்கள் பிரதேச இளைஞர்கள் சிலர் உங்கள் ஆட்சி எல்லைக்குள் வந்துள்ளனர். நாங்களோ நீங்களோ அறியாத புதிய மார்க்கத்தை அவர்கள் பின்பற்றுகின்றனர். எங்கள் மதத்திலிருந்து பிரிந்தவர்கள் உங்கள் மதத்தில் நுழையவும் இல்லை. இந்த இளைஞர்களின் உறவினர்கள் தாம் எங்களை உங்களிடம் அனுப்பினார்கள். எனவே, அவர்களை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள் எனக் கேட்டனர். மதகுருக்களும் அதை ஆதரித்துப் பேசினர். ஆனால், மன்னர் மறுதரப்பை விசாரிக்காது முடிவு எடுப்பதில்லை என்பதில் உறுதியாக இருந்தார்.

மன்னர் முஸ்லிம்களை அழைத்தபோது, முஸ்லிம்கள் ஒன்றுகூடி மன்னர் முன்னிலையில் ஜஃபர் இப்னு அபீதாலிப் மட்டும்தன் பேச வேண்டும் என்றும் நாம் உள்ளத்தால் எதை நம்பினோமோ அதைப் பகிரங்கமாகக் கூறிவிடுவது என்றும் முடிவெடுத்தனர்.

மன்னர் முன்னிலையில் மார்க்க விளக்கம்

மதகுருக்களும், அமைச்சர்களும் புடைசூழ மன்னர் அமர்ந்திருந்தார் குறைஷித் தூதர்களும் அங்கிருந்தனர். மன்னர் இஸ்லாத்தைப் பற்றிக் கேட்டபோது ஜஃபர் இப்னு அபீதாலிப் சற்றும் தயங்காது சத்தியத்தைத் தெளிவாக எடுத்துக்கூற ஆரம்பித்தார்.

கண்ணியத்திற்குரிய மன்னரே! நாம் மடமை நிறைந்த மக்களாக இருந்தோம்; சிலைகளை வணங்கினோம்; செத்தவற்றைப் புசித்தோம்; மானக்கேடான அனைத்துத் தவறுகளையும் செய்து வந்தோம்; உறவுகளை முறித்தோம்; அண்டை வீட்டாருக்கு அநீதி இழைத்தோம்; எம்மில் வலியவன் எளியவனை ஏய்த்துப் பிழைத்து வாழ்ந்தான்.

இந்நிலையில் அல்லாஹ் எங்களுக்கு ஒரு தூதரை அனுப்பினான். அவரின் குடும்பம், வாய்மை, நம்பிக்கை, நல்லொழுக்கம் அனைத்தையும் நாம் நன்கு அறிவோம்.

அவர் அல்லாஹ் ஒருவனை மட்டும் வணங்குமாறும் அவனல்லாத, நாமும் நமது மூதாதையர்களும் வணங்கி வந்த சிலைகளையும் கற்களையும் விட்டு விடுமாறும் உரைத்தார்.

உண்மை பேசுமாறும், நம்பிக்கை, நாணயம் பேணுமாறும், குடும்ப உறவைப் பேணுமாறும் அண்டை அயலவருக்கு நன்மை செய்யுமாறும், தீயவற்றை விட்டுவிடுமாறும் அடுத்தவர் உரிமையை மதிக்குமாறும் அவர் எமக்கு ஏவினார்.

பாலியல் குற்றங்களை விட்டுவிடுமாறும், பொய் சாட்சியைத் தவிர்க்குமாறும், அநாதைகளின் சொத்துக்களை அபகரித்தல், நல்லொழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு கூறுதல் போன்றவற்றை விட்டுவிடுமாறும் ஏவினார் என்று தொடர்ந்து தெளிவாக, சலனமில்லாது, அழகிய வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி பேசினார்.

தொடர்ந்து இஸ்லாத்தை ஏற்ற மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும், தாம் பாதுகாப்புக் கருதியே இங்கு வந்ததாகவும் கூறினார்கள். இந்த உரை மன்னர் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியது. உடனே, மன்னர் ஜஃபர் (ؓ) அவர்களிடம் உங்கள் நபி கொண்டு வந்த வேத வெளிப்பாட்டில் உனக்கு மனனமுள்ளதை ஓதிக்காட்டு எனக் கேட்டபோது,

ஜஃபர் (ؓ) அவர்கள் ஸகரிய்யா, மர்யம் (அலை) ஆகியோர் பற்றிப் பேசும் மர்யம் 19ம் அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதிகளை ஓதிக்காட்டினார்கள். குர்ஆனின் வார்த்தைகளைக் கேட்டு மன்னரின் கண்கள் கண்ணீர் சிந்தின.

உங்கள் நபி கொண்டுவந்த மார்க்கமும் இயேசு போதித்த மார்க்கமும் ஒரே ஊற்றிலிருந்தே உற்பத்தியாகியுள்ளன எனக்கூறிய

மன்னர் முஸ்லிம்களைத் திருப்பியனுப்புவதில்லை என்றும் அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதாகவும் முடிவெடுத்தார். அத்தோடு அன்றைய சபை கலைந்தது.

மீண்டும் சூழ்ச்சி

மிகுந்த தந்திரக்காரரான அம்ர் இப்னு ஆஸ் (இவர் பின்னர் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்) அரசனின் உள்ளத்தில் முஸ்லிம்கள் மீது கோபத்தை உண்டாக்கும் ஒரு செய்தியை நாளை சபை மீண்டும் கூடும்போது கூறப்போகின்றேன் என்று கூறினார்.

அப்போது அபூரபீஆ வேண்டாம் அவர்கள் நமக்கு முரண்பட்டாலும் நமது சொந்தக்காரப் பிள்ளைகளாயிற்றே என்று கூறினார். இருந்தாலும் அம்ர் மன்னரிடம், ‘இவர்கள் இயேசு குறித்து குறைபாடாகப் பேசுகின்றனர்’ என்று கூறினார்.

மன்னர் மீண்டும் முஸ்லிம்களை அழைத்தார். அப்போது முஸ்லிம்கள் சோகத்தோடு ஒன்று கூடினர். இயேசு குறித்துக் கேட்டால் என்ன சொல்வது என்று யோசித்தனர். அப்போது நமது மார்க்க நிலைப்பாட்டை விட்டு அணுவளவுகூட அகன்று விடாது உறுதியாக இருக்க வேண்டும். இதனால் என்ன இன்னல் ஏற்பட்டாலும் அதற்கு முகம் கொடுப்போம் என்று உறுதியாக முடிவு எடுத்தனர் முஸ்லிம்கள்.

மீண்டும் மன்னர் முன் மார்க்க முழக்கம்

‘நீங்கள் இயேசு குறித்து என்ன கூறுகின்றீர்கள்’ என மன்னர் கேட்டபோது, ஜஃபர் (ரலி) அவர்கள், ‘அவர் அல்லாஹ்வின் அடிமையும் திருத்தூதரும் நல்லொழுக்கமுள்ள கன்னிப் பெண்ணான மர்யம் அவர்களது கருவில் அல்லாஹ்வால் போடப்பட்ட வார்த்தையும் ரூஹும் ஆவார் எனத் தெளிவாகக் கூறினார்கள்.

இதனால் திருப்தியுற்ற மன்னர் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பளித்தார். குறைஷித் தூதுவர்களின் அன்பளிப்புக்களைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். இராஜதந்திரிகள் தோல்வியுடன் மக்கா திரும்பினர்.

மதீனாவை நோக்கி

ஜஃபர் (ரலி) அவர்கள் தனது மனைவியுடன் சுமார் 10 வருடங்கள் ஹபஷாவில் மன நிம்மதியுடன் வாழ்ந்து வந்தார்கள். முஸ்லிம்களது வெற்றிச் செய்திகள் அவருக்கு மன மகிழ்வைக் கொடுத்தது. எனவே, ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு ஹுதைபியா

உடன்படிக்கையின் பின்னர் (நபித்துவத்தின் 20 ஆம் வருடத்தில்) மதீனா நோக்கி வந்தார்.

அப்போது கைபர் போரில் வெற்றிபெற்று நபி (ﷺ) அவர்கள் மதீனா வந்திருந்தார்கள். தனது தம்பி சுமார் 10 வருடம் கழித்து வந்ததை அறிந்த நபி (ﷺ) அவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள். அவரைக் கட்டியணைத்து முத்தமிட்டார்கள். கைபர் வெற்றியா, ஜஃபரின் வருகையா எது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்று எனக்குத் தெரியாது எனக் கூறுமளவு ஜஃபரின் வருகை நபியவர்களை மகிழ்வித்தது.

ஏழைகளின் மகிழ்ச்சி

வாரி வழங்கும் கொடைவள்ளல் ஏழைகளின் தந்தையென வர்ணிக்கப்பட்டவரின் வருகையால் ஏழைகள் பெரிதும் மகிழ்ந்தனர். இதோ! ஏழைகளில் ஒருவரான அபூஹுரைரா (رضي الله عنه) கூறுவதைக் கேளுங்கள் :

'ஏழைகளான எங்களுக்கு மிக நல்ல மனிதராக அவர் திகழ்ந்தார். எங்களை அவர் இல்லத்துக்கு அழைத்துச் சென்று இருப்பதைத் தந்து மகிழ்வார். எல்லாம் முடிந்துவிட்டால் வெண்ணை வைக்கும் பாத்திரத்தைத் தருவார். அதனை விரலால் வலித்து நாம் உண்போம். (இருக்கும் அனைத்தையும் தந்துவிடுவார்)

போர்க்களத்தில் வீரமரணம்

ஜஃபர் (رضي الله عنه) அவர்களுக்கு, இஸ்லாத்திற்காக வீரமரணமடைய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அவரது ஆசைக்கேற்ப மதீனா வந்து ஒரு வருடத்திற்குள்ளேயே அந்த வாய்ப்பு வந்தது. முஃதா போரின் இரண்டாவது தலைவராக இவரை நபி (ﷺ) அவர்கள் நியமித்தார்கள். இந்தப் போரில் இவர் வீரமரணமடைவார் என்பது நபியவர்களின் வார்த்தை மூலம் தெளிவானது.

நபி (ﷺ) அவர்கள் இந்தப் போருக்கு ஸைத் (رضي الله عنه) அவர்களைத் தலைவராக நியமித்து, 'அவர் கொல்லப்பட்டால், ஜஃபரைத் தலைவராக்குங்கள். அவரும் கொல்லப்பட்டால், அப்துல்லாஹ் இப்னு ரவாஹாவைத் தலைவராக்குங்கள். அவரும் கொல்லப்பட்டால், உங்களில் ஒருவரைத் தலைவராக நீங்களே தெரிவு செய்து கொள்ளுங்கள்' எனக்கூறி அனுப்பினார்கள்.

போர்க்களத்தில் மிகப்பெரிய எதிரிப் பட்டாளத்தை முஸ்லிம்கள் சந்தித்தனர். ஸைத் இப்னு ஹாரிஸ், ஜஃபர் இப்னு

அபீதாலிப், அப்துல்லாஹ் இப்னு ரவாஹா என முறையே நபியவர்கள் தளபதிகளாக நியமித்த மூவரும் களத்தில் ஷஹாதத்தை அடைந்தனர். அவர்கள் அனைவரையும் எல்லாம் வல்ல அல்லாஹ் தனது அன்பால் அரவணைத்துக் கொள்வானாக!

தனது வளர்ப்பு மகனாக இருந்த ஸைத் (ﷺ), தம்பி ஜஃபர் (ﷺ) ஆகியோரின் மரணம் நபியவர்களின் மனதை நெகிழச் செய்தது. ஜஃபரின் பாசமிகு குழந்தைகளின் முகங்கள் நபியவர்களது உள்ளத்தை உருக்கியது.

நபி (ﷺ) அவர்கள் தனது தம்பியின் இல்லத்திற்குச் சென்றார்கள். அவர் மனைவி அஸ்மாவோ தகவல் எதுவும் அறியாமல் தந்தையின் வருகைக்காகக் காத்திருந்த அன்புக் குழந்தைகளை அழகுபடுத்திக் கொண்டிருந்தார். இதோ அவரே நடந்த நிகழ்ச்சியைக் கூறுகிறார்.

நபி (ﷺ) அவர்கள் எனது இல்லம் வந்தபோது, அவர்களது கண்ணியமான முகத்தை சோகம் கவ்விக் கிடந்தது. என் இதயத்தில் அச்சம் தோன்றியது. என் கணவர் குறித்த வெறுக்கும் செய்திகள் என் செவிகளுக்கு எட்டிவிடுமோ என அஞ்சி நான் எதையும் கேட்கவில்லை.

அப்போது நபியவர்கள் எங்கே பிள்ளைகள் என்று கேட்டார்கள். அப்போது என் பிள்ளைகள் வழமைபோல மகிழ்வுடன் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு ஓடினர். நபி (ﷺ) அவர்கள் அனைவரையும் அப்படியே அரவணைத்து அவர்களைக் குனிந்த நிலையில் வைத்துக்கொண்டு மாறி மாறி முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் கண்களில் அருவிபோல கண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

இந்தக் காட்சியைக் கண்ட நான், ‘ஜஃபர் குறித்தும், அவரது மற்ற இரண்டு தளபதிகள் குறித்தும் சோகமான செய்திகள் ஏதும் வந்ததா?’ எனக் கேட்டேன். அப்போது நபியவர்கள், ‘ஆம் அவர்கள் அனைவரும் வீரமரணமடைந்துவிட்டனர்’ என்று கூறினார்கள்.

இந்தச் செய்தியைக் கேட்ட பின்னர் குழந்தைகளின் முகங்களில் மாற்றம் தெரிந்தது. நான் அழுவதைக் கண்டு அவர்கள் நிலைகுழைந்து நின்றனர். அப்போது நபியவர்கள், ‘அல்லாஹ்வே ஜஃபருக்குப் பின்னர் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நல்ல பொறுப்பாளியை ஆக்குவாயாக!’ எனப் பிரார்த்தித்தார்கள்.

அல்லாஹுதஆலா இந்தப் பிரார்த்தனையை அங்கீகரித்தான். இதன் பின்னர் அஸ்மா அவர்களை அபூபக்கர் (ﷺ) அவர்களும், அவரின் மரணத்தின் பின்னர் அலீ (ﷺ) அவர்களும் மணந்து கொண்டனர்.

இறந்தவர் வீட்டுக்கு உணவு :

அஸ்மா (ﷺ) அவர்களளும், குழந்தைகளும் மிரண்டுபோய் நிற்க, சோகத்தோடு வீட்டை விட்டு வெளியேறி நபியவர்கள் ஜஃபரின் குடும்பத்திற்கு உணவு தயாரித்துக் கொடுங்கள். அவர்கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர் என்ற கருத்துப்பட கூறினார்கள். இவ்வகையில் இறந்தவர் வீட்டிற்கு அண்டை வீட்டார் உணவு தயார் செய்வது இஸ்லாமிய மரபாகும். ஆனால் இன்று இறந்தவர் வீட்டிலேயே மரணத்தின் பெயரில் விருந்து வைக்கப்படும் வினோதம் அரங்கேறுகிறது.

ஜஃபர் (ﷺ) அவர்கள் இரண்டு இறக்கைகளுடன் சுவர்க்கத்தில் பறந்து திரியக் கண்டதாக நபி (ﷺ) அவர்கள் கூறிய பலவீனமான அறிவிப்பாளர் தொடருடன் கூடிய செய்தி ஒன்று திர்மிதியில் இடம்பெற்றுள்ளது. எனினும் அதனை உறுதிப்படுத்தும் விதத்தில் 'இப்னு உமர் (ﷺ) அவர்கள் ஜஃபரின் பிள்ளைகளுக்கு சலாம் கூறும்போது, 'இரண்டு இறக்கைகளையுடையவரின் மகனே! உங்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுவார்கள்' என்ற செய்தி புகாரியில் (3709) இடம்பெற்றுள்ளது. எனவே, இந்தச் சிறப்பையும் இவர் பெறுகின்றார்.

ஜஃபர் (ﷺ) அவர்கள் 'மூத்தா' போரில் முஸ்லிம் படையின் தளபதியாகக் கலந்துகொண்டு வீரத்துடன் போரிட்டார்கள். அப்போது அவர்களின் இரு கரங்களும் எதிரிகளால் துண்டிக்கப்பட்டு வீர மரணமடைந்தார்கள். இது குறித்து அன்னாருடைய மகன் அப்துல்லாஹ் (ﷺ) அவர்களிடம், 'உமக்கு வாழ்த்துக்கள்! உம்முடைய தந்தை வானவர்களுடன் வானத்தில் பறக்கிறார்' என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். இதையே 'இரு சிறகுகள் கொண்டவரின் மகனே!' என இப்னு உமர் (ﷺ) அவர்கள் இங்கே சுட்டுகிறார்கள். (ஃபத்ஹுல் பாரி)

அல்லாஹுத்தஆலா ஜஃபர் (ﷺ) அவர்களைப் பொருந்திக் கொள்வானாக!

ஹதீஸ் அறிவிப்பில் முதலிடம் பெற்ற அபூஹுரைரா (ரலி)

இஸ்லாமிய சமுதாயத்தில் அனைவராலும் அறியப்பட்ட ஒரு பெயரே அபூஹுரைரா என்பதாகும். எந்தவொரு குத்பாவையோ பயானையோ எடுத்து நோக்கினாலும் அதில் நபி (ஸல்) கூறியதாக அபூஹுரைரா அறிவிக்கின்றார்கள் என்ற சொற்றொடரைக் கேட்கலாம். அந்த அளவுக்கு அதிகமான ஹதீஸ்களை அறிவித்த மேதையாக அவர் திகழ்கிறார். வஹீயை உள்ளத்தில் தாங்கி இஸ்லாமிய சமூதாயத்திற்கு வழங்கிய அந்த உத்தமரின் வாழ்வு எப்படி இருந்தது என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும்.

பெயர்

இஸ்லாத்திற்கு முற்பட்ட இவரது பெயர் அப்துஷ் ஷம்ஷ் என்பதாகும். இவர் இஸ்லாத்தை ஏற்ற போது அவருக்கு அப்துர் ரஹ்மான் என்று நபி (ஸல்) பெயர் சூட்டினார்கள். இவர் பூனைகளுடன் மிகப் பிரியமாக நடந்து கொள்பவர் என்பதனால் அபூஹிர்ரா என்று அழைக்கப்பட்டார். ‘பூனையின் தந்தை’ என்பது இதன் அர்த்தமாகும். இது பிரபலமானதால் அவரின் உண்மையான பெயர் கூடப் பலராலும் அறியப்படாமலேயே போய்விட்டது.

இஸ்லாத்தை ஏற்றல்

இவர் துபைல் இப்னு அமீர் அத்துவைஹி (ரலி) அவர்கள் மூலமாக இஸ்லாத்தில் இணைந்தார். ஏழையாக, அநாதையாக இருந்த இவர் அத்துவைகிக் குடும்பத்திடம் கூலியாளாக இருந்தார். இஸ்லாத்தில் இணைந்த பின்னர் மதீனாவிற்கு வந்து மஸ்ஜிதுன் நபவியையே தனது இருப்பிடமாக ஆக்கிக் கொண்டார். சுமார் நான்கு வருடங்களாக நபியவர்களுடன் கூடவே இருந்து நபிமொழிகளைப் பெற்று பாடமிட்டுக்கொண்டார். இவர் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களை விட அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவராவார். அன்னையவர்கள் இது குறித்து இவரிடம் கேட்டபோது நீங்கள் வீட்டில் மட்டும்தான் நபியவர்களுடன் இருந்தீர்கள். ஆனால், நான் வெளியில் முழுமையாக அவர்களுடன் இருந்தேன். அவர்கள் கூறிய செய்திகளை மனனமிட்டேன்’ என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் மீதான நேசம்

நபி (ஸல்) மீது மிகுந்த நேசம் கொண்டிருந்த அபூஹுரைரா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் பொன் முகத்தைப் பார்த்து

இரசிப்பதிலேயே பூரிப்படைவார்கள். 'நபி (ﷺ) அவர்களின் திருமுகத்தை விடத் தெளிவான அழகான எதையும் நான் கண்டதில்லை. சூரியன் அவர்களின் முகத்தில் ஓடுவது போல் அவர்களது முகம் இலங்கிக் கொண்டிருக்கும்' என்று கூறுவார்கள்.

அவர்களது தாயார் இஸ்லாத்தை ஏற்ற நிகழ்வும் நபி (ﷺ) அவர்கள் மீது அபூஹுரைரா (رضي الله عنه) கொண்டிருந்த அளவற்ற அன்பை வெளிப்படுத்துகிறது.

அபூஹுரைரா (رضي الله عنه) அவர்களுக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள வயதான அவர்களது தாயார் மட்டுமே இருந்தார். தாயாரோ இஸ்லாத்தைக் கடுமையாக எதிர்ப்பவராக இருந்தார். அபூஹுரைராவோ தனது தாயை நரக நெருப்பிலிருந்து காக்க பெரிதும் பாடுபட்டார்; இஸ்லாத்தை ஏற்குமாறு அழைப்பு விடுத்தார். ஒரு நாள் தாய்க்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துச் சொன்னபோது, அவர் நபியவர்களைப் பற்றி மிகக் கேவலமாக ஏசத் தொடங்கிவிட்டார். அண்ணல் நபி (ﷺ) அவர்கள் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்த அபூஹுரைரா (رضي الله عنه) அவர்களால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவலில்லை. அழுதவர்களாக ஆறுதல் தேடி நபியவர்களிடம் வந்தார்கள்.

நபியவர்கள், 'அபூஹுரைராவே! ஏன் அழுகிறாய்?' என்று கேட்டபோது அவர் நடந்ததைக் கூறி, தனது தாயாரின் நல்வழிக்காக துஆச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். நபி (ﷺ) அவர்களும் துஆச் செய்தார்கள்.

தொடர்ந்து நடந்ததை இதோ அவரே கூறுகிறார் :

(நபி (ﷺ) அவர்களின் பிரார்த்தனையைத் தொடர்ந்து) நான் வீட்டிற்குச் சென்றேன்; கதவு மூடப்பட்டு தண்ணீர்ச் சப்தம் கேட்டது; உள்ளே நுழைய முற்பட்டேன். எனது தாய், 'அங்கேயே இரு' என்று கூறினார்கள். பின்னர் குளித்து விட்டு, ஆடை அணிந்து கொண்டு வந்து கலிமாவைக் கூறினார். இதனால் மகிழ்வுற்ற நான், சற்று முன்னர் துக்கத்தால் அழுதுகொண்டு சென்றது போல் மகிழ்ச்சி மேலீட்டால் அழுதவனாக நபி (ﷺ) அவர்களிடம் சென்று, 'அல்லாஹ்வின் தூதரே! எனது தாயுடைய விஷயத்தில் உங்களது துஆ அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. என் தாய் நல்வழி பெற்றுவிட்டார்' என்று கூறினேன்.

வறுமையில் வாடிய அபூஹுரைரா (رضي الله عنه)

அபூஹுரைரா (رضي الله عنه) அவர்கள் கல்வியைத் தேடுவதற்காகக் கடுமையாக வறுமையில் உழன்றார்கள். சிலபோது பசி தாங்க முடியாது மயங்கி விழுவார்கள். சிலபோது நபித்தோழர்கள் எவராவது தன்னை வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவு தரமாட்டார்களா என்று ஏங்குவார்கள். இதோ இது குறித்து அவரே கூறுகிறார் கேளுங்கள்.

எனக்குக் கடுமையாகப் பசி ஏற்படும் போது நபித்தோழர்கள் எவரிடமாவது பேச்சுக் கொடுத்து ஒரு குர்ஆன் வசனம் பற்றி தெரிந்து கொண்டே கேட்பேன். அவர் பேசிப் பேசி அப்படியே அவரின் வீட்டிற்கு அழைத்துச் செல்லமாட்டாரா, ஏதும் உணவு தரமாட்டாரா என்பதே என் எதிர்பார்ப்பாகும்.

ஒரு நாள் என்னைப் பசி கடுமையாக வாட்டியது. வயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டிருந்தேன். பசி தாங்க முடியாமல் எவராவது அழைத்துச் செல்லமாட்டாரா என்ற எதிர்பார்ப்பில் நபித்தோழர்கள் போகும் வழியில் இருந்து கொண்டேன். அப்போது அந்த வழியாக அபூபக்கர் (رضي الله عنه) வந்தார். அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். ஒரு வசனம் பற்றிய விளக்கத்தைக் கேட்டேன். அவர் என்னை அழைத்துச் செல்லவில்லை.

அதன்பின் உமர் (رضي الله عنه) வந்தார். அவரிடமும் பேச்சுக் கொடுத்தேன். அவரும் என்னை அழைத்துச் செல்லவில்லை. அப்போது நபி (ﷺ) அவர்கள் வந்தார்கள். அவர்களுக்கு சலாம் சொன்னேன். என் முகத்தில் படிந்திருந்த பசியின் வாட்டத்தைக் கண்ட அவர்கள் எனது நோக்கம் என்ன என்பதை அறிந்து கொண்டார்கள்.

என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே சிறிது பால் மட்டுமே இருந்தது. நபியவர்கள், ‘அபூஹுரைராவே! திண்ணைத் தோழர்களை அழைத்து வா’ என்று கூறினார்கள். அவர்கள் என்னை அனுப்புவதை நான் விரும்பவில்லை. இதை வைத்து என்ன செய்ய முடியும் என்று நினைத்தேன். ஒரு மிடர் பாலைக் குடித்தாவது பசியை அடக்க விரும்பினேன். எனினும், நபி (ﷺ) அவர்களின் உத்தரவு என்பதால் மற்றவர்களையும் அழைத்து வந்தேன். அவர்களுக்கு பாலைக் கொடுக்குமாறு என்னிடமே கூறினார்கள். நான் ஒவ்வொருவருக்கும் பாலைக் கொடுத்து வந்தேன். இறுதியில் நானும் நபி (ﷺ) அவர்களும் எஞ்சினோம். நபியவர்கள், ‘அபூஹுரைராவே! குடி என்று கூறினார்கள். குடித்தேன் மேலும் குடி

என்று கூறினார்கள். குடித்தேன். இவ்வாறு தொடர்ந்து கூறிக்கொண்டே இருந்தார்கள். ஈற்றில், 'உங்களைச் சத்தியத்தைக் கொண்டனுப்பிய அல்லாஹ்வின் மீது ஆணையாக என்னால் இதன்பின் குடிக்க முடியாது' என்று கூறினேன். எஞ்சியதை நபியவர்கள் குடித்தார்கள்.

இந்தச் சம்பவம் அபூஹுரைரா (ரழி) அவர்களது வறுமை நிலையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

பிற்காலங்களில் அவர் ஆட்சி அதிகாரங்களுக்கு வந்தார். எனினும் வறுமை நிலையிலேயே வாழ்ந்தார். தனது கடந்தகால வாழ்வை அடிக்கடி நினைவுகூர்வார்.

அநாதையாக இருந்தேன்; ஏழையாக ஹிஜ்ரத் செய்தேன்; ஒரு பிடி உணவுக்காக கூலிக்கு வேலை செய்தேன் என்று கூறுபவராக இருந்தார்.

தாயைப் பேணிய தனயன்

அபூஹுரைரா (ரழி) அவர்கள், தன் தாய் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்தார்கள். அவர் வீட்டை விட்டுச் செல்லும் போதெல்லாம் தாயின் அறை வாயிலுக்குச் சென்று, 'தாயே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்' என்று கூறுவார்கள். கணவன் இல்லாத தன்னைக் கண் போலப் பார்க்கும் மகனுக்குத் தாய் பதில் கூறுவார்கள். அதன்பின் 'என்னைச் சிறு வயதில் அன்பு காட்டி வளர்த்த தங்களுக்கு அல்லாஹ் அருள்புரிவானாக! ' என்று கூறுவார்கள்.

இதற்கு, 'மூத்த வயதில் எனக்கு நன்மை செய்யும் உனக்கு அல்லாஹ் அருள் புரிவானாக!' என்று அன்னையவர்கள் துஆச் செய்வார்கள். இதன்பின் வெளியில் சென்று, திரும்பி வீட்டுக்கு வந்த பின்னரும் இவ்வாறு தாய்க்கு சலாம் கூறுவார்கள்.

இவ்வாறு பெற்றோர் நலன் பேண வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் அபூஹுரைரா (ரழி) இருப்பார்கள். ஒரு முறை ஒரு முதியவரும் இளைஞனும் ஒன்றாக நடந்து செல்வதைக் கண்ட அபூஹுரைரா (ரழி), அந்த இளைஞனிடம் 'இவர் யார்?' எனக் கேட்டார். அதற்கு அவர், 'எனது தந்தை' என்று கூறினார். அதற்கு, 'அவரது பெயரைக் கூறாதே! அவருக்கு முன்னால் நடக்காதே! அவர் (சபைகளில்) அமரும் முன் நீ அமராதே!' என்று அந்த இளைஞனுக்கு அறிவுரை கூறினார்கள். இதிலிருந்து பெற்றோர்களைப் பேணும் விடயத்தில் இவர் காட்டிய அக்கறையை விளங்கலாம்.

இறை வழிபாட்டில் இன்பம்

இறைவழிபாட்டில் இன்பம் காணுவதில், அபூஹுரைரா (ரழி) அதிக நாட்டமுடையவர். எளிமையாக வாழ்ந்த அவர், இருக்கும் பொருட்களை தான தர்மம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அதிகம் நோன்பு நோற்பார். இரவு முழுவதும் அவருடைய வீட்டில் வழிபாடு நடந்துகொண்டே இருக்கும்.

இரவின் மூன்றில் ஒரு பகுதி வரை அவர் வழிபாட்டில் ஈடுபடுவார். பின்னர் மனைவியை எழுப்பி விடுவார். அவரது மனைவி இரண்டாம் பகுதியில் வழிபாடு செய்துவிட்டு மகளை எழுப்பி விடுவார். இவ்வாறு குடும்பத்துடன் இறைவழிபாட்டில் ஊறித்திளைப்பவர் அவர்.

மாமேதையின் மரணம்

அபூஹுரைரா (ரழி) அவர்கள் உமையா ஆட்சியாளர் மர்வான் இப்னு ஹகமுடைய ஆட்சிக் காலத்தில் மரணித்தார்கள். அவர்கள் இறுதியில் நோயுற்ற நிலையில் இருந்த போது பின்வரும் நிகழ்ச்சி நடந்தது.

அவர் மரணப் படுக்கையில் இருந்தபோது அழுதார். 'ஏன் அழுகிறீர்கள்' எனக் கேட்கப்பட்ட போது, 'இந்த உலகத்தை எண்ணி நான் அழவில்லை. போகிற பயணமோ நீண்டது. தயார்படுத்திய கட்டுச் சாதனமோ குறைவானது. இதனை எண்ணித்தான் அழுகிறேன்' என்று கூறினார்கள். 'எனது பயணத்தின் பாதை முடிந்துவிட்டது. முன்னால் சுவர்க்கமும் நரகமும் உள்ளன; இதில் நான் எதில் இருப்பேன் என்பது தெரியவில்லை; இதை எண்ணித்தான் அழுகிறேன்' என்று பதிலளித்தார்கள்.

மர்வான் இப்னு ஹகம் இவரை நோய் விசாரிக்க வந்தபோது 'ஷபாகல்லாஹு யாஅபா ஹுரைரா' 'அபூஹுரைராவே! அல்லாஹ் உமக்கு சுகமளிப்பானாக!' என்று கூறினார். அதற்கு அபூஹுரைரா:

'அல்லாஹ்வே! உனது சந்திப்பை நான் நேசிக்கிறேன். அதை விரைவு படுத்துவாயாக!' என்று கூறினார்கள். மர்வான் இருப்பிடம் செல்வதற்கிடையில் மாமேதை அபூஹுரைரா (ரழி) அவர்கள் உலகைப் பிரிந்தார்கள்.

அண்ணலாரின் அழகிய பொன்மொழிகளை இதயத்தில் தாங்கி இஸ்லாமிய உலகுக்கு வழங்கிய உத்தமர் அபூஹுரைரா (ரழி) அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

இந்த உம்மத்தின் நம்பிக்கையாளர் அபூ உபைதா இப்னு ஜர்ராஹ் (رضي الله عنه)

அழகிய தோற்றமும் இனிய குணங்களும் குடிகொண்ட ஒரு நபரே அபூஉபைதா இப்னு ஜர்ராஹ் எனும் நபித்தோழராவார். ஆமிர் என்பது இவரது பெயர். எனினும் அபூஉபைதா என அழைக்கப்பட்டார்.

இவரை நபி (ﷺ) அவர்கள் இந்தச் சமுதாயத்தின் 'அமீன்' நம்பிக்கையாளர் எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள். மிகுந்த வெட்க குணம் கொண்ட இவர் அறியாமைக் காலத்திலேயே அரேபிகளுள் மிகுந்த செல்வாக்கு மிக்கவராகவும் கண்ணியத்திற்கு உரியவராகவும் காணப்பட்டவர்.

இவர் அபூபக்கர் (رضي الله عنه) அவர்களை அடுத்து இஸ்லாத்தில் இணைந்தவராவார். இவருடன் அபூபக்கர் (رضي الله عنه) அவர்களின் முயற்சியால் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (رضي الله عنه), உஸ்மான் இப்னு மழ்ஊன் (رضي الله عنه), அர்கம் இப்னு அபுல் அர்கம் (رضي الله عنه) ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றதுடன் இஸ்லாமிய எழுச்சி எனும் கட்டடத்தின் தூண்களாகவும் திகழ்ந்தனர்.

இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற இரண்டாவது ஹபஷா ஹிஜ்ரத்தில் பங்கு கொண்ட இவர், நபி (ﷺ) அவர்களுடன் முக்கியத்துவமிக்க அனைத்து நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு இஸ்லாமிய வரலாற்றில் தனித்துவமான முத்திரை பதித்துள்ளார்.

பத்ர் களத்தில் அபூஉபைதா

இஸ்லாமிய வரலாற்றில் முக்கியத்துவமிக்க பத்ர் யுத்தத்தில் அபூஉபைதா பங்குகொண்டார். பத்ர் களத்தில் எதிரிப் படையின் மத்தியில் மிகவும் பழக்கப்பட்ட, மிக நெருக்கமான ஒருவர் வருகிறார். அவர் நெருக்கமானவர்தான், ஒரு நாளோ ஒரு வருடத்திற்குள்ளோ ஏற்பட்ட நெருக்கமல்ல; கருவறைக்கும் முந்திய நெருக்கத்திற்குச் சொந்தக்காரர் அவர்; எனினும் அவர் இஸ்லாமிய மார்க்கத்தின் எதிரி என்பதால் அவரை நோக்கித் தனது வாளை வீசுகிறார். வாள் தனது பணியை கச்சிதமாக முடித்து விடுகின்றது.

முன்னால் வந்து முண்டமாகப் போனது வேறுயாருமல்ல, அபூஉபைதாவின் தந்தைதான். அப்போது அவர் அவருக்குத் தந்தையாகத் தென்படவில்லை. தந்தையின் தோற்றத்தில் வந்த இறை

மறுப்பாளராகவே தென்பட்டார். இந்த மாபெரும் தியாகத்தைக் குறித்து திருமறை வசனம் அருளப்பட்டது.

"அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொள்ளும் எந்த ஒரு கூட்டத்தினரையும், அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எதிராக செயற்படுகின்றவர்களை நேசிப்பவர்களாக (நபியே!) நீர் காணமாட்டீர்! அவர்கள் தமது பெற்றோர்களாகவோ, அல்லது தமது பிள்ளைகளாகவோ, அல்லது தமது சகோதரர்களாகவோ அல்லது தமது நெருங்கிய உறவினர்களாகவோ இருந்தாலும் சரியே! இத்தகையோரின் உள்ளங்களில் அவன் ஈமானைப் பதிவுசெய்து தன்னிடமிருந்துள்ள உதவியின் மூலம் இவர்களைப் பலப்படுத்தினான். மேலும், இவர்களைச் சுவனச்சோலைகளில் நுழைவிப்பான். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொண்டான். அவர்களும் அவனைப் பொருந்திக்கொண்டனர். இவர்கள் தாம் அல்லாஹ்வின் கூட்டத்தினராவர். அறிந்துகொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினரே வெற்றியாளர்கள்" (அல்குர்ஆன் -58:22)

மேற்படி நிகழ்ச்சியும், அல்குர்ஆன் வசனமும் அபூஉபைதா அவர்களது சிறப்பிற்கும் தியாகத்திற்கும் மணிமகுடமாகத் திகழ்கின்றது. இவ்வாறே நபி (ﷺ) அவர்களால் இறை நம்பிக்கையாளர், பலம்மிக்கவர் என அழைக்கப்பட்டதும் இவரது சிறப்பை சிகரத்தில் ஏற்றிவிடுகிறது.

பலமும் நம்பிக்கையும் மிக்கவர்

ஒரு நாள் நபி (ﷺ) அவர்களிடம் கிறிஸ்தவர்களின் தூதுக்குழு ஒன்று வந்து, 'அபுல்காசிமே! எமது பொருள் பங்கீட்டில் நாம் பேதப்பட்டுள்ளோம். இது விஷயத்தில் எங்களுக்குத் தீர்ப்பு வழங்குவதற்காக நீங்கள் திருப்தி கொள்ளக்கூடிய ஒருவரை எங்களிடம் அனுப்பி வையுங்கள். எங்களைப் பொருத்தவரை முஸ்லிம்கள் பொருத்தத்திற்குரியவர்கள்' என்று கூறினர். அதற்கு நபியவர்கள்,

'நான் உங்களுடன் பலமும் நம்பிக்கையுமுடைய ஒருவரை அனுப்பி வைக்கின்றேன்' எனக் கூறினார்கள். உமர் (رضي الله عنه) அவர்கள் கூறுகின்றார்கள் : 'என்னை (நபியவர்கள் அனுப்பி வைக்க மாட்டார்களா? என்ற நப்பாசையில்) அன்று லுஹர் தொழுகைக்கு நான் முன்கூட்டியே வந்தேன். நபி (ﷺ) அவர்கள் தொழுததும் வலது, இடது புறமாகப் பார்த்தார்கள். நான் நபி (ﷺ) அவர்கள் என்னைப்

பார்க்க வேண்டும் என்பதற்காக தலையை உயர்த்திக் கொண்டிருந்தேன். எங்களைப் பார்த்துக் கொண்டு வந்த நபியவர்கள் அபூஉபைதாவை அழைத்து, 'அவர்களுடன் சென்று அவர்களுக்கு ஏற்பட்டுள்ள சர்ச்சைக்குச் சரியான தீர்வு வழங்குவீராக!' என்று கூறினார்கள். இந்த நிகழ்ச்சி அபூஉபைதா (ﷺ) அவர்களின் சிறப்பைப் பறைசாற்றும் சிறந்த உதாரணமாகும்.

உஹுதுக் போர்க்களத்தில்

ஆரம்ப கால இஸ்லாமிய எழுச்சியில் ஏற்பட்ட சோதனைகளில் உஹுது யுத்தமும் ஒன்றாகும். இப்போரில் முஸ்லிம்கள் நாலாபக்கமும் எதிரிகளால் சூழப்பட்டார்கள். இச்சந்தர்ப்பத்தில் நபி (ﷺ) அவர்களை அபூஉபைதா (ﷺ) போன்ற குறிப்பிட்ட சிலர் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் நபி (ﷺ) அவர்கள் பலத்த காயத்திற்குள்ளானார்கள். அவர்களது பல் உடைந்தது. தலைக் கவசத்தின் இரண்டு வளையங்கள் பலமான தாக்குதலின் காரணத்தால் முகத்தில் புதைந்து போயின. அவர்களது திருமுகத்தில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அந்த வளையங்களைக் கழற்றுவதில் அபூஉபைதா (ﷺ) இரண்டு முன் பற்களை இழந்தார்கள். இதோ இது குறித்து அபூபக்கர் (ﷺ) அவர்கள் பேசுகின்றார்கள் :

'உஹுதுப் போரில் நபி (ﷺ) அவர்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலால் இரண்டு வளையங்கள் அவர்களது முகத்தில் பதிந்து விட்டது. அதனைக் கழற்றுவதற்காக நான் நபியவர்களை நோக்கி விரைந்தேன். அப்போது கிழக்குப் பக்கத்திலிருந்து பறவையை விட வேகமாக ஒரு மனிதர் விரைந்து வந்து, 'அபூபக்கரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக இதனை எனக்காக விட்டுத் தாருங்கள்' என்று கூறினார். அவர் யாரெனப் பார்த்தால் அபூஉபைதா (ﷺ) நின்றிருந்தார். அவர் என்னை முந்திவிட்டார். எனவே, நான் விட்டுக்கொடுத்தேன். (கையால் பிடுங்கினால் நோவு ஏற்படும் என்பதால்) அபூஉபைதா (ﷺ) தனது முன்பல்லால் கடித்து அதனை இழுத்தார். வளையம் கழன்றது. அவரது முன் பல்லும் விழுந்தது. அடுத்த வளையத்தை மறுபல்லால் பலமாகக் கடித்து இழுத்தார்; வளையமும் கழன்றது. அடுத்த பல்லும் விழுந்தது. முன்பல் விழுந்தவர்களுள் அபூஉபைதா மிக அழகானவராக இருந்தார்கள்'.

அபூஉபைதா (ﷺ) அவர்கள் நன்மை செய்வதில் கொண்டிருந்த பேரார்வத்தையும், நபி (ﷺ) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் ஆழத்தையும், அவர்களது உறுதியையும் இந்தச் செய்தி தெளிவுபடுத்துகின்றது.

பதவியை விரும்பாத மாமனிதர்

அபூஉபைதா (ؓ) சமூகத் தலைமைத்துவத்திற்குத் தேவையான சகல தகுதிகளையும் பெற்றிருந்தார். நபி (ﷺ) அவர்களது மரணத்திற்குப் பின்னர் இவரிடம் 'கிலாபத்' பொறுப்பு தேடி வந்தது. எனினும் அவர்தான் அதனை ஏற்கவில்லை.

நபி (ﷺ) அவர்களது மரணத்திற்குப் பின் சகீபா பனூ ஸாஇதாவில் ஒன்றுகூடிய நபித்தோழர்கள் அடுத்த தலைவர் யார் என்ற ஆலோசனையில் இறங்கினர். அப்போது உமர் (ؓ) அவர்கள் அபூஉபைதா (ؓ) அவர்களைப் பார்த்து, 'அபூஉபைதாவே! உங்களது கரத்தை நீட்டுங்கள்; நான் பைஅத்துச் செய்கிறேன். ஏனெனில் நபி (ﷺ) அவர்கள் உங்களை இந்தச் சமுதாயத்தின் நம்பிக்கையாளர் எனக் கூறக் கேட்டுள்ளேன்' என்று கூறினார்கள்.

அதற்கு அபூஉபைதா (ؓ) அவர்கள், 'நபி (ﷺ) அவர்கள் நமக்குத் தொழுகை நடத்த உத்தரவிட்ட (அபூபக்கர் எனும்) ஒரு மனிதர் இருக்கும் போது நான் அவரை முந்தி வர முடியாது' என மறுத்துவிட்டார்.

உமர் (ؓ) அவர்கள்கூட தனது மரணத்தறுவாயில், அபூஉபைதா உயிருடன் இருந்திருந்தால் அவரை எனக்குப் பின் கலீபாவாக நியமித்து விடுவேன் என்று கூறினார்கள்.

மரணத்தை அஞ்சாத வீரர்

அபூபக்கர் (ؓ), உமர் (ؓ) ஆகிய இருவரின் ஆட்சிக் காலத்தில் அபூஉபைதா (ؓ) அவர்கள் முக்கிய பொறுப்புக்களை ஏற்றுப் பணியாற்றி வந்தார்கள். இவர் தலைமைத்துவத்திற்கு கட்டுப்படுவதில் எப்போதுமே பின்வாங்கியதில்லை. ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் கலிபாவின் கட்டளையை ஏற்க மறுத்துவிட்டார்கள்.

ஒருமுறை அபூஉபைதா (ؓ) அவர்கள் தலைமையில் சென்ற படை அல்லாஹ்வின் உதவியால் வெற்றி மேல் வெற்றிவாகை சூடி, சிரியாவைக் கைப்பற்றியதுடன், இஸ்லாமிய இராச்சியம் விரிவடைந்து கொண்டே சென்றது.

இச்சந்தர்ப்பத்தில் சிரியாவில் 'கலாரா' நோய் பரவத் தொடங்கியது. சிரியா முழுவதும் பல்லாயிரம் உயிர்களை 'கலாரா'

காவு கொண்டது. அபூஉபைதா இச்சந்தர்ப்பத்தில் அங்கிருந்து நோய்க்கு இரையாகி விடக்கூடாது எனக் கருதிய கலீபா உமர், ஒரு தூதரை அவரிடம் அனுப்பி வைத்தார்கள். அவரிடம் பின்வருமாறு எழுதப்பட்ட கடிதம் ஒன்றையும் கொடுத்தனுப்பினார்கள்.

'எனக்கு உங்களிடம் ஒரு தேவை உண்டு; அதை உங்களைத் தவிர வேறுயாரும் நிறைவுசெய்ய முடியாது. இம்மடல் இரவில் உங்கள் கைக்குக் கிடைத்தால் என்னை நோக்கிப் பயணித்த நிலையில்தான் நீங்கள் காலையை அடைய வேண்டும். பகலில் வந்தடைந்தால் என்னை நோக்கிப் பயணித்த நிலையில்தான் மாலையை நீங்கள் அடைய வேண்டும்' (கடிதம் கிடைத்த உடன் வரவும்) என்று எழுதியிருந்தார்கள்.

இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் அபூஉபைதா (ரலி) அவர்கள், 'கலீபா உமரின் தேவை என்ன என்பது எனக்குத் தெரியும் நிலையில்லாத என்னை நிலைத்திருக்கச் செய்யப் பார்க்கிறார் அவர்' எனக் கூறிவிட்டு உமர் (ரலி) அவர்களுக்கு,

'முஃமின்களின் தலைவரே! உங்களின் தேவை என்ன என்பதை நான் அறிந்துகொண்டேன். நான் முஸ்லிம் படையுடன் இருக்கின்றேன். அவர்களைப் பீடித்துக்கொள்ளும் 'காலரா' நோயிலிருந்து எனது ஆத்மாவைக் காத்துக் கொள்வதில் எனக்கு ஆர்வமில்லை. என் விஷயத்திலும் அவர்களின் விஷயத்திலும் அல்லாஹ்வின் தீர்ப்பு (மரணம்) வரும் வரை அவர்களைப் பிரிய நான் விரும்பவில்லை. இந்தக் கடிதம் உங்களிடம் வந்து சேர்ந்ததும் உங்களது கட்டளையை மீளப்பெற்று என்னை இங்கேயே தங்கிவிட அனுமதித்திடுங்கள்' என்று எழுதினார்.

இந்தக் கடிதத்தைப் படித்த உமர் (ரலி) அவர்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள். அவர்கள் அழுவதைக் கண்ட சூழ இருந்தவர்கள் 'ஏன் அழுகிறீர்கள், அபூஉபைதா மரணித்துவிட்டாரா?' எனக் கேட்டனர். அதற்கு உமர் (ரலி) அவர்கள், 'இல்லை, எனினும் மரணம் அவரை மிகவும் நெருங்கிவிட்டது' என்று கூறினார்கள்.

உமர் (ரலி) அவர்களது எண்ணம் பொய்யாகவில்லை. அபூஉபைதா 'காலரா' நோயால் பாதிக்கப்பட்டார். தனது மரண நேரத்தில் தன் படை வீரர்களைப் பார்த்து, 'நான் சில விஷயங்களைக் கூறுகிறேன். அவற்றை நீங்கள் கடைபிடித்தால் நீங்கள் நலவில் இருந்துகொண்டே இருப்பீர்கள். தொழுகையை நிலைநாட்டுங்கள்; ரமழானில் நோன்பிருங்கள்; ஸகாத்தைக் கொடுங்கள்; ஹஜ், உம்ரா

செய்யுங்கள்; உங்களுள் ஒருவர் மற்றவருக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்; உங்கள் தலைவருக்கு நல்லது செய்யுங்கள்; அவர்களை ஏமாற்றாதீர்கள்; உலக ஆசை உங்களை அழித்துவிடாதிருக்கட்டும். ஒரு மனிதன் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்ற எனது நிலைதான் அவனது இறுதி நிலையாகும்' என்று கூறினார்கள்.

பின்னர் முஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்களை மக்களுக்குத் தொழுகை நடத்துமாறும் அவர்களை வழிநடத்துமாறும் கூறினார்கள். அதன் பின் அந்த நல்ல மனிதரை மரணம் பற்றிக்கொண்டது. எனினும், இஸ்லாமிய வரலாற்றில் அவரது தியாகமும் உறுதியும் என்றென்றும் வாழும் பாடமாக மலர்ந்துகொண்டே இருக்கும்.

நபியவர்களின் பால்குடிச் சகோதரர்
அபூ சுஃப்யான் இப்னு ஹாரிஸ் (ரழி)

அபூசுஃப்யான் (ரழி) அவர்களுக்கும் நபி (ஸல்) அவர்களுக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பிருந்தது. இவர்கள் இருவரும் சமகாலத்தில் பிறந்து, ஒன்றாக ஒரே குடும்பத்தில் வளர்ந்து வந்தனர். இவர்கள் இருவரின் தந்தைகளான அப்துல்லாஹ்வும் ஹாரிஸும் உடன்பிறந்த சகோதரர்கள். இந்த வகையில் நபி (ஸல்) அவர்களும் அபூசுஃப்யானும் ஒன்றுவிட்ட சகோதரர்களாவர். இதேவேளை நபி (ஸல்) அவர்களது பால்குடிச் சகோதரராகவும் இவர் திகழ்கின்றார். நபியவர்களுக்கும் அபூசுஃப்யானுக்கும் அன்னை ஹலீமா அவர்கள் பாலூட்டியுள்ளார்கள். அத்துடன் இளமைப் பருவத்திலிருந்தே இருவரும் இணைபிரியாத நண்பர்களாக இருந்தனர்.

ஆனாலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதில் இவரது நிலை தலைகீழாக இருந்தது. நாற்பது ஆண்டுகால நட்போ, குடும்ப உறவோ, பால்குடி உறவோ எதுவும் பயனளிக்கவில்லை. நபி (ஸல்) அவர்கள் தமது குடும்பத்தினருக்கு மார்க்க அழைப்பை விடுத்தபோது இவரது உள்ளத்தில் எதிர்ப்புத் தீ கொழுந்து விட்டெரிந்தது; நட்பு விரோதமானது; பாசம் பகையானது; இவர் இஸ்லாத்தை எதிர்ப்பவர்களின் அணியில் முன்னிலை வகித்தார்.

இவர் சிறந்த வீரராகவும், தேர்ந்த கவிஞராகவும் இருந்தார். இவரது வீரமும், கல்வியாற்றலும் இஸ்லாத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. குறைஷிகள் இஸ்லாத்திற்கு எதிராகப் போரிட்டாலோ தொல்லைகள் விளைவித்தாலோ அதில் அபூசுஃப்யானுக்கும் ஒரு பங்கிருக்கும் என்ற அளவுக்கு எதிர்ப்புணர்வுடன் நடந்துகொண்டார்.

இஸ்லாத்தின்பால் இதயம் ஈர்க்கப்படல்

இருபது வருடங்களாக இஸ்லாத்திற்கு எதிராக சதி செய்வதிலும், தொல்லை கொடுப்பதிலும் ஈடுபட்டார். மக்கா வெற்றிக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர் இவர் இஸ்லாத்தை ஏற்க வேண்டும் என்பது அல்லாஹ்வின் ஏற்பாடாக இருந்தது. இவர் இஸ்லாத்தில் இணைந்த நிகழ்ச்சி குறித்து வரலாற்று நூல்கள்

குறிப்பு : நாம் பேசிக் கொண்டிருக்கும் அபூசுப்யான் என்பவர் முஆவியா (ரழி) அவர்களின் தந்தையான அபூசுப்யான் அல்ல என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

விரிவாகப் பேசுகின்றன. இதோ! அவரே அவரது மனமாற்றம் குறித்துக் கூறுவதைக் கேளுங்கள்.

'நபி (ﷺ) அவர்கள் மக்காவைக் கைப்பற்றுவதற்காக மக்கா நோக்கி வரும் செய்தி எனக்கு எட்டிய போது உலகமே எனக்குச் சுருங்கிவிட்டது. நான் எங்கே செல்வேன்? யாருடன் நட்புக் கொள்வேன்? யாருடன் இருப்பது என்று அங்கலாய்த்தேன். பின்னர், எனது பிள்ளைகளிடம் வந்து 'தயாராகுங்கள்; நாம் மக்காவை விட்டு வெளியேறுவோம். முஹம்மத் வந்து விடலாம்! அப்படி வந்தால் சந்தேகமின்றி நான் முஸ்லிம்களால் கொல்லப்பட்டு விடுவேன்' என்று கூறினேன்.

அப்போது அவர்கள், 'இப்போதுதான் உங்கள் கண்கள் திறக்கப்பட்டனவா? அரபியர்கள் - அஜமிகள் அனைவரும் அவருக்குக் கட்டுப்பட்டு, அவரது மார்க்கத்தை அங்கீகரித்தும் விட்டனர். ஆனால், நீங்கள் மட்டுமே அவருக்கு எதிராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றீர்கள்' என்று தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தனர்.

இவ்வாறு முஹம்மத் (ﷺ) அவர்களது மார்க்கத்தின் மீது ஈர்ப்பு ஏற்பட்டு அதில் எனக்கு ஆர்வம் ஏற்படும் வரை அவர்கள் என்னை உற்சாகப்படுத்திக் கொண்டே இருந்தனர். ஈற்றில், அல்லாஹ் எனது உள்ளத்தில் இஸ்லாத்தின் மீது ஈர்ப்பை ஏற்படுத்தினான்.

நபியை நோக்கிய பயணம்

இதன் பின்னர் எனது பணியாளிடம் பயணத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கட்டளையிட்டேன். எனது மகன் ஜஃபரையும் அழைத்துக்கொண்டு மக்காவுக்கும் மதீனாவுக்குமிடையில் உள்ள 'அப்வா' என்ற இடம் நோக்கிச் சென்றேன். நபி (ﷺ) அவர்கள் அந்த இடத்தில்தான் தங்கியிருந்தார்கள்.

நான் அப்வா என்ற இடத்தை நெருங்கிய போது, நபி (ﷺ) அவர்களைச் சந்தித்து இஸ்லாத்தைப் பகிரங்கப்படுத்துவதற்கு முன்னரே என்னை யாரும் அடையாளம் கண்டு, கொன்று விடக்கூடாது என்பதற்காக என்னை அடையாளம் தெரியாதவாறு என்னை நான் மறைத்துக்கொண்டு சென்றேன். அவ்வாறு நான் சென்றுகொண்டிருந்தபோது நபி (ﷺ) அவர்கள் அவரது வாகனத்தில் வருவதைக் கண்டு அவரை நோக்கி நடந்தேன்.

நபி (ﷺ) அவர்களை, முகம் நிறைய சோகத்தோடும், கவலையுடனும் பார்த்தேன். என்னைப் பார்த்து அடையாளம்

கண்டுகொண்ட நபியவர்கள் என்னைப் புறக்கணித்து மறுபுறம் திரும்பிக் கொண்டார்கள். நான் மீண்டும் நபி (ﷺ) அவர்களது முதுகுக்கு நேராக சென்று நின்றேன். அவர்கள் மறுபுறம் திரும்பிக் கொண்டார்கள். மீண்டும் நான் .... இவ்வாறு பலமுறை நடந்தது. நபி (ﷺ) அவர்களது புறக்கணிப்பால் நான் நொந்துபோனேன்.

நான் நபி (ﷺ) அவர்களிடம் போகும்போது நான் இஸ்லாத்தில் இணைவதால் நபி (ﷺ) அவர்களும், நபித்தோழர்களும் மகிழ்வடைவார்கள் என்ற உறுதியான நம்பிக்கையுடன்தான் நான் வந்தேன். எனினும் நபி (ﷺ) அவர்களது புறக்கணிப்பைக் கண்டபோது ஏனைய அனைத்து நபித்தோழர்களும் என்னைப் புறக்கணித்தனர்.

நான் அபூபக்கர் (رضي الله عنه) அவர்களைச் சந்தித்தேன். அவரும் என்னைப் புறக்கணித்தார். உமர் (رضي الله عنه) அவர்களைச் சந்தித்தேன். அவரும் அபூபக்கர் (رضي الله عنه) அவர்களை விடக் கடுமையாகப் புறக்கணித்தார்.

இதேவேளை அன்ஸாரிகளுள் ஒருவர் என்னைக் கடுமையாகச் சாடத் துவங்கினார். ‘அல்லாஹ்வின் எதிரியே! நீ நபியைத் துன்புறுத்தினாய்; நபித்தோழர்களைத் துன்புறுத்தினாய்’ என்று ஏசலானார். அவரது சாடலால் உணர்ச்சிவசப்பட்ட முஸ்லிம்கள் என்னை வெறுப்புடனும் கோபத்துடனும் பார்த்தனர்.

உறவை வைத்து உதவி தேடல்

அப்போது என் சிற்றப்பா அப்பாஸ் (رضي الله عنه) அவர்களைக் கண்டேன். அவரிடம் சென்று, ‘சாச்சாவே! நான் இஸ்லாத்தில் இணைவதன் மூலம் எனது குடும்ப உறவு, சமூக கண்ணியம் கருதி நபி (ﷺ) அவர்கள் மகிழ்வார்கள் என எண்ணினேன். ஆனால், இப்போது நடந்ததை நீங்கள் அறிவீர்கள். எனக்காக நீங்கள் அவரிடம் பரிந்து பேசுங்களேன்’ என்று கேட்டுக் கொண்டேன்.

அதற்கவர், ‘அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவர் உன்னைப் புறக்கணித்த பின்னர் உனக்காக ஒரு வார்த்தைகூட என்னால் பேசமுடியாது. எனினும், நல்ல வாய்ப்புக் கிடைத்தால் உன்னைப் பற்றி எடுத்துக் கூறுவேன்’ என்று தெரிவித்தார்.

அதன் பின் எனது சிற்றப்பாவின் மகன் அலீ இப்னு அபூதாலிப் (رضي الله عنه) அவர்களைக் கண்டு அவரிடமும் பேசினேன். அவரும் சிற்றப்பா அப்பாஸ் (رضي الله عنه) கூறியது போன்றே கூறினார். அதன் பின் எனது சிற்றப்பா அப்பாஸ் (رضي الله عنه) அவர்களை மீண்டும் சந்தித்து, ‘உங்களால்

நபி (ﷺ) அவர்களது உள்ளத்தை என்பால் திருப்ப முடியாவிட்டாலும், இதோ! என்னைப் பற்றி விமர்சித்துக் கொண்டிருக்கின்ற இந்த மனிதனது வாயையாவது மூடச்செய்யுங்கள்' என்று கேட்டுக் கொண்டேன்.

பின்னர், அப்பாஸ் (ؓ) அவர்கள் அந்த அன்ஸாரித் தோழரிடம் சென்று 'இந்த அபூசுஃப்யான் நபியின் சிற்றப்பாவின் மகன்; எனது சகோதரரின் மகன். இன்று நபி, அவர்மீது அதிருப்தியுடன் இருந்தாலும் நாளை அவரை அங்கீகரிக்கலாம்' எனக்கூறி அவரது விமர்சனத்தை நிறுத்தச்செய்தார்கள்.

அன்புக்காக ஏங்கும் உள்ளம்

இதன் பின்னரும் நபி (ﷺ) அவர்கள் என்னை ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் நான் நம்பிக்கையிழக்கவில்லை. நபி (ﷺ) அவர்கள் மக்காவுக்கு அருகில் உள்ள ஜுஹ்பா என்ற இடத்தில் தங்கியபோது அவர்களது கூடார வாசலில் நான் அமர்ந்துகொண்டேன். மகன் ஜஃபர் நின்றுகொண்டிருந்தார். நபி (ﷺ) அவர்கள் வெளியே வந்தபோது என்னைக் கண்டும்-காணாதது போல் சென்றார்கள். இவ்வாறே நபி (ﷺ) அவர்கள் தங்கும் இடங்களிலெல்லாம் கூடார வாசலில் காத்திருந்தேன். நபி (ﷺ) அவர்களும் என்னைக் கண்டால் புறக்கணித்துச் செல்வார்கள்.

இதன் பின்னர் உம்மு ஸலமா (ؓ) அவர்கள் எனக்காகப் பரிந்து பேசினார்கள். நபி (ﷺ) அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஈற்றில் வேதனையுற்ற நான், 'நபி (ﷺ) அவர்கள் என்னை அங்கீகரிக்கவில்லையென்றால், எனது இந்த மகனது கையைப் பிடித்துக்கொண்டு தாகத்தாலும் பசியாலும் மரணிக்கும் வரை பாலைவனத்தில் பயணிப்பேன்' என்று கூறினேன். இது அறிந்த நபி (ﷺ) அவர்கள் தமது கூடாரத்திலிருந்து வெளியே வந்து என்னைக் கனிவோடு பார்த்தார்கள். அவர்கள் சிரிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன்.

ஈமானை நிரூபிக்க ஹுனைன் போர்

பின்னர், நபி (ﷺ) அவர்கள் மக்காவுக்குச் சென்றார்கள். நானும் அவர்களை விட்டுப் பிரியாமல் அவர்களுடனேயே இருந்தேன்.

ஹுனைன் தினத்தில் அரபியர்கள், இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் ஒழித்துக்கட்டும் எண்ணத்துடன் பாரிய படை நடவடிக்கையில் ஈடுபட்டனர். நபி (ﷺ) அவர்கள் தோழர்களுடன்

அவர்களை எதிர்கொள்ளச் சென்றார்கள். நானும் அவர்களுடன் சென்றேன். எதிரிகளின் படைப் பலத்தைக் கண்ட நான், 'இதுவரை இறைத் தூதருக்கு எதிராகச் செயல்பட்டதற்கு அல்லாஹ்வின் மீது ஆணையாக இந்தப் போர் மூலம் பரிகாரம் கண்டுகொள்வேன். எனது மரணத்திற்குப் பின்னர் அல்லாஹ்வும் அவனது தூதரும் என்னை அங்கீகரிக்கும் அடையாளத்தைக் காண்பார்கள்' என உறுதி எடுத்துக் கொண்டேன்.

அருகில் நின்று அன்பை வெளிப்படுத்தியவர்

இரண்டு படைகளும் நேருக்கு நேர் மோதிய போது இணைவைப்பாளர்கள் கடுமையாகப் போரிட்டனர். போரின் அகோரத்தில் முஸ்லிம்கள் நபி (ﷺ) அவர்களை விட்டுச் சிதறுண்டு போயினர்.

நபி (ﷺ) அவர்கள் தனது கழுதையில் இருந்துகொண்டு தம்மைத் தற்காத்துக்கொண்டு படையை வழிநடத்தும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

அப்போது நான் எனது குதிரையிலிருந்து குதித்து என் வாளை உருவினேன். நபி (ﷺ) அவர்களைப் பாதுகாப்பதற்காக உயிரை விடத் தயாராக நான் முன்னேறினேன் என்பதை நிச்சயமாக அல்லாஹ் அறிவான்.

எனது சிற்றப்பா அப்பாஸ் (رضي الله عنه), நபி (ﷺ) அவர்களது கழுதையின் கயிற்றைப் பிடித்துக்கொண்டு அவர் அருகிலிருந்தார். நான் அடுத்த பக்கம் இருந்தேன். எனது வலது கைவாளைச் சுழற்ற, இடது கையை நபி (ﷺ) அவர்களின் கழுதை மீது வைத்துக்கொண்டு போராடிக்கொண்டிருந்தேன்.

நான் தீரத்துடன் போராடிக் கொண்டிருந்ததைக் கண்ட நபியவர்கள், என் சிற்றப்பாவிடம் 'இது யார்' எனக் கேட்டார்கள்.

அதற்கவர், 'இவர் உமது சகோதரர்; உமது சிற்றப்பாவின் மகன் அபூசுஃப்யான்' எனக் கூற, நபி (ﷺ) அவர்கள் என்னை அங்கீகரித்தார்கள். அத்துடன், 'இவர் இதற்கு முன்னர் செய்த விரோதச் செயல்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னித்துவிட்டான்' என்று கூறினார்கள்.

இது கேட்ட என் உள்ளம் பூரித்துப்போனது. நபி (ﷺ) அவர்கள் என்னைத் திருப்திக்கொண்டதால் நான் பெரிதும் மகிழ்ந்தேன். அப்போது, நபி (ﷺ) அவர்கள், 'என் சகோதரனே! முன்னேறிப் போராடு' என்று கூறினார்கள்.

நபியவர்களது வார்த்தை என் உள்ளத்தில் வீரத்தை ஊட்டியது. அந்த உற்சாகத்தில் எதிரிகளுடன் கடுமையாகப் போரிட்டேன். பின்னர் எதிரிகளை மூன்று மைல் தூரத்திற்குப் புறமுதுகிட்டு ஓடச்செய்தோம்.'

இவ்வாறு, தான் இஸ்லாத்தில் இணைந்தது குறித்தும், நபி (ﷺ) அவர்களினதும் நபித்தோழர்களினதும் அங்கீகாரத்தைப் பெற, தான் பட்ட சிரமங்களையும் தெளிவுபடுத்துகின்றார்கள்.

கருப்பு நாட்கள்

ஹுனைன் போருக்குப் பின்னர் நபியவர்களது அங்கீகாரம் கிடைத்தாலும், தனது கடந்தகாலக் கருப்பு நாட்களை எண்ணி அவர் பெரிதும் வருந்தினார். 'இவ்வளவு கேவலமாக நடந்துகொண்டோமே' என தன்னைத் தானே நொந்துகொள்வார்.

'இவ்வளவு காலமும் அல்லாஹ்வின் ஒளியைப் புறக்கணித்து விட்டோமே! அவனது கலாமைக் கேட்கும் பாக்கியத்தை இழந்து விட்டோமே!' என ஏங்கினார். இதனால் இரவு - பகலாகக் குர்ஆன் ஓதுவதிலும், வணக்க வழிபாடுகளிலும் அதிக ஈடுபாட்டை ஏற்படுத்திக்கொண்டார்.

உலக வாழ்வின் இன்பங்களை உதறித் தள்ளிவிட்டு முழு ஈடுபாட்டுடன் ஆன்மிகத்தில் மூழ்கினார். முதல் நபராக மஸ்ஜிதில் நுழைந்து, இறுதி நபராக வெளிவருவார்.

மரணம்

நபி (ﷺ) அவர்களது மரணத்தின் போது பிள்ளையை இழந்த தாய் போன்று வேதனைப்பட்டார். உமர் (رضي الله عنه) அவர்களது ஆட்சிக் காலத்தில் தனக்கு மரணம் நெருங்கிய போது, தானே தனக்குரிய கப்ரைத் தோண்டி மூன்று தினங்களுக்குள் மரணமானார்.

அவர் மரணித்த போது, தனது மனைவி - மக்களைப் பார்த்து..

'நான் மரணித்தால் எனக்காக நீங்கள் அழவேண்டாம். நான் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் எந்தப் பாவத்துடனும் சம்பந்தம் வைத்துக்கொண்டதில்லை' என்று கூறினார்கள்.

பின்னர், ஹிஜ்ரி 20 களில் அவர் மரணமானார். உமர் (رضي الله عنه) அவர்கள் ஜனாஸாத் தொழுகை நடத்தினார்கள்.

அல்லாஹ் அவரைத் திருப்தி கொள்வானாக!

விருந்தோம்பலுக்குப் பெயர் போன
அத்துபைல் இப்னு அம்ர் அத்துவைஸீ (ؓ)

ஏற்கனவே அபூஹுரைரா (ؓ) அவர்கள் பற்றிக் குறிப்பிடும் போது, 'இவர் துபைல் இப்னு அம்ர் அத்துவைஸீ மூலமாக இஸ்லாத்தில் இணைந்தார் எனக் குறிப்பிட்டிருந்தோம். அவரைப் பற்றிய வரலாறை இப்போது பார்ப்போம்.

அறிமுகம்

இவர் 'தவ்ஸ்' கோத்திரத்தின் தலைவராவார். அரபு மக்களால் அதிகம் மதிக்கப்பட்டவர். அவரது சமையல் பானை அடுப்பை விட்டு இறங்காது என்று கூறுமளவுக்கு விருந்தோம்பலில் பெயர் போனவர். பசித்தவருக்கு உணவளிப்பார்; பயந்தவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பார்; வறியோருக்கு வாரி வழங்குவார்; அத்தோடு மிகுந்த புத்தி சாதுரியமும் பேச்சாற்றலும் கவி வளமும் மிக்கவராக இவர் காணப்பட்டார்.

இஸ்லாத்தில் இணைதல்

இவர் கஃபாவைத் தரிசிப்பதற்காக மக்காவுக்கு வந்தபோது, நபி (ﷺ) அவர்கள் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்துகொண்டிருக்க, குறைஷித் தலைவர்கள் நபி (ﷺ) அவர்களைக் குறைகூறிப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தனர். இதோ துபைல் தனது அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகிறார் :

'நான் மக்கா வந்தபோது என்னைக் குறைஷித் தலைவர்கள் வரவேற்று கௌரவித்தனர். பின்னர் என்னை அமர்த்தி அவர்கள் அனைவரும், 'துபைலே! நீங்கள் எங்கள் ஊருக்கு வந்துள்ளீர்கள். தன்னை நபியென கூறிக் கொள்ளும் இந்த மனிதர் எங்களைச் சிதைத்து சின்னாபின்னப்படுத்திவிட்டார். அவருடன் பேசவோ, அவரிடமிருந்து எதையும் கேட்கவோ வேண்டாம். அவரின் பேச்சு பெற்றோரையும் பிள்ளைகளையும் கணவனையும் மனைவியையும் பிரித்துள்ளது' என்று கூறினர். அவர்களின் பேச்சைக் கேட்ட நான் இந்த மனிதனிடம் பேசவோ, எதையும் கேட்டுவிடவோ கூடாது என்று முடிவு செய்துகொண்டேன். நான் கஃபாவுக்குள் சென்றபோது, எனது காதில் பஞ்சை வைத்துக் கொண்டு சென்றேன்.

நான் கஃபாவுக்குள் எமது வணக்க முறைக்கு மாற்றமாக ஒருவர் நின்று வணங்குவதைக் கண்டேன். அந்தக் காட்சி என்னைக் கவர்ந்தது. என் உள்ளம் அவர் பக்கம் நெருங்குவதை உணர்ந்தேன்.

மெதுவாக என்னை அறியாமல் அவரை நெருங்கினேன். அவரது ஓதலில் சில என் காதை எட்டியது. அந்த வார்த்தை அழகானதாகவும் இருந்தது. அப்போது நானே எனக்குள் கூறிக்கொண்டேன்.

'துபைலே! உனக்கென்ன கேடு நிகழ்ந்துவிட்டது. நீயோ பெரும் கவிஞன்; நல்லதையும் தீயதையும் பிரித்தறிய முடியாத முட்டாளல்ல நீ. பிறகு ஏன் காதில் பஞ்சை வைத்துக்கொண்டு அலைய வேண்டும்? அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டு நல்லதாயின் ஏற்றுக்கொள்; கெட்டதாயின் எடுத்தெறிந்துவிடு'

இதன்பின்னர்தான் சிந்தனை தெளிந்தது. அவர் போகும் வரை இருந்தேன். போன பின் நானும் அவர் பின்னால் சென்று அவரின் இல்லத்தில் நுழைந்தேன்.

'முஹம்மதே! உங்களது கூட்டத்தினர் உங்களைப் பற்றி இவ்வாறெல்லாம் கூறுகிறார்கள். அவர்களின் எச்சரிக்கையைக் கேட்டு காதில் பஞ்சை வைத்துக் கொண்டுதான் நான் வந்தேன். எனினும், அதில் சிலவற்றை நான் கேட்க அல்லாஹ் உதவிவிட்டான். அவை நல்லதாக உள்ளன. நீங்கள் என்ன கூறுகிறீர்கள்! எனக்கும் கொஞ்சம் சொல்லுங்கள்' என்று கேட்டேன். அவர்கள் இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறியதுடன் சூறதுல் பலக், இக்லாஸ் போன்ற சூராக்களை ஓதிக்காட்டினார்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக இவற்றைவிட நல்ல வார்த்தைகளை நான் கேட்டதில்லை. அவரின் போதனையை விட நீதியான, நடுத்தரமான எதனையும் நான் கண்டதில்லை. அப்போதுதான் நான் எனது கரங்களை நீட்டி கலிமாவைக் கூறி இஸ்லாத்தில் இணைந்தேன்.

அழைப்பாளராக

இஸ்லாத்தில் இணைந்த பின் சிறிது காலம் மக்காவில் தங்கி இஸ்லாத்தைக் கற்றேன். குர்ஆனில் சில பகுதிகளை மனனமிட்டேன். ஊர் திரும்ப உறுதி கொண்டபோது, 'அல்லாஹ்வின் தூதரே! என் குடும்பத்தினர் நான் சொன்னால் கேட்பார்கள். நான் அவர்களிடம் சென்று அவர்களை இஸ்லாத்தின்பால் அழைக்கப் போகிறேன். நான் அவர்களை சத்தியத்தின்பால் அழைப்பதற்கு உறுதியாக எனக்கு ஓர் அத்தாட்சியைக் காட்டுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்று கூறினேன்.

அதற்கு நபி (ﷺ) அவர்கள், 'அல்லாஹ்வே! இவருக்கு உதவும் விதமாக ஓர் அத்தாட்சியை இவருக்காக ஏற்படுத்துவாயாக' என்று பிரார்த்தித்தார்கள். (இதன் பயனாக இவர் ஊர் சென்றபோது இவரது இரண்டு கண்களுக்கிடையே ஓர் ஒளி தென்பட்டதாகவும் பின்னர்,

இவரது பிரார்த்தனைக்கு ஏற்ப அந்த ஒளி தலைக்கு மேல் தென்பட்டதாகவும் கூறப்படுகிறது)

இவர் தனது குடும்பத்தாரிடம் இஸ்லாத்தை எடுத்துவைத்த விதத்தை இப்படி விவரிக்கின்றார்.

நான் ஊருக்குச் சென்றதும் எனது தந்தை என்னிடம் வந்தார். அவரிடம், 'நான் உங்களைச் சேர்ந்தவனுமில்லை; நீங்கள் என்னைச் சேர்ந்தவருமில்லை' என்று கூறினேன். அதற்கவர், ஏன் அப்படி?' என்று கேட்டார். 'நான் முஹம்மத் (ﷺ) அவர்களைப் பின்பற்றி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன்' என்று கூறினேன். அதற்கவர், 'அன்பு மகனே! உனது மார்க்கம்தான் எனது மார்க்கமாகும்' என்று ஏற்றுக்கொண்டார். பின்னர் தவ்ஸ் கோத்திரத்தாரை இஸ்லாத்தின்பால் அழைத்தேன். அவர்கள் பிடிவாதத்துடன் அதை மறுத்தார்கள்.

பின்னர் நான் நபி (ﷺ) அவர்களிடம் வந்து, 'தவ்ஸ் கோத்திரத்தில் விபச்சாரமும் வட்டியும் பெருகிவிட்டன. அவர்களின் நல்வழிக்காகப் பிரார்த்தியுங்கள்' என்று கேட்டேன். அதற்கு நபி (ﷺ) அவர்கள், 'அல்லாஹ்வே! தவ்ஸ் கூட்டத்தினருக்கு நீ நல்வழி காட்டுவாயாக!' என்று பிரார்த்தித்தார்கள். பின்னர் நான் ஊர் சென்று இஸ்லாத்தை எடுத்துச் சொன்னேன். ஹந்தக் (அகழ்ப்) போருக்குப் பின்னர் 80 அல்லது 90 குடும்பங்களுடன் நபி (ﷺ) அவர்களிடம் வந்தேன். பின்னர் மக்கா வெற்றி வரை நபி (ﷺ) அவர்களுடனேயே இருந்தேன். மக்கா வெற்றியின்போது எனது சமூகம் வணங்கி வந்த சிலைகளை எரிக்க நபி (ﷺ) அவர்களிடம் அனுமதி கேட்டேன். அவர்கள் அதற்கு அனுமதியளித்தார்கள்.

துபைல் சிலையை எரிக்க முற்பட்டபோது, அதை வணங்கியவர்கள் கூட்டமாக நின்று இந்த மனிதர் மீது இடி விழும் அல்லது ஏதேனும் ஆபத்து ஏற்படும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

துபைலோ சிலையைப் பார்த்து, 'தல் கபைனே' நான் உன்னை வணங்குபவன் அல்ல!

நான் உனக்கு முன் பிறந்தவன்; உன் நெஞ்சில் நான் தீ மூட்டுகிறேன்' என்று கவிதை பாடியவராக அதைப் பற்ற வைத்தார். அந்த நெருப்போடு சேர்ந்து துபைலின் கோத்திரத்தின் மூடநம்பிக்கைகளும் எரிந்தன. அவர்கள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றனர்.

நனவான கனவு :

நபி (ﷺ) அவர்களது மரணத்திற்குப் பின்னர் நான் எனது மகன் அம்ருடன் முஸைலமாவுக்கெதிரான யுத்தத்தில் பங்குகொண்டேன். அவ்வேளை நான் தூக்கத்தில் ஒரு கனவு கண்டேன். அதில் என் தலை சிரைக்கப்பட்டது. என் வாயிலிருந்து ஒரு பறவை பறந்து சென்றது. ஒரு பெண் தனது வயிற்றுக்குள் என்னை நுழைத்துக் கொண்டாள். என் மகன் என்னைத் தேடினான். எனினும் என்னை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. இந்தக் கனவு குறித்து எனது மக்களிடம் நான் கூறினேன். அவர்கள் நல்லதுதான் என்று கூறினர். அதற்கு நான், 'இதோ இந்தக் கனவுக்கு நானே விளக்கம் கூறுகிறேன்' என்று கூறி,

'என் தலை சிரைக்கப்பட்டதானது அது வெட்டப்படுவதையும், எனது வாயிலிருந்து பறவை வெளியானது எனது உயிர் பிரிவதையும் உணர்த்துகிறது. அந்தப் பெண் பூமியாவாள். நான் இங்கே அடக்கம் செய்யப்படுவேன். நான் ஷஹாதத்தை அடைவேன். எனினும் எனது மகன் இந்தப் போரில் ஷஹாதத்தை அடையமாட்டார்' என்று விளக்கம் கூறினார்கள். அவர் கூறியபடி யமாமா போரில் அவர் ஷஹீதானார். அவரது மகனின் ஒரு கை துண்டிக்கப்பட்டது. யமாமா போரில் தனது வலது கையையும், தந்தையையும் தியாகம் செய்துவிட்டு அவரது மகன் அம்ர் மதீனா திரும்பினார்.

உமர் (رضي الله عنه) ஆட்சிக் காலத்தில், அம்ர் கலீபாவிடம் சென்றார். உணவு வேளையில் உணவு கொண்டுவரப்பட்டது. கூடியிருந்தவர்களும் உண்பதற்காக அழைக்கப்பட்டார்கள். மக்கள் உண்பதற்குத் தயாரானார்கள். எனினும், அம்ர் மட்டும் தயக்கத்துடன் சபையைத் தவிர்ந்துகொண்டார். ஒதுங்கிக்கொண்ட அம்ர் (رضي الله عنه) அவர்களிடம் உமர் (رضي الله عنه) அவர்கள், 'ஏன் என்ன நடந்தது? ஏன் வரவில்லை?' என்று வினவினார்கள். விடை வராததால் விடையைத் தானே சொன்னார்கள்.

'அம்ரே! உண்ணும் கை துண்டிக்கப்பட்டுள்ளதே அந்த நிலையில் இந்தச் சபையில் எப்படி அமருவது என்று வெட்கப்பட்டுத்தானே ஒதுங்கிக் கொண்டீர்கள்' என்றதும், 'ஆமாம் அமீருல் முஃமினீனே' என்று இந்தக் காரணத்தை அம்ர் ஏற்றுக்கொண்டார். அதற்கு உமர் (رضي الله عنه) அவர்கள், 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக, உங்களது துண்டிக்கப்பட்ட இந்தக் கையை இந்த உணவில் போட்டு அதை நீங்கள் கலக்காவிட்டால் நான் இதை உண்ணமாட்டேன். அம்ரே! இந்தக் கூட்டத்தில் தனது உடம்பில் ஒரு

பகுதி சொர்க்கத்தில் உள்ளவாறு உன்னைத்தவிர வேறு எவரும் இல்லை' என்று கூறினார்கள்.

அதாவது துண்டிக்கப்பட்ட உனது கை சுவனத்திற்குரியது என்ற கருத்தில் இவ்வாறு கூறினார்கள். நாம் ஏற்கனவே கூறியபடி இவர் யர்மூக் போரில் ஷஹீதாகி தியாகியின் மகன் தியாகி என்ற பேற்றைப் பெற்றார்.

எல்லாம் வல்ல அல்லாஹ் துபைலையும் அவரது மகன் அம்ரையும் பொருந்திக் கொள்வானாக!



உலகப் பற்றற்ற
உமைர் இப்னு ஸஅத் (رضي الله عنه)

ஒழுக்கத்திலும், இறைவணக்கத்திலும், உலகப்பற்றற்ற வாழ்விலும் ஊறித்திளைத்த உத்தமர்தான் உமைர் இப்னு ஸஅத் (رضي الله عنه). இவர் இறை வழிபாட்டில் காட்டிய ஈடிணையற்ற தொடர்பினை நபித்தோழர்கள் நன்கு அறிந்திருந்ததால் இவர் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். இதனால் அன்ஸாரிகளில் அபூதர்தா, சத்தாத் இப்னு அவ்ஸ் இப்னு ஸாபித், உமைர் இப்னு ஸஅத் ஆகிய மூவரையும் துறவிகள் என்று கூறுவர். இவரது வாழ்வு நமக்கெல்லாம் நல்ல முன்மாதிரியாக அமையலாம்.

இளமைக் காலம்

இவரது தந்தை ஸஅத் அவர்கள் ஒரு பத்ர் போர் வீரராவார். இவர் மரணித்த பின்னர் இவரது தாய் ஜில்லாஸ் இப்னு சுவைத் என்பவரை மணமுடித்தார்கள். இவர் உமைர் (رضي الله عنه) அவர்கள் மீது மிகுந்த பாசம் வைத்திருந்தார். அவரை அன்புடன் தனது பிள்ளைபோல வளர்த்து வந்தார். இவர் நபி (ﷺ) அவர்களை உண்மையான நபி என நம்பாமல் போலியாக முஸ்லிம் போல் நடித்துக்கொண்டிருந்தார்.

ஒரு முறை ஜில்லாஸ் தமது தோழர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது ‘முஹம்மது சொல்வது உண்மையாக இருந்தால் நமது நிலை கழுதையின் நிலையை விட கெட்டதுதான்’ என்று நபி (ﷺ) அவர்களின் தூதுத்துவத்தில் சந்தேகம் ஏற்படுத்தும் விதத்தில் பேசினார். அப்போது அங்கே இருந்த உமைர் (رضي الله عنه) அதிர்ந்து போனார்.

இதை நபி (ﷺ) அவர்களிடம் கூறினால், என்மீது அன்பு வைத்து அரவணைத்தவருக்குத் துரோகம் செய்ததாகவும் நன்றிகெட்ட விதத்தில் நடந்ததாகவும் ஆகிவிடும். நபி (ﷺ) அவர்களிடம் கூறாமல் மறைத்துவிட்டால் மார்க்கத்திற்குத் துரோகமிழைத்ததாக ஆகிவிடும். என்ன செய்வது என்று சிந்தித்த உமைர் பிறகு நபி (ﷺ) அவர்களிடம் கூறிவிடுவது என்று முடிவு செய்தார்கள்.

ஒரு சபையில் இருந்து பேசிவிட்டு சபையில் பேசப்பட்டதை வெளியில் கூறுவது சபையின் பாதுகாப்புக்குச் செய்யும் மோசடியாகும். இதையெல்லாம் சிந்தித்த அவர்,

‘ஜில்லாஸ் அவர்களே! நீங்கள் எனக்கு மனிதர்களுள் மிகவும் விருப்பமானவர்; எனக்கு அதிகம் நன்மை செய்தவர்; உங்களுக்குத் தீங்கு நடப்பதை நான் விரும்பவில்லை; ஆனால், நீங்கள் இப்போது சொன்ன வார்த்தையை நான் வெளியில் சொன்னால் உங்களுக்கு அது பாதிப்பாக அமையும்; நான் மௌனம் சாதித்தால் அது என் மார்க்கத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும்; மார்க்கத்திற்குச் செய்யும் பணி நன்றிக்கடனை விட உயர்ந்தது. எனவே, இதை நான் நபி (ﷺ) அவர்களிடம் கூறப்போகின்றேன்’ என்று கூறினார்கள்.

இதன்மூலம் சபையின் இரகசியத்தைக் காத்தார்கள். ஏனெனில், மவ்னமாக இருந்துவிட்டு வெளியில் சொன்னால் அது துரோகமாகும். அடுத்து இதன் விபரீதத்தை உணர்ந்து மன்னிப்புக்கோரி மனதை மாற்றிக்கொள்ள ஜில்லாஸிக்குச் சந்தர்ப்பம் அளித்தார்கள். அவர் மன்னிப்புக் கேட்டிருந்தால் இவர் எடுத்துரைக்கும் தேவை இருந்திருக்காது.

ஜில்லாஸ் மீதுள்ள தனது நன்றிக்கடனை, தான் மறக்கவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். ஆனால், ஜில்லாஸ் மன்னிப்புக் கேட்கவும் இல்லை. சில அறிவிப்புகள் பிரகாரம் செய்தியைச் சொல்லாதிருக்க இவரைக் கொலை செய்யவும் முயன்றார். ஆனால், உமைர் செய்தியை நபி (ﷺ) அவர்களிடம் எடுத்துரைத்துவிட்டார்.

நபி (ﷺ) அவர்கள் உமைரை வைத்துக்கொண்டு ஜில்லாஸை அழைத்து விசாரித்தார்கள். ஆனால், அவர் நபி (ﷺ) அவர்களை உண்மையான இறைத்தூதராக நம்பாததால், சத்தியம் செய்து தான் அப்படிக் கூறவில்லை என்று அடித்துக் கூறிவிட்டார். இப்போது சபையில் பொய்க்குற்றம் சாட்டியவர் என்ற நிலையில் உமைர் சோகத்தோடு நிற்கிறார். நபி (ﷺ) அவர்களின் முகத்தில் மாற்றம் தெரிகிறது. நபி (ﷺ) அவர்களுக்கு வஹி வருவதற்கான வெளிப்படையான அறிகுறிகள் தென்படுகின்றன.

“இவர்கள் நிச்சயமாக குப்ருடைய சொல்லைச் சொல்லிவிட்டு அதைச் சொல்லவே இல்லை என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்கிறார்கள்; அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட பின் நிராகரித்தும் இருக்கின்றனர். (அவர்கள் உங்களுக்குத் தீங்கிழைக்கக் கருதித்) தங்களால் அடைய முடியாததையும் (அடைந்துவிட) முயன்றனர். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் அவனுடைய அருட்கொடையால் அவர்களைச் சீமான்களாக்கியதற்காகவா (இவ்வாறு) பழிவாங்க

முற்பட்டனர்? எனவே, அவர்கள் (தம் தவறிலிருந்து) மீள்வார்களானால், அவர்களுக்கு நன்மையாக இருக்கும்; ஆனால் அவர்கள் புறக்கணித்தால், அல்லாஹ் அவர்களை நோவினை மிக்க வேதனை கொண்டு இம்மையிலும் மறுமையிலும் வேதனை செய்வான்; அவர்களுக்குப் பாதுகாவலனோ, உதவியாளனோ இவ்வுலகில் எவரும் இல்லை" (அல்குர்ஆன் 9:74)

இந்த வசனத்தில் குற்றவாளிகள் பாவமன்னிப்புக் கோர இடம் கொடுக்கப்பட்டது.

இதுவரை நபித்துவத்தில் சந்தேகம் கொண்டிருந்த ஜில்லாஸிற்குத் தனது விசயத்திலேயே வசனம் அருளப்பட்டமை உண்மையை உணர்த்தியது! நபியவர்கள் உண்மையான இறைத்தூதர்தான் அவர்களுக்கு இறைவனிடமிருந்து தான் வஹி வருகிறது என்பதை உணர்ந்தார். எனவே, அவர் பாவமன்னிப்புக் கேட்டுத் தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டார்.

நபி (ﷺ) அவர்கள், தனது திருக்கரத்தால் உமைரின் காதைப் பிடித்து, 'இந்தக் காது கேட்டதைத்தான் ஒப்புவித்துள்ளது. நீ உண்மை சொன்னாய் என்று உன் இறைவன் உறுதிப்படுத்திவிட்டான்' என்று செல்லமாகக் கூறினார்கள்.

ஜில்லாஸ் உண்மையில் தான் தவ்பா செய்தார் என்பதை, அவர் உமைர் (رضي الله عنه) அவர்களுடன் தொடர்ந்து அன்புடன் நடந்து கொண்டதை வைத்து நபித்தோழர்கள் புரிந்துகொண்டனர்.

நன்றிக்கடன் என்ற பெயரில் இதை வெளியில் சொல்லாமல் உமைர் (رضي الله عنه) அவர்கள் மறைத்திருந்தால், இவர் திருந்த வாய்ப்புக் கிடைத்திருக்காது. இந்த வகையில், உமைரின் உறுதியான மார்க்க நம்பிக்கை அவரது சிறிய தந்தையை நரகை விட்டுப் பாதுகாத்திருக்கின்றது.

இந்த நிகழ்ச்சி உமைர் (رضي الله عنه) அவர்களின் உறுதியான ஈமானையும் உலகை விட மறுமைக்கு அவர் அளித்த முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றது.

உமரின் தேர்வு உமைர்

உமர் (رضي الله عنه) அவர்கள் தனது அதிகாரிகளைத் தெரிவு செய்வதில் அதிக அக்கறை காட்டுவார்கள். நம்பிக்கையான, நாணயமான, உலகப்பற்றற்ற, உண்மையாளர்களை குறிப்பாக அதிகாரத்தைத் தேடிக்கொண்டிருக்காதவர்களையே பதவியில் அமர்த்துவார்கள்.

ஒருமுறை ஹிம்ஸ் பகுதி ஆளுநர் பதவி காலியாக இருந்தது.

அப்பகுதிக்கு ஆளுநராக ஒருவரை தேர்வு செய்ய வேண்டும். அதேவேளை, 'ஹிம்ஸ்' பகுதி மக்கள் அதிகாரிகளில் குற்றம்குறை கூறுவதில் வல்லவர்கள். அவர்களுக்குத் தலைவர்களைத் தேர்வு செய்யும்போது மிகுந்த நிதானத்துடன் தேர்வு செய்ய வேண்டும்.

இந்த அடிப்படையில் இவரைப் போன்றே உலகப்பற்றே இல்லாமல் வாழ்ந்த ஹிம்ஸின் தலைவர் ஸஃத் இப்னு ஆமிர் (ؓ) அவர்களின் மரணத்தின் பின் அந்த இடத்திற்கு இவரைத் தலைவராக நியமித்தார்கள். (அல்முஃஜமுல் கபீர்)

பதவி

இவர் பதவியேற்றதும் மக்களுக்குத் தொழுகை நடத்திவிட்டு,

'மக்களே! இஸ்லாம் என்பது பலமான அரணையும், உறுதியான வாயிலையும் கொண்டது. இஸ்லாத்தின் அரண் என்பது நீதியாகும். அதன் வாயில் உரிமைகளாகும். கோட்டை தகர்க்கப்பட்டு வாயில் உடைக்கப்பட்டால் இந்த மார்க்கம் வெற்றி கொள்ளப்பட்டுவிடும். அதிகாரிகள் உறுதியாக இருக்கும் வரை இஸ்லாம் பாதுகாப்பாக இருக்கும். அதிகாரிகளின் உறுதி என்பது வாளால் வெட்டுவதோ, கசையால் அடிப்பதோ அல்ல. எனினும், நீதியை நிலைநாட்டுவதும், உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் தான் உள்ளது' என்று கூறினார்.

தனது இப்பதவி ஏற்புரை மூலம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் நீதி வழங்குதல், ஒவ்வொருவரின் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தல் என்ற விஷயத்தில் தான் உறுதியாக இருப்பேன் என்பதைத் தெளிவுபடுத்தினார்கள்.

இவர் தனது ஆளுகைக்குட்பட்ட தனது மக்கள் மத்தியில் மிக நளினமாக நடந்துகொண்டார். வரி அறவிடுவதில் கெடுபிடிகள் செய்வதை வெறுத்தார். இவர் பலஸ்தீன் செல்லும் போது வரி கொடுக்காதவர்கள் வெயிலில் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டு, கண்டித்துவிட்டு, 'இவர்கள் வரி தர முடியாத நிலையில் இருந்தால் இவர்களை இவர்களது சக்திக்கு மீறிக் கட்டாயப்படுத்த முடியாது' எனக்கூறி அவர்களை அனுப்பி விட்டார்கள்.

பொதுவாக ஹிம்ஸ்வாசிகள் குறை தேடுபவர்கள். உமைர் அம்மக்களிடமிருந்து பெறப்படும் வரிகளை உடனுக்குடன் உரியவர்களுக்கும், உரிய பணிகளுக்குமாகப் பங்கிட்டு வருவார்கள். தனது கட்டுப்பாட்டில் எதையும் வைத்திருக்க மாட்டார்கள்.

உமரின் கழுகுப் பார்வையில் உமைர்

உமர் (ரலி) அவர்கள் ஒரு சிறந்த நிர்வாகியாவார்கள். தமக்கும் நிர்வாகிகளுக்குமிடையே மிகுந்த நெருக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். அதேவேளை, தனது நிர்வாகிகளுள் எவரும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தவறு செய்துவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். தனது நிர்வாகிகள் தவறு செய்யமாட்டார்கள் என்று அவர்கள் மீது அபரிமிதமான நம்பிக்கை கொள்ளாது, தவறலாம். ஆனால், அதற்கு இடம்கொடுத்துவிடக் கூடாது என்பதற்காகப் பலமான பல நிபந்தனைகளை இட்டிருந்தார்கள். இந்த வகையில் உமைர் (ரலி) அவர்களிடமிருந்து வரியோ எந்தத் தகவலுமோ வரவில்லையென்பதால், கலீபா உமரிடம் இருந்து கடிதம் ஒன்று வந்தது. அதில் ‘கடிதம் கிடைத்ததும் ஹிம்ஸை விட்டுவிட்டு மதீனா நோக்கி உன்னிடம் இருப்பவற்றை எடுத்துக் கொண்டு வரவேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது.

கால்நடையாக ஆளுநர்

கலீபாவின் கட்டளைக்காகவே பதவியை ஏற்ற பதவி மீது மோகம் இல்லாத அவருக்கு இந்த அழைப்பு ஆச்சரியமாகவோ, அதிர்ச்சியாகவோ இருக்கவில்லை.

உடனே தனது உணவுப் பை, நீர் அருந்தும் குவளை போன்ற பொருட்களை ஒரு பையில் போட்டுக்கொண்டு கால்நடையாகவே மதீனா நோக்கிப் பயணித்து நீண்ட இடைவெளிக்குப் பின் உமைர் உமரைச் சந்தித்தார்.

பாலைவனப் பயணத்தில் சோர்ந்து துவண்டுபோய் அவர் உமர் முன் நின்றார்.

உமைர் : அஸ்ஸலாமு அலைக்கும் அமீருல் முஃமினீனே!

உமர் : வ அலைக்குமுஸ்ஸலாம். உமைரே தங்களுக்கு என்ன நடந்தது?

உமைர் : எதுவுமில்லை அமீருல் முஃமினீன் அவர்களே! நான் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் உள்ளேன். என்னுடன் எனது முழு உலகத்தையும் கொண்டு வந்துள்ளேன்.

உமர் : என்ன கொண்டு வந்துள்ளீர்கள்?

உமைர் : இதோ எனது உணவுப்பை; நான் நீரருந்த உழூச் செய்யப் பயன்படுத்தும் பாத்திரம்; இவ்வளவுதான் என்னிடம் உள்ளன. இதைவிட அதிகமாக எனக்கு எதுவும் தேவையில்லை.

உமர் : நீங்கள் நடந்தா வந்தீர்கள்?

உமைர் : ஆம் தலைவரே!

உமர் : நீங்கள் பயணிக்க அரசாங்கக் கால்நடை தரப்படவில்லையா?

உமைர் : அவர்கள் தரவும் இல்லை; நான் கேட்கவும் இல்லை.

பின்னர் அவரது நிர்வாக நடவடிக்கைகள் குறித்து விசாரித்துவிட்டு மீண்டும் ஹிம்ஸிற்குச் சென்று பதவியைப் பொறுப்பெடுக்குமாறு உமர் (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டாலும் உமைர் (ரலி) மறுத்துவிட்டார்.

பின்னர் மதீனாவின் எல்லையில் ஓரிடத்தில் தன் குடும்பத்துடன் அமைதியாக வாழ்ந்து வர அனுமதி கேட்டார். உமர் (ரலி) அவர்களும் அனுமதியளித்தார்கள்.

உமரின் சோதனை

அவர் மதீனா எல்லையில் சென்று தங்கிய பின்னர் தனக்கு மிக நம்பிக்கையான ஒருவரை அழைத்து அவரது கையில் பணப்பை ஒன்றைக் கொடுத்து உமைர் (ரலி) அவர்கள் வீட்டிற்கு விருந்தாளிபோல் சென்று கவனித்து வருமாறு கூறி அனுப்பினார்கள்.

அவர் சென்று மூன்று தினங்கள் அவரிடம் தங்கினார். எந்தவித முகச் சுளிப்பும் இல்லாமல் உமைரும் இவரைக் கவனித்தார். பின்னர் உமைருக்கு நெருக்கமான சிலர், நீங்கள் அவர் வீட்டில் தங்குவது அவருக்குச் சிரமமாகியுள்ளது. உங்களுக்கு உணவு தந்துவிட்டு அவர்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்று கூறினர்.

இதன்பின் விருந்தாளி நடந்ததைக் கூறி கலீபா தந்த பணப்பையை அவரிடம் கொடுத்தார்கள். இதைக்கண்ட உமைர், இதைக் கலீபாவிடம் கொடுத்து எனது ஸலாத்தைக் கூறி, உமைருக்கு இதில் எந்தத் தேவையுமில்லை என்று கூறிவிடுங்கள் எனக் கூறித் திருப்பியனுப்பினார்கள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த உமைர் (ரலி) அவர்களின் மனைவி, 'இதை எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையிருந்தால் அதை நிறைவேற்றலாம். இல்லையென்றால் அதை வேறு வழியிலாவது பயன்படுத்தலாம். இங்கு தேவையுள்ள மக்கள் அதிகமாகவே இருக்கின்றனர்' எனக் கூறினார்கள்.

இதைக்கேட்ட விருந்தாளி பணப்பையை வைத்துவிட்டுச் சென்றுவிட்டார். உமைர் அன்றைய தினமே அதை முழுமையாக தர்மம் செய்துவிட்டார். அதில் குறிப்பாக வீரமரணமடைந்த வர்களின் பிள்ளைகளுக்கு அதிகமாகக் கொடுத்தார். அதில் எதையும் தான் எடுக்கவும் இல்லை; மீதப்படுத்தவுமில்லை.

உமர் (رضي الله عنه) அவர்களிடம் சென்ற உளவாளி நடந்தவற்றைக் கூறினார். பணப்பையை அவர் என்ன செய்தார் என்று கேட்டபோது, ‘தெரியாது; ஆனால் அதில் ஒரு திர்ஹமைக் கூட அவர் தனக்காக வைத்திருக்க மாட்டார்’ எனக் கூறினார்.

உமரும் உமைரும்

உமர் (رضي الله عنه) அவர்கள் தன்னைச் சந்திக்குமாறு உமைர் (رضي الله عنه) அவர்களுக்குக் கடிதம் அனுப்பினார்கள். அவர் வந்து கலீபாவைச் சந்தித்தார்.

உமர் : பணத்தை என்ன செய்தீர்கள்?
உமைர் : எனக்கென்று தந்த பணத்தை நான் என்ன செய்துவிட்டேன் என்று எப்படிக் கேட்கின்றீர்கள்?
உமர் : இல்லை, என்ன செய்தீர்கள் என்று நீங்கள் கூறித்தான் ஆக வேண்டும்.
உமைர் : செல்வமோ, குழந்தைகளோ பயனளிக்காத (மறுமை எனும்) அந்த நாளில் பயன்படுத்துவதற்காக நான் அதைச் சேமித்து (தர்மம் செய்து) விட்டேன்.

இதைக்கேட்ட உமர் (رضي الله عنه) அவர்களது கண்கள் கலங்கின. பின்னர் உமைர் (رضي الله عنه) அவர்களுக்காக ஒரு மரைக்கால் தானியமும் இரண்டு ஆடைகளையும் கொடுத்தார்கள். இதைக் கண்ட உமைர் அவர்கள், ‘தானியம் எனக்குத் தேவையில்லை. வீட்டில் இரண்டு ஸாஉ தானியம் இருக்கின்றது. அது முடியும் போது எப்படியும் அல்லாஹ் எனக்கு ரிஸ்க் அளிப்பான். ஆடையைப் பொறுத்த வரையில் ஒன்றை எடுத்துக் கொள்கின்றேன். எனது மனைவியின் ஆடை இற்றுப்போய்விட்டது என்று கூறினார்.

மரணத்தின் மடியில்

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் உத்தமர் உமைர் மரணத்தின் மடியில் விழுந்தார். அவருக்குச் சொத்து, செல்வம் என்று அதிகம் இருக்கவில்லை. அவர் சத்தியம் எனும் ஒளியுடன் நேர்வழி எனும் பெரும் செல்வத்துடன் தக்வா, பேணுதல், சுயமரியாதை, தன்மான உணர்வு என்ற உயர்ந்த பொக்கிஷங்களுடன் நீடித்த நிலையான மறுமை இன்பத்தை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்துவிட்டார். அல்லாஹ் அவருக்கு அருள் புரிவானாக!

சேற்றில் முளைத்த செந்தாமரை

இக்ரிமா (رضي الله عنه)

இஸ்லாம் எனும் தென்றல் மக்காவில் வீசிய வேளையில் அதனைப் புயலாக எதிர்த்தவன்தான் அபூஜஹ்ல். அபூஜஹ்லின் அன்பு மைந்தன் தான் இக்ரிமா ஆவார். உயர் குலத்தைச் சேர்ந்த தனது தந்தையைப் போன்றே இவர் இஸ்லாத்தை எதிர்ப்பதில் கடினமாகவே நடந்துகொண்டார். எனினும் இந்த இரும்பு இதயத்தையும் இஸ்லாம் இளகச் செய்து அதில் ஈமானிய விதையை முளைக்கச் செய்தது.

இஸ்லாத்தின் எதிரியாக

தந்தையோடு சேர்ந்து இவர் இஸ்லாத்தின் மீதான தனது வெறுப்பைத் தன்னால் இயன்றளவு வெளிப்படுத்தினார். அதுமட்டுமன்றி முஸ்லிம்கள் மீது கொடுமைகளையும் கட்டவிழ்த்து விட்டார். பத்ர் போரில் தந்தையுடன் சேர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராகப் போரிட்டார். அதில் தந்தையை இழந்ததால் இஸ்லாத்தை எதிர்ப்பதில் வெறிகொண்டவராக மாறினார்.

இஸ்லாத்தை எதிர்க்க தக்க தருணத்தை எதிர்பார்த் திருந்தவருக்கு உஹதுப் போர் ஒரு பெரிய வாய்ப்பாகவே அமைந்தது. இப்போருக்கு தனது மனைவி உம்மு ஹகீமையும் அழைத்துச் சென்றார். வலப்புற அணிக்கு காலிதும், இடப்புற அணிக்கு இக்ரிமாவும் தலைமை தாங்கிச் சென்று முஸ்லிம்களுடன் மோதிக் குறைஷிகளுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தனர். பத்ரின் இழப்புக்கு இதைப் பதிலீடாகக் கருதினாலும் இக்ரிமா திருப்தியடையவில்லை. எனவே ஹன்தக் போரிலும் பங்குகொண்டு முஸ்லிம்களை வஞ்சகம் தீர்க்க முனைந்தார். முடியாமல் போனது.

இவ்வாறே நபி (ﷺ) அவர்கள் மக்காவைக் கைப்பற்றிய போது அனைவரும் எதிர்ப்பு நடவடிக்கை எதுவுமின்றி நபி (ﷺ) அவர்கள் முன் பணிந்தனர். எனினும் அபூஜஹ்லுக்குப் பின்னர் அந்தச் சமூகத்திற்குத் தலைமை தாங்கும் தகுதியைக் கொண்டிருந்த இக்ரிமா தன்னுடன் சிலரை இணைத்துக் கொண்டு கிளர்ச்சி செய்ய முற்பட்டார். அவர்களது கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது. காலித் இப்னு வலீத் தலைமையில் நபி (ﷺ) அவர்களால் அனுப்பப்பட்ட சிறு படையால் இக்கிளர்ச்சிப்படை சிதறடிக்கப்பட்டது. எனவே, தோல்வியடைந்த இக்ரிமா யமனுக்குத் தப்பி ஓடினார். முஹம்மத் எப்படியும் தன்னைக் கொலை செய்வார். ஒருபோதும் தன்னை மன்னிக்கமாட்டார் என்று எண்ணியே இவர் தலைமறைவானார்.

நபி(ﷺ)அவர்களும் இக்ரிமாவைக் கண்ட இடத்தில் கொல்லுமாறு உத்தரவிட்டிருந்தார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுத் தெளிந்தார்

அபூசுப்யானின் மனைவியும் இஸ்லாத்தின் மீது கடுமையான வெறுப்பை வெளிப்படுத்தி வந்தவருமான ஹிந்தா அவர்கள் இஸ்லாத்தில் இணைந்தார்கள். அப்போது இக்ரிமாவின் மனைவி உம்மு ஹகீமும் இஸ்லாத்தில் இணைந்தது மட்டுமன்றி தனது கணவருக்குப் பாதுகாப்பையும் பெற்றுக் கொண்டார்கள். சுமார் 10 பெண்கள் நபி(ﷺ)அவர்களிடம் பைஅத்துச் செய்ய வந்தனர். அப்போது அங்கு நபி(ﷺ) அவர்களது மனைவியர் சிலரும் ஃபாத்திமா(ரலி) அவர்களும் இருந்தார்கள். அப்பொழுது முகத்தை மூடியிருந்த ஹிந்தா(ரலி) நபி(ﷺ) அவர்களைப் பார்த்து "சத்திய மார்க்கத்தை மேலோங்கச் செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றேன். உங்கள் அன்பை வேண்டுகிறேன்" எனக் கூறித் தனது முகத்திரையை அகற்றினார்கள். "நான் உத்பாவின் மகள் ஹிந்தா" என்றும் சொன்னார்கள். ஹிந்தாவிடம் நபி(ﷺ) அவர்கள் எவ்விதமான கடுமொழியோ வெறுப்போ காட்டாது ஏற்றுக் கொண்டார்கள். அப்போது உம்மு ஹகீம் அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் கொன்று விடுவீர்கள் என்று பயந்து என் கணவர் இக்ரிமா யமனுக்கு தப்பி ஓடியுள்ளார். நீங்கள் அவருக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். நபி (ﷺ) அவர்கள் "அவர் பாதுகாக்கப்படுவார்" என்று கூறினார்கள்.

கணவரைத் தேடி மனைவி

இந்த நல்ல செய்தி கிடைத்ததும் கணவரைத் தேடி யமனுக்குச் சென்று யமனின் கடற்கரை ஓரத்தில் கணவரைக் கண்டு நடந்ததைக் கூறினார்கள். பிறகு கணவரைச் சமாதானப்படுத்தி அழைத்து வந்தார்கள்.

வரும் வழியில் ஒரு நாள் இக்ரிமா மனைவியை நெருங்கியபோது உம்மு ஹகீம் கடுமையாக மறுத்து ஒதுங்கிக் கொண்டார்கள். அது மட்டுமன்றி, 'நான் முஸ்லிம். இக்ரிமாவே! நீர் இதுவரை இணை வைப்பாளர்; உம்முடன் நான் சேர முடியாது' என்று கண்டிப்பாகக் கூறினார்கள்.

இது இக்ரிமாவுக்குப் பெரும் ஆச்சரியத்தை அளித்தது. நபியின் போதனைக்கு இவ்வளவு வலு இருக்கும் என அவர்

எண்ணவில்லை. கணவன் மனைவி உறவில்கூட அவரது போதனை தாக்கம் செலுத்துவதைக் கண்டு வியந்தார்கள். தொடர்ந்து பயணித்த அவர்கள் மக்காவை அடைந்தார்கள்.

இக்ரிமா நபி(ﷺ) அவர்களிடம் வந்தபோது நபி(ﷺ) அவர்கள் தம் தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் தம்மைச் சூழ இருந்த தோழர்களைப் பார்த்து, “இப்போது இக்ரிமா முஃமினாக முஹாஜிராக இங்கே வருவார். அவரது தந்தை அபூஜஹ்லை யாரும் திட்ட வேண்டாம். ஏனெனில் இறந்தவரைத் திட்டுவதால் பயனில்லை. நாம் திட்டுவது இறந்தவரைச் சென்றடையாது. அது உயிருள்ளவர்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும்” என்று கூறினார்கள்.

இக்ரிமா இஸ்லாத்தில் இணைந்தார்

இக்ரிமா தம்மிடம் வந்த போது மிகுந்த மகிழ்ச்சியுடன் நபி (ﷺ) அவர்கள் வரவேற்றார்கள். இஸ்லாத்தில் இணைந்த இக்ரிமாவிடம், ”நீர் விரும்பியதைக் கேட்கலாம். அது கொடுக்கப்படும்” என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

“அல்லாஹ்வின் தூதரே! நான் உங்களுக்கு எதிராகச் செயல்பட்டுள்ளேன். உங்களுக்கு முன்னாலும் பின்னாலும் உங்களைப் பற்றித் தரக்குறைவாகப் பேசியுள்ளேன். அவற்றையெல்லாம் மன்னிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்” என்று பதிலளித்தார்கள்.

அப்போது நபி(ﷺ)அவர்கள், “அல்லாஹ்வே! இக்ரிமா செய்த எதிர்ப்புக்கள் உனது ஒளியை அணைத்துவிட எடுத்த முயற்சிகள் அனைத்தையும் மன்னித்து விடுவாயாக. எனக்கு முன்னாலும் பின்னாலும் அவர் செய்த எதிர்ப்பு நடவடிக்கைகளை மன்னிப்பாயாக!” என்று பிரார்த்தனை செய்தார்கள்.

இதனைக் கேட்ட இக்ரிமாவின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. உடனே, “அல்லாஹ்வின் தூதரே! இதற்கு முன் இஸ்லாத்தை எதிர்க்கச் செலவிட்டஒவ்வொரு வெள்ளிக்காசுக்குப் பகரமாக பல நூறு வெள்ளிக்காசுகளைஇறைப் பாதையில் செலவிடுவேன். இஸ்லாத்திற்கு எதிராகப்போர்களில் நான் கலந்து கொண்டுள்ளேன். இதைவிடப் பன்மடங்குஇறைப்பாதையில் இனி நான் போராடுவேன்” என்று வாக்களித்தார்கள்.

யர்மூக் யுத்தத்தில் இக்ரிமா (رضي الله عنه)

இக்ரிமா (رضي الله عنه) அவர்கள் வாக்களித்தபடி இதன் பின்னர் நடந்த

போர்களில் முன்னிலை வீரராகத் திகழ்ந்தார்கள். அதன் தொடரில் மிகப்பெரும் படையுடன் முஸ்லிம்கள் மோதிய யர்மூக் போரிலும் இக்ரிமா பங்குகொண்டார்கள்.

யர்மூக் போரில் எதிர்ப் படைக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்த முற்பட்ட போது காலித் பின் வலீத்(ﷺ) தடுத்தார்கள். அப்போது இக்ரிமா (ﷺ) அவர்கள்: “காலிதே! நீ எனக்கு முன்னர் நபியவர்களுடன் நெருக்கம் கொண்டு விட்டாய். நானோ எதிர்ப்பதில் எல்லைமீறி நடந்துவிட்டேன். எனவே, என்னைத் தடுக்காதே! நான் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் காண வேண்டும்” என்று கூறினார்கள். பின்னர் ”காலிதே! நபிக்கு எதிராக பல போர்களில் பங்குகொண்ட நான் இந்த ரோமப்படையைக் கண்டு பின்வாங்குவதா? இது ஒருபோதும் நடக்காது”எனக் கூறினார்கள்.

இதன் பின், முஸ்லிம்கள் பக்கம் திரும்பி, ”மரணிக்கத் தயாரானவர்கள் வாருங்கள்” என்று அறைகூவல் விட்டார்கள். இக்ரிமாவின் சிற்றப்பா அல்ஹாரிஸ் இப்னு ஹிஷாம் மற்றும் ழிவார் இப்னுல் அஸ்வர் உட்பட சுமார் 400 பேர் அணிதிரண்டு எதிரிகள் மத்தியில் ஊடுருவிக் கடுமையான எதிர்த்தாக்குதல் நடத்தினர்.

போர் முடிவுற்றது. அப்போது மூன்று வீரர்கள் கடுமையாக வெட்டப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள்,

அல்ஹாரிஸ் இப்னு ஹிஷாம் (ﷺ),
அய்யாஷ் இப்னு ரபீஆ (ﷺ),
இக்ரிமா இப்னு அபூஜஹ்ல் (ﷺ)

ஆகிய மூவர் ஆவர். அல்ஹாரிஸ் தண்ணீர் கேட்டார். தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அப்போது இக்ரிமா தண்ணீரைப் பார்த்தார்கள். அவரிடம் தண்ணீரைக் கொண்டு செல்லுமாறு அல்ஹாரிஸ் கூறினார். தண்ணீர் இக்ரிமாவிடம் சென்றது. அப்போது அய்யாஷும் தண்ணீரைப் பார்த்தார். இக்ரிமா அவருக்குத் தண்ணீரைக் கொடுக்குமாறு கூறினார்கள். தண்ணீர் அவரிடம் சென்றது. அப்போது தண்ணீரைக் குடிக்கும் முன்னரே அய்யாஷ் மரணித்தார். தொடர்ந்து இக்ரிமா, ஹாரிஸ் ஆகியோரிடமும் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. ஆனால் மூவருமே தண்ணீர் குடிக்காமலே மரணித்தனர். அல்லாஹுத்தஆலா அம்மூவருக்கும் ஹவ்ளுல் கவ்ஸரில் நீர் புகட்டுவானாக!

தீமையில் உழன்று இஸ்லாமிய மார்க்கத்தின் எதிரியாக இருந்து இஸ்லாத்தில் இணைந்து வீர மரணமடைந்த இக்ரிமாவை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

அறிவால் அழகு பெற்ற
இப்னு அப்பாஸ் (ﷺ)

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ﷺ)என அழைக்கப்படும் இவர், நபி (ﷺ) அவர்களின் பெரிய தந்தை அப்பாஸ் (ﷺ)அவர்களின் புதல்வராவார். அறிவைத் தேடுவதிலும்,அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதிலும் ஆழமான ஈடுபாட்டையுடைய இவரது வாழ்க்கை வரலாறு நமக்குச் சிறந்த முன்மாதிரியாகத் திகழும் என்பது திண்ணம்.

பிறப்பு

இவர் ஹிஜ்ரத்திற்கு முன் பிறந்தவர். நபி (ﷺ) அவர்கள் மரணித்த போது 10 வயதையே அடைந்திருந்த இவர், 1660 ஹதீஸ்களை அறிவிக்கும் அளவிற்கு ஹதீஸ் துறையில் தேர்ச்சி பெற்றவர். இவ்வாறே (சுல்தானுல் முஃபஸ்ஸிரீன்) விளக்கவுரை யாளர்களின் அரசர் எனப் போற்றப்படும் அளவுக்கு தப்ஸீர் கலையிலும் தேர்ச்சி பெற்றார்கள்.

குழந்தை பிறந்ததும் "தஹ்னீக்" செய்வது நபிவழியாகும். தஹ்னீக் என்பது ஒருவர் தமது வாயில் ஓர் இனிப்புப் பொருளை வைத்து ஈரப்படுத்தி, குழந்தைக்கு அதை ஊட்டுவதைக் குறிக்கும். இப்னு அப்பாஸ் பிறந்த போது அவரது தாய் நபி(ﷺ) அவர்களிடம் மகனைக் கொடுத்து தஹ்னீக் செய்தார்கள். இந்த வகையில் இவரின் வாயில் முதன் முதலில் நபி(ﷺ) அவர்களது முபாரக்கான உமிழ்நீர்தான் சேர்ந்துள்ளது. இது இவருக்குக் கிடைத்த ஒருபாக்கியம் என்று கூறலாம்.

சிறுபிள்ளைப் பருவம்

நபி (ﷺ) அவர்களின் தம்பி என்பதாலும் நபி (ﷺ) அவர்களது மனைவி மைமூனா (ﷺ) அவர்கள் இவர்களது சிற்றன்னை என்பதாலும் நபி (ﷺ) அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை இவர் பெற்றார். வீட்டிலும், பயணத்திலும் நபி (ﷺ)அவர்களை நிழலாய்த் தொடர்ந்தார். நபி (ﷺ) அவர்கள், மைமூனா (ﷺ) அவர்களது வீட்டில் தங்கும் வேளையில் இவரும் அங்கு வந்து தங்கி, நபியவர்களின் இரவுத் தொழுகையிலும் பங்குகொள்வார்கள். இச்சந்தர்ப்பங்களில் நபி (ﷺ)அவர்களுக்குப் பணிவிடை செய்வதைத் தனக்குக் கிடைத்த மிகப்பெரும் பாக்கியமாகக் கருதினார்கள். உண்மையில் அது அவருக்கு மிகப்பெரும் பாக்கியமாகவே அமைந்தது.

இதோ அவரே கூறுகின்றார் :

ஒரு நாள் நபி (ﷺ) அவர்கள் உழூச் செய்ய முற்பட்டார்கள். நான் மிக வேகமாக அவர்களுக்குத் தண்ணீர் ஏற்பாடு செய்து கொடுத்தேன். அது அவர்களுக்கு மகிழ்வளித்தது. அவர்கள் தொழ முற்பட்டபோது அவர்களுக்கு அருகில் நேராக நிற்குமாறு சைகை செய்தார்கள். நானோ அவர்களுக்குப் பின்பக்கத்தில் நின்று தொழுதேன். தொழுது முடிந்ததும் 'ஏன் எனக்குப் பக்கத்தில் நீ நிற்கவில்லை' என்று நபி (ﷺ) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான், 'நீங்கள் எனது பார்வையில் உயர்ந்தவர். உங்களுக்கு அருகில் சமமாக நிற்க நான் கூச்சப்பட்டேன்" என்று கூறினேன். அப்போது நபி (ﷺ), 'அல்லாஹ்வே! இவருக்கு ஞானத்தைக் கொடுப்பாயாக!' என்று பிரார்த்தித்தார்கள். இது உண்மையில் பெரும் பாக்கியம்தான்.

இவ்வாறே நபி (ﷺ)அவர்கள், 'அல்லாஹ்வே! இவருக்கு (பிக்ஹ்) மார்க்க விளக்கத்தைக் கொடுத்து, விளக்கவுரையையும் கற்றுக் கொடுப்பாயாக' என்றும் பிரார்த்தனை செய்துள்ளார்கள்.

அறிவுக்கு ஓர் எடுத்துக்காட்டு

இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்களின் அறிவு ஆற்றலையும் விவாதத் திறமையையும் தெளிவுபடுத்தும் பல நிகழ்வுகள் வரலாற்றில் நிறைந்துள்ளன. பின்வரும் சம்பவத்தை அதற்கோர் ஆதாரமாகக் கூறலாம்.

நபிகளாரின் மரணத்திற்குப் பின் அலீ (رضي الله عنه) அவர்கள் மீது அதிருப்தி கொண்டு அவர்களது படையிலிருந்து விலகிச் சென்றனர் ஒரு கூட்டத்தினர். அவர்கள்தாம் பிற்பட்ட காலத்தில் "கவாரிஜ்கள்" என அழைக்கப்பட்டனர். இவ்வேளையில் இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் கவாரிஜ்களைச் சந்தித்தார்கள்.

இப்னு அப்பாஸ்(رضي الله عنه) : அமீருல் முஃமினீன் அவர்களே! அவர்களுடன் சென்று உரையாடி வர எனக்கு அனுமதி தாருங்கள்.

அலீ (رضي الله عنه) : வேண்டாம்! அவர்களால் உமக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படும் என நான் பயப்படுகின்றேன்.

இப்னு அப்பாஸ் (رضي الله عنه): இல்லை. பயப்பட வேண்டியதில்லை இன்ஷா அல்லாஹ்.

முடிவில் அலீ (رضي الله عنه) அவர்களின் அனுமதி பெற்று இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் அவர்களைச் சென்று பார்த்தார். அவர்கள் வழிபாட்டில் ஈடுபாடு கொள்வதில் அதிக ஆர்வமுடையவர்களாக இருந்தனர்.

கவாரிஜ்கள் : இப்னு அப்பாஸே! உங்கள் வரவு நல்வரவாகட்டும்! எதற்காக வந்தீர்கள்?

இப்னு அப்பாஸ் (ரலி): உங்களுடன் உரையாட வந்தேன்.

கவாரிஜ்கள் : சொல்லுங்கள் கேட்போம்

இப்னு அப்பாஸ் (ரலி) : நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தையின் மகன், அவர்களது மகளின் கணவர் அலீ (ரலி) மீது நீங்கள் என்ன குறை கண்டீர்கள்?

கவாரிஜ்கள் : நாங்கள் மூன்று குறை கண்டோம்.

இப்னு அப்பாஸ் (ரலி): அவை என்ன?

கவாரிஜ்கள் : முதலாவதாக, மார்க்க விஷயத்தில் மனிதர்களின் தீர்ப்புகளுக்கு உடன்பட்டார். இரண்டாவதாக, ஆயிஷா முஆவியாவுடன் போர் புரிந்தார். ஆனால், அவர்களைச் சிறைப் பிடிக்கவோ அவர்களது பொருட்களை கனீமத்தாக எடுக்கவோ அவர் மறுத்துவிட்டார். மூன்றாவதாக, மக்கள் அவருக்கு பைஅத் செய்திருக்கின்ற போது அவரே தனக்கு "அமீருல் முஃமினீன்" என்ற பெயரை வைக்க மறுத்து அழித்துவிட்டார்.

இப்னு அப்பாஸ்(ரலி): இது குறித்து குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் நான் விளக்கினால் நீங்கள் உங்கள் கருத்தை விட்டுவிடுவீர்களா?

கவாரிஜ்கள் : ஆம் நிச்சயமாக!

இப்னு அப்பாஸ்(ரலி): அவரால் சமாதானத்திற்காக நியமிக்கப்பட்ட அபூ மூஸா அல்அஷ்அரீ, அம்ரிப்னுல் ஆஸ் ஆகியோரது தீர்ப்பை அவர் ஏற்க முனைந்ததை நீங்கள் மறுக்கின்றீர்கள். "நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் இஹ்ராமுடன் இருக்கும் நிலையில் வேட்டைப் பிராணிகளைக் கொல்லாதீர்கள். உங்களில் யார் வேண்டுமென்றே அதனைக் கொன்றாரோ (அவருக்கு) கால்நடைகளில் அவர் கொன்றதைப் போன்றதே அதற்குரிய பரிகாரமாகும். உங்களில் நீதமுடைய இருவர் இது குறித்து தீர்ப்பளிக்கட்டும். (அது) கஃபாவைச் சென்றடைய வேண்டிய பலிப் பிராணியாகும். அல்லது ஏழைகளுக்கு உணவளித்தல் பரிகாரமாகும். அல்லது அதற்குச் சமமாக நோன்பு நோற்பதாகும். அவர் தனது செயலின் விளைவை அனுபவிப்பதற்காக (இவ்வாறு விதிக்கப்பட்டுள்ளது). முன்பு நடந்தவைகளை அல்லாஹ் மன்னித்து விட்டான். (இதனை) யார் மீண்டும் செய்கின்றாரோ அல்லாஹ் அவரைத் தண்டிப்பான். அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன்; தண்டிப்பவன்." (அல்குர்ஆன் - 5:95)

மனிதர்களின் உதிரங்கள் ஓட்டப்படும் உயிர்கள் பறிக்கப்படும் விஷயத்தைத் தீர்த்து வைக்க மனிதர்களின் தீர்ப்பைப் பெறுவது முயல் ஒன்றின் விலை என்ன என்று தீர்மானிப்பதைவிட கீழ்த்தரமானதா?

கவாரிஜ்கள் : இல்லை, இல்லை.

இப்னு அப்பாஸ் (ரழி) : மனிதர்களின் தீர்ப்பைப் பெற அலீ (ரழி) முயன்றது பிழை என்கின்ற கருத்திலிருந்து மீண்டு விட்டீர்களா?

கவாரிஜ்கள்: ஆம், நிச்சயமாக!

இப்னு அப்பாஸ் (ரழி) : அலீ (ரழி) போரிட்டார். ஆனால் கைதியாகப் பிடிக்க மறுத்துவிட்டார் என்று கூறினீர்கள். உங்களில் யார் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் தனது பங்காக வருவதையும், ஏனைய அடிமைப் பெண்கள் போன்று அவர்களுடன் உறவு கொள்வது ஆகுமானது என்றும் கூறப்போகிறீர்கள்? இதற்கு நீங்கள், "ஆம்" எனச் சொன்னீர்கள் என்றால் நீங்கள் நிராகரிப்பாளர் களாவீர்கள். இதற்கு மாற்றமாக, ஆயிஷா (ரழி) உங்களுக்கு ஹலால் அவர்கள் எங்களது தாயல்ல என்றால் அப்போதும் நீங்கள் நிராகரிப்பாளர்களாகி விடுவீர்கள். ஏனெனில், அல்லாஹுதஆலா நபி (ஸல்) மற்றும் அவர்களது மனைவியர் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றான்.

"இந்த நபி முஃமின்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட மேலானவராக இருக்கின்றார். இன்னும், அவருடைய மனைவியர் அவர்களுடைய தாய்மார்களாக இருக்கின்றனர்." (33:06)

எனவே, உங்களுக்குப் பொருத்தமெனப்படும் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, "இந்தக் குற்றச்சாட்டில் இருந்து நீங்கள் நீங்கிவிட்டீர்களா?" எனக் கேட்டார்கள்.

கவாரிஜ்கள்: நிச்சயமாக!

இப்னு அப்பாஸ் (ரழி) : முஃமின்களின் தலைவர் என்ற பெயரை அலீயே அழித்து விட்டார் என்று குற்றம் சாட்டினீர்கள். நபி (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது இது குறைஷிகளுக்கும் அல்லாஹ்வின் தூதருக்கும் இடையில் நடந்த ஒப்பந்தம் என எழுதப்பட்ட போது குறைஷிகள், உங்களை நாங்கள் இறைத் தூதராக ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி ஏற்றுக்கொண்டிருந்தால் உங்களுடன் சண்டையிட்டிருக்கவும் மாட்டோம். நீங்கள் கஃபாவுக்கு வருவதைத் தடுத்திருக்கவும் மாட்டோம். எனவே, அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது என்றே

எழுதுங்கள் என்று கூறினார்கள். இதை நபி (ﷺ) அவர்கள் ஏற்று ரஸூலுல்லாஹ் என்பதை அழித்துவிட்டு அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மதுக்கும் குறைஷிகளுக்கும் இடையில் நடந்த ஒப்பந்தம் என்றே எழுதினார்கள். "இப்போது கூறுங்கள் இந்தக் குற்றச்சாட்டை விட்டு நீங்கள் விலகிக்கொண்டீர்களா?" எனக் கேட்ட போது அவர்கள், "ஆம்!" என்று கூறினர்.

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களின் அறிவுப்பூர்வமான இந்த அணுகுமுறையால் கவாரிஜ்களில் 4000 பேரைத் தவிர மற்ற அனைவரும் அலீ (ரலி) அவர்களின் அணியில் இணைந்து கொண்டனர். ஒரு பெரும் படை சென்றிருந்தால்கூட இத்தனை பேரை வெற்றி கொண்டிருக்க முடியாது எனும் அளவுக்கு ஆயிரக்கணக்கானோரை மனம் மாற்றியது மட்டுமன்றி அலீ (ரலி) அவர்களுடன் இணைத்தும் விட்டார்கள்! இந்நிகழ்வானது இப்னுஅப்பாஸ் (ரலி) அவர்களது மதிநுட்பத்திற்கு மட்டுமன்றி அறிவின் வலிமைக்கும் நல்ல உதாரணமாக அமைகின்றது. "ஓர் அறிஞரின் பேச்சு ஆயிரம் துப்பாக்கிகளிலிருந்து பாயும் தோட்டாக்களை விடப் பலம் வாய்ந்தது" என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

அறிவுத் தாகம்

நபி ﷺ அவர்கள் மரணிக்கும் வரை அவர்களிடம் அறிவைப்பெற்ற இவர், நபி ﷺ அவர்களின் மறைவிற்கு பின் மூத்த நபித்தோழர்களிடம் அறிவைத் தேட ஆரம்பித்தார்கள். அது குறித்து அவரே இப்படிக் கூறுகின்றார்:

"நபித்தோழர்கள் எவரிடமாவது ஒரு ஹதீஸ் இருப்பதாக நான் கேள்விப்பட்டால் அவருடைய வீட்டிற்கு (கைலூலா) முற்பகல் வேளையில் சென்று வீட்டு வாசலில் அமர்ந்து கொள்வேன். காற்று என் மேனியில் தேவையான அளவு மண்ணை வாரி இறைக்கும். நான் உள்ளே சென்று அனுமதி கேட்டால் மறுக்கப்பட மாட்டாது என்பது எனக்குத் தெரியும். எனினும், என் உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதற்காக இப்படிச் செய்து வந்தேன். வீட்டை விட்டு வெளியேறும் போது நபித்தோழர் என்னைக் கண்டதும், "நபியவர்களின் பெரிய தந்தையின் மகனே! எதற்காக வந்தீர்கள்? தகவல் சொல்லியிருந்தால் நானே உங்களைத் தேடி வந்திருப்பேனே!" என்பார்.

நானோ அவரைப் பார்த்து 'இல்லை இல்லை. நான்தான் வர வேண்டும். கல்வி கொடுக்கப்படும். ஆனால், யாரையும் அது தேடிச்

செல்லாது’ எனக் கூறிவிட்டு, பின்னர் ஹதீஸ் பற்றிக் கேட்பேன். இவ்வாறு அறிவைத் தேடும் விஷயத்தில் மிகப் பணிவுடனும் பண்புடனும் பக்குவத்துடனும் ஈடுபட்டார்கள். இவர்கள் இவ்வாறு பணிந்து சென்றாலும் அன்றைய அறிஞர்கள் மத்தியில் மிகவும் மதிக்கப்படத்தக்கவராக இருந்தார்.

ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்கள் மாபெரும் அறிஞராகத் திகழ்ந்தவராவார். கிராஅத், வாரிசுரிமை, மார்க்கச் சட்டம் அனைத்திலும் ஆழம் கண்டவர். ஒருமுறை அவரிடம் மார்க்க விளக்கம் பெறச் சென்ற இப்னு அப்பாஸ் (ரலி) அவரது குதிரையின் கயிற்றைப் பிடித்துக்கொண்டு எஜமான் முன்னிலையில் அடிமை நிற்பது போல் நின்றார்கள். இதைக் கண்ட ஸைத் (ரலி) ‘நபியின் பெரிய தந்தையின் மகனே கயிற்றை விடுங்கள்’ என்று கூற, இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், ‘இல்லை! இல்லை! இவ்வாறுதான் அறிஞர்களைக் கண்ணியப்படுத்துமாறு நாம் ஏவப்பட்டுள்ளோம்’ என்று கூறினார்கள்.

உடனே ஸைத் (ரலி) அவர்கள், ‘உங்கள் கையைக் காட்டுங்கள்’ என்று கூறினார்கள். இப்னு அப்பாஸ் (ரலி) கையைக் காட்டியதும் கையை முத்தமிட்டு விட்டு, ‘இவ்வாறுதான் நபியின் குடும்பத்தைக் கண்ணியப்படுத்துமாறு நாம் ஏவப்பட்டுள்ளோம்’ என்று கூறினார்கள்.

இவ்வாறு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மார்க்க அறிவைத் தேடிக் கற்றதால் சிறு வயதிலேயே மிகப்பெரும் உயர்வை அடைந்தார்கள். உமர் (ரலி) அவர்கள் மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினராக இவரையும் நியமித்தார்கள். இது குறித்து மூத்த நபித்தோழர்கள் வினவிய போது இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் அறிவு ஆற்றலைக் காரணமாகக் கூறி தனது நியமனத்தின் நியாயத்தைத் தெளிவுபடுத்தினார்கள்.

ஆசிரியராக

இப்னு அப்பாஸ் (ரலி) கற்பதில் மட்டுமன்றி கற்பிப்பதிலும் ஆர்வம் காட்டினார். இதனால் அவரது வீட்டை எப்போதும் மக்கள் முற்றுகையிட்டிருப்பார்கள் அவரது வீடு பல்கலைக்கழகம் போலக் காட்சியளிக்கும். கூடியிருப்பவர்களைத் தரம்பிரித்து அவர்களுக்குத் தேவையானதைக் கற்றுக் கொடுப்பார்கள். ஒரு கூட்டம் வந்து வெளியேற மறு கூட்டம் உள் நுழையும்.

இவ்வாறு, அல்குர்ஆன், அதன் எழுத்துகள், ஓதல் முறை, அல்குர்ஆன் விளக்கவுரை, ஹராம் ஹலால் பற்றிய பிக்ஹ் சட்டங்கள். வாரிசுரிமை அதை ஒத்த சட்டங்கள், அரபுமொழி, இலக்கியம், கவிதை இவ்வாறு அனைத்தும் கற்பிக்கப்பட்டன. வாயில் காப்பாளர்கள் அல்குர்ஆன் வசனங்களுக்கு விளக்கம் தேவையானவர்கள் உள்ளே வரலாம் என்பர். அவர்கள் வந்து தேவையான விளக்கத்தைப் பெற்றபின், ‘உங்கள் சகோதரர்களுக்கு இடத்தை விட்டு விட்டு நீங்கள் சென்று விடுங்கள்’ என்று கூறப்படும். அவர்கள் சென்ற பின் அடுத்த கூட்டம் உள்ளே வரும். இவ்வாறு தொடர்ச்சியாகக் கற்பித்தார்கள்.

இவ்வாறு கற்பித்தபோது மக்கள் வெள்ளம் அலை மோதுவதைக் கண்ட இப்னு அப்பாஸ் (ﷺ) வாரத்தில் ஒரு நாள் என்ற வீதத்தில் பிக்ஹ், போர் வரலாறு, கவிதை, இலக்கியம் என்று கற்பிக்க ஆரம்பித்தார்கள்.

பிரச்சாரம்

தேவை உடையோருக்குக் கற்பிப்பது போன்றே பொதுமக்களுக்கு உரையாற்றவும் செய்தார்கள். இது குறித்து மஸ்ரூக் இப்னு அஜ்தஃ எனும் மூத்த தாபிஈன்களில் ஒருவர் இப்படிக் கூறுகிறார்.

நான் இப்னு அப்பாஸை (ﷺ)க் கண்டால் ஆண்களிலேயே மிக அழகானவர் என்பேன். அவர் பேச ஆரம்பித்தால் மனிதர்களிலேயே மிகத் தெளிவாகப் பேசக் கூடியவர் என்பேன். அவர் செய்திகளையும் தகவல்களையும் கூற ஆரம்பித்தால் மனிதர்களிலேயே மிக அறிவு பெற்றவர் என்பேன் என்று கூறுகிறார்.

நிறைந்த தகவல்களுடன் தெளிவான மொழி நடையில் அவர்கள் பேசுவார்கள்.

வழிபாட்டில் ஈடுபாடு

இப்னு அப்பாஸ்(ﷺ) வணக்க வழிபாடுகளில் மிகுந்த ஆர்வமுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். இரவில் மிக நீண்ட நேரம் நின்று வணங்குவார்கள். அப்துல்லாஹ் இப்னு முலைக்கா (ﷺ) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இப்னு அப்பாஸுடன் மக்காவிலிருந்து மதீனாவுக்குப் பயணித்தேன். பயணத்தின் நடுவே இரவில் எங்கேயாவது தங்க நேர்ந்தால் அன்றைய இரவின் பாதி நேரத்தில் வழிபாட்டில் ஈடுபட ஆரம்பித்து விடுவார். பயணக் களைப்புக்கு மத்தியிலும் அவர் இவ்விதம் செய்து வந்தார் என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு தனது கற்றல், கற்பித்தல் தவிர்ந்த ஏனைய நேரங்களை வழிபாட்டில் கழித்தார்கள். இவர் அறிவால் பெற்ற உயர்வை ஒரு நிகழ்ச்சி மூலம் தெளிவாக உணரலாம்.

ஒருமுறை கலீபா முஆவியா அவர்களும் இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்களும் ஹஜ்ஜுக்குச் சென்றனர். இப்னு அப்பாஸ் (رضي الله عنه) எந்த பதவியிலும் இல்லாதவர். முஆவியா (رضي الله عنه) அவர்கள் அப்போது கலீபா ஆவார்கள். கலீபாவுடன் அவருடைய அதிகாரிகளும் பரிவட்டமும் சென்றது. இப்னு அப்பாஸுடன் கலீபாவின் கூட்டத்தைவிட கூடுதலாக மாணவர் கூட்டமொன்று சென்றது. இந்நிகழ்ச்சி ஆட்சித் தலைவரைவிட அறிவால் மக்கள் செல்வாக்குப் பெற்ற ஒருவராக இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் திகழ்ந்துள்ளார்கள் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. எனவே. நாமும் கல்வியைக் கற்று அதன் மூலம் உயர்வடைய முயல்வோமாக.

"அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? என்று கேட்பீராக அறிவுடையோரே நல்லறிவு பெறுவர்" (39:09)

மரணம்

அறிவுலக மேதை இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் சுமார் 71 வருடங்கள் வாழ்ந்தார்கள். அவரது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அவர் தாயிபில் வசித்து வந்தார். அங்கு அவரது பெயரில் ஒரு மஸ்ஜித் உள்ளது. அங்கே தான் அவர் மரணித்தார். அவர்கள் மரணித்த போது அலீ (رضي الله عنه) அவர்களது மகனார் முஹம்மத் இப்னு ஹனபிய்யா அவர்கள் தொழுகை நடத்தினார். இப்னு அப்பாஸ் (رضي الله عنه) மறைந்து விட்டாலும் அவர் விட்டுச்சென்ற அறிவுச் செல்வம் அழியாமல் நீடூழி வாழும் என்பது மட்டும் திண்ணம்.

بسم الله الرحمن الرحيم

நபியின் முஅத்தின்
அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (رضي الله عنه)

அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் ஆரம்பகால இஸ்லாமிய போராளிகளில் ஒருவர். இரண்டு கண்களும் பார்வையற்ற இவருடன் ஒரு முறை இங்கிதமாக நடந்து கொள்ளவில்லை என்பதற்காக அல்லாஹ் நபி (ﷺ) அவர்களைக் கண்டித்து ஒரு தனி அத்தியாயத்தையே அருளினான். இது இவரின் உயர்வுக்கும் மதிப்புக்கும் ஒரு முத்தாய்ப்பாகும். இவர் அண்ணலாரின் முஅத்தினும் அவரால் பெரிதும் கௌரவிக்கப்பட்டவருமாவார்.

அறிமுகம்

இவர் குறைஷிக் குலத்தைச் சேர்ந்த கைஸ் இப்னு ஸானித் என்பவரின் மகனாவார். ஆரம்பகால இஸ்லாமிய எழுச்சியில் பங்கு கொண்ட ஆதிகா பின்து அப்துல்லாஹ் (رضي الله عنها) அவர்கள் இவரின் தாயாராவார். குறைஷிக் குலம் என்ற முறையில் இவருக்கும் நபி (ﷺ) அவர்களுக்குமிடையே குடும்ப ரீதியான உறவு முறை காணப்பட்டது. அத்துடன் இவர் கதீஜா (رضي الله عنها) அவர்களுக்கு மைத்துனருமாவார். இவ்வகையில் இவருக்கும் நபி (ﷺ) அவர்களுக்குமிடையே நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது.

இஸ்லாத்தை ஏற்றல்

நபி (ﷺ) அவர்களின் ஆரம்பகால அழைப்பை ஏற்று இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்தவர்களில் இவரும் ஒருவர். இவரின் இரண்டு கண்களிலும் ஒளி இருக்கவில்லையே தவிர நேர்வழியை இனங்கண்டு ஏற்கும் அளவிற்கு அவரின் இதயம் முழுவதும் ஒளி இருந்தது.

ஆரம்பகால முஸ்லிம்கள் மக்காவில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வந்தனர் என்பது தெரிந்ததே. அதிலும் இவர் இரண்டு கண்களும் தெரியாத அந்தகர் என்றால் கேட்கவும் வேண்டுமா? சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறைவதுண்டோ? இவரது இதயத்தில் இறைநம்பிக்கை உறுதியாக இருக்கும்போது உடல் பலவீனமோ, உறுப்புகளின் ஊனமோ உண்மையில் உறுதியாக நிலைத்திருப்பதற்குத் தடையாக இருக்கவில்லை.

இவர் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட காட்டுமிராண்டித் தனமெல்லாம் இவரை இஸ்லாமியக் கயிற்றை இறுகப் பற்றிப்பிடிக்கச்

செய்தது. நபி (ﷺ) அவர்களுடன் மென்மேலும் தொடர்பை வலுப்படுத்தியது. அறிவுக்கண் அடைபட்டு விடக்கூடாது என்பதில் இவர் கவனமாக இருந்தார். சவால்களைச் சமாளித்துக் கொண்டு, அண்ணலாரைச் சந்தித்து சந்தேகங்களுக்குத் தெளிவுபெற்றுச் சத்திய போதனையை நடைமுறைப்படுத்துவதிலேயே அக்கறையாக இருந்தார்.

புனிதரைப் புறக்கணித்து புல்லுருவிகளுக்குப் பூச்சூடுவதா?

பலவீனமான முஸ்லிம்கள் நாளுக்கு நாள் நசுக்கப்பட்டு வந்தனர். அவர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதற்கு குறைஷிக் காபிர்களின் தலைவர்கள்தாம் காரணமாக இருந்தனர். எனவே, அவர்களுடன் பேசி அவர்களைத் திருத்திவிட்டால் வன்முறைகளை நிறுத்திவிடலாமென நபி (ﷺ) அவர்கள் கணக்குப் போட்டார்கள்.

எனவே, உத்பா, அவனது சகோதரன் ஷைபா, அபூஜஹ்ல், உமையதிப்னு கலப்ஃ, வலீத் போன்ற குறைஷிகளின் பெரும் புள்ளிகளை அழைத்து அவர்களுக்குப் போதனைகள் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே அந்தகர் அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (رضي الله عنه) வருகின்றார். நபி (ﷺ) அவர்களின் சப்தம் கேட்டது. சூழ என்ன நடக்கின்றது என்பதை அறிய அவருக்குக் கண் இல்லை. மார்க்கத்தை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்ட அவர்கள், ‘அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் உங்களுக்கு அருளியதை எனக்கும் கற்றுத் தாருங்கள்’ என்று கேட்டுக் கொண்டார்.

இந்தச் சூழ்நிலையில் இவர் தலையிடுவதை விரும்பாத நபி (ﷺ) அவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்; கடுகடுத்தார்கள். இதனை அல்லாஹ் அங்கீகரிக்கவில்லை. தனது படைப்புக்களிலேயே சிறந்தவரான நபி (ﷺ) அவர்களை பார்வையற்றவருக்காக அல்லாஹ் கண்டித்து விட்டான்.

“அவர் கடுகடுத்தார்; மேலும் (முகத்தைத்) திருப்பிக் கொண்டார். அவரிடம் அந்த அந்தகர் வந்தபோது, (நபியே! உம்மிடம் வந்த) அவர் தூய்மையாகி விடக்கூடும் என்பதை நீர் அறிவீரா? அல்லது அவர் (உம் உபதேசத்தை) நினைவுபடுத்திக் கொள்வதன் மூலம், (உம்முடைய) உபதேசம் அவருக்குப் பலனளித்திருக்கலாம். (உம் உபதேசத்தின்) தேவையை எவன் அலட்சியம் செய்கிறானோ - நீர் அவன்பாலே முன்னோக்குகின்றீர். ஆயினும் (இஸ்லாத்தை ஏற்காமல்) அவன் தூய்மையடையாமல்

போனாலும், உம்மீது (அதனால் குற்றம்) இல்லை. ஆனால், எவர் உம்மிடம் விரைந்து வந்தாரோ, அல்லாஹ்வுக்கு அஞ்சியவராக - அவரைவிட்டுப் பராமுகமாய் இருக்கின்றீர். (உண்மை) அவ்வாறல்ல! ஏனெனில், (இத்திருக்குர்ஆன் நினைவூட்டும்) நல்லுபதேசமாகும். எனவே, எவர் விரும்புகிறாரோ அவர் அதனை நினைவு கொள்வர். (அது) கண்ணியப்படுத்தப்பட்ட ஏடுகளில் இருக்கிறது. உயர்வாக்கப்பட்டது; பரிசுத்தமாக்கப்பட்டது. (வானவர்களான) எழுதுபவர்களின் கைகளால் எழுதப்பட்டது. (லவ்ஹுல் மஹ்பூளிலிருந்து எழுதிய அவ்வானவர்கள்) கண்ணியமானவர்கள்; நல்லோர்கள்" (அல்குர்ஆன் - 80:01-16)

என்ற மேற்படி வசனங்கள் அருளப்பட்டன. இதன் மூலம் அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (ﷺ) அவர்களை உலகம் அழியும் வரை புகழப்படக்கூடிய ஒரு நிலைக்கு அல்லாஹ் உருவாக்கிவிட்டான். அவர் இறையச்சமிக்கவர்; நன்மையில் அதிகம் நாட்டம்கொண்டவர்; போதனைகள் மூலம் பயன்பெறக்கூடியவர் போன்ற நற்சாட்சிப் பத்திரத்தையும் வழங்கிவிட்டான்.

முதல் முஹாஜிர்

இறைநிராகரிப்பாளர்களின் நியாயமற்ற நடவடிக்கைகளும், நிந்தனைகளும் நீடித்தன. அப்போது முஸ்லிம்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கான அல்லாஹ்வின் கட்டளையும் வந்தது. நபி (ﷺ) அவர்கள் முஸ்அப் இப்னு உமைர் (ﷺ) அவர்களையும் இவரையும் அனுப்பி வைத்தார்கள். அவர்களிருவரும் அங்கு இஸ்லாமியப் பிரச்சார நடவடிக்கைகளை முடுக்கிவிட்டனர். ஏனைய முஸ்லிம்களின் வருகைக்கு முன்னேற்பாடுகளையும் செய்தனர்.

எங்களிடம் முதலில் வந்தவர்கள் முஸ்அப் இப்னு உமைரும், இப்னு உம்மி மக்தூமியுமாவார்கள். (ஹாகிம்: 3/6669) அவ்விருவரும் மக்களுக்கு அல்குர்ஆனை ஓதிக்காட்டினர். (தபகாத் இப்னு ஸஅத் 4/206)

இந்த வகையில் மதீனாவை நோக்கிய ஹிஜ்ரத் - தியாகப் பயணத்தில் முதலாவது சென்றவர் என்ற சிறப்பையும் இவர் பெறுகின்றார்.

கண் இழந்தும் கண் விழிக்கச் செய்தவர்

ஏகத்துவக் கலிமாவை அன்றாடம் உரத்துக்கூறும் முஅத்தினாக உம்மி மக்தூம் பணியாற்றினார். ரமழான் காலங்களில் ஸஹருக்கு ஓர் அதானும் பஜ்ருக்கு ஓர் அதானுமாக இரண்டு அதான்கள் கூறப்பட்டன.

அதாவது ஸஹர் செய்வதற்கு அறிவிப்பு செய்து மக்களை எழுப்புவதற்கான ஏற்பாடு நபி (ﷺ) அவர்கள் காலத்தில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. அதாவது பிலால் (رضي الله عنه) அவர்கள் ஸஹ்ர் செய்வதற்காக மக்களை எழுப்ப ஒரு அதான் சொல்வார்கள். பிறகு சுப்ஹு தொழுகைக்காக இப்னு உம்மி மக்தூம் (رضي الله عنه) அவர்கள் ஒரு அதான் சொல்வார்கள்.

பிலால் (رضي الله عنه) அவர்கள், (ஃபஜ்ரு நேரத்திற்கு முன்) இரவிலேயே பாங்கு சொல்வார்கள். அப்போது நபி (ﷺ) அவர்கள். "இப்னு உம்மி மக்தூம் பாங்கு சொல்லும் வரை உண்ணுங்கள், பருகுங்கள்! ஏனெனில் அவர் தாம் ஃபஜ்ரு (வைகறை) நேரம் வந்ததும் பாங்கு சொல்கிறார்!" என்று குறிப்பிட்டார்கள்.

அவர் அதான் சொல்லிவிட்டு இறங்குவார். இவர் அதான் சொல்வதற்கு ஏறுவார் என்பதைத் தவிர இரண்டு பாங்குக்குமிடையே பெரிய இடைவெளி இருக்காது!" என்று காஸிம் (ரஹ்) கூறுகிறார்கள். அறிவிப்பாளர் ஆயிஷா, இப்னு உமர் (رضي الله عنه), நூல் : புகாரி-1918

முஅத்தினாகப் பணியாற்றியதன் மூலம் கண் இழந்தும் பிறரைக் கண் விழிக்கச் செய்பவராகவும், தாயியாகத் திகழ்ந்ததன் மூலம் பிறரின் உள்ளங்களைத் திறப்பவராகவும் திகழ்ந்துள்ளார்கள் என்றால் மிகையாகாது.

அல்லாஹ் அழைப்புக்குப் பதிலளித்தான் :

நபி (ﷺ)அவர்கள் போர்க்களம் போகும் போது தமது பிரதிநிதியாக மதீனாவுக்குப் பொறுப்பாக பலமுறை இவரை நியமித்துச் சென்றுள்ளார்கள். இவருக்கு ஜிஹாத் செய்ய வேண்டும் என்ற பேரார்வம் இருந்தாலும் கண்பார்வை இல்லாத தான் யாரைத் தாக்குவது, யாரிடமிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வது என்பதை அறிய முடியாததால் யுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்து வந்தார்.

நபி (ﷺ) அவர்களுக்கு 'ஜிஹாதுக்குச் செல்லாமல் வீட்டில் இருப்பவர்களும், ஜிஹாதுக்குச் செல்பவர்களும் சமமாக மாட்டார்கள்' என்ற கருத்துடைய வசனம் அருளப்பட்டது. நபி (ﷺ) அவர்கள் வஹியை எழுதுவோரில் ஒருவரான ஸைத் இப்னு ஸாபித் (رضي الله عنه) அவர்களிடம் அதை எழுதச் சொன்னார்கள்.

அப்போது அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் (رضي الله عنه), 'அல்லாஹ்வின் தூதரே! ஜிஹாது செய்ய முடியும் என்றால் நானும்

ஜிஹாத் செய்வேன்; என்னைப் போன்ற சங்கடமுள்ளவர்களின் நிலை என்ன?' என்று கேட்டார்கள். ஸைத் இப்னு ஸாபித் (ﷺ) அவர்கள் இதன் பின்னர் நடந்ததைக் கூறுகின்றார்.

'உடனே நபி (ﷺ) அவர்களிடம் வஹி வருவதற்கான அறிகுறி தென்பட்டது. நபி (ﷺ) அவர்களின் தொடை என் தொடை மீது இருந்தது. நான் கடினமான பாரத்தை உணர்ந்தேன். அவர்கள் தெளிவுபெற்றார்கள். அதன்பின் "விசுவாசிகளில் தங்கடம் உள்ளவர்களைத் தவிர" என்ற வார்த்தையை பதிந்துகொள்ளச் சொன்னார்கள். (பார்க்க: பத்ஹுல் பாரி 8/107)

"ஈமான் கொண்டவர்களில் (நோய், பலவீனம், முதுமை, பார்வையின்மை போன்ற) எந்தக் காரணமுமின்றி (வீட்டில்) உட்கார்ந்திருப்பவர்களும், தங்களுடைய சொத்துக்களையும், தங்களுடைய உயிர்களையும் (அர்ப்பணித்தவர்களாக) அல்லாஹ்வின் பாதையில் போர் புரிபவர்களும் சமமாக மாட்டார்கள்; தங்களுடைய பொருட்களையும், தங்களுடைய உயிர்களையும் (அர்ப்பணித்தவர்களாக) அறப்போர் செய்வோரை, உட்கார்ந்திருப்பவர்களை விட மதிப்பில் அல்லாஹ் மேன்மையாக்கி வைத்துள்ளான்; எனினும், ஒவ்வொருவருக்கும் (அவர்களுடைய உறுதிப்பாட்டுக்குத் தக்கபடி) நன்மையை அல்லாஹ் வாக்களித்துள்ளான்; ஆனால், அறப்போர் செய்வோரை, (போருக்குச் செல்லாது) உட்கார்ந்திருப்போரை விட அல்லாஹ் மகத்தான நற்கூலியால் மேன்மையாக்கியுள்ளான்." (அல்குர்ஆன் - 04:95)

என்று குர்ஆன் கூறிற்று. இதன் மூலம் பலவீனம் மற்றும் ஏதேனும் சங்கடங்களால் யுத்தத்திற்குச் செல்ல முடியாமல் போனவர்கள், உள்ளத்தில் யுத்தத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்ற உணர்வுள்ளவர்களாயின் அவர்களும் நன்மையில் சமபங்குள்ளவர்கள் என்ற நிலை ஏற்பட்டது. இது குறித்து நபி (ﷺ) அவர்கள் கூறும்போது,

'மதீனாவில் சிலர் இருக்கின்றனர். நீங்கள் ஒரு மேட்டையோ பள்ளத்தாக்கையோ கடந்தால் அவர்களும் நன்மையைப் பெற்றுக்கொள்வதில் உங்களுடன் பங்காளிகளாக இருப்பார்கள்' என்று கூறினார்கள். இதுகேட்டு ஆச்சரியப்பட்ட நபித்தோழர்கள், 'அவர்கள் மதீனாவில் இருந்து கொண்டே இந்தப் பயனைப் பெறுவார்களா?' எனக் கேட்டனர். 'ஆம், தவிர்க்க முடியாத சங்கடத்தால் அவர்கள் மதீனாவில் தங்கியுள்ளனர். அத்தகைய நிர்ப்பந்தம் அவர்களை அங்கே சிறைப்பிடித்துவிட்டது' என்ற கருத்துப்படக் கூறினார்கள். (பார்க்க: பத்ஹுல் பாரி 7/732)

இங்கே இவரின் வேண்டுதலுக்கு உடனேயே அல்லாஹ் பதிலளித்திருப்பதையும், அது கோடான கோடி பலவீனப்பட்டவர் களுக்குப் பயனளித்துக் கொண்டிருப்பதையும் காணலாம்.

கண் இழந்தவர் களத்தில் :

நன்மை கிடைக்கும் என்ற உத்தரவாதம் கிடைக்கப்பெற்றதன் பின்னரும் களத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்பதில் இவருக்கிருந்த காதல் கொஞ்சமும் குறையவில்லை. எனவே, போர்க்களங்களுக்கு நபித்தோழர்கள் செல்லும் போது என்னையும் அழைத்துச் செல்லுங்கள். இரண்டு படைகளுக்கு மத்தியில் என்னை நிறுத்தி முஸ்லிம்களின் கொடியை என் கையில் தாருங்கள். நான் கண்பார்வை இழந்தவன் என்பதால் ஆபத்தைக் கண்டு அஞ்சவோ, புறமுதுகு காட்டி ஓடவோ என்னால் முடியாது. உயிர் இருக்கும் வரை கொடியைக் காப்பேன் என்று கூறுவார்கள். இந்த வேண்டுதல் உமர் (ரலி) அவர்களது காலத்தில் நிறைவேற்றப்பட்டது.

காதிஸிய்யாப் போர் :

ஹிஜ்ரி 14 இல் காதிஸிய்யாப் போருக்காக கடுமையான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. அப்போது போர் புரியத் தயாரானவர்கள் மத்தியில் கண் இழந்த இவரும் இருந்தார். காதிஸிய்யாப் போர் மூண்டது. எதிரிகள் முஸ்லிம்களை விடப் பன்மடங்கு படைப்பலத்தையும் ஆட்பலத்தையும் பெற்றிருந்தனர். எதிரிகளின் யானைப் படை முஸ்லிம்களை துவம்சம் செய்தது. இஸ்லாமிய வரலாறு காணாத கடுமையான அந்தப் போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. முஸ்லிம்களுக்கு ஆதரவுப்படை வந்து சேரும் வரை அவர்களுக்குச் சோதனைக் காலமாக இருந்தது.

ருஸ்தும் கொல்லப்பட்டு எதிரிகளின் படை சிதறடிக்கப்பட்டது:

இந்தப் போரில் முஸ்லிம்கள் மகத்தான வெற்றியை ஈட்டினர். அன்றைய வல்லரசாகவும் அன்றைய பல கலாச்சாரங்களின் புகலிடமாகவும் இருந்த பாரசீகம்; முஸ்லிம்களின் பாதத்தின் கீழ் வந்தது. இஸ்லாமியப் பேரரசு விரிவானது. இந்தப் போரில் பல்லாயிரம் முஸ்லிம்களின் உயிர்களும் உறுப்புகளும் தியாகம் செய்யப்பட்டன.

உயிர் பிரிந்தும் உறுதி தளரா கொள்கைக் கோமான் :

இந்தப் போரில் முஸ்லிம்களின் கொடி இப்னு உம்மி மக்தூம் (ரலி) அவர்கள் கையில் இருந்தது. சிலை வணக்கப் பூமியில் ஏகத்துவத்தின் கொடியை ஏந்தும் பாக்கியத்தை இவர் பெற்றார்.

இந்தப் போரில் வீரர் தியாகிகளின் உடல்களை முஸ்லிம் வீரர்கள் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர். அங்கே உடலெங்கும் வெட்டுக் காயங்களுடன் இரத்தத்தில் துவைந்துபோன நிலையில் கண்பார்வை இழந்த இப்னு உம்மி மக்தூம் காணப்பட்டார். ஆனால், அவரது இரண்டு கரங்களும் முஸ்லிம்களின் கொடியை நெஞ்சுடன் சேர்த்து இறுக்க அணைத்திருந்தன. அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக!

وَجَعَلَ بَيْنَكُم مَّوَدَّةً وَرَحْمَةً

நிதானத்தின் நிழல்
ஸைதுல் கைர் (ؓ)

அரபு நாடு மட்டுமல்ல அகில உலகமும் அறியாமை இருளில் மூழ்கி இருந்த போதும் சில நல்ல மனிதர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மக்காவைப் பொறுத்தவரை அபூபக்கர், உஸ்மான், அபூதாலிப் போன்ற சிலரை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அவ்வாறே வாரி வழங்கும் வள்ளல் தன்மையும், வாக்குறுதி மீறாத குணத்தையும், நல்ல பல பண்பாடுகளையும் கொண்ட சிலர் இருந்தனர். அவர்களுக்கென தனியானதொரு சமூக மதிப்புக் காணப்பட்டது. அந்த மதிப்பு பேணப்படுவதை நபியவர்கள் விரும்பினார்கள். அவர்களில் ஒருவர்தான் ஸைதுல் கைல் இப்னு முஹல்ஹில் எனப்படும் நபராவார்.

இவர் மிகுந்த இரக்கச் சிந்தையுடையவர். இல்லையெனக் கூறாமல் வாரி வழங்கும் வள்ளல். இதனால் இவரின் பெயர் அரேபியாவில் பிரபலம் அடைந்திருந்தது. இவர் இஸ்லாத்தில் இணைந்தபோது நபி (ﷺ) அவர்கள் இவரிடம் காணப்பட்ட நன்மைகள் காரணமாக ஸைதுல் கைல் என்பதை 'ஸைதுல் கைர்' என மாற்றினார்கள். இதோ அவரது இஸ்லாத்திற்கு முந்தைய, பிந்தைய வாழ்வின் ஒரு பகுதி.

ஒரு காலத்தில் அரேபியாவில் கடுமையான வறட்சி ஏற்பட்டது. பனூ ஆஷிக் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் தனது குடும்பத்தை இராக்கிலுள்ள அல்ஹீரா என்ற இடத்திற்கு அழைத்துச் சென்று அங்கே விட்டுவிட்டு நான் வரும்வரை காத்திருங்கள் என்று கூறினார். ஆனால், தனக்குள்ளே இவர்களுக்காக செல்வத்தைத் திரட்டாது நான் திரும்புவதில்லை என்று சத்தியம் செய்துகொண்டார்.

பயணத்திற்குரிய ஏற்பாட்டைச் செய்துகொண்டு பயணிக்கலானார். அவர் இராக்கின் நஜ்புக்கும் கூபாவுக்குமிடைப்பட்ட ஹிபா என்ற இடத்தை இரவில் அடைந்தபோது ஒட்டகங்கள் கட்டப்பட்டுள்ள கூடாரத்தைக் கண்டார். இதுதான் எனது முதலாவது கனீமத் என்று எண்ணி அதனை அவிழ்த்தபோது, 'ஒட்டகத்தை விட்டுவிட்டு உயிரைக் காத்துக்கொண்டு ஓட்டம் பிடி' என்று எச்சரிக்கை கேட்டுத் தப்பிச் சென்றார்.

பின்னர் சில நாட்களாக பொருள் தேடி அலைந்தவரின்

பார்வைக்கு ஒட்டகம் கட்டப்பட்ட இடம் ஒன்று தென்பட்டது. அதன் அருகே கூடாரமும் இருந்தது. அது, அதில் தங்கியிருப்போரின் செல்வச்செழிப்புக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தது. அவர் தனக்குள்ளேயே, இங்கே தாராளமாக ஒட்டகங்கள் உள்ளன; இந்தக் கூடாரத்திலும் ஆட்கள் இருப்பார்கள்; மிகக் கவனமாக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறிக்கொண்டார்.

சூரியன் மறையும் நேரத்தில் கூடாரத்துக்குள் நுழைந்து அங்கே இருந்த வயோதிபருக்குப் பின்னால் மறைந்துகொண்டார். சூரியன் மறைந்து சிறிது நேரத்தின் பின் ஒரு குதிரை வீரர் வந்தார். அவரது ஆஜானுபாகுவான தோற்றம், உயரம், உடல் அமைப்பு ஆகியவை கவர்ச்சியாக இருந்தன. அவருக்கு வலதும் இடதுமாக இரண்டு அடிமைகள் இருந்தனர். அவருக்குப் பின்னால் சுமார் 100 ஒட்டகங்கள் இருந்தன. அவை ஒட்டகம் தங்க வைக்கப்படும் இடத்துக்கு ஓட்டிச் செல்லப்பட்டன.

அவர் தனது அடிமையைப் பார்த்து, 'பெரியவருக்குப் பால் கறந்து கொடு' என்று கூறினார். பால் கறந்து கொடுத்தபோது பெரியவர் கொஞ்சம் குடித்துவிட்டு வைத்தார். பசி தாங்க முடியாமல் நான் அதிலுள்ள மீதியை எடுத்துக் குடித்துவிட்டேன். அடிமை வந்து பாத்திரத்தைப் பார்த்து விட்டு, 'எஜமானே! பெரியவர் பால் முழுவதையும் குடித்துவிட்டார்' என்று கூறினான். வீரன், 'மீண்டும் கறந்து வையுங்கள்' என்று கூறினான். மீண்டும் கறந்து வைத்தபோது நான் அதில் பாதியைக் குடித்துவிட்டு வைத்தேன். அவர்களுக்குச் சந்தேகம் வரும் என்பதால்தான் பாதியை வைத்தேன். பின்னர் அவர்கள் ஓர் ஆட்டை அறுத்துச் சுட்டுச் சாப்பிட்டனர். அதன்பின் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கினர்.

நான் அவர்களது ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு வேகமாக ஓடினேன். என்னை யாரும் பின்தொடர்கிறார்களா என்று அடிக்கடி பார்த்துக்கொண்டேன். ஒருமுறை பார்த்தபோது தூரத்தில் மிகப் பெரிய கழுகு ஒன்றின் நிழல் தெரிவதைப் போன்றதொரு காட்சி தென்பட்டது. ஆம்! அது நேற்று இரவு பார்த்த அதே குதிரை வீரன் மின்னல் வேகத்தில் என்னை நெருங்கிக் கொண்டிருந்தான். நான் ஒட்டகத்தைக் கட்டிவிட்டு அம்பை எடுத்து வில்லில் பூட்டி தாக்குதலுக்குத் தயாரானேன்.

அவன் வந்து, 'ஒட்டகங்களைத் தந்துவிடு' என்று கேட்டான்.

நான், 'முடியாது; எனது பெண்களைப் பட்டினியில் விட்டுவிட்டு வந்துள்ளேன்; பொருளோடு போவது அல்லது செத்து மடிவது என்று சத்தியம் செய்துள்ளேன்' என்று கூறினேன்.

அதற்கு அவன், 'நீ சாகப்போகிறாய்; ஒட்டகங்களைத் தந்துவிடு' என்று கூறினான்.

நான், 'முடியாது!' எனக் கூறி போராட்டத்திற்குத் தயாரானேன்.

எனது வில்லில் மூன்று முடிச்சுக்கள் இருந்தன. அவன், 'நீ எந்த முடிச்சில் அம்பை வைத்து எறியப் போகிறாய்?' என்று கேட்டான். 'நான் நடு முடிச்சைக் காட்டினேன். உடனே அவன் அம்பை எறிந்தான். நடு முடிச்சில் கையால் எடுத்து வைத்தது போல் அது வந்து நின்றது. தொடர்ச்சியாக மூன்று முடிச்சுகளுக்கும் அம்பை எறிந்து அவனுடன் நான் போராட முடியாது என்பதை நிரூபித்தான். அவனது திறமையைக் கண்ட நான் ஆயுதங்களைப் போட்டுவிட்டுச் சரணடைந்தேன்.

அவன் அருகே வந்து எனது வாள், அம்புகளை எடுத்துவிட்டு, 'எனக்குப் பின்னால் அமர்ந்துகொள்' என்றான். நான் அமர்ந்த போது,

'நான் உன்னை என்ன செய்யப் போகின்றேன் என்று நினைக்கிறாய்?' என்று கேட்டான். தீங்கு நடக்கப்போவதை உணர்வதாகக் கூறினேன்.

அதற்கவன், 'எனது தந்தை முதல்ஹிலுடன் நீ ஒன்றாகச் சேர்ந்து உண்டு குடித்ததன் பின்னரும் நான் உனக்குத் தீங்கு செய்வேனா?' என்று கேட்டான். உடனே, 'அப்படியானால் நீர்தாம் 'ஸைதுல் கைல்' என்ற கொடை வள்ளலா?' என்று கேட்டேன். அவர், 'ஆம்!' என்று கூறியதுடன், 'இந்த ஒட்டகங்கள் என் சகோதரியுடையவை. என்னுடையவை என்றால் இப்போதே தந்திருப்பேன்; எங்களுடன் இரு; நான் உனக்குரிய ஏற்பாட்டைச் செய்கிறேன்' எனக்கூறி மூன்று நாட்களுக்குப் பின்னர், சுமார் 100 ஒட்டகங்களுடன் சில பணியாட்களையும் கொடுத்து என்னை வழியனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்ச்சி ஸைதுல் கைலின் கருணைத்தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். திருட வந்தவனிடமும் அவர் மிகுந்த இரக்கச் சிந்தையுடன் நடந்துகொண்டார்.

இவர் பற்றி நபி (ﷺ) அவர்களும் கேள்விப்பட்டிருந்தார்கள். இவர் நபியவர்கள் பற்றி கேள்விப்பட்ட போது தனது கோத்திரத்தின் தலைவர்களை அழைத்துக்கொண்டு மதீனா வந்தார். அவருடன் சுர் இப்னு ஸதூஸ், மாலிக் இப்னு ஜுபைர், ஆமிர் இப்னு ஜுவைன்

போன்ற தலைவர்கள் வந்திருந்தனர். மஸ்ஜிதுன் நபவிக்கு அவர்கள் வந்தபோது நபியவர்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அந்த உரை இவரைக் கவர்ந்தது.

அப்போது அவருடன் வந்தவர்களுள் சிலர் இஸ்லாத்தின் பக்கம் சாய, சிலர் தமது குப்ரிலேயே நிலைத்து நின்றனர். 'சுர், இவர் அரபியர்களின் பிடரிகளை ஆழ்வார்; என்னை இவர் ஆழ இடம் கொடுக்க மாட்டேன்' எனக்கூறி சிரியா சென்று கிறிஸ்தவரானார்.

ஸைத், நபியவர்களிடம் வந்து கலிமா கூறினார். அப்போது நபியவர்கள், 'நீங்கள் யார்?' எனக்கேட்ட போது, 'ஸைதுல் கைல்' என்றதும், 'இன்றிலிருந்து நீங்கள் ஸைதுல் கைர்' என்று கூறினார்கள். அதுவே அவரின் பெயராகப் பிரபலமடைந்தது. நபியவர்கள் அவரை அழைத்துக்கொண்டு தனது இல்லம் சென்றார்கள். கூடவே உமர் (ரலி) அவர்களும் முக்கிய ஸஹாபாக்களும் சென்றனர். நபியவர்கள் தனது வீட்டில் சாய்ந்து கொள்வதற்குப் பயன்படுத்தும் தலையணையை அவருக்கு வைத்தார்கள். நபியவர்கள் முன்னிலையில் சாய்ந்து அமர விரும்பாத அவர், அதை நபிக்குக் கொடுத்தார். இவ்வாறு மூன்று முறை நடந்தது. அப்போது நபியவர்கள்,

'நான் அறியாமைக் காலத்தில் மக்களால் புகழப்பட்ட பலரைச் சந்தித்துள்ளேன். உண்மையில் மக்கள் புகழ்வது போன்றே முற்றுமுழுதாக வாழ்பவராக உம்மைக் காண்கின்றேன்'.

'ஸைதே! உம்மிடம் இரண்டு குணங்கள் உள்ளன. அவற்றை அல்லாஹ்வும் ரஸூலும் விரும்புகின்றனர்' என்று கூறினார்கள். அவை எவை எனக் கேட்டபோது, 'நிதானமும் பொறுமையும்' என்று கூறினார்கள். அல்லாஹ்வும் அவனது தூதரும் விரும்பும் குணங்களை என்னிடம் ஏற்படுத்திய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!' என்று அவர் அல்லாஹ்வைப் புகழ்ந்துவிட்டு,

'அல்லாஹ்வின் தூதரே! முன்னூறு குதிரை வீரர்களைத் தாருங்கள். உரோம நகரங்களைத் தாக்குவதற்கு நான் பொறுப்பு' என்று கூறினார்கள்.

இஸ்லாத்தை ஏற்றதும் இஸ்லாமிய மார்க்கத்தின் ஒரு எதிரியை இனங்கண்டு அவர்களுடன் போராடத் துணிந்த அவரது துணிச்சல்மிக்க தூர நோக்கைக் கண்டு வியந்த நபியவர்கள் அவரைப் புகழ்ந்தார்கள்.

ஸைத் (رضي الله عنه) உடன் வந்த மற்றவர்களும் இஸ்லாத்தில் இணைந்தனர். சிறிது நாட்கள் அங்கு தங்கினர். அப்போது மதீனாவில் ஒருவிதக் காய்ச்சல் ஏற்பட்டது. அந்தக் காய்ச்சல் ஸைத் (رضي الله عنه) அவர்களையும் பீடித்தது.

அவர் தனது ஊருக்குச் சென்று, தன் கோத்திரத்தை தன் கையாலேயே இஸ்லாத்தில் இணைக்க வேண்டும் என்று விரும்பினார்.

நபியவர்களிடம் விடைபெற்றுச் சென்றார். போகப் போகக் காய்ச்சல் அதிகரிக்க ஸைதுல் கைர் மரணத்தின் மடியில் வீழ்ந்தார். தனது கோத்திரத்திற்குத் தானே தஃவா செய்ய வேண்டும் என்ற அவரது ஆசை நிறைவேறவில்லை. ஆனால் 'போராட வேண்டும், தஃவா செய்ய வேண்டும்' என்ற அவரது தூய எண்ணத்திற்குக் கூலி கிட்டுமல்லவா?

அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக" அவரிடம் காணப்பட்ட உயர்ந்த குணங்களை எமக்கும் நல்குவானாக!.

வெறியோடு வந்து தீன் நெறியோடு சென்ற
உமைர் இப்னு வஹ்ப் (ரலி)

உயர்ந்த தோற்றம், திடாகத்திரமான உடல், எதிரிகளைப் பார்வையிலேயே பணிய வைக்கும் உடல்கட்டு என்று வீரத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் தான் உமைர் இப்னு வஹ்ப் (ரலி) அவர்கள்.

எதிரியாக

இவரிடம் இருந்த துணிவும் வீரமும் ஆரம்பத்தில் இஸ்லாமிய மார்க்கத்திற்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டது. உமர் (ரலி) அவர்களின் ஆரம்ப வாழ்க்கையைப் போலவே இவரது ஆரம்பமும் இருந்தது. இவரது இஸ்லாமிய எதிர்ப்பு நடவடிக்கைகளால் முஸ்லிம்கள் 'ஷைத்தானு குறைஷின்' குறைஷிகளின் சாத்தான் எனச்சாடினர்.

உளவாளியாக

முஸ்லிம்களையும் இஸ்லாமிய மார்க்கத்தையும் இப்பூவுலகை விட்டு பூண்டோடு ஒழித்துக்கட்ட வேண்டும் எனத் திட்டம் தீட்டி, பத்ர் களம் வந்த எதிரிகளின் முன்னிலையில் இவர் இருந்தார். அங்கு இவரிடம் காணப்பட்ட துணிவு, தூர நோக்கு போன்ற காரணங்களால் முஸ்லிம்களின் நடவடிக்கைகள் குறித்து உளவு பார்ப்பதற்காக இவர்தான் காபிர்களால் அனுப்பப்பட்டார்.

இவர் களம் சென்று முஸ்லிம்களின் எண்ணிக்கை, போர் மூண்டால் வேறு வழியாக அவர்களுக்கு உதவி வருவதற்கான வாய்ப்புகள் உள்ளதா என்பன குறித்தெல்லாம் ஆராய்ந்து பார்த்து, காபிர்களிடம் வந்து,

'அவர்கள் ஏறத்தாழ 300 பேர் இருக்கின்றனர்' என்ற தனது கணிப்பை வெளியிட்டார். அவரது கணிப்புச் சரியாகவே இருந்தது.

அத்தோடு அவர்களுக்கு வேறு உதவிகள் இருக்கின்றனவா என்று கேட்ட போது, 'அவர்களுக்குப் பின்னால் உதவி எதுவுமில்லை. வாளைத் தவிர வேறு பெரிய ஆயுத பலமும் அவர்களிடம் இல்லை. எனினும், அவர்கள் மரணத்தை மனதார விரும்பி வந்திருக்கின்றனர். அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர்களில் ஒருவரை நீங்கள் கொல்வதாக இருந்தால் உங்களில் ஒருவரை இழந்தால்தான் அது சாத்தியப்படும். அவர்கள் 300 பேரையும் கொல்வதாயின் உங்களில் 300 பேர் நிச்சயம் கொல்லப்படுவர். இப்படி ஓர் இழப்பு எங்களுக்கு

ஏற்பட்டால் அதற்குப் பின்னர் மானமிழந்து நாம் வாழ்வதற்கு என்ன இருக்கிறது' என்று கேட்டார்.

இவரிடம் அப்போது ஈமான் இல்லாவிட்டாலும் முஸ்லிம்களின் மன உறுதி குறித்து சரியான கணிப்பைத்தான் செய்திருந்தார். இவரின் இந்தப் பதில் குறைஷிக் காபிர்களின் கூடாரத்தையே ஆட்டம் காணச் செய்தது. பலரும் திரும்பிச் செல்ல திட்டமிட்டனர். அபூஜஹ்ல் இல்லையென்றால் அவர்கள் போர் வேண்டாம் என்று திரும்பியிருப்பார்கள் என்று கூறப்படும் அளவுக்கு இவரது பதில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

வெறிகொண்ட வேங்கை

அனைவரின் எதிர்பார்ப்புக்கும் மாற்றமாகவே பத்ர் களம் குறைஷிகளுக்குப் பெருத்த இழப்பையும் அவமானத்தையும் தேடித்தந்தது. தோல்வியால் அனைவரும் துவண்டு போயினர். அவர்களின் ஆணவத்திற்கு ஏற்ற அவமானம் வந்து சேர்ந்தது. இதேவேளை உறவுகளை இழந்த காபிர்கள் பலரும் பழி தீர்க்க வேண்டும் என்று வெறிபிடித்து அலைந்தனர். அவர்களில் உமைர் இப்னு வஹ்பும், ஸப்வான் இப்னு உமையாவும் முக்கியமானவர்களாவர். உமைரின் மகன் பத்ரில் முஸ்லிம்களிடம் கைதியாகச் சிக்கியிருந்தார். ஸப்வானின் தந்தை உமையா இப்னு ஹலப் கொல்லப்பட்டார்.

கஃபாவில் கொலைத் திட்டம்

பத்ரில் தனது தந்தை உமையா இப்னு ஹலபை இழந்த ஸப்வான், சோகத்தோடு கஃபாவில் இருந்தார். தனது மகனைக் கைதியாக இழந்த உமைர் அவரிடம் வந்தார். இருவரும் ஒன்றாகவே அமர்ந்து பத்ரின் சோகங்களைப் பகிர்ந்து கொண்டனர். கொல்லப்பட்ட தமது உறவினர்களின் சடலங்களைக்கூட எடுக்க முடியாத அளவுக்குத் தமக்கு ஏற்பட்ட தோல்வி குறித்துக் கவலை கொண்டனர். இச்சந்தர்ப்பத்தில் ஸப்வான் வேதனைப் பெருமூச்சுடன், 'எமது பெரும் பெரும் தலைவர்களை இழந்த பின் நாம் வாழ்வதில் எந்தப் பயனுமில்லை' என்றார்.

இதுகேட்ட உமைர், 'உண்மைதான், நான் செலுத்த வேண்டிய கடன்களும் எனக்குப் பின்னர் எனது குடும்பத்தின் நிலை குறித்த அச்சமும் இல்லையென்றால் மதீனாவிற்கு நேரடியாகச் சென்று முஹம்மதைக் கொன்று விடுவேன். என் மகன் அங்கே கைதியாக இருப்பதால் மதீனா செல்லவும் எனக்கு வாய்ப்பிருக்கின்றது' என்று கூறினார்.

இந்த வாக்கைத் தனக்கான வாய்ப்பாக ஸப்வான் பயன்படுத்திக் கொண்டார்.

'உமைர் உனது கடன்களையெல்லாம் அவை எவ்வளவு பெரும் தொகையாக இருப்பினும் நான் அடைக்கின்றேன். என்னிடம் தாராளமாகப் பொருள் வளமுள்ளது. உனது குடும்பத்தை எனது குடும்பமாகவே நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்று கூறினார். ஸப்வானின் இந்த வார்த்தைகள் உமைருக்கு நம்பிக்கையூட்டின. எனவே, 'ஸப்வானே! அப்படியே செய்வோம்; இந்தத் திட்டம் நமக்குள் இரகசியமாகவே இருக்கட்டும்; காரியம் முடியும் வரை எவருக்கும் எதுவும் தெரியாமலேயே இருக்கட்டும்' என்று கூறினார். ஸப்வானும் அதற்குச் சம்மதித்தார்.

வேட்டைக்குத் தயாராகும் வேங்கை

நபிகளாரின் கோட்டையான மதீனாவுக்கு நேரடியாகச் சென்று, அவர்களைக் கொலை செய்ய வீரமும், நெஞ்சுறுதியும் வேண்டும். அது உமைரிடம் இருந்தது. பழிவாங்கும் வெளியுணர்வுடன் வீட்டுக்கு வந்து தனது வாளில் நஞ்சைப் பூசினார். வெட்டி விடலாம்; சிலவேளை முஹம்மத் பிழைத்து விட்டால், கூடாது. அவர் பிழைத்து விடக்கூடாது. எனவே, சிறு கீறல் விழுந்தாலும் அவர் இறந்துவிட வேண்டும் என்பதற்காகவே வாளில் நஞ்சு பூசினார். மதீனாவை நோக்கி வெறிகொண்ட வேங்கையாக வெளியேறினார்.

பாம்பின் கால் பாம்பறியும்

மதீனா பள்ளிக்கு அருகே உமர் (رضي الله عنه) அவர்கள் தோழர்களுடன் அமர்ந்திருந்து பத்ர் களத்தில் முஸ்லிம்கள் காட்டிய வீரம், அல்லாஹ் வழங்கிய உதவி, எதிரிகளின் பின்னடைவு குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது உமைர் தனது குதிரையிலிருந்து இறங்கினார். உமைரைப் போலவே உமரும் ஒரு காலத்தில் தனது வீரத்தை வைத்து இஸ்லாமிய விரோதச் செயலில் ஈடுபட்டவர். அவர் உமைரைப் பற்றி நன்றாகவே அறிந்திருந்தார். எனவே, தனது தோழர்களைப் பார்த்து,

'அல்லாஹ்வின் எதிரி உமைர் தான் இந்த நாய்; இவன் கெட்ட நோக்கத்தில்தான் இங்கு வந்திருப்பான்; மக்காவில் முஸ்லிம்களுக்குத் தொல்லை கொடுத்தவன்; பத்ரில் எம்மை உளவு பார்த்தவன்; நீங்கள் சென்று நபி (ﷺ) அவர்களைச் சூழ இருங்கள்; இந்த அசிங்கம் பிடித்த சதிகாரன் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்' எனக் கூறிவிட்டு,

வேகமாகச் சென்று உமைரைப் பிடித்துக்கொண்டு, நபி (ﷺ) அவர்களிடம் வந்து, ‘அல்லாஹ்வின் தூதரே! இதோ அல்லாஹ்வின் எதிரி உமைர் இப்னு வஹ்ப் வந்துள்ளான்; இவன் வாளுடன் வந்துள்ளான்; நிச்சயமாக இவன் கெட்ட எண்ணத்தில்தான் வந்துள்ளான்’ என்று கூறினார்கள்.

நபி (ﷺ) அவர்கள் எந்தவிதச் சலனமோ, பதற்றமோ, வியப்போ, வித்தியாசமோ இன்றி, ‘அவரை அழைத்து வாருங்கள்’ என்று கூறினார்கள். உமர் (رضي الله عنه) அவர்கள் உமைரைப் பற்றிப் பிடித்துக் கொண்டு வந்தார்கள்.

இதனைக் கண்ட நபி (ﷺ) அவர்கள், ‘உமரே! அவரை விடுங்கள்’ என்று கூறினார்கள். விட்டார்கள் எனினும் திடீரென எதுவும் நடந்து விடலாம் என்பதால் அருகிலேயே நின்றார்கள். நபி (ﷺ) அவர்கள், ‘தள்ளிச் செல்லுங்கள்’ என்று கூறினார்கள். பின்னர் உமர் (رضي الله عنه) நகர்ந்தார்கள்.

சதியைச் சத்தியம் முறியடித்தது

பின்னர் நபி (ﷺ) அவர்கள் உமைரைப் பார்த்து, ‘உமைரே! அருகே வா!’ என்று கூறினார்கள். உமைரும் நபி (ﷺ) அவர்களுக்கு மிக அருகில் வந்து,

உமைர் : காலை வந்தனங்கள்

நபி (ﷺ) : உங்களது வாழ்த்தை விட ஸலாம் எனும் நல்ல வாழ்த்து முறையை அல்லாஹ் எமக்குத் தந்துள்ளான்.

உமைர் : உங்களது வாழ்த்து முறைக்கும் எமது வாழ்த்து முறைக்குமிடையே பெரிய வேறுபாடு எதுவுமில்லை.

நபி (ﷺ) : நீ வந்த நோக்கம் என்ன?

உமைர் : நான் உங்களிடம் இருக்கும் கைதியான எனது மகனைக் காண வந்தேன்.

நபி (ﷺ) : அப்படியாயின் இந்த வாள் எதற்கு?

உமைர் : இது கேவலமான வாள்; பத்ரில் இது உதவவில்லையே.

நபி (ﷺ) : உண்மையைக் கூறு! நீ வந்த விடயம் என்ன?

உமைர் : நான் ஏற்கனவே கூறியதுதான்.

நபி (ﷺ), ‘இல்லை; நீயும் ஸப்வான் இப்னு உமையாவும் கஃபாவின் ஹிஜ்ரில் அமர்ந்து பத்ரின் இழப்புக் குறித்து பேசினீர்கள். உனது கடனையும் குடும்பத்தையும் ஸப்வான் பொறுப்பெடுப்பதாகக் கூறினார். நீ என்னைக் கொல்ல ஒத்துக்கொண்டாய். இதற்காக இந்த

வாளில் நஞ்சூட்டினாய். நீயும் ஸப்வானும் உரையாடும்போது அல்லாஹ் அவதானித்துக் கொண்டிருந்தான்' என்று கூறினார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட உமைர், கனப்பொழுதில் அதிர்ந்துபோனார். நானும் ஸப்வானும் பேசியவை எம்மிருவருக்கும் அல்லாஹ்வுக்கும் மட்டுமே தெரிந்த விடயமாகும். நான் வாளில் நஞ்சூட்டியது அல்லாஹ்வுக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்த செய்தி. இவையெல்லாம் இவருக்குத் தெரிந்திருக்கிறது என்றால் அல்லாஹ்விடமிருந்து இவருக்கு இறைச்செய்தி வருகின்றது என்பது உண்மைதான். எனவே, இவர் இறைத்தூதர்தான் என உறுதிகொண்டார். அடுத்தகணமே, அவர் திருக்கலிமாவை மொழிந்து முஸ்லிம் ஆனார்.

இஸ்லாத்தின் அதிசயம்

கொல்ல வந்தவரையும் இஸ்லாத்தின் கொள்கை கொன்றுவிட்டது. உள்ளமெல்லாம் குரோதத்தையும் பகையையும் சுமந்து வந்தவரின் இதயம் இஸ்லாத்தையும் ஈமானையும் தன்னுள் இருத்திக்கொண்டது.

அவரை நஞ்சென்று வெறுத்த நபித்தோழர்கள், நல்ல நண்பர்களாயினர். நாய் எனத் தூற்றிய உமரோ,

'உமைர் எம்மிடம் வந்தபோது, அவரைவிடப் பன்றி எனக்கு மேலாகப்பட்டது. ஆனால், இப்போது எனது குழந்தைகளைவிட எனக்கு அவர் பாசத்திற்குரியவராகிவிட்டார்' என்று வாய்விட்டுக் கூறினார்கள்.

மக்கத்து நபித்தோழர்கள் பலருக்கு பலவிதத்திலும் உமைர் தீங்கிழைத்திருந்தார். கலிமாவை மொழிந்த அடுத்தகணமே, அவர் தமக்கு இழைத்த அத்தனை கொடுமைகளையும் நபித்தோழர்கள் மன்னித்தனர். இல்லை இல்லை மறந்தே விட்டனர். அவரைத் தம்மில் ஒருவராக மதித்து அன்புகாட்டினர்.

ஒருவர் கலிமாவை மொழிந்துவிட்டால் அவர் குப்ரில் செய்த அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடுமென்ற இஸ்லாமியக் கொள்கையை உமைர் நடைமுறையில் கண்டார். தன்னைக் கொல்ல வந்தவன் இவன் என்ற நினைவே இல்லாது, நபி (ﷺ) அவர்கள் உமைருடன் நட்புக் கொண்டார்கள். இது இஸ்லாத்தின் அதிசயம்தான். இந்த அதிசயம் இன்றுவரை தொடர்கின்றது. கீழ்ச் சாதியென்றும் தீண்டத் தகாதவர்கள் என்றும் ஒதுக்கப்பட்டவர்கள் கலிமாவை மொழிந்த அடுத்தகணமே, இதுவரை அவர்கள் மீது

திணிக்கப்பட்டிருந்த இழிவுகள் அனைத்தும் நீங்கி இஸ்லாமிய சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாறும் காட்சியை இன்றுவரை காணலாம்.

ஒளியூட்டும் முயற்சி

உமைர் தீய குணங்களும் கொடூரக் கொள்கைகளும் கொண்டவர்தான். அவரின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. நபி (ﷺ) அவர்கள் நபித்தோழர்களைப் பார்த்து,

'உங்கள் சகோதரனுக்கு மார்க்க விளக்கங்களைக் கற்றுக்கொடுங்கள். அவருக்கு குர்ஆனைக் கற்றுக் கொடுங்கள். அவரது மகனை விடுவியுங்கள்' எனக் கூறினார்கள்.

உமைர் திருக்குர்ஆனின் ஒளியால் இருளடைந்த தன் உள்ளத்திற்கு ஒளியூட்டினார். இஸ்லாமிய சகோதரத்துவத்துடன் இணைந்து மார்க்கத்தைக் கற்று பாசத்தைப் பகிர்ந்து கொண்டிருந்தார்.

ஸப்வானின் எதிர்பார்ப்பு

உமைர் மதீனா சென்றுவிட்டார். இன்றோ நாளையோ முஹம்மத் கொல்லப்பட்டுவிட்டார் என்ற அந்த இனிய செய்தி வந்து சேரும் என்ற எண்ணத்தில் ஸப்வான் மிக மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். அவரது மகிழ்ச்சி, உற்சாகம் என்பவற்றுக்கான காரணத்தை அறியாது நண்பர்கள், உறவினர்கள் வினவும் போதெல்லாம், 'பத்ரில் நீங்கள் அடைந்த இழப்புகளையெல்லாம் ஈடு செய்யக்கூடிய நல்ல செய்தி ஒன்று இன்னும் சில தினங்களில் வந்தடையும்; பொறுத்திருங்கள்' என்று மட்டும் கூறினார்.

ஸப்வான் சந்தைக்கு வந்து, மதீனாவில் ஏதேனும் முக்கிய நிகழ்ச்சிகள் நடந்ததா என்று வியாபாரிகளிடம் பேச்சுக் கொடுத்து விசாரித்துப் பார்ப்பார். ஆனால், அவர் எதிர்பார்த்த செய்தி எதுவும் கிடைக்கவில்லை. எனினும், அவர் நம்பிக்கை இழக்கவில்லை. உமைர் முன்வைத்த காலை பின் வைக்க மாட்டார்; அவர் தந்திரசாலி; இன்றோ நாளையோ நாம் நினைத்தது நடந்துவிடும் என்று எதிர்பார்த்திருந்தார்.

இவ்வாறே ஒரு நாள் வியாபாரக் குழுவிடம் விசாரித்த போது ஒரு வியாபாரி ஒரு முக்கிய நிகழ்ச்சி நடந்துள்ளது என்று கூறினார்.

ஸப்வான் ஆனந்தத்தில் மிதக்க ஆரம்பித்துவிட்டார். தனது எதிர்பார்ப்பு ஈடேறிவிட்டது. எனது தந்தையின் மரணத்திற்குப்

பழிவாங்கி எனது குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றி விட்டேன் என்ற எண்ணங்களில் மிதந்தவராக, ‘என்ன? என்ன நடந்தது?’ என்று வினவினார்.

வந்தவரோ, ‘இஸ்லாமிய மார்க்கத்தின் மிகப்பெரிய எதிரியாக இருந்த உமைர் இஸ்லாத்தைத் தழுவி விட்டார்; அவர் அங்கே குர்ஆனைக் கற்று வருகிறார்’ என்று தெரிவித்தார்.

இந்தப் பதில் ஸப்வானின் செவிகளில் இடியாக விழுந்தது. உலகமே சுழலுவது போல் இருந்தது. உலகமே இஸ்லாத்தை ஏற்றாலும் உமைர் ஏற்கமாட்டார் என்ற தனது உறுதியில் மண் விழுந்துவிட்டதே! நானே அவரை இஸ்லாத்தை நோக்கி அனுப்பிவிட்டதாக ஆகிவிட்டதே என்று எண்ணி கதிகலங்கினார் ஸப்வான்.

கொல்லச் சென்றவர் கொள்கை பரப்ப வருகின்றார்

மதீனாவின் மார்க்கச் சூழலால் தன்னைப் புடம் போட்டுக் கொண்ட உமைர் (ரலி) உறுதிமிக்க ஒரு முடிவுக்கு வந்தார். எந்த இடத்தில் இந்த சத்திய மார்க்கத்தை நான் எதிர்த்தேனோ அதே மக்கா பூமிக்கு இதனை எடுத்துரைக்கும் அழைப்பாளனாகச் செல்ல வேண்டும்; அங்கே சென்று அந்த மக்களிடமே இஸ்லாத்தை எடுத்துக் கூற வேண்டும். இதுதான் கடந்த காலங்களில் நான் செய்த சத்திய எதிர்ப்பிற்கான உரிய பரிகாரமாக அமையும். இதுதான் உமைர் (ரலி) அவர்களின் உறுதியான முடிவு. இந்த முடிவுடன் அவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து,

‘அல்லாஹ்வின் தூதரே! நான் இந்த சத்திய ஒழியை அழித்துவிட மக்காவில் மிகக் கடுமையாக முயற்சி செய்துள்ளேன். அதே போன்று சத்தியத்தைப் போதிக்கவும் நான் முயல வேண்டும். எனவே, மக்கா சென்று குறைஷிகள் மத்தியில் பிரச்சாரம் செய்ய அனுமதி தாருங்கள்’ என்று கேட்டுக் கொண்டார்கள். நபி (ஸல்) அவர்களும் அனுமதியளித்தார்கள். நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்ய நஞ்சூட்டிய வாளுடன் சென்ற உமைர் (ரலி), நெஞ்சு நிறைந்த ஈமானுடன் நபியவர்களின் கொள்கையை மக்காவில் பறப்பத் துணிவுடன் புறப்பட்டார்.

அவர் எதற்கு அஞ்ச வேண்டும்? அவரிடம் சத்திய இஸ்லாம் இருக்கின்றது. அந்தச் சத்தியத்தைப் போதித்து மக்களை நீதி, நேர்மையின்பால், அமைதியின் பால், சமத்துவம், சகோதரத்து வத்தின்பால் அழைத்தார். அதை மறுத்து எதிர்ப்பவர்களையும்

போராட முனைபவர்களையும் தடுத்து நிறுத்தும் உடல், உள உறுதியும் பலமும் அவரிடம் இருந்தன. எனவே, மக்கா பூமியில் சத்தியத்தை உரத்து முழங்கினார். அவரிடம் பலர் இஸ்லாத்தை ஏற்று நரகில் இருந்து விடுதலை பெற்றுக்கொண்டனர்.

கொலைத் திட்டம் தீட்டியவரைக் கொண்டு வந்து சேர்த்தார்

மக்கா நபி (ﷺ) அவர்களால் கைப்பற்றப்பட்ட போது நபி (ﷺ) அவர்கள் ஆயுதத்தைக் கீழே வைத்த அனைவருக்கும் பொது மன்னிப்பு அளித்தார்கள். மக்கா கைப்பற்றப்பட்டபோது என்ன நடக்குமோ என அஞ்சிய இஸ்லாமிய எதிரிகள் நாட்டை விட்டு ஓடினர். அவர்களில் உமைரின் நண்பர் ஸப்வானும் ஒருவராவார். அவர் ஒரு கப்பலைத் தயார்செய்து யமனுக்குத் தப்பிச்செல்ல திட்டமிட்டிருந்தார். இந்தச் செய்தி உமைருக்கு எட்டியது. அவர் உடனே நபி (ﷺ) அவர்களிடம் வந்து,

‘அல்லாஹ்வின் தூதரே! குறைஷிகளின் தலைவர் ஸப்வான் உங்களுக்கு அஞ்சி நாட்டை விட்டுத் தப்பிச் செல்லப் போகிறார். நீங்கள் அவருக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும்’.

நபி (ﷺ), அவர் பாதுகாப்பளிக்கப்படுவார். அவரின் கடந்த கால குற்றங்களுக்குத் தண்டனை வழங்க மாட்டேன் என்று உறுதியளித்தார்கள்.

உமைர் :இதை நான் அவரிடம் கூற வேண்டும். நான் கூறுவதை நம்புவதற்கு ஓர் அடையாளத்தைத் தாருங்கள்.

உடனே நபி (ﷺ) அவர்கள் மக்காவைத் தான் கைப்பற்றியபோது அணிந்திருந்த தனது தலைப்பாகையைக் கழற்றி உமைரிடம் கொடுத்தார்கள்.

உடனே அதை எடுத்தக்கொண்டு ஸப்வானிடம் சென்றார்கள். ஸப்வான் பயணத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து போகத் தயாராக இருந்தார்.

உமைர் : ஸப்வானே! நில்லுங்கள்! நில்லுங்கள்! நீங்கள் உங்களை அழித்துக் கொள்ள வேண்டியதில்லை. இதோ நபி (ﷺ) அவர்கள் உங்களுக்கு மன்னிப்பும் பாதுகாப்பும் அளிக்கிறார்கள்.

ஸப்வான் : சனியனே! விலகிச் செல்; என்னுடன் நீ கதைக்காதே! நீ ஏமாற்றப் பார்க்கிறாய்.

உமைர் : ஸப்வானே! முஹம்மத் (ﷺ) அவர்கள் மனிதர்களிலேயே மிகச் சிறந்தவர். அடுத்தவர்களுக்கு அதிகம் நன்மை செய்பவர். மிக மென்மையானவர்; (இது உனக்குத் தெரியும்) அவரின் கண்ணியம் என்பது உனக்கும் கண்ணியம்தான்; இதோ அவர் உன்னை மன்னித்ததற்கு அடையாளமாக அவரது தலைப்பாகையைத் தந்துவிட்டுள்ளார்.

ஸப்வான் : இல்லை, அவர் என்னைக் கொன்று விடுவார் என அஞ்சுகின்றேன்.

உமைர் : ஸப்வானே! நீ நினைப்பதை விட அவர் அன்பானவர்; கண்ணியமானவர்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு ஸப்வான் தனது தப்பியோடும் படலத்தை விட்டுவிட்டு நபி (ﷺ) அவர்களிடம் வந்து, நீங்கள் எனக்கு பாதுகாப்பு அளிப்பதாக உமைர் கூறுகின்றார் என்று கூறினார். அதற்கு நபி (ﷺ) அவர்கள், அவர் கூறியது உண்மையே என்றுரைத்தார்கள். இது கேட்ட ஸப்வான் மகிழ்ச்சியுடன் நான் எனது நிலை குறித்துத் தீர்க்கமான முடிவை எடுக்க இரண்டு மாதங்கள் அவகாசம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இல்லை உனக்கு 4 மாதங்கள் அவகாசம் தருகின்றேன் என்று நபியவர்கள் கூறினார்கள்.

மிகப்பெரிய எதிரியாக இருந்த தன்னுடன் நபி (ﷺ) அவர்கள் நடந்து கொண்ட விதமும் நபி (ﷺ) அவர்கள் அளித்த பாதுகாப்புக்கு அவர்களது படையினர் அளித்த மரியாதையும் ஸப்வானின் மனதை மாற்றியது. நபி (ﷺ) அவர்களைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டிய ஸப்வான் இஸ்லாத்தை ஏற்று நபித்தோழர்களில் ஒருவராக மாறினார். நபியவர்களைக் கொலை செய்ய அனுப்பியவரையும் உமைர் (رضي الله عنه) இஸ்லாத்தில் இணைத்துவிட்டார்.

அல்லாஹுதஆலா உமைரையும் ஸப்வானையும் பொருந்திக் கொள்வானாக! மனிதன் தவறு செய்யலாம். அந்தத் தவறை உணர்ந்து திருந்தி வாழ்பவனே மனிதர்களில் மகத்தானவர்கள்.

ஸாலிம் மவ்லா அபூஹுதைபா (ரலி)

நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம், 'அல்குர்ஆனை நான்கு நபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்! அவர்கள் யாரெனில்,

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி),
ஸாலிம் மவ்லா அபூஹுதைபா (ரலி),
உபை இப்னு கஃப் (ரலி),
முஆத் இப்னு ஜபல் (ரலி)' எனக் குறிப்பிட்டார்கள். (புகாரி)

யார் இந்த ஸாலிம்?

ஸாலிம் அவர்களுக்கு அவரது தந்தையின் பெயர் தெரியாது. இவர் அடிமையாக இருந்தவர். இவரின் ஈமானின் மூலமும் அல்குர்ஆன் தொடர்பான அறிவின் காரணத்தாலும் உயர்ந்த அந்தஸ்தை அடைந்தார்.

ஸாலிம் மவ்லா அபூஹுதைபா என்றால் அபூஹுதைபாவின் அடிமை ஸாலிம் என்பது அர்த்தமாகும். அடிமையாக இருந்த ஸாலிம் அவர்களைக் குறைஷிகளின் கண்ணியமிக்க நபராகத் திகழ்ந்த அபூஹுதைபா விடுதலை செய்து தத்துப் பிள்ளையாக எடுத்துக் கொண்டார். அதன்பின் ஸாலிம் இப்னு அபூஹுதைபா (அபூஹுதைபாவின் மகன் ஸாலிம்) என அழைக்கப்பட்டார். தந்தை அல்லாதவரைத் தந்தை என ஒருவருடைய பெயருடன் இணைத்து அழைப்பதை இஸ்லாம் தடை செய்தது.

“எந்த மனிதனுக்கும், அவனது உட்புறத்தில் இரண்டு உள்ளங்களை அல்லாஹ் ஏற்படுத்தவில்லை. உங்கள் மனைவியரில், உங்கள் தாய்மாருக்கு நீங்கள் ஒப்பிட்டவர்களை, அவன் உங்களது (உண்மையான) தாய்மார்களாக ஆக்கிவிட மாட்டான். உங்கள் வளர்ப்புப் பிள்ளைகளை, உங்கள் குழந்தைகளாகவும் அவன் ஆக்கவில்லை. இது உங்களது வாய்களால் கூறும் வெறும் வார்த்தைகளாகும். அல்லாஹ் உண்மையையே கூறுகின்றான். அவனே நேர்வழியையும் காண்பிக்கின்றான். அவர்களை அவர்களது தந்தையர் (பெயர்)களுடனேயே அழையுங்கள். அதுவே அல்லாஹ்விடம் மிக நீதியானதாகும். அவர்களின் தந்தையர்களை நீங்கள் அறியவில்லையாயின் (அவர்கள்) மார்க்கத்தில் உங்கள் சகோதரர்களும் உங்கள் நண்பர்களுமாவர். நீங்கள் எதில் தவறு செய்தீர்களோ, அதில் உங்கள் மீது குற்றமில்லை. எனினும், உங்களது உள்ளங்கள் வேண்டுமென்றே கூறுவது (உங்கள் மீது குற்றமாகும்.)

அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையவனுமாகவும் இருக்கின்றான்" (அல்குர்ஆன் 33:4-5)

இதன் பின்னர் ஸாலிம் அபூஹுதைபாவின் மார்க்க சகோதரராகவும், நெருங்கிய நண்பராகவும் மாறினார். ஸாலிமின் தந்தை பெயர் தெரியாததன் காரணத்தால் அவர் அபூஹுதைபாவின் அடிமை என்ற பெயரில் அறிமுகமானார். (முஸ்லிம்)

அபூஹுதைபா (ரலி) அவர்கள் ஆரம்ப கால முஸ்லிம்களில் ஒருவராவார். அவர் ஸாலிம் மீது அபரிமிதமான அன்பு செலுத்தினார். இருவரும் இணைந்தே ஈமானியப் போராட்டத்தில் முன்னேறினர்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்ட வசனம் அருளப்பட்டதும் தத்துப் பிள்ளைகளின் பெயர்கள் மாறின. நபி (ஸல்) அவர்கள் ஸைத் (ரலி) அவர்களைத் தனது மகன் என அறிவித்திருந்தார். எனவே, அவர் முஹம்மதின் மகன் ஸைத் என அழைக்கப்பட்டார். மேற்படி வசனம் அருளப்பட்டதும் அவர் அவருடைய தந்தையான ஹாரிஸா அவர்களின் பெயருடன் இணைத்து ஸைத் இப்னு ஹாரிஸா (ஹாரிஸாவின் மகன் ஸைத்) என அழைக்கப்பட்டார். எனினும் ஸாலிமின் தந்தையின் பெயர் தெரியாது என்பதால் அவர் அபூஹுதைபாவின் அடிமை என அழைக்கப்பட்டார்.

போலியான இந்தத் தந்தை - மகன் உறவைவிடக் கொள்கை அடிப்படையிலான சகோதரத்துவ உறவே மேலானது என இஸ்லாம் கருதியது. ஆரம்பகால நபித்தோழர்களும் இந்த உண்மையை உணர்வுபூர்வமாக உணர்ந்து செயற்பட்டார்கள்.

அன்ஸாரித் தோழர்கள் முஹாஜிர்களை எத்தகைய நேசத்துடன் ஏற்றுக்கொண்டார்கள் என்ற சிறப்புமிகு வரலாற்றை நாம் அறிந்துவைத்துள்ளோம்.

இத்தகைய இறுக்கமானதொரு கொள்கை உறவு ஸாலிமுக்கும், அபூஹுதைபாவுக்கும் இடையே ஏற்பட்டது. இதனால் அடிமையாக இருந்த ஸாலிம் உயர் குலமாகக் கணிக்கப்பட்ட குறைஷியரான அபூஹுதைபாவுக்கு சகோதரரானார். இது சாதாரன சகோதரத்துவமல்ல. உடன் பிறந்த சகோதரர்களை விட இறுக்கமான, நெருக்கமான சகோதரர்களானார்கள். வாழ்வில் மட்டுமல்ல மரணத்திலும் கூட இருவரும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் ஒன்றாக மரணிக்கும் அளவுக்கு நேசமும், நெருக்கமும் அவர்களிடம் காணப்பட்டன.

ஈமானே உயர்வுக்கு அடிப்படை

அடிமையாக இருந்த ஸாலிமுக்கு ஈமான் உயர்ந்த அந்தஸ்தை வழங்கியது. அவர் உண்மையாகவே, உறுதியாகவே ஈமான் கொண்டார். உறுதியாகச் சத்தியத்தைக் கடைபிடித்தார். எனவே, அவர் தந்தை பெயர் தெரியாத அடிமை என்பது அவருக்கு எந்த இழிவையும் தரவில்லை. சிப்பிக்குள் இருப்பதால் முத்தின் முக்கியத்துவம் குறையவா போகின்றது!? தூய்மையான இஸ்லாமிய சமூக அமைப்பில் அவரது ஈமானும், இக்லாஸும் அவருக்கு உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுக்கொடுத்தது.

“உங்களில் இறையச்சம்மிகுந்தவர்களே அல்லாஹ்விடம் சிறந்தவர்கள்” என்ற குர்ஆனின் கூற்றுக்கு ஏற்ப, இறையச்சத்தின் மூலமே அன்றி அரபியருக்கு அரபியல்லாதவரை விடச் சிறப்பு இல்லை என்ற நபிமொழிக்கு ஏற்ப அவர் அந்த சமுதாயத்தில் சிறப்பாகக் கணிக்கப்பட்டார்.

அரபிகள் திருமணத்தில் கௌரவப் பொருத்தம் பார்ப்பர். இதில் உறுதியாகவும் இருப்பர். ஆனால், உயர்குலமாகக் கணிக்கப்பட்ட அபூஹுதைபா தனது உடன்பிறந்த சகோதரர் அல்வலீத் இப்னுஉத்பாவின் மகள் பாத்திமா பின்துல் வலீதை ஸாலிமுக்குத் திருமணம் செய்து கொடுத்து குடும்ப உறவாகவும் அவரது உறவை மாற்றிக் கொண்டார். (அல்முன்தகி முஅத்தாவின் விரிவுரை) ஸாலிம் (ؓ) அவர்கள் அழகிய குரல்வளம் மிக்கவராகவும், அல்குர்ஆனை அழகாக ஓதக்கூடிய ஆற்றல் பெற்றவராகவும் திகழ்ந்தார்கள். இதனால் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த நபித்தோழர்களுக்கு குபா பள்ளியில் இவர் தொழுகை நடத்தினார். (புகாரி) “இவரிடமிருந்து குர்ஆனைப் பெற்றுக்கொள்ளுங்கள்!” என நபி (ﷺ) அவர்கள் கூறத்தக்க உயர்வைப் பெற்றார். “உம்மைப் போன்றவர்களை எனது சமுதாயத்தில் சேர்த்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்” என நபி (ﷺ) அவர்கள் கூறக்கூடிய அளவுக்கு உயர்வைப் பெற்றார். (இப்னுமாஜா) நபித்தோழர்களோ அவரை ஸாலிம் மினஸ்ஸாலிஹீன் (ஸாலிம் நல்லோர்களிலுள்ளவர்) எனக் கூறினார்கள்.

ஸாலிமின் சத்திய முழக்கம்

ஸாலிமின் வரலாறு, பிலால் போன்ற ஏனைய அடிமைகளின் வரலாற்றைப் போன்றதாகும். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவும், பலவீனப்பட்டவர்களாகவும் இருந்தனர். எனினும் இஸ்லாம் அவர்களுக்கு மகத்துவத்தையும், சமூகத் தலைமையையும் வழங்கியது.

ஸாலிம் இயல்பிலேயே சத்தியத்தைத் துணிந்து சொல்பவராகவும், தவறு எனக் கண்டதைத் தடுப்பவராகவும் இருந்தார். தவறைக் காணும் போது மௌனம் காக்கும் போக்கு அவரிடம் காணப்படவில்லை.

மக்கா வெற்றிகொள்ளப்பட்ட பின்னர் நபி (ﷺ) அவர்கள் பல படைகளை மக்காவின் கோத்திரங்களிடம் அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்பப்பட்ட ஒரு படைக்கு காலித் இப்னு வலீத் (رضي الله عنه) அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். காலித் (رضي الله عنه) அவர்கள் சந்தித்த ஒரு கூட்டத்தைக் கொலை செய்துவிட்டார்கள். இதை அறிந்த நபி (ﷺ) அவர்கள் 'அல்லாஹ்வே! காலித் செய்த இந்தச் செயலிலிருந்து உன்னிடம் நான் மீண்டு விட்டேன்' என்று கூறி காலித் (رضي الله عنه) அவர்களைக் கண்டித்தார்கள்.

அத்தோடு காலித் இதைச் செய்த போது உங்களில் யாரும் அதை மறுக்கவில்லையா? என நபி (ﷺ) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, 'ஆம்! ஸாலிம் மறுத்தார்' எனப் பதில் கிடைத்தது.

காலித் (رضي الله عنه) அவர்கள் ஜாஹிலிய்யத்திலும் இஸ்லாத்திலும் போர்த் தளபதியாக இருந்தவர்.

உயர்ந்த குடும்ப கௌரவம் வாய்க்கப்பெற்றவர். இருப்பினும் ஸாலிம் (رضي الله عنه) அவர்கள் காலித் (رضي الله عنه) அவர்களுக்கு மறுப்புத் தெரிவித்தார்கள். அந்த மறுப்புக்கூட கூட்டத்தைக் குழப்புவதாகவோ, கட்டுக்கோப்பைச் சிதைப்பதாகவோ இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மதீனாவில் ஒரு பதற்றம் ஏற்பட்டது. நான் ஸாலிம் மவ்லா அபூஹுதைபா (رضي الله عنه) அவர்களிடம் வந்தேன். அவர் தனது ஆயுதத்துடன் புறப்படத் தயாராக இருந்தார். நான் அவர்களுடன் இணைந்துகொண்டேன். பின்னர் நபி (ﷺ) அவர்கள் மக்களைப் பார்த்து, 'இந்த இரண்டு முஃமின்களும் செய்தது போல் நீங்களும் செய்திருக்க வேண்டாமா?' எனக் கேட்டார்கள் என அம்ர் இப்னு ஆஸ் (رضي الله عنه) அறிவிக்கின்றார்கள். (அஹ்மத்)

இந்த நிகழ்ச்சி ஸாலிமின் துணிவைத் தெளிவுபடுத்துகின்றது.

ஸாலிம் (رضي الله عنه) அவர்கள், நபி (ﷺ) அவர்களுடன் இணைந்து பல போர்களிலும் பங்காற்றினார்கள். நபி (ﷺ) அவர்களின் மரணத்தின்

பின்னர் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். அப்போது பலரும் மதம் மாறிக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

பொய்யன் முஸைலமாவுக்கு எதிரான போர் யமாமாவில் நடைபெற்றது. இந்தப் போருக்கு ஸாலிம் தனது ஆருயிர் சகோதரர் அபூஹுதைபாவுடன் சென்றார். முஸைலமாவின் படையுடன் முஸ்லிம்கள் மோதினர். பயங்கரமான போர் மூண்டது. போர்ப்படைகளைக் காலித் (ரலி) அவர்கள் வழிநடத்தினார்கள்.

அபூஹுதைபா, ஸாலிம் ஆகிய இருவரும் அருகருகே நின்று போரிட்டனர். அப்போது அபூஹுதைபா, 'குர்ஆனை உடையவர்களே! உங்கள் செயல்களால் குர்ஆனை அழகுபடுத்துங்கள்!' என்று கூறினார். ஸாலிம் (ரலி) அவர்கள், 'என் கண் முன்னால் முஸ்லிம்கள் அழிக்கப்பட்டால் குர்ஆனைச் சுமந்தவர்களில் நான்தான் மோசமானவனாவேன்' என்று குறிப்பிட்டார்கள். அதற்கு அபூஹுதைபா, 'இல்லை! இல்லை! குர்ஆனைச் சுமந்தவர்களுள் நீர் சிறந்தவர்' என்று கூறினார்கள்.

இந்தப் போரில் முஸ்லிம்களில் பலரும் வீரமரணம் அடைந்தனர். மதம் மாறியவர்களின் மூர்க்கத்தனம் அடைக்கப்பட்டு அவர்கள் அழிக்கப்பட்டனர். பொய்யன் முஸைலமா கொல்லப்பட்டான்.

போரின் முடிவில் முஸ்லிம்கள் தங்களது ஷஹீதுகளையும், காயப்பட்டு வீழ்ந்துள்ள தம் தோழர்களையும் பார்வையிட்டுக் கொண்டு வந்தார்கள். அப்போது அவர்கள் ஸாலிம் வெட்டப்பட்டு உயிர் ஊசலாடும் இறுதி நிலையில் இருப்பதைக் கண்டார்கள். அவர்கள் அவரை அடையாளம் கண்டதும், ஸாலிம் அவர்களிடம், 'அபூஹுதைபாவுக்கு என்ன நடந்தது?' என்று கேட்டார்கள்.

அதற்கவர்கள், 'அவர் ஷஹீதாகிவிட்டார்' என்று கூறினர். அப்போது ஸாலிம் (ரலி) அவர்கள், 'என்னை அவருக்கு அருகில் கொண்டு செல்லுங்கள்!' என்று கூறினார். அதற்கவர்கள், 'அவர் உங்களுக்கு அருகில்தான் இருக்கிறார். அபூஹுதைபா (ரலி) அவர்கள் அதே இடத்தில்தான் ஷஹீதாகியுள்ளார்!' என்று குறிப்பிட்டனர். இதைக் கேட்ட அவர் தனது இறுதிப் புன்னகையை உதிர்த்தவராக மரணத்தைத் தழுவினார்.

ஆம்! ஒன்றாக இஸ்லாத்தில் இணைந்து, ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாகவே வீரமரணத்தை அடைந்தனர். அவர்கள் இருவரையும்

அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

உமர் (رضي الله عنه) அவர்கள் மரணித்த போது, அபூ உபைததிப்னுல் ஜர்ராஹ் அல்லது ஸாலிம் உயிருடன் இருந்தால் எனக்குப் பின் அவர்களில் ஒருவரை நான் கலீபாவாக நியமித்திருப்பேன்' (அஹ்மத்) என்று கூறிய கூற்று ஸாலிமின் உயர்வை உணர்த்தப் போதிய சான்றாகும். தந்தை பெயர் தெரியாத அடிமையாக இருந்தவர் அல் குர்ஆன் அறிவின் மூலமும் ஈமானிய பலத்தாலும் உயர்வுபெற்றார். இத்தகைய நிலையை இஸ்லாமிய சமூக அமைப்பில் மட்டுமே காண முடியும். எல்லாம் வல்ல அல்லாஹ் ஸாலிம் (رضي الله عنه) அவர்களைத் தன் அருளால் அரவணைப்பானாக!

صور من تضحيات الصحابة

المؤلف

محمد إسماعيل بن شاه الحميد السلفي

(المدرس في معهد دار التوحيد السلفية - قسم البنات

ومدير تحرير مجلة طلوع الحق سابقا)



دار السنة للنشر والتوزيع

ISBN 978-624-6698-00-3

Dar As Sunna Publication